# அருணோதயம்

## மணிவிழா மலர்



**திரு. பொன்னம்பலம் அருணகிரிநாதன்**

J.P, (Whole Island)

(B.A (Hons) Dip.in.Edu, M.Ed, SLPS - I, SLEAS - III,

பிரதிக் கல்விப் பணிப்பாளர்

(கல்வி முகாமைத்துவம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயம்

31.01.2016

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அருணோதயம்

பிரதிக் கல்விப்பணிப்பாளர்

உயர்திரு.பொன்.அருணகிரிநாதன்

அவர்களின்

# மணிவிழா மலர்



மணிவிழா மலர்க்குழு
வேலணை மேற்கு,
வேலணை,
யாழ்ப்பாணம்.
31.01.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரு. பொன்னம்பலம் அருணகிரிநாதன் J.P, (Whole Island)

(B.A (Hons) Dip.in.Edu. M.Ed. SLPS - I. SLEAS - III)

பிரதிக்கல்விப்பணிப்பாளர் (கல்விமுகாமைத்துவம்) யாழ்ப்பாணக் கல்வி வலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா நாயகர் பற்றி....

பெயர் : பொன்.அருணகிரிநாதன்

பதவி : பிரதிக் கல்விப்பணிப்பாளர் – யாழ் கல்வி வலயம்

தந்தை : அருணாசலம் பொன்னம்பலம்

தாய் : பொன்னம்பலம் அன்னலட்சுமி

மனைவி : திருமதி யோகேஸ்வரி அருணகிரிநாதன்

பிள்ளைகள் : செல்வி நிருஷா
செல்வன் அருண்ராஜ்
செல்வி கார்த்திகா

## கல்வி நிலை

- ஆரம்பக் கல்வி – யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம் –
- சிரேஸ்ட கல்வி – யா/வேலணை மத்திய கல்லூரி
- உயர் கல்வி – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
  [கலைப்பீடம் 1978 – 1981 B.A (Hons)]
- பட்டப்பின் கல்வி – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (1990/91)
- கல்விமுதுமாணி – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (2002/03)

## முகாமைத்துவ புலமைப்பரிசில் கற்கைகள்

- பாடசாலை அதிபர்களுக்கான கல்வி முகாமைத்துவப் பயிற்சி
  (Open University - Malaysia - Kulalampur 2003)
- Advanced Leadership Development Programme In Education Management
  (Mahidol University - Thailand 2003)

அதிபர் தரம் II – 01.06.1991

அதிபர் தரம் I – 01.06.1996

இலங்கை கல்வி நிர்வாகசேவை III – 11.06.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசசேவை

- நு/சென்.ஜோசப் கல்லூரி, மஸ்கெலியா (ஆசிரியர், பிரதி அதிபர்)
  12.03.1984 – 13.08.1989
- யா/நாரந்தனை கணேசா வித்தியாலயம் (ஆசிரியர்)
  14.08.1989 – 24.11.1991
- யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் (அதிபர்)
  25.11.1991 – 14.07.2002
- யா/வேலணை மத்திய கல்லூரி (அதிபர்)
  15.07.2002 – 09.03.2011
- பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) – தீவக கல்வி வலயம்
  10.03.2011 – 14.02.2013
- பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) – யாழ் கல்வி வலயம்
  15.01.2013 – 30.01.2016

## பொதுப்பணி

- அகில இலங்கை சமாதான நீதவான்
- சிரேஸ்ட துணைப் பொதுச்செயலாளர், இலங்கை தமிழர் ஆசியர் சங்கம்.
- முன்னாள் இணைப்பாளர், வட மாகாண அதிபர் சங்கம், தீவகம்.
- முன்னாள் பொருளாளர், கல்வி மேம்பாட்டுப் பேரவை, யாழ்ப்பாணம்.
- தலைவர், பரிபாலன சபை, பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் கோவில்.
- உறுப்பினர், தீவக அரிமாக் கழகம்.
- முன்னாள் தலைவர், கிராம அபிவிருத்திச் சங்கம், வேலணை மேற்கு.
- பொருளாளர், வட மாகாண பள்ளிக் கல்வியியலாளர் ஒன்றியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாநாயகர் பாரியாருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு



நிற்பவர்கள்: ப.பாலசுப்பிரமணியம், சோ.பரமானந்தம், சிவ பரிபூரணன், இ.யோகேஸ்வரன்
இருப்பவர்கள்: சு.சிவானந்தன், மு.மகேந்திரன், மு.திருஞானசம்பந்தபிள்ளை, சண்.வாமதேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக்குழு



நிற்பவர்கள்: ந.மயூரன், த.கபிலநாதன், சி.அசோக்குமார், சி.அருட்சுதன், த.ஸ்ரீசெல்வம்.
இருப்பவர்கள்: சி.மாணிக்கராஜா, ப.பாலசுப்பிரமணியம், இ.யோகேஸ்வரன், மு.மகேந்திரன், மு.திருஞானசம்பந்தபிள்ளை, ச.வாமதேவன், சு.சிவானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா மலர்க்குழு

(1) திரு.மு.திருஞானசம்பந்தபிள்ளை – ஓய்வுநிலை அதிபர்

(2) திரு.மு.மகேந்திரன் – ஓய்வுநிலை அதிபர்

(3) திரு.சண்.வாமதேவன் – ஓய்வுநிலை அதிபர்

(4) திரு.சோ.பரமானந்தம் – ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்

(5) திரு.சிவ.பரிபூரணன் – ஓய்வுநிலை பிரதம முகாமைத்துவ உதவியாளர்

(6) திரு.சு.சிவானந்தன் – அதிபர்

(7) திரு.இ.யோகேஸ்வரன் – ஆசிரியர், பகுதித்தலைவர்

(8) திரு.ப.பாலசுப்பிரமணியம் – ஓய்வுநிலை பிரதேசசபை பொறுப்பதிகாரி

# மணிவிழாக் குழு

(1) திரு.மு.திருஞானசம்பந்தபிள்ளை – ஓய்வுநிலை அதிபர்

(2) திரு.மு.மகேந்திரன் – ஓய்வுநிலை அதிபர்

(3) திரு.சண்.வாமதேவன் – ஓய்வுநிலை அதிபர்

(4) திரு.சி.மாணிக்கராஜா – பிரதிக் கல்விப்பணிப்பாளர்

(5) திரு.க.கதிரேசபிள்ளை – ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்

(6) திரு.சு.சிவானந்தன் – அதிபர்

(7) திரு.இ.யோகேஸ்வரன் – ஆசிரியர், பகுதித்தலைவர்

(8) திரு.ப.பாலசுப்பிரமணியம் – ஓய்வுநிலை பிரதேசசபை பொறுப்பதிகாரி

(9) திரு.த.ஸ்ரீசெல்வம் – அதிபர்

(10) திரு.த.கபிலநாதன் – ஆசிரியர்

(11) திரு.ந.மயூரன் – ஆசிரியர்

(12) திரு.சி.சிவசங்கர் – ஆசிரியர்

(13) திரு.சி.அசோக்குமார் – முகாமைத்துவ உதவியாளர்

(14) திரு.சி.அருட்சுதன் – ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயத்தின் பகிர்வுகள்

வேலணை மண்ணில் தோன்றி
கல்வி வேட்கையால் வெற்றிகள் பல கண்டு
பள்ளி முதல்வராய், பணிப்பாளராய் பதவிகள் வகித்து
உளப்பூரிப்புடன் உன்னத சேவைகளாற்றி
மனம் மகிழ்ந்து அகவை அறுபது காணும் எம்
மகுட மணிவிளக்கு
பொன் அருணகிரிநாதன் அவர்களின்
மணிவிழாவினைச் சிறப்பிக்க "அருணோதயம்"
மணிவிழா மலரினை உங்கள் கரங்களில்
மலரச் செய்து மகிழ்வடைகின்றோம்.
விழா நாயகரின் பள்ளி நண்பராய்
உள்ளத்துணர்வுகளை உரிமையுடன் பகிர்ந்து
உறவாடிய உற்ற நண்பன் செல்வம் அவர்கள்
எல்லை பல தாண்டி கனடாவில் இருந்து
தோழமை உணர்வுடன் மலர் மலர
தன் கரம் கொடுத்திருக்கிறார்.
நண்பர் செல்வத்திற்கு எம் மனமார்ந்த நன்றிகள்.

இம் மலருக்கு ஆசியுரை வழங்கிய குருமணிகள்,
வாழ்த்துக்கள் வழங்கிய பெரியோர்களுக்கும்
எமது நன்றிகள் உரித்தாகுக .
அருணோதயம் மலருக்கு
ஆக்கங்களைத் தந்த பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கும்
எம் இனிய நன்றிகள்
அருணோதயத்திற்கு மேலும் அழகு சேர்க்கும்
வகையில் விழாநாயகரால் ஆக்கப்பெற்ற
பத்து பயன்தரு கட்டுரைகளும் இணைக்கப்பட்டுள்ளது.
அந்த வகையில் பிரதிக் கல்விப்பணிப்பாளர்
அருணகிரிநாதன் அவர்களுடைய
மணிவிழா மலர் நவீன கல்வியியல்
எண்ணக்கருக்கள், கோட்பாடுகளுடன் கூடிய
பல ஆக்கங்களைத் தாங்கி வருவது
அவருடைய சேவையின் உன்னத
வெளிப்பாடாக அமைந்துள்ளது எனக்கூறி
இம்மலர் வெளிவர ஒத்துழைப்பு வழங்கிய
அனைவருடனும் எமது நன்றிகளைப் பகிர்ந்து நிறைவு செய்கின்றோம்.

நன்றி

**மணிவிழாச் சபையினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயத்தின் உள்ளே....

பக்கம்

## ஆசிச் செய்திகள்


| | | |
|---|---|---|
| (1) | இந்துக் குருமார் அமைப்பின் ஆசிச்செய்தி | I |
| (2) | முடிப்பிள்ளையார் கோவில் பிரதம குருவின் ஆசிச்செய்தி | II |
| (3) | புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரின் ஆசிச்செய்தி | III |


## வாழ்த்துச் செய்திகளும் பணிநயப்புச் செய்திகளும்


| | | |
|---|---|---|
| (1) | பாடறிந்தொழுகும் பண்புடையவர் | IV - V |
| (2) | மேல் நீதிமன்ற நீதிபதியின் வாழ்த்துச்செய்தி | VI |
| (3) | உயரிய சேவை தொடர்ந்திட வாழ்த்துகின்றோம் | VII |
| (4) | அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி | VIII |
| (5) | கௌரவ ஆளுநரின் செயலாளரின் வாழ்த்துச்செய்தி | IX |
| (6) | பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி | X |
| (7) | மாகாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி | XI |
| (8) | ஆளுமை நிறைந்த அருணகிரிநாதன் | XII |
| (9) | கல்விப்புலத்தில் தாக்கம் செலுத்திய செயல்வீரன் | XIII |
| (10) | மணிவிழா நாயகனுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள் | XIV - XV |
| (11) | ஆற்றலின் உறைவிடமான அருணகிரி | XVI |
| (12) | கல்வியுலகிற்கு பெருமை சேர்த்த கல்விப்பணிப்பாளர் | XVII |
| (13) | மடு கல்விப்பணிப்பாளரின் மணிவிழா வாழ்த்து | XVIII |
| (14) | பணியில் பல்வேறு பரிமாணங்களில் ஜொலித்தவர் | XIX |
| (15) | அர்ப்பணிப்பு மிக்க சேவையாளன் | XX |
| (16) | மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்கள் | XXI - XXII |
| (17) | பன்முக ஆளுமையின் அடையாளமாகத் திகழ்பவர் | XXIII |
| (18) | தன் பெயரால் தொழிலுக்குப் பெருமை சேர்த்த பெருந்தகையாளன் | XXIV - XXV |
| (19) | நானும் அருணகிரி அண்ணனும் | XXVI - XXIX |
| (20) | பல்துறை ஆளுமை மிக்க பண்பாளன் | XXX - XXXI |
| (21) | வள்ளுவன் வழியில் அருணகிரிநாதன் | XXXII - XXXIII |
| (22) | ஆளுமைமிகு அதிபர் அருணகிரிநாதன் | XXXIV - XXXVI |
| (23) | கல்விப்புலத்தின் கலங்கரை விளக்கு | XXXVII |
| (24) | ஆளுமைமிக்க கல்வியியலாளன் | XXXVIII |
| (25) | களம் பல கண்ட கல்வியியலாளன் | XXXIX |
| (26) | மண்ணுக்காய் உழைக்கும் உத்தமன் | XL |
| (27) | சமூகப் பாசறையின் தானைத் தளபதி | XLI |
| (28) | பணியால் பதவியைப் பெருமைப்படுத்தியவன் | XLII |
| (29) | வடபுலக் கல்விக்கொரு வழிகாட்டி | XLIII - XLIV |
| (30) | மஸ்கெலியாவுக்குக் கிடைத்த மணிமகுடம் | XLV - XLVI |
| (31) | எம்மை உருவாக்கிய எம் இனிய ஆசான் | XLVII - XLVIII |
| (32) | வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்து | XLIX - L |
| (33) | மணிவிழாக் காணும் என் இனிய நண்பன் | LI - LIV |
| (34) | அருணி ஆழமான கல்விச் சிந்தனையாளன் | LV |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| (35) | தீவகத்திற்கு ஒரு முத்து | LVI |
| (36) | சந்ததமும் தமிழ் போல தழைத்து வாழ்க | LVII |
| (37) | தலைமைத்துவத்திற்கு தனித்துவமான அடையாளம் | LVIII - LXI |
| (38) | தோழமையுடன் கூடிய வாழ்த்துக்கள் | LXII |
| (39) | ஞாபகத் துளிகள் | LXIII |
| (40) | உம் பணி தொடர உரிமையுடன் வாழ்த்துகின்றேன் | LXIV - LXV |
| (41) | கல்வியே கண்ணெனக் கருதுபவர் | LXVI |
| (42) | துணிவுடையான் நின்நாமம் துலங்கட்டும் வையகமே | LXVII - LXVIII |
| (43) | தன் பணிகளால் தன்னை என்றும் நினைத்திட வைத்தவர் | LXIX - LXX |
| (44) | ஆளுமையால் தடம் பதித்தவர் | LXXI |
| (45) | குன்றின் விளக்காய் எங்கள் அருண் | LXXII |
| (46) | நிறைவான பணி | LXXIII - LXXIV |
| (47) | கல்விச் சேவைக்கோர் கலங்கரை விளக்கு | LXXV - LXXVI |
| (48) | சிறந்த சேவையாளன் நல்லதோர் நிர்வாகி | LXXVII - LXXVIII |
| (49) | எமது மண்ணிற்குப் பெருமை தேடித் தந்தவர் | LXXIX |
| (50) | விழா நாயகர் வாழ்த்தும் சேவை நயப்பும் | LXXX - LXXXII |
| (51) | வேலணை மத்திய கல்லூரியை மீண்டெழ வைத்தவர் | LXXXIII - LXXXIV |
| (52) | மாணவர்களின் விடிவெள்ளி | LXXXV |
| (53) | எம் ஊருக்குப் பெருமை சேர்த்த உத்தமன் | LXXXVI |
| (54) | இடப்பெயர்வுக்குப் பின்னரான வேலணை மத்திய கல்லூரியின் பொற்காலம் | LXXXVII - LXXXVIII |
| (55) | கல்விக்கொரு கலங்கரை விளக்கு | LXXXIX |
| (56) | அகம் மகிழ்ந்தோம் ஆண்டு நூறு வாழி! வாழி! | XC - XCI |
| (57) | கல்லூரி அன்னைக்கு கருணை ஒளியூட்டி நின்ற காவலன் | XCII - XCIII |


## கட்டுரைகள்


| | | |
|---|---|---|
| (1) | தனியார் போதனை – சில ஆய்வு முடிவுகளும் பரிந்துரைகளும் | 1 – 7 |
| (2) | புதிய அறிவுப் பரப்பை நோக்கி உளவியலை முன்னெடுத்தல் | 8 – 11 |
| (3) | பாடசாலைகளில் ஆசிரியர்கள் உளவளத்துணையாளராக செயற்படுதல் | 12 – 18 |
| (4) | ஆசிரியர்களின் கற்பித்தல்: மாணவர்களின் கருத்துக்களும் மனப்பாங்குகளும் | 19 – 31 |
| (5) | கல்வி நிர்வாகத்துறை சார்ந்த விடய ஆய்வு – பரீட்சை நோக்கிலான ஒரு பார்வை | 33 – 40 |
| (6) | பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளில் புதிய கட்டமைப்புக்களின் உருவாக்கம் | 41 – 47 |
| (7) | பாடசாலைகளில் விளைதிறன்மிக்க கூட்ட முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்தல் | 48 – 52 |
| (8) | பாடசாலை மட்டத்தில் திட்டமிடல் செயற்பாடுகள் | 53 – 57 |
| (9) | ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்பு எதிர்பார்ப்புகளும் நடைமுறைகளும் | 58 – 62 |
| (10) | பாடசாலைகளில் முன்னோடிச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் | 63 – 66 |
| (11) | ஆசிரியத்துவம் ஒரு சமகாலப்பார்வை | 67 – 71 |
| (12) | பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம் | 72 – 75 |
| (13) | பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம் | 76 – 82 |
| (14) | ஆரம்பக்கல்வி தொடர்பான கலைத்திட்ட ஏற்பாடுகளும் அமுலாக்கமும் | 83 – 89 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிகள் பகிர்கின்றோம்



என்றும் எமது அன்பிற்கும், மிகுந்த மதிப்பிற்குமுரிய நண்பர், திருவாளர் அருணகிரிநாதன் அவர்கள் மணிவிழா காண்கின்றார் என்பது பெரு மகிழ்வினைத் தருகின்றது.

எமது மாணவச் செல்வங்களின் ஒழுக்கத்துடன் இணைந்த கல்விச் செயற்பாட்டிற்கும், சமயம் சார்ந்த செயற்பாட்டிற்கும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயல்புரிந்து வருகின்ற ஒரு பெருமகன்.

எமது இந்து குருமார் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற "சமயநெறி வளர்ப்போம்" நிகழ்ச்சித் திட்டத்தில் மிகுந்த ஆர்வத்துடனும் அக்கறையுடனும் செயலாற்றி வருகின்றார்.

மிக அண்மைய காலத்தில் இலங்கை அரசின் சைவ சமய பாடப்புத்தகங்களில் உள்ள பிழைகளை நாம் சுட்டிக்காட்டி முன்நகர்த்திய சகல நடவடிக்கைகளிலும் பிரதான இடம் வகித்துள்ளார். இவரது ஆலோசனைகள் காரணமாக விரைவில் தவறுகளுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக வாக்குறுதி தந்துள்ளார்கள்.

இவ்வாறாக சமய, கல்வி. சமூகப் பணிகளில் மிகுந்த சிரத்தையுடன் செயற்படும் அருணகிரிநாதனுக்கு மணிவிழா எடுக்கும் சபையினருக்கும் எமது பாராட்டுக்களை தெரிவித்து, அருணகிரிநாதன் தம்பதியினருக்கு எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருள் என்றும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

சுபம்

**சிவஸ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வரக்குருக்கள்**
இந்து குருமார் அமைப்பு,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிப்பிள்ளையார் கோயில் பிரதமகுருவின் ஆசிச்செய்தி



இன்றைய நன்நாளில் மணிவிழாக் காணும் விழா நாயகன் பொன்.அருணகிரிநாதன் அவர்களுக்கு ஆசி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தனிப்பட்ட முறையில் அவரை நான் நன்கு அறிவேன். மிகவும் பின்தங்கிய கிராமத்தில் பிறந்து விடாமுயற்சி, கடின உழைப்பு, வசீகரிக்கும் பார்வை, அழகான ஆழமான பேச்சுக்கள் மூலம் தன்னுடைய ஆளுமையை வளர்த்து சமூகத்தில் ஒரு தலைவனாக வெளிக்காட்டி இருக்கிறார்.

கல்வித்துறையில் பல சாதனைகள், ஆன்மீகத்தில் அதிக நாட்டம், சைவ சமயத்தில் சிறந்த சொற்பொழிவு ஆற்றும் வல்லமை, வேலணை மத்திய கல்லூரியின் வளர்ச்சியில் அவர் காட்டிய பங்களிப்பு என்பவற்றின் மூலம் அவரை ஒரு பூரண மனிதனாக இனம் காட்டியது. நாயகன் அவர்கள் ஓய்வுக் காலத்திலும் முடிப்பிள்ளையார் ஆலய வளர்ச்சியிலும் சமூக அரசியலிலும் தொடர்ந்து பல சாதனைகள் படைப்பார் என நம்புகின்றேன். அவர் சீரும் சிறப்பும் மிக்க பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல முடிப்பிள்ளையாரை பிரார்த்தித்து ஆசி கூறி அமைகிறேன்.

**சிவஸ்ரீ மஹா பிரபாகரக் குருக்கள்**

முடிப்பிள்ளையார் கோயில்,

மேற்கூர்,

வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொன் அருணகிரிநாதன் அவர்களை மணிவிழா நாளில் வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன். தீவகத்தை பூர்வீகமாகக் கொண்ட நாம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும்போது அறிமுகமாகி நெருங்கிய நட்பைக் கொண்டிருந்தோம்.

கல்விப்புலத்தில் கால்பதித்த இவர் பல்வேறு இடங்களில் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக, கல்வி அதிகாரியாக பணியாற்றி நிறைவாக யாழ்ப்பாண கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளராக சிறந்த சேவை புரிந்து மணிவிழாகாணும் இந்நாளில் இவர் மீது இறை ஆசி நிறைய வேண்டுகின்றேன்.

தீவகத்தின் கல்வி வளர்ச்சியில் இவர் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் தன்னை அர்ப்பணித்து செயலாற்றினார். இவரின் ஆழ்ந்த கல்விப் புலமையும் கல்விப்பணிசார் அனுபவ முதிர்ச்சியும் வடக்கின் கல்வியியலாளர்களுக்கு பெரிதும் பயனளித்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக யாழ் கல்வி வலயத்தில் அவரை சிறந்த கல்வி வளவாளராகவும் கல்வி நிர்வாக வழிகாட்டியாகவும் நாம் கண்டோம்.


இத்துடன் அவர் பற்பல பொதுப் பணிகளிலும் தன்னை அர்ப்பணித்து செயலாற்றி உயர்வு பெற்றுள்ளார். அகவை அறுபதில் அவரை உளமார வாழ்த்துவதுடன் மேலும் பல்லாண்டுகள் அவருடைய கல்விப்புலமை பலருக்கு பயன்தர வேண்டுமென்றும் அவரது பணி சிறந்தோங்க வேண்டுமென்றும் இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

**அருட்திரு.ம.ஜெறோ செல்வநாயகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடறிந்தொழுகும் பண்புடையவர்



யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் தென்மேல் பகுதியில் அமைந்துள்ள சப்த தீவுகளில் முன்னிலையாக விளங்கும் வேலணைப் பகுதியிலே எட்டாம் வட்டாரமாக அமைந்துள்ள வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலயம் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்ததாகும்.

இவ்வாலயச் சூழலிலே பண்டைநாள் தொட்டுச் சைவாசார அனுட்டானங்களும், திருமுறை புராண இதிகாச பாண்டித்தியமும், நாடோறும் ஆலய வாழிபாடும் உடைய ஒழுக்க சீலர்கள் வாழ்ந்து வந்தனர். பலர் சிவபூசா துரந்தரர்களாகவும் விளங்கினர்.

ஆலயத்தின் வடபால் நெல்லாவில் என்னும் வளவில் சிவபூசை செய்யும் போது ஒலிக்கப் படும் மணியோசை அதிகாலையிலேயே கேட்கத் தவறியதில்லை என்பர் எம் முன் னோர். இங்கு வாழ்ந்த முதறிஞர்களாக விளங்கிய நாகலிங்க உபாத்தியார், தம்பு உபாத்தியார், இராசா உபாத்தியார் எனப்படும் கெங்கமலையா கனகசபாபதி உபாத்தியார் ஆகியோர் சிவபூசா துரந்தரர்களாகவும், பௌராணிக வித்தகர்களாகவும் அக்காலத்தில் காணப்பட்டனர்.

1925 ஆம் ஆண்டில் நெல்லாவிலில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தமிழ் அச்சியந்திரசாலை ஒன்றினை அமைத்து "சூக்குமார்த்த போதினி" என்னும் பெயரில் சைவாபிமான பத்திரிகை வெளியிடப் பட்டமை வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. மேலும் அவ்வச்சியந்திரசாலையிலேயே நள வருடம் கார்த்திகை மாதம் "சிவநெறிப்பிர காசம்" என்னும் சைவ சித்தாந்த நூலை செ.கனகசபாபதி உபாத்தியார் முதன்முதல் தாமே பல ஏடுகளைப் பரிசோதித்துப் பதிப்பித்து வெளியிட்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இவ்வாறான தமிழ்ப்புலமையும், குடிப் பெருமையும், நுண்மான் நுழை புலமையும் உடையவர்கள் வாழ்ந்த பெரிய புலப்பதியிலே அப்பெருமக்கள் மரபின் வழித் தோன்றலாக பொன்னம்பலம் அன்னலட்சுமி தம்பதிகளுக்கு மூத்த புதல்வனாக அமைந்தவரே இன்று (31.01.2016) மணிவிழா நாயகனாக மிளிரும் பொன் அருணகிரிநாதன் அவர்கள்.

மேற்குறிப்பிட்ட இராசா உபாத்தியாரால் தோற்றுவிக்கப்பெற்ற வேலணை மேற்கு நடராசா வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியை முடித்த பின் மேல் நிலைக் கல்வியை வேலணை மத்திய கல்லூரியில் நிறைவு செய்து யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி யாகியதுடன் தொடர்ந்து பட்டப் பின் படிப்பு நெறிகளைப் பூர்த்தி செய்தவராய் கல்விப் புலத்தில் தம் சேவையை ஆசிரியராக, அதிபராக, கல்விப் பணிப்பாளராக, நாளும் பொழுதும் கல்விப் பணியே தம் வாழ்வில் கருதும் பணியாக ஆற்றியுள்ளார் அருணகிரிநாதன்.

பாடசாலைச் சேவையில் நல்லாசிரியராக, முகாமைத்துவமிக்க அதிபராக மலைநாட்டில் தமது பிறந்த ஊரில் சிறப்பாகப் பல்லோராலும் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியவர். இருபத்தேழு ஆண்டுகள் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் ஆசிரியராகவும் பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொன் அருணகிரிநாதன் அவர்களை மணிவிழா நாளில் வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன். தீவகத்தை பூர்வீகமாகக் கொண்ட நாம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும்போது அறிமுகமாகி நெருங்கிய நட்பைக் கொண்டிருந்தோம்.

கல்விப்புலத்தில் கால்பதித்த இவர் பல்வேறு இடங்களில் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக, கல்வி அதிகாரியாக பணியாற்றி நிறைவாக யாழ்ப்பாண கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளராக சிறந்த சேவை புரிந்து மணிவிழாகாணும் இந்நாளில் இவர் மீது இறை ஆசி நிறைய வேண்டுகின்றேன்.

தீவகத்தின் கல்வி வளர்ச்சியில் இவர் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் தன்னை அர்ப்பணித்து செயலாற்றினார். இவரின் ஆழ்ந்த கல்விப் புலமையும் கல்விப்பணிசார் அனுபவ முதிர்ச்சியும் வடக்கின் கல்வியியலாளர்களுக்கு பெரிதும் பயனளித்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக யாழ் கல்வி வலயத்தில் அவரை சிறந்த கல்வி வளவாளராகவும் கல்வி நிர்வாக வழிகாட்டியாகவும் நாம் கண்டோம்.


இத்துடன் அவர் பற்பல பொதுப் பணிகளிலும் தன்னை அர்ப்பணித்து செயலாற்றி உயர்வு பெற்றுள்ளார். அகவை அறுபதில் அவரை உளமார வாழ்த்துவதுடன் மேலும் பல்லாண்டுகள் அவருடைய கல்விப்புலமை பலருக்கு பயன்தர வேண்டுமென்றும் அவரது பணி சிறந்தோங்க வேண்டுமென்றும் இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

**அருட்திரு.ம.ஜெறோ செல்வநாயகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடறிந்தொழுகும் பண்புடையவர்



யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் தென்மேல் பகுதிதியில் அமைந்துள்ள சப்த தீவுகளில் முன்னிலையாக விளங்கும் வேலணைப் பகுதியிலே எட்டாம் வட்டாரமாக அமைந்துள்ள வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலயம் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்ததாகும்.

இவ்வாலயச் சூழலிலே பண்டைநாள் தொட்டுச் சைவாசார அனுட்டானங்களும், திருமுறை புராண இதிகாச பாண்டித்தியமும், நாடோறும் ஆலய வாழிபாடும் உடைய ஒழுக்க சீலர்கள் வாழ்ந்து வந்தனர். பலர் சிவபூசா துரந்தரர்களாகவும் விளங்கினர்.

ஆலயத்தின் வடபால் நெல்லாவில் என்னும் வளவில் சிவபூசை செய்யும் போது ஒலிக்கப் படும் மணியோசை அதிகாலையிலேயே கேட்கத் தவறியதில்லை என்பர் எம் முன் னோர். இங்கு வாழ்ந்த முதறிஞர்களாக விளங்கிய நாகலிங்க உபாத்தியார், தம்பு உபாத்தியார், இராசா உபாத்தியார் எனப்படும் கெங்கமலையா கனகசபாபதி உபாத்தியார் ஆகியோர் சிவபூசா துரந்தரர்களாகவும், பௌராணிக வித்தகர்களாகவும் அக்காலத்தில் காணப்பட்டனர்.

1925 ஆம் ஆண்டில் நெல்லாவிலில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தமிழ் அச்சியந்திரசாலை ஒன்றினை அமைத்து "சூக்குமார்த்த போதினி" என்னும் பெயரில் சைவாபிமான பத்திரிகை வெளியிடப் பட்டமை வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. மேலும் அவ்வச்சியந்திரசாலையிலேயே நள வருடம் கார்த்திகை மாதம் "சிவநெறிப்பிர காசம்" என்னும் சைவ சித்தாந்த நூலை செ.கனகசபாபதி உபாத்தியார் முதன்முதல் தாமே பல ஏடுகளைப் பரிசோதித்துப் பதிப்பித்து வெளியிட்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இவ்வாறான தமிழ்ப்புலமையும், குடிப் பெருமையும், நுண்மான் நுழை புலமையும் உடையவர்கள் வாழ்ந்த பெரிய புலப்பதியிலே அப்பெருமக்கள் மரபின் வழித் தோன்றலாக பொன்னம்பலம் அன்னலட்சுமி தம்பதிகளுக்கு மூத்த புதல்வனாக அமைந்தவரே இன்று (31.01.2016) மணிவிழா நாயகனாக மிளிரும் பொன் அருணகிரிநாதன் அவர்கள்.

மேற்குறிப்பிட்ட இராசா உபாத்தியாரால் தோற்றுவிக்கப்பெற்ற வேலணை மேற்கு நடராசா வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியை முடித்த பின் மேல் நிலைக் கல்வியை வேலணை மத்திய கல்லூரியில் நிறைவு செய்து யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி யாகியதுடன் தொடர்ந்து பட்டப் பின் படிப்பு நெறிகளைப் பூர்த்தி செய்தவராய் கல்விப் புலத்தில் தம் சேவையை ஆசிரியராக, அதிபராக, கல்விப் பணிப்பாளராக, நாளும் பொழுதும் கல்விப் பணியே தம் வாழ்வில் கருதும் பணியாக ஆற்றியுள்ளார் அருணகிரிநாதன்.

பாடசாலைச் சேவையில் நல்லாசிரியராக, முகாமைத்துவமிக்க அதிபராக மலைநாட்டில் தமது பிறந்த ஊரில் சிறப்பாகப் பல்லோராலும் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியவர். இருபத்தேழு ஆண்டுகள் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் ஆசிரியராகவும் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராகவும் சேவையாற்றிப் பெற்ற அனுபவப் பேறினாலும் முகாமைத்துவச் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றமையினாலும் கல்வி நிர்வாக சேவையில் உள்வாங்கப்பட்டு கல்விப் பணிப்பாளராகும் வாய்ப்பினைப் பெற்றார்.

தீவக கல்வி வலயத்தில் இரண்டு வருடங்களும் யாழ் கல்வி வலயத்தில் மூன்று வருடங்களும் முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளராக சிறப்புறக் கடமையாற்றி 30.01.2016 இல் உத்தியோகபூர்வமாக ஓய்வு நிலை பெற்றுள்ளார் பொன் அருணகிரிநாதன் அவர்கள்.

கல்விப் புலத்தில் பாடசாலை மட்டத்தில் ஆசிரியராக, அதிபராக இருபத்தேழு வருடங்களும் கல்வி நிர்வாக மட்டத்தில் ஐந்து வருடங்களும் பூரணமான சேவையினை ஆற்றி மனப்பூரிப்புடன் மனை நிறைவுடன், என் கடமையை என்னளவில் குறைவு படாது நிறைவாகவே செய்தேன் என்னும் உள்ளார்ந்த உணர்வுடன் ஓய்வுபெறும் நிலையிலுள்ள அவரைப் பாராட்டி வாழ்த்துவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

அருணகிரிநாதன் அவர்கள் தமது வாழ்வில் கல்விப் புலத்தில் மாத்திரமன்றிச் சமூகக் களத்திலும் தனது அறிவினை, ஆற்றல்களை, அனுபவங்களைப் பகிர்ந்து அரும்பணியாற்று கின்றவர். பொதுப் பணிகளிலும் தம்மையீடுபடுத்தி ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே செல்லும் வாயெல்லாம் செய்துவரும் செயற் பாட்டாளர்.

தமது குலதெய்வமாக விளங்கும் பெரிய புலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவராகத் தற்போது கடமையாற்றி வருகின்றமை முக்கியமாகக் குறிப்பிட வேண்டியதாகும்.

அறிவார்ந்த அமைதியும், ஆன்றறிந்த கொள்கையும், பாடறிந்தொழுகும் பண்பும் உடையவராகக் காணப்படும் இவரின் ஓய்வுக் காலம் தமக்கும் பிறர்க்கும் சுற்றத்தவருக்கும், மற்றெல்லோர்க்கும் பயனுடையதாகச் சிறப் புற்று அமையப் பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்தித்து மணிவிழா நாயகனும் அவர்தம் மனையாளும் பிள்ளைகளும் மற்று முள்ளோரும் இன்புற்று வாழ வாழ்த்துவோமாக.

**"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"**

**சைவப்புலவர்**
**மு.திருஞானசம்பந்தபிள்ளை**
(ஓய்வு நிலை அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன் பொன்.அருணகிரிநாதனின் மகுட மணித் திருவிழாவில் மேல் நீதிமன்ற நீதிபதியின் வாழ்த்துரை



வேலணை மண்ணின் பொக்கிஷம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணம், மதிப்பிற்குரிய பொன்னம்பலம் அருணகிரிநாதன் அவர்களின் சேவை நலன் பாராட்டும் மணிவிழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமை அடைகின்றேன். வேலணை மேற்கில் அவதரித்து வேலணை மேற்கு நடராசா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பயின்று, வேலணை மத்திய கல்லூரியில் சிரேஷ்ட கல்வியைப் பயின்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி, முதுமாணி பட்டங்களைப் பெற்று பார் போற்றும் புத்திஜீவி, கல்வியியலாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொன்னம்பலம் அருணகிரிநாதன் அவர்களுக்கு மணிவிழா நடத்துவதையிட்டு அம்மண்ணில் பிறந்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக இருக்கும் யான் மண்ணின் மைந்தனுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல கல்வியியல் சான்றிதழ்களைக் கொண்ட கல்வியியலாளர் பொன்னம்பலம் அருணகிரிநாதன் அவருடைய பொற்காலம் எனச் சொல்லப்படும் 2002–2011 யாழ்ப்பாணம்–வேலணை மத்திய கல்லூரியின் அதிபராக இருந்த காலம் எனக் கூறினால் மிகையாகாது. மிகவும் கொடூரமான யுத்த காலத்தில் தொடர்ச்சியாக ஒன்பது ஆண்டுகள் வேலணை மண்ணின் எவரெஸ்ட் சிகரமாக இருக்கும் வேலணை மத்திய கல்லூரியின் அதிபர் என்ற கிரீடத்தைச் சுமந்து இன்று மகுட விழா நடாத்தும் நாயகன் பொன்.அருணகிரிநாதன் மண்ணின் மைந்தன் மட்டுமல்ல, வேலணை மண்ணுக்கு கிடைத்த பொக்கிஷம் எனக்கூறினால் மிகையாகாது. தீவக கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி அவரது இறுதிக் காலத்தில் வடமாகாணத்தின் தலைநகராம் யாழ்ப்பாணத்தின் யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு நிலைக்குச் செல்கின்றமை வேலணை மண்ணுக்குக் கிடைத்த மாபெரும் பெருமையென நான் வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

கல்வியில் சிறந்த பெறுபேறுகள், தொழிலில் கண்ணியம், கடமை, கட்டுப்பாடு என்பவற்றை இறுக்கமாகக் கொண்டு பல பொதுப்பணிகள் ஆற்றிய பொன்.அருணகிரிநாதன் அவர்களின் எதிர்காலம் சுபீட்சமாக இருக்க வேண்டும். வளமான காலமாக இருக்க வேண்டும் என வாழ்த்தி மணிவிழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியுடன் அவருக்கு எனது வாழ்த்துக்களை மீண்டும் தெரிவிக்கின்றேன். வேலணை மண்ணின் பொக்கிஷம், வேலணை மண்ணின் எவரெஸ்ட் சிகரம், கல்வியின் அடிநாதம் என்பவற்றுக்கு உதாரண புருஷனாக விளங்கிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொன்.அருணகிரிநாதன் அவர்கள் வாழ்க வளமுடன்.

என்றும் ஆசியுடன்

**மா.இளஞ்செழியன்**
மேல் நீதிமன்ற நீதிபதி
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரிய சேவை தொடர்ந்திட வாழ்த்துகிறோம்

"பணிவுடையன் இன்சொல்லனாதல் ஒருவர்க்கு
அணியல்ல மற்றும்பிற"



என்ற வாக்குக்கு இணங்க பணிவையும் இன்சொல்லையும் கொண்டு வாழ்ந்து வருபவர் திருவாளர் பொன்னம்பலம் அருணகிரிநாதன் அவர்கள்.

வேலணை மேற்கில் பிறந்து வேலணையிலேயே தனத ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து இடைநிலைக் கல்வியை வேலணை மத்திய கல்லூரியில் நிறைவேற்றி பட்டப்படிப்புகட்கு தகுதி பெற்று பல பட்டங்களையும் பெற்று கல்வியில் ஒரு உயர்ந்த ஸ்தானத்தை பெற்று தான் பிறந்த மண்ணுக்கு புகழ் சேர்த்தவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக தனத பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்க்கும் வகையில் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் வேலணை மத்திய கல்லூரியிலும் அதிபராக கடமையாற்றி தனது சேவையை தான் பிறந்த மண்ணுக்கு அர்ப்பணித்தவர்.

வேலணை மேற்கு, பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தின் நிர்வாக சபைத் தலைவராக செயற்பட்டு குறித்த ஆலயத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து தனது பதவிக் காலத்தில் மகா கும்பாபிசேகம் செய்வித்து தற்போதும் தனது சேவையை நல்கி வருகின்றார்.

1991 இல் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக பெரும்பாலான குடும்பங்கள் யாழ்ப்பாணத்திலும் வெளியிடங்கட்கும் சென்றுவிட திருவாளர் பொன்னம்பலம் அருணகிரிநாதன் யாழ்ப்பாணத்திலேயே தங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனினும் பிறந்த மண்ணில் அதிபர் சேவைகளில் பணிபுரிந்த வேளை தினமும் மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணத்திலிருந்து வேலணைக்கு அப்போதைய கல்லும் கரடுமான பாதையூடாக இராணுவ கெடுபிடிகளுக்கு மத்தியிலும் பயணித்து தான் படித்த பாடசாலைக்கும் தனத பிறந்தகத்தின் அயலில் உள்ள பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்துக்கும் செய்த சேவையினை வேலணையைச் சேர்ந்த எவரும் மறக்க முடியாது.

தீவகத்தின் அரிமாக் கழகத்தின் அங்கத்தவராகி தீவகத்துக்கும் தனது சேவையை விஸ்தரித்து தீவகத்தின் வளர்ச்சிக்கும் அயராது உழைத்து வருகின்றார்.

பொதுவாக அரச பணிகளில் கடமையாற்றுபவர்கள் கடமையிலிருந்து 60 அறுபது வயது வந்தால் ஓய்வு பெறுவது என்பது நியதி. ஆனால் சேவையிலிருந்து ஓய்வு இல்லை. எனவே இன்னும் தங்கள் உயர்சேவை தொடர வேண்டுமென்பதோடு இவரும் இவரின் மனைவி பிள்ளைகளும் நீடூழி வாழ்ந்து வாழையடி வாழையாக சேவை செய்ய எமது வாழ்த்துக்கள்.

**திரு.திருமதி இளங்கோவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone: 021-222 223 / 021-222 223

**දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**
**District Secretariat, Jaffna.**

මගේ අංකය / எனது எண் / My No.: GA/JP/VN/03

ඔබේ අංකය / உமது எண் / Your No.:

දිනය / திகதி / Date: 21-01-2016

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



திருவாளர் பொன்.அருணகிரிநாதன் (பிரதிக் கல்விப்பணிப்பாளர், யாழ் கல்வி வலயம்.) அவர்கள் மணிவிழாக் காணும் இவ்வேளையில் மணிவிழா சிறப்புற அமைய வெளியீடு செய்யப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திருவாளர் பொன்.அருணகிரிநாதன் அவர்கள் வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக் கல்வியைள யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயத்திலும், சிரேஸ்ட கல்வியை வேலணை மத்திய கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ் பல்கலைக் கழகத்திலும் பெற்று சிறந்த ஆசிரியராக, அதிபராக, கல்வி நிர்வாகசேவை அதிகாரியாக பல உயர்வுகளைக் கண்டு மாணவர்களின் கல்விப்பணிக்கு சிறந்த சேவையை வழங்கியவர். அதேவேளை சமூகப் பணிகளிலும் பொதுச்சேவையிலும் பொறுப்புடனும், முனைப்புடனும் செயற்படுபவர். அவர் தொடர்ந்து பொதுப்பணியினை வழங்க எல்லாம்வல்ல பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையாரது அருள் கிடைக்க வேண்டும்.

அவரது சேவையை யாவரும் அறியவும் மெருகூட்டவும் புதுமலர் வெளியீடு செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கும் மலர்க்குழுவினரும் பாராட்டத்தக்கவர்கள். இப்பணிகளே சமூகத்தில் உயரிய கௌரவத்தை வழங்கும். அவர் தனது நிறைவான சேவையைத் தொடர்ந்து வழங்க அவருக்கு நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**நா.வேதநாயகன்**
அரசாங்க அதிபர்,
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ආණ්ඩුකාර කාර්යාලය
උතුරු පළාත
48,වන සංරක්ෂණ කාර්යාල පටුමග,
චුණ්ඩුක්කුලි, යාපනය

ஆளுநர் செயலகம்
வட மாகாணம்
48, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

GOVERNOR'S SECRETARIAT
NORTHERN PROVINCE
48, Forest Office Lane,
Chundukkuli, Jaffna

செயலாளர் / ලේකම් / Secretary — 021-2220661
பொது / පොදු / General — 021-2220660
தொலைநகல் / ෆැක්ස් / Fax — 021-2220661


எனது இல: / මගේ අංකය: / My No: G/NPC/A4/SG/Msg/2016

திகதி / දිනය / Date: 12.01.2016



## கௌரவ ஆளுநர் அவர்களின் செயலாளரின் வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றும் உயர்திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்கள் தனது மணிவிழாவை கொண்டாடும் இத் தருணத்தில் அவருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பல வருடங்களாக கல்விச்சேவையில் பணிபுரிந்து ஆசிரியராகவும், அதிபராகவும், பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் மாணவர்களின் கல்வித்தேடலுக்கு உறுதுணையாகவும், வழிகாட்டியாகவும், சாதனைகள் பலவற்றை அடைவதற்கு முன்னோடியாகவும் செயற்பட்டு 60 அகவையில் மணிவிழா காண உள்ள உயர்திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்களின் பணி சிறப்பாக அமைந்திருந்ததனை நான் நன்கறிவேன். மேலும் இவர் போர்ச்சூழல் காரணமாக தீவக மக்கள் இடம்பெயர்ந்து சென்றிருந்த வேளையில் தீவக வலயப் பாடசாலைகளும் மக்கள் இடம்பெயர்ந்த இடங்களில் தற்காலிகமாக செயற்பட்டபோது பாடசாலையில் போதிய வளங்கள் இல்லாதவிடத்தும் தீவக மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் தான் கொண்ட பற்றின் காரணமாக தனது ஆசிரிய பணியை அப்பாடசாலையிலேயே விரும்பி ஆற்றியவர். மேலும் இவர் அரச சேவையில் மட்டுமல்லாது சமய சமூக பணிகளிலும் பெரும் பங்காற்றியுள்ளார் என்பதை இவர் வகித்த பதவிகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது பாராட்டுக்கள்.

மணிவிழா நாயகன் உயர்திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்கள் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் ஓய்வுக்காலத்தில் சமய சமூக கல்விப்பணிகளில் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபட்டு சமூகத்திற்கு தனது அனுபவத்தினை தந்து மகிழ்ச்சியான வாழ்வு வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

**இ.இளங்கோவன்**
ஆளுநரின் செயலாளர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி



மணிவிழா நாயகன் யாழ்ப்பாண கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொன்.அருணகிரிநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கலைப்பட்டதாரியான இவர் பட்டப்பின் டிப்ளோமா மற்றும் கல்வி முதுமாணி பட்டங் களையும் பெற்றுள்ளார். 1984ம் ஆண்டு நு/ சென்.ஜோசப் கல்லூரி மஸ்கெலியாவில் ஆசிரியராக ஆரம்பித்த இவரது பணி பிரதி அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றிப் பின்னர் பிரதிக் கல்விப்பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார். இவரது அயராத உழைப்பின் காரணமாக மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தியதோடு பாடசாலைகளின் தரத்தையும் அதியுயர் நிலைக்கு கொண்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுமட்டுமன்றி பல சமூக சேவைகளிலும் சிறந்த அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றார்.

திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்கள் தமது ஓய்வுக்காலத்திலும் தனது சேவையினைத் தொடர்ந்து மேலும் மேலும் பல நல்ல முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன். அவரது ஓய்வுக்காலம் அமைதியாக இருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்**
துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாண கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.பொ.அருணகிரிநாதன் அவர்களது மணிவிழாவினையொட்டி வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யாழ்.பல்கலைக்கழக பட்டதாரியான இவர் கல்வி முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றுள்ளதோடு மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் முகாமைத்துவப் பயிற்சிகளையும் பெற்றவராவார். ஆசிரியராக, அதிபராக தனது பணியினைத் திறம்பட ஆற்றி சேவை மூப்பு பரீட்சை மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டு தீவக வலயம், யாழ் வலயம் என்பவற்றில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறுகின்றார்.

இவர் தனது சேவைக்காலத்தில் யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், யா/வேலணை மத்திய கல்லூரி என்பவற்றில் அதிபராகக் கடமையாற்றிய போது ஆற்றிய பணிகள் அளப்பரியவை. கல்விப் பணியுடன் பல பொதுப் பணிகளிலும் ஈடுபட்டு சமூகத்திற்கு தனது சேவைகளினை வழங்கியவராவார். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினது சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளராகவும் செயற்பட்டு ஆசிரியர்களுக்கும், மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கும் இவர் பெரும் பணியாற்றியுள்ளார்.

அகவை அறுபதில் ஓய்வுபெறும் இவர் தனது சேவைக் காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு இவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் தொடர்ந்தும் சமூகத்திற்கு பணியாற்றி நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை நிறைந்த அருணகிரிநாதன்



உயர்திரு பொ.அருணகிரிநாதன் அவர்களை அவரது மணிவிழா நாளில் வாழ்த்துவதில் பேருவையடைகின்றேன். 1996 ஆம் ஆண்டிலிருந்து இவருடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தீவக பாடசாலைகளை மீள இயக்குவதிலும் அங்குள்ள மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதிலும், ஆலயங்களைப் புனரமைப்பதிலும் இவரது பணிகள் கணிசமான பங்களிப்புச் செய்தன.

1998 இல் தீவகக் கல்வி வலயம் உருவாக்கப்பட்ட போது தனது பாடசாலையைத் தந்து அதன் ஆரம்ப செயற்பாடுகளிற்கு உறுதுணையாகவிருந்தார். வேலணை மத்திய கல்லூரி அதிபர் பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் தனது கல்லூரியை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றுவதில் உறுதியாக உழைத்திருந்தார். தீவகத்தின் பல பொது அமைப்புக்களில் அவற்றின் வளர்ச்சிக்காக உறுதியுடன் சீரிய பணியாற்றினார்.

சிறந்த ஆளுமையும், பேச்சாற்றலும் நிறைந்த இவர் யாழ் வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பொறுப்பேற்றதும் இங்குள்ள அதிபர் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கும் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் நல்ல வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

அகவை அறுபதில் ஓய்வு பெறும் இவர் தனது ஓய்வு காலத்தில் குடும்பத்தினருடன் சந்தோசமாக வாழவும் சமய சமூகப் பணிகளில் தொடர்ந்து ஈடுபடவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ப.விக்னேஸ்வரன்**
ஓய்வுநிலை
வட மாகாணக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி புலத்தில் தாக்கம் செலுத்திய செயல்வீரன்



கல்வி புலத்தில் மூன்றிற்கு மேற்பட்ட தசாப்த காலமாக கோலோச்சி இளைப்பாறும் திரு.பொ.அருணகிரிநாதன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். எனது நீண்டகால நண்பராயினும் என்னுடன் பணியாற்றிய காலம் குறுகியதே. அவரிடம் எந்த பணியையும் நம்பி ஒப்படைக்கலாம். ஒரு விடயத்தை பல கோணங்களிலும் ஆராய்ந்து சரியான முடிவை எடுக்கும் நிர்வாகி. சிறந்த ஆலோசகர். அவரது முரண்பாடற்ற முகாமைத்துவம் ஏனைய முகாமையாளர்களுக்கு ஓர் முன்னுதாரணம். தனது மேலதிகாரிகளிடம் அவர் காட்டிய மரியாதை, விசுவாசம், நேர்மையான அணுகுமுறை என்பன அவரது ஆளுமைக்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டு. நம்பிக்கைக்குரிய ஒரு பணிப்பாளரை இழப்பது மனதை வாட்டுகிறது. கணீர் என்ற குரலில் அவர் ஆற்றும் மேடைப் பேச்சுக்கள் எல்லோர் மனதையும் தொடும்.

அவரது சுறுசுறுப்பும் தயக்கமின்றி பணிக்கப்பட்ட கடமைகளை விருப்புடன் ஏற்று நிறைவேற்றுவதும் அவரது தனித்துவம். கல்விச் சிந்தனை தொடர்பான ஆழமான அறிவு கொண்ட அவர் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் வெற்றி கண்டவர்.

கண்டிப்பும் அதேவேளை மாணவர்களிடம் அன்பு செலுத்தி, ஆசிரியர்களை வசப்படுத்தி வேலணை மத்திய கல்லூரியை கட்டியெழுப்பிய சிற்பியாவார். சமூகத்தில் வடமாகாணத்தில் தாக்கம் செலுத்திய ஆளுமை மிக்க ஓர் அதிபராக திகழ்ந்தவர். அவர் மலையகத்தில் என்றோ ஆற்றிய ஆசிரியர் பணிக்காக அண்மையில் அழைத்து பெருமெடுப்பில் கௌரவிக்கப்பட்டார். ஒருபுறம் அவரது சேவைக்கான அங்கீகாரம் கிடைத்தது. மறுபுறம் நன்றியுள்ள ஓர் மாணவர் பரம்பரையை உருவாக்கிய பெருமையை தனதாக்கிக் கொண்டார்.

எனது அன்புக்குரிய அருணகிரி அவர்களே! மனம்விட்டு கதைக்கக்கூடிய ஒரு நண்பரின் பிரிவு உள்ளத்தை நெருடுகிறது. தாங்கள் ஏதோ ஒரு வகையில் கல்விச் சேவையில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். சமூகப் பணிகளை தொடர வேண்டும் என்பது எனது வினயமான வேண்டுகோள். தாங்கள் எங்கிருந்தாலும் தங்கள் குடும்பத்துடன் மனமகிழ்வுடன் ஓய்வுக்காலத்தை கழிக்க இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**N.தெய்வேந்திரராஜா**
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனுக்கு
# மனமார்ந்த வாழ்த்துக்கள்



"நல்லவை எண்ண வேண்டும், எண்ணிய முடிதல் வேண்டும், திண்ணிய உள்ளம் வேண்டும், தெளிந்த நல்லுறுதி வேண்டும்." என்பவற்றை நினைக்கும் போது நண்பன் அருணகிரியின் செயல்திறன் வெளிப்பாடே நினைவில் வரும்.

அர்ப்பணிப்பு மிக்க நண்பன் அருணகிரி அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

நாம் இருவரும் க.பொ.த உயர்தரத்தில் வேலணை மத்திய கல்லூரியில் பயின்று பின்பு பல்கலைக்கழகத்திலும் ஒரே காலத்தில் படித்தோம். இருவரும் ஒரேகாலத்தில் அதிபர் பரீட்சையிலும் சித்தி எய்தி அதிபரானோம். அப்போது இவரிடம் பல்வேறு ஆளுமை, ஆற்றல்களைக் கண்டு வியந்ததுண்டு. எதையும் முன்னின்று செய்து பல சாதனைகளைப் புரிந்துள்ளார். வேலணை சமூகத்திற்கு பல்வேறு வகையில் அர்ப்பணிப்பு மிக்க சேவை செய்தவர். தான் வாழ்ந்த வீட்டிற்கு முன் இருக்கும் முடிப் பிள்ளையார் ஆலய வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருபவர். அது மாத்திரம் அல்லாது ஊரில் உள்ள ஏனைய ஆலயங்களுக்கும் தனது உதவிகளைச் செய்துவருகிறார். எந்த நேரத்திலும் சிரித்த முகத்துடனும் நிதானத்துடனும் சமூகப் பொறுப்புணர்வுடனும் எமது சமூக கலாச்சார சமய விழுமியங்களைப் பாதுகாக்கும் கொள்கையுடனும் தனது அர்ப்பணிப்பான சேவையை ஆற்றியிருப்பது போற்றத்தக்கதாகும்.

நுவரெலியா மாவட்டத்தில் திரு.பொ.அருணகிரிநாதனுக்கும் எனக்கும் சம காலத்தில் ஆசிரிய நியமனம் கிடைக்கப்பெற்றது. அவர் தனது கற்பித்தல் திறமையால் மஸ்கெலியாவில் உள்ள நு/சென் ஜோசப் கல்லூரியில் பிரதி அதிபராகி அங்கு தனது நிர்வாகத் திறமையை திறம்படச் செய்ததை இன்றும் அங்குள்ள அதிபர், ஆசிரியர்கள் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். பல்வேறு இடர்பாடுகளுக்கு உட்பட்ட வேலணை மத்திய கல்லூரியை பழைய நிலைக்கு கொண்டுவந்து அங்கு கற்கும் மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு முன்னர் அனுப்பியது போன்று அனுப்பிய பெருமை அவருக்குரியது. அக்காலத்தில் பௌதிக வளங்கள், ஆளணிவளங்கள் குறைந்திருந்த போதிலும் கல்லூரியை மிகவும் சிறப்பாக இயக்கினார். மேலும் எதையும் எந்தக் கட்டத்திலும் தனக்குச் சரியெனப்பட்டதைக் கூறுவதற்கு பின்னிக்காது துணிந்தவர்.

ஆசிரியர் தொழிலில் ஆரம்பித்து அதிபராகி பிரதிக்கல்விப்பணிப்பாளராகி கடமையாற்றிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முன்னுதாரணமாக, சிறந்த நிர்வாகியாக காணப்பட்டதோடு மாத்திரமல்லாமல் சிறந்த வழிகாட்டியாகவும் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.பொ.அருணகிரிநாதன் அவர்கள் தனது ஓய்வுக்காலத்திலும் அவர் தம் குடும்பத்தாருடன் நீண்டகாலம் நலமாக வாழ்ந்து மேலும் இவ்வுலகிற்கும் சமூகத்திற்கும் பணியாற்றும் வல்லமையை வழங்கவேண்டுமென எல்லாம் வல்ல புளியங்கூடல் ராஜராஜேஸ்வரி அம்பாளின் திருப்பாதங்களில் பணிந்து நிற்கின்றேன்.

**திரு.சதாசிவம் அமிர்தலிங்கம்**

பீடாதிபதி,

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றலின் உறைவிடமான அருணகிரி



தனிமனிதர்களின் சமூக அடையாளம் மற்றும் மதிப்பு என்பன அவர்களது செயலாற்றுகை திறமை, கண்ணியம் என்பவற்றினால் தீர்மானிக்கப்படுகிறது. திரு.பொன்னம்பலம் அருணகிரி நாதன் அவர்களை அவதானிக்கும் போது எனக்கு அத்தகைய எண்ணம் அடிக்கடி ஏற்படுவதுண்டு. மனித உறவுகளில் அதீத நம்பிக்கை கொண்டவர் அருணகிரி, தெய்வ நம்பிக்கை மிக்கவர், குரு விசுவாசம் கொண்டவர், எடுத்த கருமத்தை இமாலயமுயற்சியுடன் செய்து முடிப்பவர், உன்னத மான நட்புக்குரிய பண்புக்கோலங்களின் புதையல் அவர்.

எனது முன்னணி மாணவர்களில் அருணகிரி சிறப்பானவர், கற்றல் என்பதை ஒரு தவமாக எண்ணி வாழ்பவர், தான் கற்றதை சிறப்பாக கற்பிக்கும் பேராற்றல் நினறந்தவர், சிறந்த தலை மைத்துவ பண்புகள் நிறைந்தவர் நல்ல மானிடப் பண்பாளர் திரு அருணகிரி. தனது உண்மை யான உள்ளடங்கிய ஆற்றல்களினால் முதுமாணி கல்விவரை கற்றுத் தேர்ந்தவர்.

பல முகாமைத்துவ புலமைப்பரிசில்கள் இவரைத் தேடிவந்தன. அவற்றை நன்கு பயன்படுத் திக் கொண்டு தமது பணிநிலையில் பாராட்டத்தக்க வகையில் சிறந்து விளங்கினார். நல்ல கணவராக, நல்ல தந்தையாக, நல்ல அதிகாரியாக, மக்கள் விரும்பும் சமூகப்பணியாளராக பன்முகவாழ்வுப் பரிமாணங்களில் பிரகாசித்த செயலாற்றிய சூரியன் அவர் ஓய்வு இல்லாத அறி வியல் உழைப்பாளி அவர் தமது ஊரின் வளர்ச்சிக்கு தம்மால் இயன்ற எல்லா உதவிகளையும் எப்போதும் செய்து வரும் அருணகிரி சமூக மாந்தராக அங்கீகாரம் பெற்றிருப்பது மகிழ்ச்சி தருகிறது.

அறுபது வயது என்பது ஒரு காலக்கணக்கு அவர் இன்னும் பல பல்லாண்டு ஆரோக்கியமும், குதுகலமும், வெற்றிகளும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

**பேராசிரியர்**
**மாசின்னத்தம்பி**
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியுலகிற்கு பெருமை சேர்த்த கல்விப் பணிப்பாளர்



பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக கல்வியுலகின் பல்வேறு நிலைகளில் பணியாற்றி இன்று மணி விழாக் காண்கின்ற அவரது சேவையினை எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது. அர்ப்பணிப்புடனும், ஆளுமையுடனும் இணைந்த அவரது கல்விச் சேவை எல்லோரையும் கவர்ந்தது எனக் கூறினால் அதில் மிகையொன்றும் இல்லை. அவர் தான் ஏற்றுக்கொண்ட எந்தவொரு பணியையும் துணிவுடன் நிறைவேற்றும் சுபாவம் கொண்டவர். அதன் காரணமாகவே கல்வியுலகின் இலக்கை அடைவதில் கல்விச் சமூகத்தை அவ்விலக்கு நோக்கி அழைத்துச் செல்வதிலும் வெற்றி கண்டவர். திரு.அருணகிரிநாதன் கல்வித் திணைக்களத்தின் நிர்வாகப் பணியை பொறுப்பேற்ற காலத்திலிருந்து அவரது பணி மிளிரத் தொடங்கியது எனக்கூறினால் அதில் இரு கருத்துக்கு இடமில்லை. பொருத்தமான தீர்மானத்தை எடுப்பதிலும் அதனை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்துவதில் வெற்றி பெற்ற காரணத்தினாலேயே அவரது திறமையை எல்லோரும் புகழும் நிலை கல்வியுலகில் ஏற்பட்டது.

திரு.அருணகிரிநாதன் எனது மாணவன் எனக் கூறிக் கொள்வதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விப் பட்டதாரி மாணவனாக அவர் இணைந்த காலத்திலிருந்தே அவருடன் இறுக்கமாக உறவு எனக்கு ஏற்பட்டது. அவருடன் எனது மைத்துனர் கல்வி கற்ற காரணத்தினால் பல்கலைக்கழகத்தில் மட்டுமல்லாது வீடுவரை அவரது உறவு விரிந்திருந்தது. அப்பொழுதே அவர் உயர்கல்வி மீது கொண்டிருந்த நாட்டத்தை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இந்த உற்சாகமான மனோ நிலையானது அவரைப் பட்டப் பின்டிப்புளோமா, கல்வியியல் முதுமாணி எனக் கூறுமளவுக்கு பல் பட்டங்களைப் பல்கலைக்கழகத்தில் பெறத் தூண்டியது. இவர் எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மட்டுமன்றி பல வெளிநாட்டு நிறுவனங்களிலும் புலமைப்பரிசில் ஊடான குறுகிய காலக் கற்கை நெறிகளையும் பயின்று கொண்டவர் என்பதனாலேயே கல்வியுலகின் சாதனைமிக்க மனிதராக திகழ முடிந்துள்ளது எனக்கூறலாம்.

திரு.அருணகிரிநாதன் அவர்கள் கல்விப் பணியில் தடம் பதித்தது போன்றே சமூகப் பணியிலும் ஈடுபாடு கொண்டவர். சர்வதேச சேவை அமைப்பான லயன்ஸ் கழகத்தில் இணைந்து கொண்டது மட்டுமன்றி அதன் பல்வேறு பதவிகள் ஊடாக தனது பிரதேசத்தை சார்ந்த மக்களுக்கு சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலை அதிபர் சங்கம் போன்ற பல தொழிற்சங்கங்களில் இணைந்து அதன் உறுப்பினர்களுக்கும் சமூகத்துக்கும் பணியாற்றிய பெருமையும் அவரையே சாரும். இத்தகை ஆளுமை கொண்ட திரு.அருணகிரிநாதன் அவர்கள் சேவையிலிருந்து இளைப்பாறினாலும் தனது ஆலோசனையை வழங்குவதிலும் சமூக அபிவிருத்தியிலும் ஈடுபட வேண்டும் என்பதே எமது ஆவலாகும். அதற்கு எல்லாம் வல்ல இறைவன் அவருக்கான உடலாரோக்கியத்தையும் திடமான உள்ளத்தையும் வழங்கவேண்டுமென இறைஞ்சி அவருக்கான பாராட்டினையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"வாழ்க வளமுடன்" என வாழ்த்தும்

**பேராசிரியர் க.தேவராஜா**

தலைவர்

வணிகத்துறை

யாழ்.பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



அகவை அறுபது கண்டு மணிவிழாகாணும் **திரு.பொ.அருணகிரி நாதன்** அவர்களுக்கு வாழ்த்துக் கூறுவதில் மகிழ்வடைகின்றேன்.

தீவக மண்ணில் கல்வி நிலை பற்றி நன்கறிந்த ஒரு மனிதன் – தீவகம் கடந்த காலம் சந்தித்த ஆனந்தங்களுடன் எல்லாம் இணைந்து பயணித்தனர் இவர்.

தீவக பாடசாலையின் தோற்றுவாய்கள் பற்றியும் நன்கறிந்தவர் மூத்த அதிபராகும் வரை இப்பிரதேச பாடசாலைகளில் பணியாற்றி இவர் பெற்ற அனுபவங்கள் இவரை கல்வி உலகிற்கு உயர்த்திக் காட்டியது.

திட்டங்களை சிறப்பாக நடத்திச் செல்வது இவரது தனி ஆற்றல் – ஓய்வுக் காலத்தில் இவர் யாழ்ப்பாண வலயத்தில் பணியாற்றினாலும் கூட இவருக்கும் தீவக கல்வி நிலையங்கள் நிறுவனங்கள் அது சார்ந்த உத்தியோகத்தர்களுடனும் இவருக்குள்ள தொடர்புகள் என்றும் பிரிக்க முடியாதது.

ஓய்வுக்காலத்தில் சிறப்புடன் வாழவும் கல்விப்பணியும் சமூகப்பணியும் தொடர்ந்து வளரவும் எனது நல்வாழ்த்துக்கள்.

**தி.ஜோன் குயின்ரஸ்**
முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர் – தீவகம்
வலயக்கல்விப்பணிப்பாளர் மடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியில் பல்வேறு பரிமாணங்களில் ஜொலித்தவர்



திரு அருணகிரிநாதன் அவர்கள் தமது 32 வருட அரச சேவையை விட்டு விலகும் இவ்வேளை அவரை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். இவர் கல்விச் சேவையில் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக பல தடங்களில் பதித்து தமது சேவையை நிறைவு செய்தவர். மற்றும் அரிய பல கஸ்ட பிரதேசங்களில் மலைநாடு, தீவகம் எனும் பிரதேசங்களில் கடமையாற்றி அப்பிரதேச மாணவர்களின் உயர்வுக்காக பாடுபட்டவர். மேலும் ஓர் கல்வியியலாளன் என்றும் வாசித்துக் கொண்டே இருத்தல் வேண்டும் எனும் நியதிக்கிணங்க இக்கல்வியியலாளனும் கல்வியல் சார்ந்த விடயங்களை வாசித்துக் கொண்டே இருப்பார். இதனால்தான் பூரணமாகியதுடன் ஏனையவர்களையும் தனது கல்வியியல் சிந்தனைகளை செலுத்துவதன் ஊடாக பூரணமாக்கியவர்.

யாழ் மாவட்டத்தில் கல்வி வளர்ச்சிக்காக அதிபர்கள் வட்டம் ஒன்றை உருவாக்கி அவர்களின் ஒருமித்த கருத்துக்கள் மூலம் யாழ் மக்களின் கல்வி வளர்ச்சி பற்றி சிந்தித்தவர். மற்றும் வடமாகாண பள்ளி கல்வியியலாளர் ஒன்றியம் எனும் நிறுவனத்தின் மூலம் கல்வியியலாளர்கள் பலர் ஒன்றிணைந்து யாழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முன்னின்று உழைப்பவர். மற்றும் யாழ் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடந்த மூன்று ஆண்டுகள் கல்வி முகாமைத்துவப் பிரிவில் சேவையாற்றியதன் மூலம் யாழ் கல்வி வலயத்தை துடிப்புடன் சேவையாற்ற துணை நின்றவர்.

இந்த வகையில் இவர் பணி பல்வகையில் பல பரிமாணங்களில் நின்றதனாலும் இவரது ஆளுமையினாலும் பிரகாசித்தது. இவ்வகையில் எமது பிரதிக் கல்விப் பணிப்பாளரது பணியின் செம்மை செய்து வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

**கோ.வரதராஜமூர்த்தி**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(கல்வி நிர்வாகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணிப்பு மிக்க சேவையாளன்



மணிவிழாக்காணும் யாழ்ப்பாணம் கல்விவலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் உயர் திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கல்வி உலகில் கடந்த 31 வருடங்களுக்கு மேலாக காத்திரமான சேவையாற்றிய இவரின் அர்ப்பணிப்புமிக்கசேவையினைநினைவு கூருகின்றேன்.

தீவகக்கல்விவலயத்தில் நான் பணியாற்றியகாலப்பகுதியில் அதிபராக, பிரதிக் கல்விப்பணிப்பாளராக எங்களுடன் பணியாற்றிய இனிமையானஅனுபவங்கள் பசுமையானது. தீவகக் கல்விவலயப் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக நெருக்கடியான காலகட்டத்தில் உழைத்தமைக்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசசேவையில் ஆசிரியராகதனதுசேவையைஆரம்பித்த இவர் பின்னர் அதிபராக யா/ வேலணைசைவப்பிரகாச வித்தியாலயத்திலும் தொடர்ந்து புகழ்பூத்த கல்லூரி யாகவிளங்கும் யா/வேலணை மத்தியகல்லூரியிலும் பணியாற்றி இப்பாடசாலைகளின் வளர்ச்சிக்காகப் பெரும் பங்காற்றி செயற்றிறன் மிக்க அதிபர் என்னும் பெயர் பெற்றார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொறுப்புமிக்க பதவிகளை வகித்தவர். ஆசிரி யர், அதிபர்களின் உரிமைக்காககுரல் கொடுக்கும் அதேவேளைஅவர்கள் வளர்ச்சி பெறவும் பொறுப்புடன் சிறப்பாகசெயற்படவும் உழைத்தவர். பல்வேறுசமூக அமைப்புகளில் அங்கம் வகித்து அவற்றினுடாக பல சமூகசேவைகளை ஆற்றிவருபவர்.

கல்லூரி முதல்வராக நீண்டகாலம் கடமையாற்றியமையால் பெற்ற முகாமைத்துவ அனுபவங்கள், ஆழ்ந்தகல்விப்புலமை, சிறந்தபேச்சாற்றல், மொழியாற்றல், எழுத்தாற்றல், அர்ப்பணிப்புத்தன்மை என்பன அவர் பிரதிக்கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய போதுபிரதிபலித்தன.

அகவைஅறுபதைப் பூர்த்திசெய்துஓய்வுபெறும் மணிவிழாநாயகனின் சேவையைப் பாராட்டிவாழ்த்துவதுடன்அவரின் கல்விவழிகாட்டல்கள் தொடர்ந்தும் எமதுசமூகத்திற்குக் கிடைக்கவேண்டும் எனவும் அவர் நல்லாரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுட னும்வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரியவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.வ.இராதாகிருஷ்ணன்**
ஓய்வுபெற்றவலயக்கல்விப்பணிப்பாளர்
தீவகக்கல்விவலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகம் / කාර්යාලය / Office } Tel: [illegible] / Fax: 021 2240195 / E-Mail: dsvaud@sltnet.lk
பி.செயலாளர் / ප්‍රා.ලේකම් / Div.Secretary } 021 2240195

எனது இல / මගේ අංකය / My No }
உமது இல / ඔබේ අංකය / Your No }

**பிரதேச செயலகம், வலிகாமம் தெற்கு, உடுவில் - சுன்னாகம்**
**ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, වලිකාමම් දකුණ, උඩුවිල් - චුන්නාකම්**
**Divisional Secretariat, Valikamam South, Uduvil - Chunnakam**



# மணிவிழாநாயகனுக்குவாழ்த்துக்கள்

வேலணைப் பிரதேசசெயலராக 2003இல் கடமையேற்ற காலத் தில் வேலணைமத்தியகல்லூாயின் அதிபராகதிரு.பொன்னம்பலம் அருணகிரிநாதன் அவர்கள் எனக்குஅறிமுகமானார். அதற்கு முன்னரும் கூட தீவகவலயத்தில் அவர் ஆசிரியராக, அதிபராக தமது சேவையை வழங்கி இருந்தார்.

வேலணைமத்தியகல்லூரியிலும் அதற்குமுன்னர் பணியாற்றிய இடங்களிலும் சரி இவரதுசேவைமாணவர்கள், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர்கள் எனசகலதரப்பினரதும் மரியாதையை பெற்றதாகவே இருந்தது.

வேலணைமத்தியகல்லூரியின் வளர்ச்சியில் இரவு,பகல் பாராது பணியாற்றிய ஒருவர் என்பதை நான் கண்கூடாக கண்டிருந்தேன். அதிலும் குறிப்பாக 2009 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் தீவகப் பகுதிகளில் கடமை புரிவது மிகவும் சிக்கலானதாக இருந்தது. பாதுகாப்பு கட்டுப்பாடுகள் தீவிரமாக இருந்த அக்காலத்தில் உயர்தரவகுப்பு மாணவர்களைக் கொண்ட பாடசாலையின் அதிபராக இருப்பதென்பது சாதாரண விடயமல்ல. காரணம் இக்காலப் பகுதியில் பாடசாலைச் சூழலின் ஒருபுறம் கடற் படை யினரின் முகாமும், மறுபுறம் சில சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகளின் நடமாட்டமும் காணப்பட்டிருந்தது. பலசந்தர்ப்பங்களில் மாணவர்களின் கல்வியை விட பாதுகாப்பு என்பதே முக்கிய தேவைப்பாடாக இருந்த நேரத்தில் இவர் தனது ஆளுமை மூலம் பாடசாலை நிர்வாகத்தை திறம்பட நடத்திச் சென்றதுடன் தமது சமூகப் பொறுப்புக்களையும் செவ்வனே நிறைவேற்றி இருந்தார்.

மேலும் இவரதுகாலகட்டத்தில் பாடசாலை மைதானத்துக்கான காணி ஒன்றை பாடசாலைசமூகத்துடன் இணைந்து முன்னரே கொள்வனவு செய்து வைத்திருந்தபோதிலும் அதுவயல் காணியாகவே இருந்தது. அதனைவேலணைபிரதேசசெயலகத்துடன் இணைந்தவகையில் உலகஉணவுத் திட்டத்தின் கீழ் உணவுக்கானவேலைத்திட்டத்தின் கீழ் முற்றுமுழுதாகமிகப் பெருமளவில் மண் கொண்டுநிரப்பி இப்பொழுதுள்ள நிலைக்கு கொண்டுவரப்பட்டது. இவரதுநேர்மையான இணைப்புக் கடமையும், மேற்பார்வையும் இணைந்தசெயற்பாடுகள்அவ்வேலைத்திட்டம் 100%வெற்றி அடையவைத்ததோடு, மத்தியகல்லூரி மைதானம் தீவுப்பகுதிகளில் சிறந்த மைதானமாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைவிட இவரது சேவைகள், சமயம், சமூகம், சார்ந்தநிலையில் இவரது கிராமத்துக்கும் பயன் தருவதாக அமைந்து விளங்குவதனை காணலாம். வேலணை முடிப் பிள்ளையார் கோவில் பரிபாலன சபை தலைவராகவும் வேலணை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் இவரதுபணிகள் அளவிடற்கரியன. அந்தவகையில் இவர் சிறியவட்டத்தினுள் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள் ளாமல் பரந்துபட்டரீதியில் தமது சேவைகளை வழங்கி வந்திருந்தார். இவர் தமது ஓய்வுக் காலத்திலும் தொடர்ந்தும் மக்களுக்கு சமய, சமூகப்பணிகளை செய்வதனூடாக தீவுப்பகுதி மக்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென பிரார்த்தித்து எனது வாழ்த்துரையை நிறைவுசெய்கின்றேன்.

**முத்துலிங்கம் நந்தகோபாலன்**

பிரதேசசெயலர்,
பிரதேசசெயலகம்,
வலிதெற்கு, உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்முக ஆளுமையின் அடையாளமாகத் திகழ்பவர்



பன்முக ஆளுமையின் அடையாளமாகத் திகழும் திரு.பொன் அருணகிரிநாதனின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதமும் பெரு மகிழ்வுமடைகின்றேன். பிறவிச் சைவப் பரம்பரையில் பிறந்து சைவனாகவே வளர்ந்து சைவ சமயத்தவர்களுக்கு உதாரணமாக சுட்டக்கூடிய எமது மணிவிழா நாயகனை வாழ்த்தக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு இந்து கலாசார திணைக்களமும் பெருமையுறுகிறது.

ஆசிரியத் தொழிலுடன் அறிமுகமாகி தமது அறிவு, ஆற்றல், அனுபவம், அர்ப்பணிப்பு போன்றவற்றால் புடம் போடப்பட்டு பிரதி அதிபராகி, அதிபராகி இன்று பிரதிக் கல்விப் பணிப்பாளராக உயர்ந்து நிற்கும் பண்பாளனை சான்றோனை இவ்வரங்கமே பாராட்டுமென்பதில் ஐயமில்லை. சைவமும் தமிழும் தவழ்ந்து விளையாடிய வேலணை மண்ணில் பிறந்து கற்றாரும், புலவர்களும் மிகுந்த சூழலில் வளர்ந்து தமிழில் பாண்டித்தியம் பெற்றதோடல்லாமல் தனது வாழ்வியலை ஆன்மிகத்துடன் பின்னிப் பிணைத்தவர். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தனது குலதெய்வம் வேலணை மேற்கு முடிப்பிள்ளையாரின் பரிபாலன சபைத் தலைவராக இருந்து இறைபணியைச் செவ்வனே நடாத்தி வருபவர்.

கல்வியியலை கசடறக் கற்றதனால் மாணவர் மத்தியில் ஒரு உத்வேகமாக கலங்கரை விளக்காக இருந்து கல்விப் பணியை முன்னெடுத்து வருபவர். எடுத்த காரியத்தை எவ்வித தயக்கமுமின்றி துணிவுடன் வெற்றிகரமாக முன்னெடுக்க வல்லவர். கல்விப் புலத்தில் மாத்திரமல்லாமல் சமயப்பணி, சமூகப் பணி எனப் பல்வேறு புலங்களிலும் தனது பன்முக ஆளுமையை வெளிப்படுத்தியவர். இதனால் இன்று கல்விச் சமூகத்தில் மாத்திரமல்லாமல் சமூக மட்டத்திலும் பலராலும் அறியப்பட்டு மதிக்கப்படுகின்ற ஒருவராக விளங்குகின்றார். வேலணை மத்திய கல்லூரியின் அதிபராக இருந்த காலம் மிகுந்த சோதனையான காலமாக இருந்தபோதும் அச்சோதனையெல்லாம் சாதனையாக மாற்றியவர். இவ்வாறு தனது அயராத உழைப்பு, அர்ப்பணிப்பு, விடாமுயற்சி, நிமிர்ந்த நடை, நேரான பார்வை, நேர்மையான செயற்பாடு, உறுதியான பேச்சு என்பன அவரை உயர்நிலைக்கு இட்டுச் சென்றுள்ளதென்றால் மிகையில்லை எனலாம்.

இளைப்பாற்றுக் காலத்திலும் தீவக மக்களின் நலன்கருதி அவரது சமய சமூகப் பணிகள் தொடர மேலும் பல பதவிகளைப் பெற்று பல் பணிகள் தொடர எல்லாம் வல்ல வேலணை மேற்கு பெரிய புலத்தில் கோயில் கொண்டெழுந்தருளி அனைவர்க்கும் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் முடிப்பிள்ளையாரின் பேரருள் கிட்ட வேண்டுமென வேண்டி நிற்கின்றேன்.


**M.G. காண்டீபன்**
கணக்காளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
கொழும்பு – 04

"கலையகம்"
கந்தசாமி கோயிலடி
நாரந்தனை கிழக்கு
ஊர்காவற்றுறை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன் பெயரால் தொழிலுக்குப் பெருமை சேர்த்த பெருந்தகையாளன்

போற்றுதற்குரிய அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை திரு.பொன்.அருணகிரிநாதன் J.P அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ் வெய்துகிறேன்.

**"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடு அல்ல மற்றையவை"**

என்பது வள்ளுவர் வாக்கு. அழியாத செல்வமாகிய கல்விக்கு ஆற்றும் தொண்டு என்றும் காலத்தால் அழியாது. இந்த வகையில் எமது தீவகத்திலும், யாழ் நகரிலும், ஏனைய பகுதிகளிலும் பல்வேறு பதவி நிலைகளில் நின்று மணிவிழா நாயகன் ஆற்றிய பணிகள் மகத்தானவை. சிலரால் தொழிலுக்குப் பெருமை– தொழிலால் சிலருக்கும் பெருமை. இக்கூற்றுக்கமைவாக முதலாவது வகையில் பெருமைக்குரியவர் இவர். ஆசிரியராக, அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய வேளைகளில் எல்லாம் அவரால் அப்பதவிகள் பெருமை பெற்றன என்றால் மிகையாகாது.

தீவகப் பாடசாலைகள் பல புலம் பெயர்ந்து திரும்பியதன் பின் (1995) வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நான் பணியாற்றிய காலத்தில் முதலில் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் பின்னர் வேலணை வைத்திலிங்கம் துரைசாமி மத்திய கல்லூரியிலும் அதிபராகக் கடமை புரிந்த காலங்களில் அவராற்றிய சேவை அளப்பரியது. அழிவுற்றிருந்த பாடசாலைகளை புனரமைக்கவும் குறைந்து சென்றுகொண்டிருந்த மாணவர் தொகையை அதிகரிக்கவும் ஆசிரியர் பற்றாக் குறைகளை போக்கி இப்பாடசாலைகளின் கல்வித் தரத்தினை உயர்த்த அரும்பாடுபட்டார். அதனூடாக பாடசாலைப் பெறுபேறுகளிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல வெற்றிகளை அவரால் பெற முடிந்தது.

சிறந்த கல்வி அறிவு, ஆளுமை, அஞ்சாநெஞ்சம், எச்செயலையும் நுட்பமாகவும் சரியாகவும் செய்தும் திறன், சக ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் சமூகத்துடனும் புரிந்துணர்வுடன் கலந்து செயலாற்றும் மனப்பாங்கு இவற்றுடன் அவரிடத்து காணப்பெற்ற ஒழுக்கசீலம், தமர் பிறர் என்று பாராத சேவை என்பனவும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கண்டிப்பு (தேவை யானவிடத்து) ஆகிய பண்புகள் இவரை ஓர் உன்னதமான முகாமையாளர் ஆக்கியதில் வியப்பொன்றுமில்லை என்பேன். திரு.பொ.அருணகிரிநாதன் அதிபராக எம்முடன் பணியாற்றியவேளை எமது கோட்ட, வலய மட்ட நிகழ்வுகள் அனைத்திலும் எம்மோடு தோளோடு தோள் நின்று ஓய்வின்றி கருமமாற்றுபவர். தீவக தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவராக இருந்து ஆசிரியர்களின் நலனில் அக்கறையுடன் செயலாற்றினார். தற்போது மேற்படி சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளராகவுள்ளார். சமய, சமூகப் பணிகளில் தீவிர ஈடுபாடு கொண்டவர். வேலணை முடிப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபை தலைவராக பல காலமாக இருந்து ஆலயத்தை புனருத்தாரணம் செய்து ஆலயப் பணிகளை சிறப்பாக நடத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு பட்டங்கள் பல வந்தபோதும் பதவிகள் பல வந்த போதும் அனைவருடனும் அன்புடனும் பண்புடனும் பழகுகின்ற மனப்பாங்கு பாராட்டுக்குரியது. இவரிடம் கல்விகற்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பாரெங்கும் நல்ல வண்ணம் வாழ்கின்றனர். உண்மை, நேர்மை, நேரம் தவறாமை போன்ற இவருடைய நற்குணங்களே மாணவர்களின் உயர்வுக்கு காரணமென்பேன்.

மனத்தின் கண் மாசில்லா இம்மனிதன் மனிதத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு. மணிவிழா நாயகனின் சேவை மகத்தானது. அவர் பணியை மனதாராப் போற்றுவதோடு ஓய்வு காலத்திலும் அவரும் குடும்பமும் சகல செல்வங்களையும் பெற்று சிறப்படையவும், அவரது சமய சமூகப் பணிகள் மென்மேலும் சிறக்கவும் அதனூடு சிறந்தபயன்பெறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இம்மணிவிழாவை ஆர்வத்தோடு முன்வந்து நடத்துகின்ற கல்விச் சமூகத்துக்கு எனது பாராட்டுக்கள்.

**சோ.தில்லைநாதன்**
ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர்
தீவகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் அருணகிரி அண்ணனும்



தமிழர் பொருளாதார மேம்பாட்டின் ஆரம்ப நாளான 2013-01-14 அன்று தமிழர் வீடுகள் தோறும் தைப்பொங்கலும் அதனுடன் சேர்ந்த விருந்தோம்பல் கொண்டாட்டங்களும் நடை பெற்றுக் கொண்டிருந்த நாள். சிறுவர் பெரியோர்கள் அனைவரும் பால் நிறைந்த பொங்கல் பானையின் பால் பொங்கி சரிக்கும் திசை பலன்களை கூறும் அதேநேரம் பானையினுள் பயறு சேர்க்கப்பட்ட அரிசியைப் போடுவதில் ஆர்வம் காட்டுவது வழமையானது.

இதே வண்ணமே யாழ்ப்பாணக் கல்வி வலய கல்விச் சமூகம் தம்வீட்டு பொங்கலை முடித்து வலயப் பொங்கலுக்கு பலரும் வந்து வலயக் கல்விப் பணிப்பாளரின் அறையில் மேற்குப் பக்கத்தில் சுத்தம் செய்யப்பட்டு கோலமிடப்பட்ட இடத்தில் பொங்கலை ஆரம்பித்து ஆசார சீலர்களாக வந்திருந்த கல்வியியலாளர்கள் அலுவலக உதவியாளர்களால் பால் நிரப்பிய பொங்கல் பானையில் பால் ஊற்றி அடுப்பு எரிக்கப்பட்டதை அவதானித்தேன். குறித்த சில மணித்துளிகளில் பால் நிறைந்த பொங்கல் பானை சரியாக சூரியன் உதிக்கும் திசை நோக்கி சரித்தது. அனைவர் முகத்திலும் அளவற்ற மலர்ச்சி மலர்ந்த நேரம், சங்கீத பாட உதவிக் கல்விப் பணிப்பாளரும், சமய பாட ஆசிரிய ஆலோசகரும் பால் பொங்கிச் சரித்த திசையின் பலன் யாழ்ப்பாணக் கல்வி மாணவர்களின் கல்வி வலய மறுமலர்ச்சி ஒன்று காண ஆரம்பம் ஒன்றிணை பால் சரிந்த திசை குறிப்பதாக புன்னகையுடன் கூறியது இன்றும் என் மனதில் பதிவாக உள்ளது.

தேவபாலன் பிறப்பினை வானத்தின் நட்சத்திர தோற்றம் உணர்த்தியதோ, அதே வண்ணம் தைப்பொங்கல் பானையில் பால் சரிந்த திசையின் பலனும் யாழ் கல்வி வல யத்தின் கல்வி அபிவிருத்தியில் புதிய உத்வேகத்தையும் திருப்பு முனையையும் ஏற்படுத்த வல்ல அறிவியலாளன் பொன்னம்பலம் அருணகிரிநாதன்தான் வரப்போகின்றார் என்பதனை அறிந்திராவிடினும் நல்லது ஏதோ நடக்கப் போகின்றது என்பதை உணராதார் என்று எவரும் இல்லை.

15.01.2013 அன்று சப்பத தீவுகளின் நுழை வாயில் அமைந்துள்ள வேலணை மண்ணின் உயர் பண்புக் குடும்பத்தின் புத்திரன், இலங் கையின் பல்வேறு இடங்களில் ஆசிரியர், பிரதி அதிபர் கடமைகளை ஆற்றிய அனுபவத்துடன், வேலணையின் புகழ்பூத்த மத்திய கல்லூரியின் அதிபராக சேவையாற்றி ஆயிரம் ஆயிரம் கல்வியியலாளர்களை எம் தமிழ் மண்ணுக்கு சேவையாற்றி வளர்த்தெடுத்தவரும், தீவக கல்வி வலயத்தில் கல்வி முகாமைத்துவம் என்ற பதவியில் என்றும் அழிக்க முடியாத முத் திரை பதித்தவருமான ஆற்றல்மிகு கல்வியறிவியலாளனை யாழ்ப்பாண கல்வி வலயத்தின் வாயிற் கதவுகள் அகலத் திறந்து வரவேற்ற காலமும், அவரது யாழ் வரவுக்கு உழைத்த உத்தமர்களின் உதவியும் காலத்தால் மறைக்கவோ, மறக்கவோ முடியாதது.

சிறந்த கல்வியியலாளன் என இன்றும் நான் மதிக்கும் திருவாளர் அருணகிரிநாதனை முதல் முதல் சந்திக்கும் வாய்ப்பு 2003 ஆம் ஆண்டு மத்திய கல்வி அமைச்சு கட்டிடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. அவர் எனது கதிரைக்கு நேர் எதிர் கிழக்குப் பக்க கதிரையில் அமர்ந்திருந்தார். நான் அவருடன் பழகும் அல்லது அளவளாவும் சந்தர்ப்பம் கிடைக்காதுவிட்டாலும் வெளி நாட்டு புலமைப் பரிசில் நேர்முகப் பரீட்சை யின்போது , பெயர் அழைத்தபோது வேலணை மத்திய கல்லூரி அதிபர் என்பதனை உணர்ந்து கொண்டேன். அன்று பார்த்த அதே உருவத் தையே இன்றும் காண்கின்றேன். (ADVANCED LEADERSHIP DEVELOPMENT PROGRAM IN EDUCATION MANAGEMENT)

என்ற வெளிநாட்டு புலமைப் பரிசில் கற்கை பல்லாயிரம் அதிபர்களின் பல நாள் நேர்முகப் பரீட்சையின் பின் கல்வியியலாளர் அருணகிரிநாதன் தாய்லாந்து, மலேசியாவிற் கும், நான் கனடாவுக்கும் கல்வி அமைச்சினால் விசாவும் பயணச்சீட்டும் கிடைக்கப் பெற்று புறப்பட ஆயத்தமான அந்த இரவு 10 மணி இன்னும் என் கண்முன் அவரை நிறுத்துகின்றது.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவின் கல்வி முகாமைத்துவ கடமைப் பொறுப்பை ஏற்க அவர் வந்த நேரம் நான் நல்லூர் கல்விக் கோட்டத்தின் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிக் கொண்டிருந்தேன். இலங்கையில் அவர் பெற்ற கல்வி, பதவிகளுக்கு ஊடாக அவர் பெற்ற அனுபவம் வெளிநாட்டு புலமைப்பரிசிலுக்கு ஊடாக அவர் பெற்றுக்கொண்ட அனுபவக் கற்கைகளும், தலைமை தாங்கும் திறனின் உயர்வளர்ச்சி, இவை அவரிடம் மிதமாக இருப்பதனை 2003 இல் வன்னியில் 18 ஆண்டுகள் கடமையாற்றி இடமாற்றத்தில் புனித சாள்ஸ் ம.வியின் ஆரம்ப பிரிவின் அதிபராக பொறுப்பேற்ற எனக்கு ஆசிரியர்கள் ஊடாக அறியும் வாய்ப்பு அதிகம் இருந்தது.

வேலணை சமூகத்தின் அரும்பெரும் சொத்தாக கருதப்பட்ட அருணகிரிநாதன் அவர் களின் அறிவும் அனுபவமும் யாழ் வலயத்தின் கல்வி மறுசீரமைப்பு அவசியம் என்பதனை பொறுப்பானவர்களுக்கு பரிந்துரை செய்யும் நிலை எனக்கு இருந்ததனை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி கல்வியியலாளன் அருணகிரி நாதனை யாழ்ப்பாணக் கல்வி வலயம் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பெறும் வாய்ப்பை ஏற்படுத்தினேன் என்ற மகிழ்ச்சி இன்றும் உண்டு.

2013 முதலாம் மாதம் கல்வியியலாளன், சிறந்த சிந்தனையாளன் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவின் கல்வி முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்க 2013.7.05 ஆம் திகதி கல்வி அபிவிருத்திக் கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக பொறுப் பேற்கவேண்டிய சூழ்நிலை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி அடைந்ததினால் ஏற்பட்டது.

எனது உடன் பிறவா சகோதரர் ஆகவே அவரையும் என்றும் மதித்தேன். இன்றும் மதித்து வருகின்றேன். அவருடன் 03 வரு டங்கள் 15 நாட்கள் கடமையாற்றிவிட்டேன். ஒரு நாள் கூட சிறிய அளவு மன முறிவுகளும் இருவருக்கிடையே ஏற்பட்டதில்லை. இதனை எமது சகோதர உத்தியோகத்தர் அனைவரும் அறிவர். இதே வண்ணமே கல்வி அபிவிருத்திப் பிரிவில் கடமையாற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அலுவலக உதவியாளர்களுடனும் பழகும் இனிய உள்ளம் படைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் இருவரில் யார் பெரிது சிறிது என்று என்றும் செயற்பட்டதில்லை. யார் எங்களிடம் ஆலோசனைக்கு வந்தாலும் அந்த விடயம் எனக்குத் தெரிந்திருந்தாலும், அல்லது நான் உறுதி செய்ய வேண்டியதாக இருந்தாலும் அருணகிரி Sir இடம் கேளுங்கள் என்று மிகப் பெருந்தன்மையுடன் அனுப்புவேன். ஏனெனில் யாழ் வலயத்தில் கல்வி அபிவிருத்திப் பிரிவை மறு சீரமைப்பு செய்த பெருந்தகை அவர்.

என்னுடன் பழகுபவர்கள் அனைவருக்கும் நன்கு தெரிந்த விடயம் Sir எவரையும் முக மனுக்காக புகழமாட்டார். 'நெற்றிக்கண் திறக்கி னும் குற்றம் குற்றமே' என வாதிடுபவர் என்று. அந்த வகையில் அண்ணன் அருணகிரிநாதன் அவர்களின் வாழ்வியற் தத்துவங்களை, அனுப வங்களை, விழுமியங்கள் "வாழ்பவர்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி" என்ற பாடலுக்கு அமைவாக எம் சகபாடிகள் அனை வரும் (அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள், அதிகாரிகள்) பின்பற்ற நிறைய அரிய பண்புகளும் உண்டாயினும் சில வற்றை எம் வாசகர்களுக்காக கொடுக்காமல் இருக்க முடியவில்லை.

- தலைமைக்கு மரியாதை கொடுக்கும் சிறந்த பண்பாளன்.
- தன் தொழில் கடமையில் நெறி தவறாதவர்.
- போலி, பகட்டு வாழ்வு இல்லாதவர்.
- வாழ்க்கைக்கு பணம்பொருள்தேவை ஆயினும்ஒருபோதும்அநியாய பணசேகரிப்புக்கு எதிராக குரல் கொடுப்பவர்.
- உயிர் தோழன் ஆயினும் அவனுடையது பிழையாயின் நீதியின் பக்கம் நின்று குரல் கொடுப்பவர்.
- அதிகாரிகள், உறவுகளுக்கு, நண்பர்களுக்கு சிறந்த நண்பன், சகோதரன், தந்தை, சிறந்த நல் ஆலோசகர்.
- பின் நின்று யாரையும் தூற்றாத நேருக்குநேர் கதைத்து நீதி பெற்றுக் கொடுக்கும் பண்பாளர்.
- ஆசிரியர், மாணவர்களின் சிறந்த நம்பிக்கைக்குரிய தோழன் ஆலோசகர்.
- அதிபர்களின் சிறந்த ஆலோசகர், சிறந்த வாண்மைப்படுத்தினர்.
- மிகச்சிறந்த கல்வியியற் சிந்தனை எழுத்தாளர்.
- மிகச்சிறந்த தேடலாளர், தொடர்ந்து கற்றுக்கொண்டே இருப்பவர்.
- இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மிகுந்த நம்பிக்கைக்குரிய பொறுப்பாளர்.
- வடமாகாண அதிபர் சங்கத்தின் ஒற்றுமையைக் கட்டிக் காப்பவர்களில் இவரும் ஒருவர்.
- நிதி விடயங்களில் நம்பிக்கைக்குரியவர். அதனாலேயே பல்லாண்டுகள் கல்வி மேம்பாட்டு பேரவையின்பொருளாளராக கடமையாற்றியவர் இன்றும் செயற்பாட்டில் உள்ளவர்.
- "கொல்லான் புலாலை மறுத்தானை கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்பதற்கு ஏற்ப பிறந்ததில் இருந்து இன்றுவரை உயிர் ஜீவராசிகளை உணவில் எடுக்காத சைவப் பழமானவர்.
- சமூகம்எவற்றையெல்லாம்கூடாத பழக்கம்என்று வகுத்துள்ளதோ அதில் எதனை பின்பற்றாது தான் வழிப்படுத்தும் மாணவர்களுக்கு முன்னுதாரணமாக வாழ்பவர்.
- சமூக சேவைக்காக பல பொறுப்புக்களை ஏற்று வேலணை மக்களுக்காக வாழ்பவர்.
- தனது ஓய்வின் பின்னரும் கல்வியை விழவிடாது பாதுகாக்க வேண்டும் என்பதற்காக வடமாகாண பள்ளிக் கல்வியியலாளர் ஒன்றியத்தின் முக்கிய உறுப்பினராக சேவை ஆற்றுபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சகல தர கல்வி அதிகாரிகளின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்றவர்.
- எந்த செயலமர்வையும் கொண்டு நடாத்தும் ஆளுமை பெற்றவர்.
- பொதுப் பரீட்சை, பாடசாலை பரீட்சை இவற்றில் மாணவர் பக்கமாக நேர்மையும் நிதானமும் காக்கும் நம்பிக்கைக்குரியவர்.
- கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சை, நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை, அதிபர் சேவை, ஆசிரியர் போட்டிப் பரீட்சை ஏனைய அனைத்துப் போட் டிப் பரீட்சைகளிலும் சிறந்த வளவாளர்.

இன்னும் பல பக்கங்களில் பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்களைக் கூறிக்கொண்டே இருக்க முடியும்.

சமூகப் பணியில் எவ்வளவு அக்கறை கொண்டவராக உள்ளாரோ அதேயளவு தன் குடும்பப் பணிகளிலும் பொறுப்புடன் இயங்கு வதைப் பார்த்திருக்கிறேன். வியந்திருக் கிறேன். அருமையான குணம் படைத்த, சிறந்த கல்வியைப் பெற்ற பிள்ளைகள், கணவனுக்கு ஏற்ற மனையாள், இவற்றுக்கு எல்லாம் மேலாக தன் தாயை வாரத்தில் ஒவ்வொரு ஞாயிறும் வேலணை சென்று பார்க்காத சந்தர்ப்பமும் மிகமிக குறைவு என்றே கூறலாம். நண்பர்கள், சுற்றம் உறவுகள் இவற்றை உயர்வாக மதிக்கும் பண்பாளன். எல்லாவற்றுக்கும் மேலாக தேசியத்தில் உறுதியும் பற்றும் கொண்டவர். நலிந்தவர்களை ஏழைகளை நேசிக்கும் அருமையான தோழன், கல்வியியலாளன் , அறிவுரையாளன் எந்தச் சந்தர்ப்பத்திலும் நேர்மை, நீதி, ஏழை மாணவர் துன்பம் இவற்றை எல்லாம் விட்டுக்கொடுக்க முடியாது எனது அவஸ்தைப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் ஆறுதல் அளித்து என் உடல் நலனைக் காத்து வரும் மிகமிக சிறந்த தந்தையானவர்.

வயது அவருக்கு ஓய்வைக் கொடுத்தாலும் என் உயிர் உள்ளவரை உங்கள் நிழலின் பின்னே நான் நிற்பதை உணர்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

உங்கள் வருகையால் அறிவியல் ரீதியாக, தர்க்க ரீதியாக, மாற்றி அமைக்கப்பட்ட யாழ் வலய கல்விப்பணி நிச்சயம் உறுதியுடன் தொடர்வதே வலயம் சார்ந்த அனைவரும் உங்களுக்கு தரும் உண்மையான நன்றியுள்ள பிரியாவிடையாக, மணிவிழா வாழ்த்துக்கள் அமையும்.

**சி.மாணிக்கராசா**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
வலயக்கல்விஅலுவலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறை ஆளுமை மிக்க பண்பாளன்



தீவக மண்ணில் பிறந்து அப் பிரதேசத்தில் கல்வி கற்று அம் மண்ணில் ஆசிரியராகவும், புகழ்பூத்த அதிபராகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் சேவையாற்றி யாழ்ப்பாண கல்வி வலயத்தில் கல்வி முகாமைத்துவத்துறையில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக காத்திரமான பங்காளிப்பாற்றிய நண்பன் பொ. அருணகிரிநாதன் அகவை 60 ஐ பூர்த்தி செய்வதை முன்னிட்டு வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நானும் மணிவிழா நாயகனும் மிக நெருங்கிய நண்பர்கள். 1978 ஆம் ஆண்டில் தொடங்கிய நட்பு இன்றுவரை தொடர்கின்றது. நாம் பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற பொழுது தமிழ் போற்றுகின்ற பல கல்வி மகான்களால் வழி நடத்தப்பட்டோம். அவர்களிடம் பெற்ற ஆய்வுச் சிந்தனை கொண்ட கற்றல் பேறுகள் பலரை பல தளங்களில் உச்ச நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. எம்மோடு உறவாடிய பலர் புலம்பெயர்ந்து சென்றபொழுது சிறு தொகையினர் மட்டுமே தாய்நாட்டில் தங்கி பணியாற்றுகின்றோம். நாங்கள் கல்வித்துறையில் சேர்ந்து ஆசிரியராக , அதிபராக கல்வி நிர்வாகத்துறையில் சேவையாற்றிய போதிலும், அதிபராக சேவையாற்றிய காலத்தை மறக்க முடியாது. மணிவிழா நாயகன் அதிபராக சேவையாற்றிய காலத்தில் நண்பர்கள் பலர் அதிபர்களாக பணியாற்றினார்கள். இவர்களில் பலர் இலங்கையின் எல்லாப் பாகங்களிலுமுள்ள தலை சிறந்த கல்லூரிகளில் அதிபர்களாக இருந்து, சாதிக்க முடியாத சாதனைகளை சாதித்துக் காட்டினார்கள். அந்த வகையில் தீவகத்தின் முடிசூடா மன்னராக அதிபர்களுக்கெல்லாம் அதிபராக மிளிர்ந்தவர் மணிவிழா நாயகன் என்றால் மிகையாகாது.

நண்பன் அருணகிரி பல்துறை ஆற்றல் கொண்டவன். பலராலும் மதிக்கப்படும் கல்வியாளன். கல்வித்துறையில் மதிநுட்பம் மிகுந்த முகாமையாளன். ஆற்றல்மிகு நிர்வாகி. சிறந்த மேடைப் பேச்சாளன். கல்வித்துறை சார்ந்த புதிய விடயங்களை கற்பதிலும் அவற்றை மற்றவர்களுக்கு வழங்குவதில் அவருக்கு நிகர் வேறு யாருமில்லை. கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்திட்டங்களை தயாரிப்பதிலும் செயல்படுத்தி வெற்றி காண்பதிலும் செயல்திறன் மிக்கவராக செயற்பட்டார். நண்பன் வேலணை மத்திய கல்லூரியில் அதிபராக இருந்தபோது உயர்தர கணித பிரிவில் மீத்திறன் மிக்க மாணவர்களை கொக்குவில் இந்துக் கல்லூரியில் இணைத்து பல மாணவர்களை பொறியியல் துறைக்கு செல்வதற்கு தூர நோக்குடன் செயற்பட்டார். அக் கல்லூரியிலுள்ள ஆற்றல் மிக்க ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்று வரும்போது அவர்களை கொக்குவில் இந்துவில் இணைத்து கல்லூரியின் சாதனைகளுக்கு வழிவகுத்தார். தீவகத்தின் பெருமைமிகு கல்லூரியாக வேலணை மத்திய கல்லூரியை வளர்த்தெடுப்பதில் பெரும் பங்காற்றினார்.

யாழ்ப்பாண கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவ பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய போது பாடசாலைகளின் வெளிவாரி மதிப்பீட்டை வினைத்திறனுடன் செயற்படுத்தினார். பாடசாலைகளை பாடசாலைகளின் தர ரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுபேற்றை அதிகரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். கல்வி வலயத்திலுள்ள அதிபர்கள், ஆசிரியர்களின் வாண்மை விருத்தியில் வளவாளராக பெரும் பங்காற்றினார். தேசிய ரீதியான பல்வேறு போட்டிப் பரீட்சைகளுக்கு பல நிறுவனங்களில் செயற்பட்டு யாழ்ப்பாண கல்வி வளர்ச்சியின் பக்கபலமாக செயற்பட்டார்.

யாழ் மண்ணில் கல்வித்துறையில் பல பரிமாணங்களில் பணியாற்றி சமூகத்தின் நன்மதிப்பை பெற்ற நண்பன் அருணகிரிநாதன் ஓய்வுக் காலத்தில் நல் ஆரோக்கியத்துடன் வாழ இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

**அ.அகிலதாஸ்**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவன் வழியில் அருணகிரிநாதன்

## (நற்குண நற்செயல்களால் நிறைந்து விளங்கும் தன்மை)

**இடச்சுருக்கக்கருதி, குறள்கள் தவிர்க்கப் பெற்றுப் பொருத்தமான பொழிப்புரைகள் மாத்திரம் தரப்பெறுகின்றன.**



குறள் 981: தமக்குக் கடமையாவன இவையே என அறிந்து சான்றாண்மையை மேற்கொண்டு வாழ்பவர்களுக்கு, உலகில் உள்ள நல்லவைகள் எல்லாமே அவர்கள் செய்வதற்குரிய கடமைகளாகும். அது இது என இல்லாமல் எவை எவை நல்லவையோ அவற்றைச் செய்து வாழ்வது சான்றோர்க்குக் கடமையாகும்.

குறள் 982 : சான்றோர்க்கு அழகு தரும் நலமாவன அவர்தம் குணநலன்களேயாகும். பிற அணியழகு, தோற்றப் பொலிவு முதலாய நலன்களெல்லாம் எவ்வகை நலத்திலும் வைத்து எண்ணப்படுவன அல்ல. ஒருவர் அழகாலும் அணிகலன்களாலும் நிறைந்திருந்தாலும் சான்றோராதல் இயலாது. நற்குணங்களால் நிறைந்திருத்தலே சான்றாண்மையாகும்.

குறள் 983 : எல்லோரிடத்தும் அன்பும், பழி பாவங்களுக்கு வெட்கப்படும் நாணமும், மக்கள் அனைவருக்கும் உதவும் ஒப்புரவும், எளியவரிடம் இரக்கம் காட்டும் கண்ணோட்டமும், எப்பொழுதும் தவறாத வாய்மையும் ஆகிய இவை ஐந்தும் சால்பு என்ற மண்டபத்தைத் தாங்கும் தூண்களாகும்.

குறள் 984 : தவம் என்பது முதன்மையாக ஓருயிரையும் கொல்லாதிருத்தல் என்ற சிறப்புடையது. அதுபோலச் சால்பு என்பது பிறர்தம் குற்றங்களை வாய்விட்டுச் சொல்லாத நற்குணத்தின் பாற்பட்டதாகும்.

குறள் 985 : ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வல்லவரது தலைமையான ஆற்றல் பணிவுடைமையாகும். சால்புடையார் தம் பகைவரைப் பகைமையின் நீங்க வைத்துத் தம்மவராக மாற்றுகின்ற படைக்கருவியும் அதுவேயாகும்.'

அன்பான வாசகர்களே! நீங்களே சிந்தித்துப் பாருங்கள். அருணகிரிநாதன் ஒரு சான்றோனல்லவா? நிச்சயமாகவே !

அவருக்கென்ன? சான்றோனாக வருதவற்கு, விளங்குவதற்கு என்ன குறை? என்ன தடை? உலகறியச் சைவநெறியை அசையாது கடைப்பிடிக்கும் பெற்றோர்கள், நாவலரை உடன் தொடர்ந்து சைவ ஆதீனம் போல விளங்கிய நெல்லாவிற்சூழல், தலை சிறந்த பாடசாலைகளில் தலைசிறந்த ஆசிரியர்களிடம் இளமைக்காலக் கல்வி, சைவத்தையும் தமிழையும் பேணி வளர்க்கப் பெரிதும் உதவும் மேற்கல்வி, மேற்படிப்புப் பட்டங்கள், தெய்வத்துக்குச் சமமாக உலகம்போற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில், ஒழுக்கம் சிறிதும் பிறழாத வாழ்வு, அருணகிரிநாதன் என்ற மின்னியல் கருவிக்குக் குறைவில்லாச் சக்தி வழங்கும் மின்கலம் யோகேஸ்வரி, மேலே காணப்படும் திருக்குறள் கூறிய இலக்கணங்களுக்கு உருவங் கொடுத்த சான்றாண்மை. பாடசாலைகள் மட்டுமல்ல சமூக நிறுவனங்கள், திருக்கோயில்கள், அரச அலுவலகங்கள் முதலானவையெல்லாம் தேடி வழங்கும் தலைமைப் பதவிகள் எல்லாமே சான்றாண்மைக்குச் சான்றுகள். இதை எழுதுபவரும் கண்கண்ட சாட்சிகளில் ஒருவர்.

ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்–திருமதி அன்னலட்சுமி பொன்னம்பலம் உட்பட அனைவரும் நீடூழிவாழ்க.

**சுந்தரம்பிள்ளை கலாதரன்**

முன்னாள் அதிபர்,

வேலணை மத்தியகல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமைமிகு அதிபர் அருணகிரிநாதன்



திரு.பொன்னம்பலம் அருணகிரிநாதன் அவர்கள் ஆசிரியராக, அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கல்விச் சேவை செய்தவர். இவரது 32 வருட கல்விச் சேவை யில் 20 வருடங்கள் அதிபராகச் சேவையாற்றி யுள்ளார். ஆளுமை மிகு அதிபராக இவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வேலணை மைந்தனாகிய இவர் ஆரம்பக் கல்வியை வேலணை மேற்கு நடராசா வித்தியாசாலையில் கற்று இடைநிலைக் கல்வியை யும் உயர்நிலைக் கல்வியையும் வேலணை மத்திய கல்லூரியில் ஒன்பது வருடங்கள் கற்று பல்கலை சென்று பட்டதாரி ஆகி கல்லூரியின் மைந்தன் என்ற பெருமை பெற்றார். தனது கல்விச் சேவையில் குறிப்பாக அதிபர் சேவையில் ஒன்பது வருடங்கள் வேலணை மத்திய கல்லூரியில் சேவையாற்றிய பெருமையும் திரு அருணகிரிநாதன் அவர் களையே சேரும். இதற்காக அவரைப் பாராட்டுகின்றேன்.

அதிபர் சேவையில் இவர் இணைந்து கொண்ட காலம் விடுதலைப் போராட்ட யுத்த காலம் 1991. யாழ் நகருடன் இணைக்கப்பட்டு இருந்த தீவக மக்கள் யாவரும் யுத்தம் காரணமாக யாழ் நகர் நோக்கி இடம்பெயர பாடசாலை மாணவர்களும் இடம்பெயர்ந்து அல்லற்பட்டகாலம்.

தீவக மக்கள் மீண்டும் விரைவாக மீண்டும் திரும்பி வரமுடியாத நிலை தோன்றவே அல்லற்படும் மாணவர் களை ஒன்று திரட்டி யாழ் நகரை அண்டிய பகுதிகளில் வேலணைப் பாடசாலைகள் இயக்கப்பட்டன.

இக்காலத்தில் 1991 இல் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபராகக் கடமையாற்றி அப்பாடசாலையை தனியார் கட்டடத்தில் நடாத்தி 1995 ஒக்ரோபர் வரை ஐந்தாண்டுகள் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு நிகராக கல்வியிலே திறமை காணச் செயற்பட்ட சேவையை மறந்துவிடமுடியாது. 1995 ஒக்ரோபரில் ஒட்டுமொத்த யாழ் நகர மக்கள் தென்மராட்சி நோக்கி இடம்பெயர அங்கும் 8 மாதங்கள் பாடசாலைகள் இயக்கி ஆற்றிய சேவை அனுபவங்களை மறக்க முடி யாது.

1996 ஏப்ரலில் தீவகத்திற்கு மக்கள் மீண்டும் வந்து குடியேறி வாழத் தொடங்க பாடசாலைகளையும் தீவகத்திலே இயங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அப்போது வேலணை மத்திய கல்லூரி, சைவப்பிரகாச வித்தியாசாலைக் கட்டடங்கள் பிரதான இரா ணுவ முகாம்களாகவே இருந்தன. வேலணை பாடசாலைகள் ஒருங்கிணைந்து வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் இயங்க எடுத்த முயற்சிகள் மறக்க முடியாதவைகள்.

1996 ஆம் ஆண்டு இறுதியில் வேலணை சரஸ்வதி வித்தியாலயம் புனரமைக்கப்பட்டு 1997 இல் நான் வேலணை மத்திய கல்லூரியின் அதிபராகச் செயற்பட திரு.அருணகிரிநாதன் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபராகச் செயற்பட இருவருக்கும் இடையிலான பிணைப்பு அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை மத்திய கல்லூரியையும், சைவப் பிரகாச வித்தியாசாலையையும் விட்டு இராணுவத்தினர் வெளியேற வேண்டும் எங்கள் பாட சாலைகள் எங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் வேண்டுதல்களும் விடாமுயற்சிகளும் பெற்றோர்களாலும் பழைய மாணவர்களாலும் முன்னெடுக்கப்பட்டு 1998 ஓகஸ்டில்வேலணை மத்திய கல்லூரிக்கு தனது சொந்தக் கட்டடத்தில் இயங்கத் தொடங் கியது.

நீங்கள் சைவப்பிரகாச மாணவர்கள் சிறு வர்கள் எனவே உள்ளே வருவது கடினம் என்று சரஸ்வதி வித்தியாசாலையில் சைவப்பிரகாச வித்தியாசாலை இயக்கிய அப்பாடசாலைக்கு பெருமை சேர்த்தவராக செயற்பட்டீர்கள்.

1998 ஓகஸ்டில் இருந்து 2002 ஜீனில் நான் ஓய்வு பெறும்வரை நான்கு ஆண்டுகள்பல கட்டுப்பாடுகள் இன்னல்கட்கு மத்தியில் என்னால் செய்ய முடிந்த சேவைகளை அன் றைய ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்களின் அர்ப்பணிப்புடன் செய்து வளர்த்தெடுத்த கல்லூரி அன்னையை 2002 ஜீலையில் நீங்கள் பொறுப்பேற்று தொடர் இன்னல்களுக்கு மத்தியில் ஆளுமை மிகு அதிபராக ஒன்பது வருடங்கள் தொடர்ந்து சேவையாற்றி வளர்த்தெடுத்ததைப் பாராட்டுவதில். பாராட்டி நன்றி கூறி வாழ்த்துவதில் நான் பெருமை அடைகின்றேன்.

கல்வியியல் பட்டங்களைத் தொடர்ச்சி யாகப் பெற்று முகாமைத்துவ அறிவினை வளர்த்துக் கொண்ட அருணகிரிநாதன் அவர் கள் 1991 தொடக்கம் 2002 வரை 11 வருடங்கள் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபரா கப் பெற்றுக் கொண்ட பட்டறிவே வேலணை மத்திய கல்லூரியை தீவகத்தின் முதன்மை நிலைக் கல்லூரியாகத் தொடர்ந்து வளர்க்க உதவியது.

போராட்டம், யுத்தம், இடப்பெயர்வுகள் என்று காரணங்காட்டி குடும்பத்தாருடன் பல அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் பலர் வெளி நாடுகள் சென்றது போன்று அருணகிரிநாதன் அவர்களும் சென்றிருக்கலாம். ஆனால் எமது மக்கள், எமது கல்லூரிகள், எமது ஆலயங்கள், எமது சமூகம் என்ற ஓர் பிடிப்பு, ஓர் ஈர்ப்பு இவரை நகரவிடாது தொடர்ந்து சேவையாற்றத் தூண்டியது.

முகாமைத்துவப் பண்புகளும் ஆற்றல்களும் நிறையப் பெற்றவர். இவ்வாற்றல்களில் சவால்களை எதிர்கொள்ளும் உபாய ஆற்றல் மிகவும் முக்கியமானது. இதை இவர் பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்தி வெற்றி கண்டவர். இவரின் அதிபர் சேவை, முகாமைத்துவப் பண்புகள்,சொல்லில் வல்லன், சோர்விலான், அஞ்சான்,பணிவுடையான், இன்சொல்லான், இதனை இதனால் இவன் முடிக்கும் என்ற ஆய்வாளன் என்ற பல்வேறு கோணங்களில் திருவள்ளுவரின் வாக்குச் சொற்கள் மூலம் விளக்கி நீண்ட பாராட்டுக்குள் வழங்கி வாழ்த்துகின்றேன்.

வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகள் கொண்ட அரச சேவையினிருந்து ஓய்வு பெறுகின்றீர்கள். இனிமேல் எதுவித கட்டுப்பாடுகளும் இன்றிப் புத் தூக்கத்துடன்கல்விச்சேவைகளில் ஆலயச் சேவையில் சமூகச் சேவைகளில் ஏன் அரசியல் சேவை களிலும் தொடர்ந்து ஈடுபட வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய அளப்பரிய சேவைகளைச் செய்ய பக்கபலமாக இருந்த உங்கள் அன்பு மனைவி, பிள்ளைகள், குடும்பத்தாரைப் பாராட்டுவதுடன் உங்களின் குல தெய்வ மாகிய முடிப்பிள்ளையாருக்கும் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள சிவகாமி சமேத நடராசப் பெருமானின் அருள்பாலித்து மேலும் வாழ்வும் வளமும் சிறக்க வாழ்த்துகின்றேன்.


**கு.கணேசலிங்கம்**

ஓய்வு நிலை அதிபர்

வேலணை மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் பல்கலைக்கழக புதுமுக மாணவனாக விழாநாயகர் (1978)



பட்டப்பின் கல்வி டிப்ளோமா மட்டமளிப்பு விழாவில் பேராசிரியர் துரை ராசா அவர்களால் பட்டம் வழங்கப்பட்ட போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப்புலத்தின் கலங்கரை விளக்கு



கல்விப்புலத்தில் ஆசிரியராக இணைந்து அதிபராக பின்னர் பிரதிக் கல்விப் பணிப்பாளராகி ஓய்வு பெறும் திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்களைப் பற்றி நான் கேள்விப்பட்டிருந்தும் அவரை முழுமையாக அறிந்து கொண்டது யாழ் வலயக் கல்வி அலுவலகத்தில் கல்வி முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையேற்று வந்த பின்னர்தான்.

கடமையுணர்வும், கட்டுப்பாடும் கொண்ட ஆளுமை மிக்கவரான இவரின் செயற்பாடுகள் அவர் தம் பதவிக்குப் பெருமை சேர்த்ததுடன் யாழ்ப்பாண வலயத்திற்கும் பெருமை சேர்த்தது எனக் கூறினால் மிகையாகாது.

கல்விப் புலம் சார் கூர்மையான அறிவும், தெளிவும், சிறந்த பேச்சாற்றலும் கொண்ட திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்கள் எமது வலயமட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின் போதும் அதிபர் மற்றும் பெற்றோர், மாணவர் கூட்டங்களின் போது கூறும் ஆணித்தரமான கருத்துக்கள் சிறந்த மாணவர் சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற அவரின் எண்ணக்கருவின் பிரதிபலிப்புகளாக நான் கண்டதுண்டு.

கல்விப்புலம் சார் போட்டிப் பரீட்சைகளுக்காக ஆசிரியர்கள், அதிபர்களை தயார்ப்படுத்தும் வளவாளராகவும், கல்வி சார் ஆக்கங்களை பத்திரிகைகளுக்கு எழுதுவதிலும் அவர் கல்விப் புலத்திற்கு ஆற்றிய சேவைகள் போற்றுதற்குரியன.

இன்று மணிவிழாக் காணும் திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்களுக்கு யாழ்ப்பாண கல்வி வலயத்தின் சார்பில் நல் வாழ்த்துக்களை இம் மலரினூடாக வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவரின் ஓய்வுக் காலம் சிறப்பானதாகவும், வளமானதாகவும் அமைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவர் தம் கல்விப் பணிகள் எம் சமூகத்திற்குத் தொடர வாழ்த்தி நிற்கின்றேன்.

**தி.கதிர்காமநாதன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
# CEYLON TAMIL TEACHERS' UNION

தலைமைப் பணிமனை. 131.கண்டி வீதி. யாழ்ப்பாணம்.
Head Office. 131.Kandy Road. Jaffna.(Reg.NO:REGD:NO:5001)



## ஆளுமைமிக்க கல்வியியலாளன் அருணகிரிநாதன்.

முப்பத்தியிரண்டு ஆண்டுகள் கல்விப் பணியில் தம்மை அர்ப்பணித்து 31.01.2016இல் அகவை அறுபது காணும் உயர்திரு பொன்னம்பலம் அருணகிரிநாதன் பல நெடுங்காலம் வாழ முதலில் வாழ்த்தி நிற்கின்றேன்.

பேச்சாற்றல், எழுத்தாற்றல், மொழியாற்றல், பண்புடைமை, பணிவுடைமை, தன்னடக்கம் கொண்டு கல்வியால் உயர்ந்து, தாம்பெற்ற கல்வியைத் தலைமுறைக்கும் பகிரவேண்டும் என்ற எண்ணக்கருவை மனதில் சுமந்து தீவகத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்த தலைசிறந்த தலைமை ஆசிரியர் அருணகிரிநாதன் என்றால் அது மிகவும் பொருத்தமானதே.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் முப்பது ஆண்டுகாலம் உறுப்பினராக இருந்து பல்வேறு பணியின் பதவிகளை அலங்கரித்து தற்போது சிரேஸ்ட துணைப் பொதுச் செயலாளராக உள்ள அருணகிரிநாதன் அவர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பல்வேறு துயரங்களைச் சுமந்தபோது அச்சுமைகளைத் தனதாக்கி தொழிற்சங்கத்தின் பெயரைப் பாதுகாப்பதற்காக அயராது பாடுபட்டவர். தனது சொந்தப் பணத்தில் பல தடவைகள் விமானத்திலும், கப்பலிலும் பயணம் செய்து தொழிற்சங்கப் பணிகளில் ஈடுபட்டவர். இவரது தொழிற்சங்கப் பணியென்பதனை எவருமே ஈடு செய்ய முடியாது. கீழ்நிலைத் தொழிற்சங்கத் தோழர்களுக்கு நல்ல வழிகாட்டியாக, உணர்வுள்ள தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்தவர்.

பண்பான துணைவியைக் கரம்பிடித்து நல்ல பிள்ளைகளைப் பெற்றெடுத்த சிறந்த தந்தை என்ற அந்தஸ்தையும் பெற்றுக் கொண்டவர். கல்வித்துறையில் மிகவும் ஆழமான அறிவுள்ள அருணகிரிநாதன் அவர்கள் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றதும் தம்மை முழுமையாக அரப்பணித்து சேவை செய்தவர் என்பதனை எவரும் மறுப்பதற்கில்லை.
கல்விப் பணியோடு பொதுப் பணியும், ஆன்மீகப் பணியும் புரிந்து நல்ல மனிதர் என்ற நாமத்தை தனதாக்கிக் கொண்ட ஆளுமைமிக்க கல்வியலாளன் திரு.பொ.அருணகிரிநாதன் அவர்கள் நீண்ட ஆயுளுடன் திடமான தேக ஆரோக்கியத்துடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

தொழிற்சங்கச் சேவைக்காக,

சரா. புவனேஸ்வரன்.

பொதுச் செயலாளர்.
சரா.புவனேஸ்வரன்
பொதுச் செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
தொ.இல.0773126807



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வியின் விளையாட்டு
விழாவில் பிரதம விருந்தினராகத் தனது பாரியாருடன்





இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின்
சிரேஷ்ட துணைச் செயலராக



நல்லூர் சயன்ஸ் அக்கடமி நிறுவனத்தால் விழாநாயகர் கௌரவிக்கப்பட்ட போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட கல்வியியலாளன்
# திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்கள்

"வெள்ளத்தனையது மலர்நீட்டம் மாந்தர்தம்
ஊள்ளத்தனைய துயர்வு" – பொய்யாமொழி



***கல்வியின் இறுதியிலக்கு ஞானம் (Wisdom) என்பதாக அமையும் என்பர் சான்றோர்.***

கல்வியறிவு. அனுபவம், தொழில்வாண்மை, சமூக நோக்கு, ஆக்கத்திறன், அர்ப்பணிப்பு, உழைப்பு, நவீனத்துவம், ஆன்மீகம் முதலான மானிட வாண்மைக்குரிய படிமுறைப்பண்புகளால் கல்வியின் இறுதியிலக்கு எய்தப்படலாம்.

இவ்வரிய பண்புகளோடு மக்கள் பணியாம் கல்விப் பணியாற்றி, மகிழ்வுற்றுப் பணிநிறைவுறுத்தும் தற்காலக் கல்விப் புலப் பணியாளர்களில் சிறப்பிடம் பெறுபவர் இன்றைய மணிவிழா நாயகன் திரு.பொன்.அருணகிரிநாதன்ஆவார். ஓர் பட்டதாரி ஆசிரியராக, பிரதியதிபராக, அதிபராக, கல்வியின் முதல்நிரைக் கள நிலையங்களான பாடசாலைகளில் இலங்கையின் பல பாகங்களிலும் பணிபுரிந்து தான் பெற்றுக்கொண்ட பரந்த அனுபவங்களால் கல்வி நிர்வாக சேவையில் களம்புகுந்து கல்வி அபிவிருத்தி, கல்வி முகாமைத்துவம் என்னும் துறைகளில் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியனவாகும்.

***"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்***
***சொல்லிய வண்ணம் செயல்"***

எனப்போந்த வள்ளுவன் வாக்கிற்கமைவாக அரும்பணியாற்றும் திறன்கொண்ட கல்விச் சேவையாளர் வரிசையில் வைத்து மணிவிழா நாயகன் திரு.அருணகிரிநாதன் அவர்கள் மதிக்கப்படத்தக்கவராவார்.

ஓர் பல்கலைக்கழக நண்பராக அறிமுகமாகி, அது வாழ்நாள் ஆருயிர் நட்பாக உருவெடுத்தமைக்கு அவரது அறிவும் பண்பும் பக்குவமும் அடிப்படைகளாயின. இதற்கு இவரது அன்புப் பெற்றோரும் ஆருயிர் வாழ்க்கைத் துணையும் மேன்மையுறு மகவுகளும் உரமூட்டி உறுதுணையாயினர். மணிவிழா நாயகன் தனது உத்தியோகப் பணிக்கப்பாலும் கல்விப் பணியாற்றியதுடன் வெளிநாட்டுக் கல்விக் களங்களில் தான் பெற்றுக்கொண்ட கல்வியனுபவங்களால் எமது பிரதேசப் பாடசாலைகளின் முகாமைத்துவக் களங்களை வளப்படுத்தியவர். மணிவிழா நாயகன் திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்கள் இன்று உத்தியோகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவர்தம் உத்தியோகப்பற்றற்ற கல்விப்பணியும் சமூக சேவையும் பொதுப்பணியும் வலுவோடு வெளிப்பட்டு மக்கள் நலமும் மனை நலமும் மேன்மையுற்று மகிழ்வோடு நீடூழி வாழ மனமார வாழ்த்துகின்றேன்.

**வாழ்க நலமுடன்.**

**கலாநிதி செல்லத்துரை சேதுராஜா**
ஓய்வுநிலை அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணுக்காய் உழைக்கும் உத்தமன்



திரு.பொன் அருணகிரிநாதன் அவர்களின் மணிவிழா மலரிற்கு வாழ்த்துரை வழங்குவது மட்டற்ற மனநிறைவைத் தருகின்றது.

தாய் மண்ணை தாங்கிப் பிடிக்க வேண்டிய பலர் இம்மண்ணை விட்டு அகன்று விட்ட காலச் சூழலிலும் இறுதிவரை பற்றுறுதியுடன் மண்ணுக்காய் உழைத்துவரும் உத்தமனாய், நல்ல முன்மாதிரி மனிதனாய் இவரை என்னால் பார்க்க முடிகின்றது.

தன்நலமற்ற அர்ப்பணிப்பு மிக்க கல்விப்பணியும், ஒழுக்கம் மிக்க சமயப்பணியும், அபிவிருத்தி நோக்கிய சமூகப் பணியும், முன்வைத்த காலை பின்வாங்காத மனோதிடமும், தவறுகளை தட்டிக்கேட்கும் மனப்பாங்கும், எளிமையான தோற்றமும் இவரது பல்துறை ஆளுமையின் வெளிப்பாடுகளாகும்.

**"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு**
**காமுறுவர் கற்று அறிந்தவர்"**

என்பதற்கமைய ஊரிற்கும், கல்வி உலகிற்கும் முன்மாதிரியாய் திகழ்ந்து வரும் இவரது ஓய்வுக்காலம் பொது நலனுக்காய் மேலும் உழைக்க உதவிட வேண்டும் என வேண்டி குடும்பமும், இவரும் நலமாய் வாழ்ந்திட வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் அருள்பாலித்திட இறைஞ்சிவாழ்த்துகிறேன்.

**திரு.சபாஸ்கரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
தீவக வலயக்கல்வி அலுவலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப்பாசறையின் தானைத் தளபதி



மணிவிழா காணும் என் இனிய நண்பன் திரு.பொ.அருணகிரி நாதனுக்கு எனது வாழ்த்துக்களை வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகிறேன். 1978 இல் ஏற்பட்ட உறவு 2016 வரை பல்வேறு கல்வி, சமூக, சமய செயற்பாடுகளினூடாக இன்றுவரை நட்புடன் கூடிய சமூகப் போராளிகளாக விளங்கும் எமது நண்பர் படையில் ஒரு தானைத் தளபதியாக பல்வேறு களங்களை வழிநடத்தியவர் நண்பன் அருணகிரிநாதன்.

ஆசிரியராக, அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக விளங்கிய காலத்தில் எதையும் நன்கு திட்டமிட்டு இலக்கை நோக்கி நகர்த்தும் வெற்றியாளராக அவரை சமூகம் கண்டு கொண்டது. யா /வேலணை மத்திய கல்லூரியில் அவரின் பணி சிறப்பானது. மிக இக்கட்டான காலத்தில் தான் பிறந்த மண்ணின் கல்லூரியை வளர்ப்பதில் மிக நீண்ட தூரம் பிரயாணம் செய்து சேவையாற்றியமை அவர் மண்ணின் மீதும் சமூகத்தின் மீதும் கொண்ட அக்கறையை எடுத்துக் காட்டியது. இவரின் சமூகம் சார்ந்த பார்வைகள் ஆழமானது. தமிழாசிரியர் சங்க துணைப் பொதுச் செயலாளராக வடமாகாண அதிபர் சங்க செயற்குழு உறுப்பினராக தற்போது வடமாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியாளர் ஒன்றியத்தின் பொருளாளராக இவரின் கழகம் சார்ந்த செயற்பாடுகள் பற்பல.

1990களிலும் 2000 களிலும் எமது நண்பர்களே ஒரு புதிய தலைமுறை அதிபர்களாக உருவெடுத்திருந்தனர். அவர்களில் மிக கனதியான காத்திரமான பணியாற்றியவர் திரு.அருணகிரிநாதன். முகாமைத்துவ திறனும் ஆழ்ந்த கல்விப் புலமையும் அனைவரையும் வசப்படுத்தும் வசீகரமும் அவரின் சேவையை சிறப்படைய வைத்தன.

எமது நட்பு வட்டம் கல்விப் பணியை இலகுபடுத்தியதுடன் சமூகம் சார்ந்த செயற்பாடுகளிலும் பரஸ்பரம் உதவுவதாக அமைந்தது. அத்துடன் எமது நட்பு எமது குடும்ப உறவுகளையும் மேம் படுத்தியது. அந்த வகையில் நண்பன் அருணகிரிநாதனின் கல்வி சமூக சமயப் பணிகளை பதிவு செய்யும் மணிவிழா நிகழ்வு காலப் பதிவாக அமைகின்றது. இம் மணிவிழாவும் மலர் வெளியீடும் ஓய்வின் பின் அடுத்த கட்ட சமூக பணிக்கு நண்பனை நகர்த்திச் செல்லும் என்பது நிச்சயம்.

எமது நண்பர்கள் பலர் தற்பொழுது ஓய்வு பெற்று வரும் நிலையில் நாம் அனைவரும் இணைந்து அரசு கட்டுப்பாடு இன்றி இச்சமூகத்திற்கான காலத்தின் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற சமூக சிந்தனையாளரான அருணகிரிநாதனின் ஓய்வும் சமூகத்திற்கு நன்மை பயப்பதாகவே அமையும். மணிவிழா காணும் திரு.பொ.அருணகிரிநாதன் தனது மனைவி பிள்ளைகளுடன் சீரும் சிறப்புடனும் நீடூழி வாழ எமது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

**திரு.ச.சிவநேஸ்வரன்**

ஓய்வு நிலை அதிபர்

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

தலைவர், வடமாகாண அதிபர்கள் சங்கம்

செயலாளர், வடமாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியாளர் ஒன்றியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியால் பதவியைப் பெருமைப்படுத்தியவன்



அன்பு நண்பன் அருணகிரியின் மணிவிழா மலரில் அவனை வாழ்த்தி செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். தீவகத்தில் ஒரு கிராமத்தில் பிறந்து தனது திறமையாலும், அயரா முயற்சியாலும் கல்வியிலும் பணியிலும் உயர்நிலை எய்திய சாதனையாளன். நல்லாசிரியனாய், பள்ளிமுதல்வனாய், பிரதிக் கல்விப் பணிப்பாளனாய் படிப்படியாக பணியிலும் வாழ்விலும் முன்னிலைக்கு வந்தவன்.

தான் கற்ற பள்ளியின் முதல்வனாக இருந்து பள்ளிக்கும் தனக்கும் பெருமை சேர்த்தவன். வேலணை மத்திய கல்லூரியை மீண்டும் புத்துயிர் பெறச் செய்து தீவகத்தின் முதனிலைப் பள்ளியாக உயர்த்தியவன். கல்வி அடைவிலும், பௌதீக வளங்களின் அடர்த்தியிலும் மிக வேகமாக வளரச் செய்த பெருமைக்குரியவன்.

கல்வி அடைவு மட்டுமல்ல ஒழுக்க விழுமியப் பண்புகளிலும் மாணவர்கள் உயர்ந்து நிற்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பள்ளியைக் கட்டுக் கோப்பாகப் பேணி வந்தவன், புலம் பெயர் நாடுகளிலும், கொழும்பிலும் வாழும் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், தீவக வளர்ச்சிக்கு உதவும் நிறுவனங்கள் என எல்லோரிடத்தும் தனது ஆளுமையைச் செலுத்தி பள்ளியின் வளத்தையும் வனப்பையும் உயர்த்திய உணர்வாளன். மாணவர்கட்கு விடுதி வசதியை ஏற்படுத்தியதுடன், வடபுலப் பாடசாலைகளுக்கு மதிய உணவுச் செயற்றிட்டம் வரமுன்னரே தனது மாணவர்கட்கு உணவளித்துக் கல்வியைப் புகட்டியவன். இம் முயற்சியினால் வேலணையிலிருந்து யாழ் நகரை நோக்கிய மாணவர்களின் நகர்வை தன்பள்ளிக்கு மாற்றியவன்.

பள்ளி முதல்வனாய் பலரும் புகழும் நற்பணியும், கல்வி நிர்வாக சேவையின் உள்ளீர்ப்பும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவியை இயல்பாகவே தந்து நின்றன. தீவகக் கல்வி வலயத்திலும், பின் யாழ் கல்வி வலயத்திலும் இப்பதவியாலும் அதற்கேயுரித்தான பணிகளாலும் கல்வியுலகில் தனக்கென ஓர் இடத்தை வரைந்தவன். அர்ப்பணிப்பும், அயரா முயற்சியும், அவன் பணியை அலங்கரித்தன. அன்பும் அரவணைப்பும் அவன்பால் அனைவரையும் ஈர்த்தன.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக இவன் நல்லதொரு வளவாளன். இவன் ஆசிரியர்க்கும், பள்ளி முதல்வர்களுக்கும் வாண்மை விருத்திக்குமான வள நிலையம், தேடல் நிறைய உள்ளவன். கல்வியில் பட்டப்பின்படிப்பு, மாணவர்க்கு நல்ல வழிகாட்டியும், ஆய்வாளனும், அவர்களின் ஆய்வுக்கட்டுரைகள் தரம் பெற உதவுபவன்.

நண்பன் அருணகிரியுடனான உறவு யாழ் பல்கலைக்கழகத்தில் தொடங்கியது. இளநிலைப்பட்டப்படிப்பு மட்டுமல்ல முதுநிலைப் பட்டத்திலும் இணைந்தே கற்றோம். அன்று தொடங்கிய நட்பு இன்றுவரை இறுக்கமாகத் தொடர்கிறது. பள்ளி விடயங்களில் மட்டுமன்றி எமது பிரதேசத்தின் கல்வி மேம்பாட்டிலும் இணைந்து பங்கெடுப்பதால் நட்பு என்பதற்கு மேல் பங்காளிகளாகவே பணியாற்றுகின்றோம். கல்வி மேம்பாட்டுப் பேரவை, சிரேட்ட பள்ளிக் கல்வியாளர் அமையம் என்பவற்றின் முழுமையான பங்காளன். தனது அரச பணியின் காரணமாக இதுவரை வரையறுக்கப்பட்ட அளவில் பங்கெடுக்க முடிந்த சமூகச், சமயப் பணிகளில் இனிவரும் காலத்தில் முழுமையாகவே ஈடுபடும் வாய்ப்புக் கைகூடியுள்ளது. குறிப்பாக அவனது ஆழ்ந்த அறிவும், பெற்ற அனுபவங்களும் எமது பிரதேசத்தின் கல்வித் துறையின் மேம்பாட்டுக்கு, நிறையவே பயனளிக்கும். அதற்காக அவனுக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அவனது குலதெய்வமான விநாயகப் பெருமான் வழங்குவார்.

**திரு.க.அருந்தவபாலன்**
முன்னாள் அதிபர்
றிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபுலக் கல்விக்கொரு வழிகாட்டி



அருணிக்கு அகவை 60 ஆச்சரியமாக இருக்கின்றது. பல்கலைக்கழகத்தில் கற்ற காலத்தில் இருந்த அதே வேகம், அதே துடிப்பு இன்று வரை மாறவில்லையே. இன்று கல்விப்புலத்தில் அவருக்கு இருக்கும் ஆளுமையும் புலமையும் அனுபவமும் இன்று அவரது பேச்சில் செயலில் வேகத்தில் தெரிக்கின்றது மட்டுமல்ல அந்த அனுபவமுமே அவரை ஒரு முழுமையான மனிதனாக வெளிப்படுத்தியும் இருக்கின்றது. கல்விதான் ஒருவருக்கு முழுமையைத் தரும் என்பது பொ.அருண கிரிநாதன் போன்ற பல மூத்த அனுபவசாலிகளால் வெளிப்பட்டு நிற்கின்றது.

அவர் ஒரு ஆசிரியராக, அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக எமது சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் தான் பிறந்த மண்ணிலும் வளர்ந்த மலையகத்திலும் யாழ்ப்பாணத்திலும் சிறப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது.வடபுலக்கல்வி பற்றியும் அதன் விருத்தி பற்றியும் சதா சிந்திக்கின்ற ஒரு பெரு மனிதராகவே அவரை நான் காண்கின்றேன்.

இன்று வடபுலக்கல்வி அடைவுகள் இலங்கையில் மிகவும் விமர்சிக்கப்படுகின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. இதனை சிறப்புற ஒழுங்கமைத்து இலங்கையின் கல்வியில் மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்த வேண்டிய தேவை இன்று அவசியமாக உணரப்பட்டிருக்கின்ற வேளைகளில் யதார்த்தமான கல்விச் சிந்தனைகளையும் அவற்றைச் செயல்படுத்தும் வேகம் கொண்ட பலர் இன்று இளைப்பாறுகின்றார்கள். நிச்சயமாக இதுவும் எமது பிரதேசக் கல்வி அடைவுகளில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதில் பொ.அருணகிரிநாதனின் வெற்றிடமும் இன்று மிகவும் உணரப்படுகின்றது.

கூட்டங்கள், கருத்தரங்குகளில் மிகவும் ஆவேசமாகக் கருத்துக்களை வெளியிடும் அனேகர் இந்த வீழ்ச்சியின் அடிப்படைகளைப் புரிந்து கொள்கின்றார்கள் இல்லை என்பது மிகுந்த வேதனை கல்வித்தரம் குறைவதற்கான காரணங்களைக் கண்டு அறியாது தம்மிடம் உள்ள பொறுப்புக்களை மற்றவர்களுக்குக் கடத்தி விட்டு தமது வேலை முடிந்ததாக நினைக் கின்றவர்களை அதிகமாகக் கொண்ட எமது சமூகத்தில் பொ.அருணகிரிநாதன் போன்ற ஒரு சிலர் யதார்த்தமாகப் பிரச்சனைகளை இனங்கண்டு அவற்றிற்கு செயல் வடிவம் கொடுத்துப் பள்ளிக் கல்வியின் விருத்திக்கு பெரிதும் உதவுகின்ற ஒரு கல்விமானாகக் காணப்பட்டார். இவரின் ஓய்வு இதற்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பாடசாலை நடைமுறைச் செயற்பாடுகளில் எம்மால் உணரமுடியும்.

பணியில் இருந்து ஓய்வு என்பது பலருக்கு நிரந்தரமான விடுதலை. ஆனால் சிலருக்கு புதிய சுதந்திரமான பணிகளை மேற்கொள்ள அதுவே ஆரம்பமாக இருக்கின்றது. அந்த வகையில் அண்மையில் எமது நண்பர்களும் மூத்த கல்வியாளர்களும் சேர்ந்து உருவாக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பள்ளிக்கல்வியலாளர் ஒன்றியம் என்ற அமைப்பின் செயலாற்றும் நண்பர் ஒருவராக பொ.அருண கிரிநாதன் தனது அனுபவங்களை எல்லாம் ஒன்று திரட்டி சிறந்த பணியினை செய்ய எல்லாம் வல்ல இறைவன் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நிறைவான நல்லருள் புரிந்தருளப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி.

**ஐ.தயானந்தராஜா**
அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க
கொழும்பு கிளையினரால் விழாநாயகர் கௌரவிக்கப்பட்டபோது



யாழ் வேலணை மத்திய கல்லூரியில் நடைபெற்ற தீவக அரிமா (Lion)
கழகத்தின் மாவட்ட ஆளுநர் வரவேற்பு நிகழ்வில் விழா நாயகர்



அகில இலங்கை சமாதான நீதவானாக மல்லாக மாவட்ட நீதிபதி திருமதி
சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் பதவியேற்ற போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஸ்கெலியாவுக்குக் கிடைத்த மணிமகுடம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலணையில் பிறந்த திருவாளர் பொன்னம்பலம் அருணகிரிநாதன் அவர்கள் ஒரு சேவை மனப்பாங்குள்ள மனிதாபிமான ஒரு கல்விமானாவார். இவர் தமது பாடசாலைக் கல்வியை வேலணை மத்திய கல்லூரியிலும் பட்டப்படிப்பினை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் பெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியாக 1981 ஆம் ஆண்டு வெளியேறினார். பின்னர் பட்டதாரி ஆசிரிய நியமனம் பெற்று ஆசிரிய தொழிலுக்கு தனது காலடியை பதித்தார். இது இவர் எடுத்த நல்ல முடிவு என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் இவரால் மாணவ சமூகம் மாத்திரமல்ல ஆசிரிய சமூகமும் அடைந்த பலாபலன்கள் அதிகம்.

திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்கள் தனது ஆசிரிய நியமனத்தைப் பெற்று தனது சேவையை செய்வதற்கு மலையகத்தில் பிரசித்திபெற்ற பாடசாலையான மஸ்கெலியா/ சென்.ஜோசப் மத்திய கல்லூரிக்கு 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி வருகை தந்தார். இவர் ஆசிரியராக வருகை தந்தபோது பாடசாலை அதிபராக திரு.ஏ.எஸ்.குமார் அவர்கள் கடமை புரிந்தார். இவர் இப்பாடசாலைக்கு ஆசிரியராக வருகை தந்தமை இந் நகர மக்கள், மலையக மாணவர்கள் செய்த பாக்கியம் என்றே கூறவேண்டும்.

இக்கல்லூரியில் ஆசிரியராக வந்து க.பொ.த.சா/த மற்றும் உ/த வகுப்புக்களில் தமிழ், புவியியல், பொறியியல் சமூகக் கல்வி போன்ற பாடங்களை மாணவர்களுக்கு இலகுவாக புரிந்துகொள்ளக்கூடிய முறையில் சிறப்பாகக் கற்பித்தது மாத்திரமன்றி உயர் பரீட்சைப் பெறுபேறுகளையும் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்தார். அது மாத்திரமன்றி பாடசாலை மாணவர்களின் மேலதிக கல்விச் செயற்பாடுகளுக்கு சமூகக் கல்வி பாடம் தொடர்பான புத்தகங்களையும் தயாரித்து கல்விக்கு உதவினார். மேலும் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளிலும் இல்லப் பொறுப்பாசிரியராக பொறுப்பேற்று விளையாட்டுத்துறையிலும் பாடசாலை மிளிர அளப்பரிய சேவை செய்தார். பாடசாலை மாணவர்களின் கல்வி விடயங்களில் மாத்திரமல்லாமல் அவர்களது திறன்விருத்தி தொடர்பாகவும் அவர்களது தொழில்சார் விடயங்களிலும் அவர்களை ஊக்குவித்தார்.

இப்பாடசாலையின் அதிபராக 1985.09.01 ஆம் திகதி திரு.எஸ்.நடேசன் அவர்கள் கடமையேற்றார். இந்த அதிபரின் காலத்தில் பாடசாலை நல்ல வளர்ச்சிப் பாதையில் சென்றது என்றே கூறலாம். இவரது பாடசாலை நிர்வாகம் ஒரு புதிய முறையில் முகாமைத்துவ பாங்குகளைக் கொண்டு அமைந்திருந்தது. இவரது காலகட்டத்தில் திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்கள் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதி அதிபராக பதவியேற்றார். இக்காலகட்டத்தில் இப்பாடசாலை மற்றைய பாடசாலைகளுக்கு ஒரு முன்மாதிரியான பாடசாலையாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவியபோது நானும் திரு.பொன்.அருணகிரிநாதனும் தொண்டர் ஆசிரியர்களைத் தேடி வலைவீசி திரிந்தமை மறக்க முடியாது. பல தொண்டர் ஆசிரியர்களின் உதவி மனப்பான்மை கிடைத்ததன் காரணமாக பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் எதுவித பாதிப்பும் இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று கொண்டிருந்தன. மற்றுமொரு முக்கியமான விடயம் என்னவென்றால் பாடசாலை நேரசூசியை தயாரித்தல் ஆகும். அதற்கு திரு.பொன்.அருணகிரிநாதன் தனது பொன்னான நேரத்தையும் கருதாது சிரமத்தையும் பாராது தமது பங்களிப்பைச் செய்தார்.

இவ்வாறு பல அரும்பெரும் சேவைகளை பாடசாலைக்கும் சமூகத்துக்கும் வழங்கிய திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்கள் 1989 செப்ரெம்பர் மாதத்தில் தமது தாயகமான யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். தமது தாயகத்திலும் தமது பாடசாலை மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் பற்பல சேவைகளையும் செய்து பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்று ஒரு சிறந்த சேவையாளனாக தன் பெயரை பொன் எழுத்தில் பதித்துக் கொண்டார். இவர் தனது சேவையிலிருந்து 2016.01.31 ஆம் திகதி ஓய்வு பெற்ற போதிலும் இவரது சேவையும் தேவையும் எமக்கு என்றென்றும் மிகவும் அவசியமாகும் என்று வாழ்த்துரை வழங்கி அவருக்கு நோயற்ற நீண்ட வாழ்வும் நிறைவுற்ற சகல வளங்களும் பெற்று மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**ஜனாப்.ஈ.எம்.நஸீர்**

உதவி கல்விப் பணிப்பாளர்

வலய கல்விக் காரியாலயம்

ஹற்றன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை உருவாக்கிய எம் இனிய ஆசான்

சென்.ஜோசப் கல்லூரியில் மாணவனாகக் கல்வி கற்று பின்பு இதே கல்லூரிக்கு ஆசிரியராகக் கடமையேற்று தற்போது அதிபராகப் பதவியேற்று சேவையாற்றும் யான் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் ஆசிரியராக, உப அதிபராக சேவையாற்றி இடமாற்றம் பெற்று யாழ் மண்ணிற்கு அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி ஓய்வு பெறும் அன்பு ஆசான் திரு.பொன். அருணகிரிநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனை பெருமையாகவும் பாக்கியமாகவும் கருதுகின்றேன்.

ஒரு மனிதனாகப் பிறந்தோம். ஏனோ வாழ்ந்தோம் என்று இல்லாமல் சமூகத்திற்காக என்ன பங்கு செய்தோம் என்பதுதான் முக்கியம். அவ்வகையில் அன்பு ஆசான் அவர்கள் இக்கல்லூரியில் 12.03.1984 – 13.08.1989 காலம் வரை மகத்தான சேவையாற்றியுள்ளார்.

அக்காலத்தில் இதே கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தது. அன்றைய காலத்தில் எங்கள் பிரதேசத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் மிக மிகச் குறைவு. யாழ் மண்ணில் பிறந்திருந்தாலும் மலையக மண்ணில் சேவையாற்ற வந்தமை எங்கள் பாக்கியமே. இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் தற்போது உயர் நிலையில் வாழ்கின்றார்கள் என்றால் அதற்கு ஐயா அவர்களின் சேவையே காரணம்.

கற்பித்தலில் மட்டுமன்றி எல்லோரிடமும் அன்பாகப் பழகக் கூடியவர். யாருக்கும் உதவி செய்வதில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். இணைப் பாடவிதான செயற்பாட்டிலும் முழுமையாகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றுவார்.

சமூகத்தில், கல்லூரியில் நடைபெறும் விழாக்களில் இவருடைய சொற்பொழிவு இல்லாமல் இராது. காரணம் சிறந்த தொனி, விடய அறிவு மக்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்ற வகையில் விளக்கும் திறன் என்பன மற்றவர்களை இணங்கி கேட்க வைக்கும். இது மட்டுமா சிறந்த பாடகரும் கூட. ஆசிரிய நலன்புரி நிகழ்வுகளில் இவருடைய பாடலும் நிச்சயமாக இருக்கும்.

இப்படி கற்பித்தல், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபாட்டுடன் செயற்பட்டாலும் முகாமைத்துவ கடமைகளில் முழுமையாக, பாடசாலை நேரம் மட்டுமன்றி பின்னேரங்களிலும் ஈடுபடுவார். இந்த அடிப்படையில் இவருக்கு உதவி அதிபராக நிர்வாகக் குழுவினால் நியமனம் வழங்கப்பட்டமை எந்த அளவுக்கு இவரின் சேவை அமைந்திருந்தது என்பதனை எழுதி விளக்க வேண்டிய அவசியமில்லை.

உதவி அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் அதிபருக்கு கூட ஏனைய ஆசிரியர்கள் பய உணர்வு இல்லாமல் இருப்பர். ஆனால் எங்கள் அருணகிரி சேர் வருகிறார் என்றால் மாணவர்களும் சரி, ஆசிரியர்களும் சரி, ஏனையோரும் சரி பயங் கலந்த மரியாதையுடன் நடந்து கொள்வர். பரீட்சைக் கடமைகள், மேற்பார்வை, மாணவர் ஒழுக்கம், மாணவர்களின் கற்றலுக்கு உதவும் தன்மை, முகாமைத்துவம், திட்டமிடல், கல்வி அபிவிருத்தி, இணைப்பாடவிதான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் என சகல விதத்திலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அர்ப்பணிப்போடு எமது பிரதேசத்துக்கு அயராது உழைத்த உத்தமர் இவர்.

எவ்வாறு எங்கள் பிரதேசத்தில் உழைத்தாரோ அதே வகையில் அதிபர் பரீட்சையில் சித்தி பெற்று, அனுபவ பரீட்சையிலும் சித்தி பெற்று யாழ் மண்ணுக்கு மீண்டும் இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கும் அதிபராக மகத்தான சேவையாற்றி, பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று யாழ் மக்களின் கல்வி மறுமலர்ச்சியில் சேவையாற்றி வருகின்றார் என்பது அவ்வப்போது தொலைபேசியில் உரையாடும்போது அறிந்து கொண்டேன்.

08.07.2015 அன்று கல்லூரியின் பவள விழாவின் போது கல்லூரிச் சமூகம் இவரை அழைத்து கௌரவித்தது. இது எமக்கு கிடைத்த பாக்கியமே. எங்கு சென்றாலும் நிச்சயம் அவரை சமூக முன்னேற்ற சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி செயற்படுவார் என்பது நிச்சயம். சிறந்த நற்பணி ஆற்றிய ஆசான் நோயற்ற நிலையில் நீடித்த ஆயுளுடன் வாழ வாழ்த்துகிறேன்.

வாழ்க வளமுடன்.

**S.P.பரமேஸ்வரன்**
அதிபர்
சென்.ஜோசப் கல்லூரி
மஸ்கெலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை மத்திய கல்லூரி கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி



அர்ப்பணிப்பு மிக்க சேவையாளன் திரு.பொன்.அருணகிரி நாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் கொழும்பு பழைய மாணவர் சங்கம் பேருவகையுறுகின்றது.

கல்விச் சேவையென்பது எல்லோருக்கும் கிட்டுவதல்ல. அது கடவுளின் கொடை. கிடைத்தற்கரிய அக்கொடையை முறையாகச் செயற்படுத்தி வெற்றி கண்டவர்தான் முழுமனிதன். அத்தகைய ஒரு கனதியான பணியைச் செய்து முடித்து வெற்றி கண்டு விடைபெறுபவர்தான் எம் மணிவிழா நாயகன்.

1984 இல் நுவரெலியா மாவட்டத்தில் கல்விச் சேவையை ஆரம்பித்து 'செய்யும் தொழிலே தெய்வம்' எனக் கொண்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மட்டுமல்லாது ஒழுக்க விழுமியங்களிலும் சிறந்து விளங்க வழிகாட்டியவர். இவர் ஆசிரியர், பிரதி அதிபர், அதிபர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் என பல்வேறு பதவி நிலைகளில் பணிபுரிந்து தன் பன்முக ஆளுமையை வெளிப்படுத்தியவர்.

2002 தொடக்கம் 2011 வரை வேலணை மத்திய கல்லூரியில் இவரது பதவிக்காலம் இவரை ஒரு சிறந்த அதிபராக வரலாற்றில் பதிவு செய்திருக்கிறது. இராணுவச் சூழலில் பாடசாலையைப் பொறுப்பேற்று சிதறுண்டிருந்த மாணவர் சமூகத்தை ஒன்று திரட்டி பாடசாலையைப் பௌதீக வளம், ஆளணி, பாட விதானம், இணைப்பாடவிதானம் என்பவற்றில் துரித வளர்ச்சியை எட்ட வைத்து வரலாறு காணாத பல்கலைக்கழகப் பிரவேசத்தை தனது சிறந்த முகாமைத்துவத் திறனால் நனவாக்கியவர்.

தனது பணியைத் தனது சொந்த ஊரில் தான் படித்த பாடசாலையுடன் மட்டுப்படுத்தாது தீவகம் முழுவதும் ஆற்ற, கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் அவர் பெற்ற சித்தி ஆவன செய்தது. தீவகத்திலிருந்த இவரது வீச்சான பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) பதவிப் பணி யாழ் கல்வி வலயத்தை இவரைப் பணிக்கமர்த்த வைத்தது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அர்ப்பணிப்பு மற்றும் ஆத்மார்த்தமான சேவை என்பன இவரைத் தனது பாடசாலை, தனது வலயம் தாண்டி யாழ் வலயத்திலும் தனக்கெனத் தனியிடம் பிடிக்க வைத்தது.

இன்று தனது கல்விப் பணியை அனைவருக்கும் ஆற்றி அதில் வெற்றி கண்ட ஒரு முழு மனிதராக விடைபெறுகின்றார். கல்விப் பணி மட்டுமன்றி இவரது சமய, சமூகப் பணிகளும் போற்றுதற்குரியவை. நீண்ட காலமாக வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோயிலின் அறங்காவற் சபையின் தலைவராக, இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் துணைப் பொதுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளராக இன்னும் பல சங்கங்களில் நிர்வாகப் பொறுப்புக்களில் பல வகிபாகங்களை சமய, சமூக நலன்கருதி ஆற்ற வரும் இவர் சமூகத்தின் நன்மதிப்பையும், நற்பெயரையும் ஈட்டியிருப்பது இவரது ஆளுமையின் செழுமையான வெளிப்பாடே.

"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு"

என்ற பொய்யாமொழிக்கு இலக்கணமாக வாழ்ந்து கொண்டிருப்பவர். இவரது இளைப்பாற்று கல்வியுலகிற்கு அளப்பரிய இழப்பென்பதில் ஐயமில்லை. இவர் சிறந்த உடல், உள ஆரோக்கியத்துடன் தனது குடும்பத்தினர், சமூகத்தினருடன் சந்தோசமாக நிறைவாழ்வு வாழ முடிப்பிள்ளையாரின் தாள் பணிந்து மணிவிழா நாயகனை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதில் கொழும்பு பழைய மாணவர் சங்கம் பெரு மகிழ்வடைகின்றது.

வாழ்க வளமுடன் !

**சோ.பரமானந்தம்**
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்
தலைவர்,
வேலணை மத்திய கல்லூரி
கொழும்பு பழைய மாணவர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க (அவுஸ்திரேலியா பிரதிநிதிகளுடன் விழாநாயகர்)



யாழ் வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையின் கௌரவிப்பு விழாவில் கௌரவ நாயகர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும்
# என் இனிய நண்பன் அருணகிரிநாதன்



ஈழ மணித்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அழகு சேர்க்கும் தீவகத் தில் நீர்வளம், நிலவளம், கல்வி வளம் என அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றதும், ஆன்ம ஈடேற்றத்தின் வழிகாட்டிகளாக விளங்கும் தெய்வீக மணங் கமழும் பழம் பெரும் ஆலயங்களாலும் கல்விச் சாலைகளாலும் எழில் பெற்றதும் சமய அனுட்டானங்களையும் வாழ்வியல் பெருமைகளையும் கொண்ட மைந்ததுமான சிறப்பு மிகு பிரதேசம் வேலணை யாகும்.

இத்தகைய வாழ்வியற் பெருமைகளிற்கு உரித்தான வேலணை மேற்கில் பொன்னம் பலம் அன்னலட்சுமி தம்பதிகளுக்கு மகனாக 31.01.1956 இல் நண்பன் அருணகிரிநாதன் அவர்கள் அவதரித்தார்கள். தனது ஆரம்பக் கல்வியை அப்போது இராசா உபாத்தியார் பாடசாலை என அழைக்கப்பட்ட யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்தில் கற்று சிரேஷ்ட இடைநிலைக் கல்வியை வேலணை மத்திய கல்லூரியில் தொடர்ந்தார். அந்தக் காலகட்டத்தில் நானும் எனது ஆரம்பக் கல்வியை வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் நிறைவு செய்து இடைநிலைக் கல்விக்காக மத்திய கல்லூரியில் இணைந்து கொண்டேன். அன்று ஆறாம் வகுப்பில் ஆரம்பித்த எங்கள் நட்பு இன்று அறுபது வயது வரை இணை பிரியாது இறுக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது.

நானும் நண்பன் அருணகிரியும் வேலணை மத்திய கல்லூரியில் ஒரே வகுப்பில் கல்வி கற்ற அந்தக் காலங்கள் இன்றும் என் மனதில் பசுமை படர்ந்த நினைவுகளாக நிலைபெற்று நிற்கிறது.

ஆசிரியர்களின் அன்பான அரவணைப்பில் ஆடலும் பாடலும் பயின்று பாடசாலைத் தோட்டத்தில் மரக்கறிகளை பயிர்செய்து அவற்றைப் பராமரித்து காய்கறி பறித்து ஆசிரியர்களுக்கு கொடுத்து அவர்களது பாராட்டுக்களைப் பெற்ற அந்த இனிய நாட்கள் இன்றும் என்னை விட்ட கலவில்லை.

நான் எனது உயர்தரக் கல்வியைத் தொடர் வதற்காக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூ ரிக்கு வந்துவிட்டேன். நண்பன் அருணகிரி தனது உயர்தரக் கல்வியையும் வேலணை மத்திய கல்லூரியில் தொடர்ந்து 1978 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். 1981 ஆம் ஆண்டு சிறப்பு கலைப்பட்டதாரியாக வெளி யேறினார்.

1984.03.12 ஆம் திகதி ஓர் பட்டதாரி ஆசிரியராக அரச சேவையில் இணைந்த இவர் தனது முதல் நியமனத்தை நுவரெலியா மாவட்டத்தின் மஸ்கெலியா சென் ஜோசப் கல்லூரியில் பொறுப்பேற்று 13.08.1989 வரை பணியாற்றினார். இவரிற்கே உரித்தான நிர்வாகத்திறனும், செயற்றிறனும் காரணமாக அக்கல்லூரியின் பிரதி அதிபராகவும் பணி யாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989 இல் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு இடமாற்றம் பெற்று வந்த இவர் தன் சேவையின் தளமாக தனது தாய் மண்ணாகிய தீவகத்தையே தெரிவு செய்து 14.08.1989 தொடக்கம் 24.11.1991 வரை யா/நாரந்தனை கணேச வித்தியாலயத்தில் பணியாற்றினார். இக்காலப் பகுதியில் 1991.06.01 இல் இலங்கை அதிபர் தரம் II போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை அதிபர் சேவையில் மிகக் குறைந்த வயதில் இணைந்து கொண்டார்.

25.11.1991 முதல் யா/வேலணை சைவப் பிரகாச வித்தியாலயத்தில் தனது அதிபர் பணியினை ஆரம்பித்தார்கள். இக்காலகட்டம் தீவக மக்களின் வாழ்வியலில் சோதனைகளும் வேதனைகளும் நிறைந்த காலகட்டமாகும். தீவகம் வடக்கு மற்றும் தீவகம் தெற்கு பிரதேச மக்கள் யாழ் நகரை நோக்கி ஓரிரு இரவுகளில் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டது. அக்காலகட்டத்தில் எமது தீவக மாணவர்கள் கல்வியில் சோரம் போகக் கூடாது என்ற சீரிய சிந்தனையில் செயலாற்றிய அதிபர்களில் நண்பன் அருணகிரியும் ஒருவர்.

யாழ் நகருக்கு இடம் பெயர்ந்ததன் பின் சைவப்பிரகாச வித்தியாலயத்தை ஆரம்பித்தில் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் பின் பட்டப் படிப்படுகள் கல்லூரிகள் செயற்பட வைத்த துடன் 95 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தென்மராட்சி நோக்கிய இடம் பெயர்வின் போது மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இணைந்த பாடசாலையாக செயற்படுத்தினார்.

மீண்டும் 1996 முதல் தீவகப் பிரதேச மக்கள் மீள் குடியேறத் தொடங்கியதன் பின்னர் யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தை இயங்க வைத்து ஆங்காங்கே குடியேறியிருந்த மாணவர்களை ஒன்று சேர்த்து அவர்களது கல்விக்கு ஒளியூட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டார்.

இக்காலகட்டத்திலேயே தீவகத்திற்கென தனியான கல்வி வலயம் ஒன்று உருவாக்கப் பட்டது. வலயத்தின்அப்போதைய கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்னேஸ்வரன் தலை மையில் கல்வி அதிகாரிகளுடன் இணைந்து உறங்கு நிலையில் இருந்த தீவகத்தின் கல்விக்கு புத்துயிரூட்ட உதவினார். சுமார் 11 ஆண்டுகள் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அதிபராக அளப்பரிய சேவையாற்றி வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பெரும் பங்காற்றினார்.

1996 ஆம் ஆண்டு முதல் இலங்கை அதிபர் சேவை யின் முதலாம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்ற இவர் 15.07.2002 முதல் வேலணை மண்ணின் புகழ்பூத்த கல்லூரியான வேலணை மத்திய கல்லூரியில் அதிபராக நியமிக்கப் பட்டார்.

தீவகத்தில் பல ஆன்றோர்களையும் சான்றோர்களையும் பிரசவித்த தாயாக திகழ்வது வேலணை மத்திய கல்லூரி. இக்கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களான தம்பு, இராஜநாயகம், குணபாலசிங்கம், கேதாரநாதன், கலாதரன் கணேசலிங்கம், இவர்கள் வரிசையில் நண்பன் அருண கிரியும் இடம்பிடித்தமை மகிழ்ச்சிக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த அனர்த்தத்தால் முழுமையாக இரா ணுவ மயப்படுத்தப்பட்டிருந்த பாடசாலையை மீள இயங்க வைத்தல், பௌதீக வளக்கட்டமைப்புக்களை மீள் உருவாக்கம் செய்தல், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வினைத் திறனுடையதாக்குதல், தேவையான மனித பௌதீக வளங்களை பெற்றுக் கொள்ளல் போன்ற செயற்பாடுகளில் முனைப்புடன் செயற்பட்டு வெற்றி கண்டார். இந்த இடத்தில் அதிபர் கணேசலிங்கம் அவர்களின் பங்களிப்பும் நினைவு கூரப்படவேண்டிய ஒன்றாகும்.

நண்பன் அருணகிரிநாதன் தன்னுடைய விடாமுயற்சியின் பயனாக யா/வேலணை மத்திய கல்லூரியை தீவகத்தின் தலைமைப் பாடசாலையாக மீண்டும் மாற்றி அமைத்தார்.

இவரிடத்தே காணப்பட்ட சிறந்த முகாமைத்துவநுட்பம், நிர்வாகத்திறன், தலை மைத்துவப் பண்பு என்பவற்றின் காரணமாக 10.03.2011 முதல் தீவக கல்வி வலயத்தின் கல்வி முகா மைத்துவப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றார். இக்காலப் பகுதியில் தீவகப் பாடசாலைகள் அனைத்துக்கும் விஜயம் செய்து பாடசாலையில் முகா மைத்துவச் செயற்பாடுகள் மற்றும் கல்வி அபிவிருத்தி செயற்பாடுகள் என்பவற்றுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டினார். தீவகத்தின் அனைத்து அதிபர்களாலும் ஆசிரியர்களாலும் நேசிக்கப்பட்ட அதிகாரியாகத் திகழ்ந்தார்.

இக்காலப்பகுதியில் 2011.06.01 முதல் இலங்கை கல்வி நிர்வாகப சேவைக்கு பதவி யுயர்வு பெற்றார். மேலும் பாடசாலை அதிபர் களுக்கான கல்வி முகாமைத்துவப் பயிற்சி நெறியினை மலேசியாவில் கோலாலம்பூர் திறந்த பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்ததுடன் கல்வி முகாமைத்துவத்தில் தலை மைத்துவ அபிவிருத்தி பயிற்சியை தாய்லாந்தின் மகிடோல் பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார்.

சுமார் 25 வருட கால கல்விப்பணியினை ஆசிரியராக, அதிபராக, கல்வி அதிகாரியாக, தீவகப் பிரதேசத்திற்கு ஆற்றி 15.01.2013 முதல் யாழ் கல்வி வலயத்தின் முகாமைத்துவப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்று தன் பணியினைத் தொடர்ந்தார்.

நண்பன் அருணகிரிநாதன் அவர்கள் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காகவும் தன்னை அர்ப்பணித்து வருபவர், கல்வியியல் சார்ந்த கட்டுரைகளை பத்திரிகைகளுக்கு எழுதி பிரசுரம் செய்வதுடன், அதிபர் சேவை, கல்வி நிர்வாக சேவை ஆசிரியர் கல்வியியலா ளர் சேவை தடைதண்டற் பரீட்சைகள் போன்ற போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றும் அதிபர் ஆசிரியர்களுக்கு வழி காட்டல் வகுப்புக்களை நடாத்தி அவர்களது பதவி உயர்வுகளுக்கும் வாண்மை விருத்திக் கும் தன் அறிவினை அனுபவத்தினை பகிர்ந்து வழிகாட்டி வருகிறார்.

## பொதுப்பணிகளும் சமயப் பணிகளும்

ஆன்மீக தாகமும் தேசப் பற்றும் மொழிப் பற்றும் இயல்பாகவே கொண்ட இவர் தன்னை சமூகப் பொதுப்பணிகளிலும் சமயப் பணி களிலும் இணைத்து செயலாற்றி வருகிறார். இவர்கள் பரம்பரை பரம்பரையாக நிர்வகித்து வரும் இவர்களது குலதெய்வமாகிய வேலணை மேற்கு மஹா கணபதிப்பிள்ளையார் (முடிப் பிள்ளையார்) கோயிலின் தலைவராக நீண்ட காலம் பதவி வகித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வளர்ச்சியிலும் நித்திய நைமித்திய கருமங்களை சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்துவதிலும் தன்னை அர்ப்பணித்து வருகிறார்.

வேலணை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்து கிராமத்தின் வளர்ச்சிக்கு பங்காற்றினார். அகில இலங்கை சமாதான நீதவானாகவும் தீவக அரிமா கழகத்தின் உறுப்பினராக விளங்கும் இவர் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளராகவும் வடமாகாண பள்ளிக் கல்வியியலாளர் ஒன்றியத்தின் பொருளாளராகவும் இருந்து கல்விச் சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் பங்காற்றி வருகிறார்.

## குடும்பத்தின் நல்ல தலைவராக

தனது தாய் தந்தையருக்கு நல்ல மகனாக சகோதரர்களுக்கு பிரியமுள்ள சகோதரனாக துலங்கிய நண்பன் 1986 இல் தனது ஊரவரும் உறவினருமாகிய யோகேஸ்வரி அவர்களை திருமணம் செய்து இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார். தனது இல்லறத்தின் பயனாக நிருஷா (AJ system Pvt Ltd), அருண்ராஜ் (ஊவா வெல்லச பல்கலைக்கழகம்), கார்த்திகா (ஊவா வெல்லச பல்கலைக்கழகம்)ஆகிய மக்கட் செல்வங்களைப் பெற்று அவர்களை கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக்கி மகிழ்வு கண்டு வருகிறார். எமது ஊரிலும் சரி உறவினர் நண்பர்களின் வீடுகளிலும் சரி இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்து சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் பண்புள்ள மனிதராக நண்பன் அருணகிரி விளங்குகின்றார். இவருடைய உயர்வுக்கும் சிறப்புக்கும் இவரது வாழ்க்கைத் துணைவியார் திருமதி யோகேஸ்வரி அவர்கள் பாத்திரமாக விளங்குகின்றார்.

என் இனிய நண்பன் அருணகிரிக்கும் இன்று அகவை அறுபது. அறுபதில் ஓய்வு இது அரச நியதி. அவர் ஓய்வு பெற்றாலும் அவரே சேவை எமது வட மாகாணத்தினுடைய கல்விப் புலத்துக்கு தொடர்ந்து கிடைக்கும், கிடைக்க வேண்டும் அதற்கு முடிப்பிள்ளையாரின் அருளும் அனுக்கிரகமும் அவருக்கு கிடைக்க வேண்டி ஓய்வுக் காலத்தில் எனது நண்பன் தனது மனைவி பிள்ளைகளுடன் நற் சுகத்துடன் மகிழ்வுற வாழ்ந்திட எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

நன்றி

என்றும் அன்புடன்
நண்பன்
**கணிதச்சுடர் சண் வாமதேவன்.**
ஓய்வு நிலை அதிபர்
யா/ கோண்டாவில்
இராம கிருஷ்ணா ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணி ஆழமான கல்விச் சிந்தனையாளன்



தீவகமைந்தன் திரு பொ.அருணகிரிநாதன் அவர்கள் 2016 ஜனவரி 31இல் அகவை அறுபது கண்டு மணிவிழாக் காணும் நிலையில் அவரது நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், கல்விப்பகுதியினர், சமூகஆர்வலர்கள் அனைவரும் இணைந்து அவருக்காக வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமையும் பூரிப்பும் அடைகின்றேன்.

விழா நாயகன் திரு பொ.அருணகிரிநாதன் அவர்களும் நானும் நட்புரிமையில் வெள்ளிவிழாவைக் கடந்தவர்கள். சேவையின் இறுதிக்காலத்தில் இருவருக்கும் ஒரு நெருங்கிய தொடர்புண்டு. நண்பன் திரு பொ.அருணகிரிநாதன் தீவகத்தில் பிறந்து தனது அரசசேவையின் இறுதிக்காலத்தை பண்ணைப்பாலம் கடந்து யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்தார். நான் எனது சேவைக்காலத்தின் இறுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து பண்ணைப்பாலம் கடந்து தீவகத்தில் சேவையை நிறைவு செய்தேன்.

இருவரும் நண்பர்களாக இருந்தாலும் தீவகத்திற்கு நான் சென்ற பின்பு தான் அவரது அதிபர் பணியைப்பற்றி என்னால் முழுமையாக அறியக்கூடியதாக இருந்தது. தீவகத்தின் முதன்மைப் பாடசாலைகளில் ஒன்றான வேலணை மத்திய கல்லூரியில் அவர் அதிபராக இருந்த காலம் வேலணையிலும், தீவகவலயத்திலும் இன்றும் பெருமையாகப் பேசப்படுகின்றது. கல்வி மற்றும் இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளில் இவரது அதிபர் சேவைக்காலம் சாதனைகள் நிரம்பிய காலமாகும். இவரது சேவைக்காலத்தில் வேலணை மத்திய கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்கள் இவரின் சேவையைப் பெருமைப்படுத்தி என்னுடன் பேசியிருக்கின்றார்கள். வேலணை மத்திய கல்லூரியின் முதல்தர முகாமையாளராக இவர் கடமையாற்றியிருக்கின்றார் என்பது எனது அசைக்க முடியாத எண்ணம்.

நண்பன் அருணகிரிநாதன் **ஆழமான கல்விச் சிந்தனையாளன்**. கல்விச் சிந்தனைகளை நுணுகி ஆராய்ந்து எமது மாணவர்களுக்குப் பொருத்தமானவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஆர்வம் கொண்டவர் அதில் வெற்றியும் கண்டவர். யாழ்ப்பாண வலயத்தில் அவர் கடமையாற்றியபோது பாடசாலைத் தரிசிப்புகளை மேற்கொண்டு அதிபர், ஆசிரியர்களை கல்வியின்பால் வலுவூட்டி மாணவர்களின் வெற்றிக்கு வித்திட்ட பெருமைக்குரியவர்.

கல்வித்துறையில் மட்டுமன்றி அறப்பணிகளிலும் பொதுப் பணிகளிலும் இன்றும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர். அரச சேவையில் ஓய்வு பெற்றாலும் கல்விப் பணியும், அறப்பணியும் அவருக்காகக் காத்திருக்கின்றன. எனவே ஓய்வு காலத்தில் மனைவி, பிள்ளைகளுடன் நிறைந்த தேகாரோக்கியத்தோடு நீண்ட காலம் வாழ்ந்து அவரை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பணிகளை நிறைவாக ஆற்ற இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**இ.குணநாதன்**
ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்
நீர்வேலி மத்தி, நீர்வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகத்திற்கு ஒரு முத்து



உயர்திரு பொன்னம்பலம் அருணகிரிநாதன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், முன்னாள் அதிபர், (வேலணை மத்திய கல்லூரி தலைவர் பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோயில்) (முன்னாள் தலைவர் தீவக அரிமாக் கழகம்) போன்ற உயர் பதவிகளை வகித்து அவர் பிறந்த கிராமத்திற்கும், நாட்டிற்கும் கலங்கரை விளக்காக உதித்து ஒளியூட்டிய பெருமகன். அவர்க்கு 60 வயதில் ஓய்வு வழங்கப்படுகிறது அரசாங்கத்தால். ஆனால் அவர் இறக்கும் தறுவாயில் கூட ஓய்வு பெறமாட்டார் என்றுதான் எனது எண்ணக்கருத்து. ஏனெனில் இவ்வுலகில் பிறந்து தனக்கென வாழாது பிறர்க்கென உதித்த உத்தமன் இவர். இப்படியான அன்பு உள்ளங்கள் கொண்டவர்களை நீடிய காலம் இப் புவியிலே ஆண்டவன் தனது வேலைகளுக்காக வைத்திருக்கின்றான். மானிடராகப் பிறந்த ஒருவருக்கு மிக முக்கியமானது தெய்வீகம், மற்றது கல்வி. இவை இரண்டும் எமது இரு கண்கள் போன்றன.

அந்த வகையில் அவர் வேலணை மத்திய கல்லூரியில் அதிபராக இருந்து எத்தனை எத்தனை மாணவர்களுக்கு கல்விச் செல்வத்தை அவர்களுடைய வாழ்வில் மெருகு ஊட்டியதை நற் சான்றோர் ஆக்கியதை அனைவரும் அறிவர். அதே நிலையில் வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையாரையும் சிறப்புடன் பேணி ஆலய தினசரி பூசைகள், விசேட பூசைகள், வருடாந்த உற்சவங்கள், திருப்பணிகள், அறநெறி வகுப்புக்கள், பண்ணிசை வகுப்புக்கள், திருமுறை வகுப்புக்கள், மகேஸ்வரபூசை, தாகசாந்தி நிலையங்கள் போன்ற உன்னதமான வழிமுறைகளை முன்னின்று நடத்திய, நடத்திக்கொண்டு இருக்கின்ற எல்லோராலும் போற்றக்கூடிய ஒருவர் என்றால் அது திரு அருணகிரிநாதன் ஐயா அவர்களையே சாரும். அவருடைய பணிகள் மேன்மேலும் தீவக மக்களுக்கும், யாழ் மாவட்ட மக்களுக்கும் பரவி பேரானந்தம் அளிக்க வேண்டுமென்று அவரது பாதங்களையும் வணங்கி அமைகின்றேன். இந்த அருமையான பொக்கிசத்தில் அடியேனுக்கும் இடம் தந்த அன்புள்ளங்களையும் வாழ்த்தி வணங்குகின்றேன்.

நன்றி. வணக்கம்.

இவ்வண்ணம்
**Lion.கு.கங்கைவேணியன் J.P**
(மாவட்டத் தலைவர் அரிமாக்கழகம் தீவகம்)
மனித உரிமைகள் ஆணைக்குழு
விசாரணை அலுவலர்– கொழும்பு மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்ததமும் தமிழ் போலத் தழைத்து வாழ்க !



எங்கள் அன்னை வேலணை
மத்திய கல்லூரி பெற்றெடுத்த
பிள்ளைகளோ இலட்ச இலட்சம்

இங்கு யார் தங்களைப்போல்
தமை முழுதாய் தாய்ப்பணிக்கே
தந்தவர்?

வந்து வந்து போனவர்கள்
எத்தனை பேர்
வாழ்வெல்லாம் அர்ப்பணித்து
சந்ததமும் தாய்ப்பணிக்கே
உழைத்தவர் யார் எங்கள்
அருணகிரிநாதனைப் போல்!

அன்று சிறு மாணவனாய்
பள்ளி தனில் ஆரம்பித்து
இன்றிளமான் காளையரராய்
கச்சிதமாம் சாதனைகள் கண்டதாரோ?

வென்று வந்து கல்லூரி அதிபராகி
வெற்றி பல கண்டு நின்றீர்
நின்றுழைத்தீர் கல்லூரி வளர்ச்சி காண
நிமிர் நடையில் பணியிதனைத்
தலையில் தாங்கி.
ஊனுறக்கம் அற்றுழைத்தீர் கல்லூரி
உருக்குலைய விடமாட்டேன் என்றுரைத்து
பேணி அதைப் பொறுப்பேற்றுப்

பெரு நிலைக்கு அதி விரைவாய்
உயர்த்தி விட்டீர்
தூணெனவே கல்லூரிச் சுடரேந்தி
தோள் சாய்த்த செம்மல்
அருணகிரிநாதன் வாழ்க.

'அருணகிரி' என்றிட்டார் அதிபர் கூட்டம்
ஆசான்கள் உரிமை யோடு 'சேர்' போட்டார்
எம்மதிபர் எனமகிழ்வர் சிற்றூழியர்கள்
என்றென்றும் பதினாறு வயதினராய்
எழிலோடு இயங்கிவரும்
எம் அதிபர் வாழ்க !

கல்லூரி அன்னை
ஏன் மகிழாள்?
ஏன் உமக்கு விழா எடுக்காள்?
முந்தி வந்து உம் மாணாக்கர்
உறவுகளோடு மூவுலகம்
ஏன் உம்மை வாழ்த்திடாது
வந்தனைகள் வாழ்த் தொலிகள்
மலர் மாலை ஏன் உமக்கு
வந்து குவியாது?
சந்ததமும் தமிழ் போல தக்காராய்
அருணகிரிநாதன் அவனியிலே
தழைத்து வாழ்க ! வாழ்க !

– ஆனந்தி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவத்திற்கு தனித்துவமான அடையாளம்

சுற்றிவரக் கடல் முத்தமிடும் சப்த தீவுகளில் பொன் கொழிக்கும் பூமியாம் வேலணைப் பூமியிலே அருணாசலம் பொன்னம்பலம்– பொன் னம்பலம்–அன்னலட்சுமி தம்பதியினருக்கு முடிப்பிள்ளையார் திருவருளால் 31–01–1956 ஆம் ஆண்டு வேலணை மேற்கெனும் பதி விளங்கச் செயலாற்றும் திறல் வீரனாகப் பிறந்து பெருமை சேர்த்தார் திரு.பொன் அருண கிரிநாதன்.

இளமையிலே கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கிய திரு பொன்னம்பலம் அருண கிரிநாதன் அதே இடத்தைச் சேர்ந்த யோகேஸ்வரியைக் கரம்பிடித்து இல்வாழ்க்கையென்றால் இப்படித்தான் அமைய வேண்டுமென வாழ்ந்து காட்டியவர். இவர்களின் இல்லறம் எனும் நல் லறத்தின் பயனாக நிருஷா, அருண்ராஜ், கார்த்திகா ஆகிய பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தார்.

திருவாளர் பொன்னம்பலம் அருணகிரிநாதன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை யா/ வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்தில் (அப்போது இராசா உபாத்தியார் பள்ளிக்கூடம் என அழைக்கப்பட்ட) கற்றுத் தேறினார்.

தனது சிரேஷ்ட கல்வியினை வேலணை மத் திய கல்லூரியிலே கற்று அங்கிருந்து உயர் கல்வியில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி 1978-1981 ஆம் ஆண்டு காலப்பகுதி யில் **B.A** சிறப்புப் பட்டத்தினைப் பெற்றுப் பட்டதாரியாக வெளியேறியதுடன் 1990/1991 ஆம் ஆண்டில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை யும், **(Dip .in.Edu)** **2002 /2003** ஆண்டு காலப் பகுதியில் கல்வி முதுமாணி **(M.Ed)** கற்கை நெறியினையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்தில் துறைபோகக் கற்றுப் பட்டங்களைப் பெற்றுக் கொண்டவர்.

இதன் பயனாக ஒரு சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு பாடசாலை அதிபர்களுக்கான கல்வி முகாமைத்துவ பயிற்சி நெறி

- Open university (Malaysia- Kulalampur 2003)
- Advanced Leadership Development Program in Education Management (Mahidol university Thailand-2003 )

போன்றவற்றில் பங்கு பெறும் வாய்ப்பினையும் பெற்றுக் கொண்டார். ஒரு சிறந்த பாடசாலை அதிபருக்குரிய அத்தனை தகுதிகளையும் தன தாக்கிக்கொண்டவர். மேலும் 01.06.1996 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் அதிபர் தரம் II இனையும் 01.06.1996 திறமை சேவை மூப்பு அடிப்படையில் அதிபர் தரம் I இனையும் பெற்றுக்கொண்டதுடன் சேவை மூப்பு பரீட்சை (SLEAS III) மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவைத் தரத்தினை 11.06.2011 ஆம் ஆண்டில் பெற்றுத் தமது பதவியிலே படிப் படியான உயர்வினைக் கண்டு மகிழ்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவரது சேவை

12.03.1984 -13.08.1989 வரை நு/சென் ஜோசப் கல்லூரி மஸ்கெலியாவில் ஆரம்பித்தது. இங்கு இவரது பணி ஆசிரியராகவும், பின் பிரதி அதிபராகவும் பணியாற்றினார்.

14.08.1989-24.11.1991 வரை யா/நாரந்தனை கணேசா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி அங்குள்ள மக்கள், மாணவர் மனங் களில் இடம்பிடித்த பெருமை இவருக் குண்டு. 25.11.1991–14.07.2002 வரை யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையேற்று அப்போதிருந்த சூழ்நிலையில் மாணவர்களது தேவையறிந்து பிரதேசத்தின் நிலையறிந்து அயராது உழைத் தமை இன்றும் பலர் மனங்களில் நிலைத்து நிற்பது மறக்க முடியாத உண்மை.

15.07.2002-09.03.2011 வரை யா/வேலணை மத்திய கல்லூரியின் அதிபரான போது மக்கள் அவரை அக மகிழ்ந்து வரவேற்றனர். இவரது இந்தக் காலம் மத்திய கல்லூரி வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்று.

அதிபராகத் திரு.அருணகிரிநாதன் பொறுப் பேற்ற வேளை கல்லூரிச் சூழலும், மக்கள் மனங்களும் நசுங்கிச் சிதைந்து ஆதரவற்று வாழ்ந்த சோகம் இன்றும் என் கண்முன் நிழலாடுகின்றது.

அதிபர் அருணகிரிநாதனின் அயராத உழைப்பும், வேலணை மண்ணின் மேல் கொண்ட பற்றும், அங்கிருந்த மக்கள் மேல் கொண்ட பாசமும், எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் தற்துணிவுமே அவரது காலத்தில் பாடசாலை கல்வியிலும் ஏனைய விடயங்களிலும் ஒரு உயர் நிலையை எட்ட உதவியது எனலாம்.

தன்னலம் கருதாத அர்ப்பணிப்புடன் கூடிய சிறந்த முகாமையாளராக விளங்கினார் என்பதற்கு பிள்ளைகளின் கல்வி அடைவும் அவர்களது எதிர்காலமுமே இலட்சியமாக கொண்டு தனது கருமங்களை ஆற்றியவர். அதற்கு இன்றும் அவர் பின்னால் அணி திரளும் மாணவர் படையே சான்றாகும்.

திரு அருணகிரிநாதன் அதிபராக இருந்த காலத்திலே பணியாற்றக் கிடைத்தமையையிட்டு இன்று பெருமிதம் கொள்கின்றோம் என இடமாற்றம் பெற்றுச் சென்ற பல ஆசிரியர்கள் கூறும் வார்த்தை கூட அவர் தனது கல்லூரிக்காகவும் ஆசிரிய வாண்மைக்காகவும் பாடுபட்டார் என்பதையே பறைசாற்றுகின்ற தல்லவா?

வகுப்பறைகளை மேற்பார்வை செய்வது, ஆலய பரிபாலனம், விளையாட்டுத்திடலை உரிய வகையில் பாவிப்பது, பராமரிப்பது, நூலக செயற்பாடு, மதிய உணவு, குடிநீர், சுகாதாரசேவை, நலன்புரி வசதி, விடுதிகள் புனரமைப்பு, காணி கொள்வனவு, பாடசாலை பஸ் வண்டி, மூன்று சக்கர வண்டி, ஆய்வு கூடங்கள் என்று பாடசாலையின் பல்வேறு படி நிலைகளிலும் வளர்ச்சியையும் விருத்தியையும் ஏற்படுத்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள், மாணவர். கல்விசாரா ஊழி யர்கள், பெற்றோர்கள் ஆகியோருடன் பேத மற்ற உறவினைப் பேணியவர். நேர்மையும் கடமையும் கண்ணாய் எண்ணி வாழ்ந்தவர்.

பாடசாலை விழாக்களைப் ஒழுங்கமைப்பதில் வல்லவர். "அடிக்கிற கை தான் அணைக்கும்" என்பதை உண்மையாக்கும் விதத்தில் காலை வேளை தண்டனை பெற்ற மாணவர் மாலை யில் அவருக்கு தோள் கொடுக்கும் நிலை அவரது வசீகரத்தை காட்டி நிற்கின்றது.

எது எப்படி இருப்பினும் தனது கல்லூரிக்கும் தனது மண்ணுக்கும் தன்னை நாடி வந்த மாணவர் குழாத்துக்கும் நல்லதையே செய் தார். பாரபட்சம், இனமதபேதம் காட்டாது எல் லோரும் ஒன்றே எனும் மனப்பாங்கை வளர்த் தது மட்டுமன்றி நூற்றுக்கணக்கான மாண வர்களை பல்வேறு துறைகளுக்கும் பல்கலைக் கழகம் அனுப்பிய பெருமை அதிபர் அருணகிரி நாதனையே சாரும். இதை யாரும் மறைக்கவோ மறுப்பதற்கோ முடியாது. கல்விப்புலம் மட்டுமன்றி இணைப் பாடவிதான செயற்பாடு களிலும் கூட பல வெற்றிகளைக் குவித்ததும் இவரது காலப்பகுதியிலே தான் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

வேலணை மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அதிபரின் சிறப்பான செயலும், அவரது திறமையும் அவரைப் 10.03.2011 இல் தீவகக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக்கி (கல்வி முகா மைத்துவம்) நின்றது. அங்கும் அதே பற்றும், அர்ப்பணிப்பும் நிறைந்த பணியை ஆற்றிக் கொண்டிருந்த வேளை 15.01.2013 ஆம் காலப்பகுதியில் யாழ் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் கிடைக்கப் பெற்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) பத வியை அதே ஆற்றலும் துணிவும் கொண்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

31.01.2016 ஆம் ஆண்டு அகவை 60 லே பணி நிறைவு கண்டாலும் இன்னும் பல சேவைகள் அவரை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. அவர் தினம் வணங்கும் முடிப்பிள்ளை யார் அவரை நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வமும். நோயற்ற வாழ்வும் தந்து வாழ வைக்கட்டும்.

## அவரது பொதுப்பணிகள்

24.12.2003 லே சமாதான நீதவானாக (அகில இலங்கை உறுதியெடுத்துப் பல சமூக நலன்களுக்காக உழைத்தவர். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திலே சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளராகவும், வடமாகாண அதிபர்கள் சங்கத்திலே முன்னாள் தீவக இணைப்பாளராகவும், யாழ் மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் முன்னாள் பொருளாளராகவும் வேலணை மேற்கு பெரியபுலம் மஹா கணபதிப்பிள்ளையார் கோயில் பரிபாலன சபைத் தலைவராகவும், தீவக அரிமாக் கழக உறுப்பினராகவும், வேலணை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க முன்னாள் தலைவராகவும், வடமாகாண பள் ளிக் கல்வியியலாளர் ஒன்றிய பொருளாளராகவும் இருந்து சமூக நலனுக்காகப் பாடுபட்டவர் திருவாளர் பொ.அருணகிரிநாதன் அவர்கள்.

**"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழால்**
**பொன்றாது நிற்ப தென்று இல்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதல் நியமனம் பாடசாலையான மஸ்கெலிய சென்.ஜோசப் கல்லூரியின் பிரதி அதிபராக



யா/ வேலணை மத்திய கல்லூரியின் அதிபராக



யா/ வேலணை சைவபிரகாச வித்தியாலய அதிபராக



யா/ வேலணை கல்லூரியின் விளையாட்டு விழாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் வாக்கிற்கிணங்க அறிவுலகில் புகழ் பரப்பிக் கொண்டிருக்கும் எங்கள் அன்புக்குரிய பொன்.அருணகிரிநாதன் அவர்கள் நல்ல தொரு குடும்பத் தலைவனாகவும், நல்ல தந்தை யாகவும், மிகச்சிறந்த ஆசானாகவும், பலர் போற்றும் அதிபராகவும், பிரதிக் கல்விப் பணிப் பாளராகவும், நண்பனாகவும், உறவாகவும் தனது பாத்திரத்தை உரிய முறையில் நிறை வேற்றி அனைவராலும் போற்றப்படுபவர்.

அவரது வாழ்வில் இன்று எடுக்கப்படும் இந்த மணிவிழா அவர் ஓய்வு பெறுகிறார் என் பதைச் சுட்டாது இன்றும் பல சேவைகளை, பணியை ஆற்ற அவருக்கு நாம் விடுக்கும் அழைப்பாக அமைய வேண்டும்.

எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நல் வாழ்வையும், நல்லருளையும் வழங்கட்டும்.

**அதிபருடன் பணியாற்றிய**
**ஆசிரியர்களும்,**
**கல்விசாரா ஆளணியினரும்**
வேலணை மத்திய கல்லூரி
(15.09.207 – 09.03.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழமையுடன் கூடிய வாழ்த்துக்கள்



காலங்கள் நகர்ந்து கொண்டேயிருக்கும் இது உலகின் நியதி வாழ்க்கைக் கோலங்களும் மாறிக்கொண்டே இருக்கும். வேலணை மத்திய கல்லூரித் தாய் எங்களில் பலருக்கு வளர்ப்புத்தாய். இந்த உலகில் எங்களுக்கு நல்ல முகவரிகளையும் அடையாளங்களையும் தேடித் தந்தவள். கல்லூரியில் எங்களை வளர்த்த அதிபர்களையும், ஆசிரியர்களையும் எங்கள் இதயங்களில் வைத்துப் பூசிக்கின்றோம்.

1975 இல் கல்லூரியில் களமாடிய காலங்கள் ஊரின் சந்து பொந்துகளில் சைக்கிள் வண்டியில் உலாவந்த காலங்கள் காலநேரமின்றி நேரம் செலவு செய்த நாட்கள், வங்களாவடியின் புளியமரம், இராசையா வீதியின் சந்தி, முடிப்பிள்ளையார் கோயில் தெற்கு வாசல், சாட்டிக் கடற்கரையின் குளிப்பு, கோயில் திருவிழாக்கள் எத்தனை என்று சொல்வது பள்ளி வாழ்க்கை மட்டுமன்றி பல்கலைக்கழக வாழ்க்கையும் எமக்கு இனிமையானது.

பள்ளி வாழ்க்கையில் நட்பாகி வாழ்வில் உறவாகி இன்னமும் தொடரும் உறவுக்கு வழிகாட்டிய இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். எங்களுக்கு 60 ஆகிவிட்டதா? நம்ப முடியவில்லை ஆனாலும் உண்மை இன்னமும் எங்கள் மனங்கள் இளமையாகவே இருக்கின்றன. வாழ்விடங்கள் மாறினாலும் எங்கள் நட்பு இன்னமும் தொடர்கிறது. நல்ல நண்பர்கள் கிடைப்பது நாம் செய்த தவத்தின் பேறாகும்.

அருணியின் 60 ஆவது அகவை மணிவிழாவில் நீண்டகாலம் நோய் நொடியின்றி நலமாக , வளமாக வாழ தோழமையுடன் கூடிய வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ச்சியடைகிறேன்.

**செல்வம்**

கனடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகத் துளிகள்...

அயலாராய்ப் பிறந்து ஓடிப் பிடித்து விளையாடி
ஆலமர நிழலில் கூடிக் கதை பல பேசி,
இயல்பாய்ப் பழகி ஆத்மார்த்த நண்பர்களாகி
ஈன்றவர் உவந்திட நற்பெயர் எடுத்தோம்.

உலகை வெல்ல உறுதுணையாயிருந்து
ஊழியின் வலிமையால் வேற்றூர் புகுந்து
எண்ணும் எழுத்தும் எடுத்தியம்பிய வழியில்
ஏர் பிடித்த நம்முன்னோர் தொழிலை மறந்தோம்

ஐம்பதுகளில் வந்தும் நட்பை மறவாமல்
ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்து
ஓரோர் காரணம் சாட்டாக வைத்து
ஔடதமாக மனக் காயங்களாற்றினோம்

அஃது இனிதிருக்க அகதிகளாகி
அங்குமிங்கும் இருந்து வரு நாளில்
ஆண்டவன் அருளால் ஆலயப் பணியில்
ஆண்டாண்டு தோறும் அறப்பணி செய்தோம்

இல்வாழ்வில் இணைந்து இன்புற்றிருந்து
இகபர வாழ்விற்கு செல்வம் சேர்த்து
ஈழத்தின் அந்தமதில் நாமும் ......
ஈடில்லா இன்பமதில் துய்த்திருந்தோம்

எண்ணமதில் என்றும் நட்புடன் நாமே
எது வந்த போதும் எதிர்வு கொண்டு
ஏற்றம் கண்டு உளம் மிக மகிழ்ந்து
ஏதலிப்பின்றி உனை பாராட்டுகின்றோம்

கல்லூரி அன்னையின் கதகத அணைப்பில்
கரமதைக் கோர்த்தோம் அன்றே நாமே
கரப்பந்தாட்டமும் உதைப்பந்தாட்டமும்
காடு கரம்பையெல்லாம் அன்று ஆடினோம்

அருணி இன்று அறுபதை எட்டுவதால்
அரங்கேறும் இம் மணிவிழாத் தன்னில்
ஆதாரமான உம் நண்பர்கள் கூடி
ஆனந்தமாய் உமை வாழ்த்துகின்றோம்.


**வாழ்க பல்லாண்டு !**

**கொழும்பு வாழ்**
**நண்பர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம் பணி தொடர உரிமையுடன் வாழ்த்துகின்றேன்.



தீவகப் பிரதேசத்தில் புகழ்பூத்த அதிபராக கடமையாற்றி பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களில் கடமையாற்றி 30-01-2016 அகவை அறுபதை பூர்த்தி செய்து கல்விப் பணியின் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் உயர்திரு பொன்னம்பலம் அருணகிரிநாதன் அவர்களுக்கு வேலணை மேற்கு ஊர் மக்களால் மணிவிழாவை ஏற்பாடு செய்திருப்பது பாராட்டிற்குரியது. இவ் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

வேலணை மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்திலும், சிரேஷ்ட கல்வியை வேலணை மத்திய கல்லூரியிலும் கற்று யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி சிறப்புப் பட்டதாரியானார். பின்னர் 1984 ஆம் ஆண்டு நு/சென் ஜோசப் கல்லூரி மஸ்கெலியாவில் ஆசிரியராகவும் பின்னர் குறுகிய காலம் பிரதி அதிபராகவும் கடமையாற்றினார். பின்னர் யாழ்ப்பாணம் இடமாற்றம் பெற்று வந்து 1989 ஆம் ஆண்டு யா/நாரந்தனை கணேச வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி இலங்கை அதிபர் சேவைப் போட்டிப்பரீட்சையில் சித்திபெற்று 1991 ஆம் ஆண்டு தொடக்கம் புகழ்பூத்த சைவப் பெரியார்களை உருவாக்கிய யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றினார். இக்காலப்பகுதியில் பல்வேறு இடப்பெயர்வுகளுக்கு மத்தியில் இப்பாடசாலையை வெவ்வேறு இடங்களில் நடத்தி பின்னர் மக்கள் மீளக் குடியேறிய போது பாடசாலையை மீளவும் சொந்த இடத்தில் இயங்க வழி சமைத்தார். அக்காலகட்டத்தில் திறமை சேவை மூப்பு அடிப்படையில் அதிபர் சேவை தரம் I இற்கு தெரிவானார். பின்னர் 2002 ஆம் ஆண்டு தீவகத்தின் முதல்தர பாடசாலையாகிய யா/வேலணை மத்திய கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றார். அக்காலப்பகுதியில் அக்கல்லூரியானது இடப்பெயர்வுக்குப் பின்னர் பௌதீக வளங்கள் எல்லாம் அழிந்த நிலையில் காணப்பட்டது. அக்கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். அவருடைய காலப்பகுதியில் தான் பாடசாலைக்கான சுற்றுமதில் கட்டப்பட்டது. பிரதான மண்டபம் புனருத்தாரனம் செய்யப்பட்டது. அலுவலக அறை எல்லோராலும் பாராட்டத்தக்கதாக அமைக்கப்பட்டது. விளையாட்டு மைதானம் விஸ்தீரணம் செய்யப்பட்டு புனருத்தாரனம் செய்யப்பட்டது. அதுமட்டுமல்லாமல் மாணவர் ஆண், பெண் விடுதி திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு சுற்று வேலி அமைக்கப்பட்டது. இவை மட்டுமல்லாமல் பல்வேறுபட்ட செயற்பாடுகள் அவரின் முயற்சியால் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டது. அது மட்டுமல்லாமல் மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டு சிறந்த பெறுபேற்றை பெற வழிசமைத்தார்.

2011 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி பெற்று தீவகக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி தீவக வலயத்தின் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். பின்னர் 2013 ஆம் ஆண்டு யாழ் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக மூன்று வருடங்கள் கடமையாற்றி யாழ் கல்வி வலயப் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். அக்காலப்பகுதியில் வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபராக கடமையாற்றிய எனக்கும் அவருடைய வழிகாட்டல் உதவியாக இருந்தது.

திரு அருணகிரிநாதன் Sir அவர்களும் நானும் வேலணை மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட அயல் வீட்டுக்காரர். இவருடைய பிறந்த திகதி 31-01 ஒன்றாக பிறந்தநாள் அமைந்துள்ளது. இதனாலேயோ என்னவோ இருவரும் பல பணிகளில் ஒன்றாகப் பணியாற்றியுள்ளோம். வேலணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு முடிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவராக திரு அருணகிரிநாதன் Sir அவர்களும் பொருளாளராக நானும் நீண்ட காலம் பணியாற்றியுள்ளோம். இருவரும் தீவக அரிமாக் கழகத்தின் உறுப்பினர்களாக இருந்து தலைவராகவும் பணியாற்றியுள்ளோம். இருவருக்கும் அகில இலங்கை சமாதான நீதவான் பதவி நீதி அமைச்சினால் ஒரே காலப்பகுதியில் கிடைக்கப்பெற்று ஒரே நாளில் இருவரும் சத்தியப்பிரமாணம் செய்து கடமையேற்றோம். இவை மட்டுமல்லாமல் பல்வேறுபட்ட பொதுப் பணிகளிலும் இவர் தன்னை ஈடுபடுத்தி செயற்பட்டார்.

தாங்கள் கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் தங்கள் முன் சமூகப் பணிகள் பல இன்னும் காத்திருக்கின்றன. சமூகப் பணிகள் உயர்ந்து மிளிர ஓய்வுக்காலம் பயன்படவேண்டும். ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல வேலணை மேற்கு முடிப்பிள்ளையாரை வணங்கி வாழ்த்துகின்றேன்.

**திரு.முத்துத்தம்பி மகேந்திரன்**


ஓய்வு நிலை அதிபர்

வைத்தீஸ்வராக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியே கண்ணெனக் கருதுபவர்



கல்வியே வளமான வாழ்வுக்குரிய ஒரே வழி. "அறிவுடையார் எல்லாம் உடையார் என்பர் எனவேதான் திருவள்ளுவர் கேடில் விழுச்செல்வம் கல்வி" என்றார் கல்வி வழங்குவோர் வணக்கத்திற்குரியவராக மதிக்கப்படுவர். ஒரு சமூக முன்னேற்றத்திற்கு ஆசிரியர் பங்கும் இன்றியமையாதவை. இதனையே ஆசிரியர் எவ்வழியோ சமூகம் அவ்வழி என்ற பொன்மொழி புலப்படுத்துகின்றது இதனடிப்படையில் தனது வாழ்வில் மணிவிழாக் காணும் அருணகிரிநாதன் அவர்களுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவருடன் ஏறத்தாழ முப்பது வருடங்களுக்கு மேலாகப் பழகியுள்ளேன். இவர் நல்ல ஆசிரியராகவும் ஆளுமைமிக்க அதிபராகவும் சிறந்த கல்வி நிர்வாக அதிகாரியாகவும் கடமையாற்றிய வேளையில் தீவக மக்களுக்கு கல்வி மூலம் சிறந்த வழிகாட்டலை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டவர். தீவகத்தில் குறிப்பாக 1990ம் ஆண்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் மக்கள் யாவரும் இடம்பெயர்ந்த வேளையில் கல்வி வளர்ச்சியானது தடைப்படக்கூடாது என்ற எண்ணத்துடன் இடம்பெயர்ந்த அனைத்துப் பாடசாலைகளையும் யாழ்ப்பாணத்தில் இயங்குவதற்காக முழு அர்ப்பணிப்புடன் இயங்கியவர். மீண்டும் 1996ம் ஆண்டு பிற்பகுதியில் மீண்டும் தீவக மக்கள் சொந்த இடங்களுக்கு செல்கின்ற வேளையில் யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தை யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் சேர்த்து நடாத்திய பெருமையுண்டு. பின்னர் நாட்டு நிலை ஓரளவுக்கு சீரடைந்தபோது யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தை வேலணையில் சொந்த இடத்தில் நடாத்தினார். பின்பு யா/வேலணை மத்திய கல்லூரி அதிபராக கடமையாற்றிய காலத்தில் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டபோதும் மனந்தளராது பாடசாலை வளர்ச்சியுயையும் நாட்டுப்பற்றையும் அடிப்படையாக வைத்து அப்பாடசாலையை வளர்த்து அது இன்று தீவகத்தின் பெருமைக்குரிய பாடசாலையாக மிளிரச்செய்த பெருமை இவரையே சாரும்.

அத்துடன் இவர் ஓர் தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்தவர். அதன் அடிப்படையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தீவகத் தலைவராகவும், தாய்ச் சங்கத்தின் துணைப் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றினார். அப்பொழுது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு இடர்கள் ஏற்படும்போது தனது ஆளுமையையும், மதிநுட்பத்தையும் பாவித்து அவற்றிற்கான தீர்வை இலகுவாகப் பெற்றுக் கொடுத்தவர். இவற்றுடன் நின்றுவிடாது "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற குறிக்கோளுடன் வேலணைப் பிரதேசத்தில் வாழ்ந்தவர். இதன்மூலம் பல்வேறு சங்கங்களிலும், ஆலயங்களிலும் முக்கிய பதவிகளை வகித்து அதன் மூலம் மக்கள் மத்தியில் நன்மதிப்பையும் பெற்றார். இதனால் இவருக்கு அகில இலங்கை சமாதான நீதவான் பதவியும் கிடைத்தது. மேலும் தீவகத்தில் ஏதாவது சமூக வளர்ச்சிக்காக எடுக்கப்படும் விழாக்களை முன்னின்று நடாத்தி மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர்.

அந்த வகையில் பொ.அருணகிரிநாதன் அவர்களின் மணிவிழா சிறப்புற முன்னெடுக்கும் மணி விழாச் சபையினரை பாராட்டுவதோடு அவருடைய வாழ்வு வளம்பெற வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.


**S.K.சண்முகலிங்கம் J.P**

ஓய்வுநிலை அதிபர்

தவிசாளர், வேலணை பிரதேச மத்தியஸ்தர் சபை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமண பந்தத்தில் மனைவி யோகேஸ்வரியுடன் விழாநாயகன்



விழா நாயகரின் மாமன் மாமியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிவுடையான் நின்நாமம் துலங்கட்டும் வையகமே



பொங்கு தமிழும் பொலிந்தார் பரிக்கும்
சங்கு சிலம்ப சமுத்திரமே புடைசூழ
தங்கத் திருத்துறையும் சார்ந்துமறை சைவநெறி
பொங்கு விளைபூமி பூதலத்து வேலணையூர்
சிந்தை பெரியோன் செய்தவமும் நல்லறமும்
சொந்த முறநல் தூய பொன்னம் பலமவனும்
பந்தமுறக் கைப்பிடித்த அன்னலட் சுமிபயனால்
கந்தவன் பெயரில் அருணகிரி நாதனவன்
வந்தபெரும் பெருமையினை வையகத்தே கண்ணுற்றோம்

ஐம்பத்து ஆறுதையில் அகம்மகிழ வந்திட்ட
நாம்பெற்ற பாக்கியத்தின் நல்லுதய மிதுவன்றோ
தம்பதியில் தன்பற்றில் தளராது வளர்ந்தெழுந்து
இம்மண்ணின் துயர்கண்டு துவண்டெழுந்த சிந்தனையான்
பண்பட்ட வாழ்வினினால் பற்பலவும் கற்றேகி
இன்புற்று பல்கலையில் இயன்றேநல் பட்டமுடன்
எண்ணற்ற தொலைதூரம் மஸ்கெலியா ஆசிரியர்
கண்நிறைந்த சேவை காரியங்கள் ஆற்றிநிதம்
தன்பற்றி லில்லறத்தில் யோகேசு வரியினால்
நன்மக்கள் பெற்று நல்லறமும் கல்வியிட்டு
பின்னே யிருந்தோர் பெயர் விளங்க ஊக்குவித்து
தன்னையுருக்கி தளர்வில்லா சேவை செய்தீர்

பட்டப்பின் கல்விப் பட்டம் பெற்றிட்டீர்
இட்டமுடன் கல்வி முதுமானி நெறியுரைத்தீர்
திட்டமுடன் முகாமை சிறப்பான பயிற்சி பெற்றீர்
கட்டமிட்டுத் திறந்த பல்கலையில் பயிற்சியில் பெற்றீர்
சிட்டுப்போல் தாய்வானில் தலைமையெது உணர்ந்திட்டீர்

அதிபர் தரம்பெற்று ஆளுகையுள் சைவப்
பிரகாசம் காத்த பெருவள்ளல் நீயன்றோ
வேலணை மத்தியை வென்றெடுத்த கோமகனாய்
தான்கற்ற பள்ளிதனை தன்மனதால் நிறைத்திட்டாய்
தீவகத்தே நின்று பதவி உயர்வதனால்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் பணிநல்கி
யாழ்வலயம் சேர்ந்தீர் யாவருக்கும் அணியானீர்
ஆற்றல் விழுமியங்கள் அத்தனையும் வழிகாட்டி
சூக்குமங்கள் சுபீட்சங்கள் அனுபவத்தால் குழைத்தளித்து
யார்க்கும் நல்வழியில் நலம்காட்டி யோய்வானீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கிக் கிடக்கும் சிந்தனையின் கருவூலம்
ஆர்க்கும்  கிடைக்கா அற்புதத்தின் விளைபுலமே
நோக்கும் முகாமைக்கு நுண்விருந்துச் சாதனமாய்
பார்க்கும் எமக்கின்று பக்கபல மிழந்திட்டோம்
மணிவிழா நாயகனாய் மகிந்தொளிரும் மாசிலனே
துணிவுடையான் நின்நாமம் துலங்கட்டும் வையகமே
கனிவான அனுபவங்கள் கரையின்றி விரவிவர
இனிதான பணிதொடர்ந்து இம்மண்ணில் வளமாவீர்
நிறைவான வாழ்வுநீடு நிலைத்தென்றும் நீடுபுகழ்
செறிவாக மலரநிதம் சிந்தையினால் வாழ்த்துகின்றேன்.

அன்புநண்பன்,

**திரு.வே.ஞானகாந்தன்**

அதிபர் ,

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன் பணிகளால் தன்னை என்றும் நினைத்திட வைத்தவர்



ஆளுமைத்திறன் + தலைமைத்துவப் பண்புகள் + மனிதநேயம் = அதிபர் பொ.அருணகிரிநாதன் சேர்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி அரச சேவையில் இருந்து 31.01.2016 இல் ஓய்வு பெறவுள்ள எனது அன்புக்கும், மதிப்புக்கும் உரிய பொன்னம்பலம் அருணகிரிநாதன் (அருணகிரி) அவர்களின் சேவையை பாராட்டி கல்விச் சமூகத்தினால் எடுக்கப்படவுள்ள பணி நிறைவு நயப்பு விழா தொடர்பான 'அருணோதயம்' மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அருணகிரி Sirம் நானும் சமகாலத்தில் வேலணை மத்திய கல்லூரியில் 2001 தொடக்கம் 2008 வரையான காலப்பகுதியில் அவர் அதிபராகவும் நான் அவருக்கு பிரதி அதிபராகவும் கடமையாற்றியிருந்தோம். இக்காலப்பகுதியில் இவரிடமிருந்து நானும் என்னுடன் கடமையாற்றிய ஆசிரியர்களும் ஆளுமைத்திறன்கள், தலைமைத்துவப் பண்புகள், மனிதநேயம் எனப் பல உயர்ந்த பண்புகளை கற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. அன்று பலரும் கூறுவார்கள் அருணகிரி Sirக்கு கீழ் கடமையாற்றும் எவருக்கும் எந்த அதிபரின் கீழும் எந்த குழப்பமும் இன்றி எந்த சவால்களையும் வெற்றி காண்டு கடமையாற்றும் ஆற்றல் உள்ளவர்களாக இருப்பார்கள் என கூறியதை நன்கு அறிவேன். அது இன்று எனது தொழில் வாழ்வில் பல விடயங்களை இலகுவாகக் கையாண்டு வெற்றிகொள்ள பேருதவியாக இருப்பதையிட்டு அவருடன் கடமையாற்றிய காலத்தினை நினைத்து மன நிறைவு அடைகின்றேன்.

அன்று தீவகத்தில் நாம் சேவையாற்றிய காலம் மிகவும் கடுமையானது. வேலணையில் பிரிந்திருந்த சமூகத்தினை அணி திரட்டி கல்வி அடைவிலும், இணைப்பாட விதான செயற்பாட்டிலும் பல முன்னேற்றகரமான பெறுபேறுகளை பெற்ற காலம்.

இக்காலப்பகுதியில் தீவக கல்வி வலயப் பாடசாலையின் விளையாட்டுத் துறையில் யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு கடுமையான சவால் விடும் பாடசாலைகளில் ஒன்றாக வளர்ந்து உயர்ந்து நின்றதை பலரும் அறிவார்கள். இதற்கு சான்றாக இப்பாடசாலையின் உதைபந்தாட்ட அணி வடக்கு, கிழக்கு மாகாண பாடசாலைப் போட்டியில் யாழ் மாவட்டம் சார்பாக பங்குபற்றி இருந்தமையை குறிப்பிடலாம். அன்று யாழ் மாவட்டத்தில் புகழ் பெற்ற பல வீரர்கள் இப்பாடசாலையை பிரதிநிதித்துவப் படுத்தியமையையும் இதற்காக உழைத்த ஆசிரியர்களும் நினைவு கூரத்தக்கவர்களே.

வேலணை பிரதேசத்திலேயே வாழ்ந்து வந்த மக்களது பிள்ளைகளே கல்வி கற்றார்கள். இவர்களது கல்வி முன்னேற்றத்துக்காக இப்பாடசாலையில் கடமையாற்றியவர்கள் பகல் இரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராது உழைத்ததை இச்சமூகம் நன்கு அறியும். கல்வியில் பின்தங்கியிருந்த வேலணை துறையூர் சமூகத்தின் பிள்ளைகள் மத்தியில் சமூக மறுமலர்ச்சி ஏற்பட்ட காலம் எனக் குறிப்பிடலாம். இன்று அச்சமூகத்தில் பலர் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாக உள்ளார்கள். இதற்கெல்லாம் அடித்தளம் இட்ட பெருமை அதிபர் அருணகிரி Sirரையும், அவருடன் இணைந்து பணியாற்றியவர்களையும் குறிப்பாக குறிப்பிடலாம்.

வேலணை மத்திய கல்லூரி வரலாற்றில் அவருக்கென்று தனியிடமுண்டு. அதற்குச் சான்றாக பல பழைய மாணவர்கள் அணி திரண்டு அவரது பணி நிறைவு நயப்பு விழாவினை தாங்களாகவே முன்வந்து செய்வதையிட்டு மன நிறைவு அடைகின்றேன்.

தனது அரச பணியில் இறுதிக் காலப்பகுதியில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வடபுல கல்விப் புலத்தில் ஆளுமை மிக்க அதிகாரியாக இருந்து பணி நிறைவடையும் இவரது பணி நிறைவடைந்துவிட்டது என ஓய்ந்து விடாமல் இன்னமும் எமது சமூகத்துக்கு நிறையவே பணியாற்றி உழைக்க வேண்டியுள்ளது. இதற்காக நாம் இணைந்து பணியாற்ற வேண்டியது காலத்தின் தேவையாகும்.

ஓய்வு நாட்கள் நன்றாக அமையவும் நலமாக வளமாக நீண்ட ஆயுளோடு வாழ எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**சு.சிவானந்தன்**<br>
முன்னைநாள் பிரதி அதிபர்<br>
யா/வேலணை மத்திய கல்லூரி<br>
அதிபர்<br>
யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்<br>
தலைவர்<br>
தென்மராட்சி அதிபர்கள் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையால் தடம் பதித்தவர் !



பொன்னம்பலம் அருணகிரிநாதன் அவர்கள் எண்பதுகளின் நடுப்பகுதியில் ஆசிரியராகப் பணியினை ஆரம்பித்து ஏழு வருடங்கள் ஆசிரியப் பணியில் தம்மை அர்ப்பணித்து செயற்பட்டு பின்னர் அதிபர் சேவையில் இணைந்து தமது கடமையினை செவ்வனே நிறைவேற்றி தமது அகவை அறுபதின் இறுதி ஆறு வருடங்கள் கல்வி நிர்வாக சேவையில் பணியாற்றி ஓய்வு பெறுகின்றார்.

இவரது தரிசனம் வேலணை மத்திய கல்லூரியின் மைந்தனாகவும், வேலணை மத்திய கல்லூரியின் பதினாறாவது முதல்வராகவும் கிடைக்கப் பெற்றது. வேலணை மத்திய கல்லூரியின் முதல்வர்களில் நீண்டகாலம் பணியாற்றிய முதல்வர்களில் இவரும் ஒருவராவார்.

ஆளுமை மிக்க நல்ல மனிதர், அனைவரையும் பேச்சாற்றல் மூலம் வசீகரித்து முன்னிற்கும் நுட்பமும் திறனும் கொண்டவர். புதிய கல்விச் செல்நெறிகளையும் எதிர்கால கல்விப் போக்குகளையும் தெளிவுடன் பார்க்கக்கூடியவர். சமூகப் பிரஞ்ஞையும் சமூக நோக்கும் கொண்டவர்.

ஒருவருடைய பணி அறப்பணியாயின் அவர்களது காலத்திற்குள் கட்டுண்டுவிடுவதில்லை. ஊழிக்காலம் நிலைத்து நிற்கும். பொன்னம்பலம் அருணகிரிநாதன் அவர்கள் அரச பணியுடன் மட்டும் தமது புலனை செலுத்தி நிறைவு காணவில்லை. சமூக நோக்கில் பல்வேறு சமூகப் பணிகளில் பொதுப்பணிகளில் தம்மை அர்ப்பணித்து வினையாற்றினார்.

சைவ சமய கலாசாரத்தை பேணுவதில் பின்பற்றுவதில் உதாரணபுருஷராக திகழ்கின்றார். வேலணை மேற்கு பெரியபுலம் மஹா கணபதிப்பிள்ளையார் கோயில் பரிபாலனசபைத் தலைவராக நீண்டகாலம் தொடர்ந்து பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இவரது ஓய்வுக்காலம் சிறக்கவும், இவர் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சமூக சமயப் பணிகளில் ஈடுபடவும் இவரது இல்லறமும் வளமடையவும் மஹா கணபதிப்பிள்ளையார் அருள்பாலிக்க பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

**சிவசாமி கிருபாகரன்**
முதல்வர்
யா/வேலணை மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குன்றின் விளக்காய் எங்கள் அருணன்



முருகனின் புகழ்பாடி திருப்புகழ் தந்தார் அருணகிரிநாதர். பாடசாலைகள் புகழ்பாட தம்பணி தந்தார் எங்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருணகிரிநாதன் கல்விப்பணியில் ஆசிரியராய் அதிபராய், பிரதிக் கல்விப் பணிப்பாளராய் குன்றில் விளக்காய்த் திகழ்ந்தவர், திகழ்கின்றவர், திகழப் போபவர் இவர் என்று கூறுவதில் பெருமையடைகின்றது எங்கள் கோப்பாய்க் கல்விக் கோட்டம்.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற வள்ளுவரின் கூற்றை உறுதிப்படுத்தியவர் எங்கள் அருணகிரி சேர். எந்தச் சுற்று நிருபங்கள், புதிய கல்விச் சீர்திருத்த அறிக்கைகள் பற்றித் தெளிவாக விளக்கமளிக்கும் திறன் இவரின் பண்புக்கு ஒரு வகுப்புக்குறி. எவ்விடயத்துக்கும் தன்னைத் தயார்ப்படுத்தியும் தன் அனுபவத்தினூடாகவும் ஆலோசனை வழங்குவது இவரின் விவேகத்தின் சிறப்பு. அஞ்சா நெஞ்சுடன் நீதிக்கு வழிகாட்டுவதில் இலட்சிய புருஷன். பாடசாலைகளின் மேற்பார்வைத் தரிசிப்பின் போத அதிபர்களிடம் குறை காண்பது முரண்படுவது இவரின் நோக்கமல்ல. மாறாக குறைகள் நிறைவாக வேண்டும் என்றும் சுற்ற நிருபங்களுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும், அதிபர்கள் கௌரவமாக இருக்க வேண்டும் என்பதே இவரது எதிர்பார்ப்பு. இது இவரிடம் நான் பெற்ற அனுபவம். ஓய்வு பெற்றாலும் கல்விப்புலத்துக்கு குன்றின் விளக்காக இவர் இருப்பார் என்பது எங்களின் எதிர்பார்ப்பு. தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் தரப்படும் தேடுங்கள் கிடைக்கும் என்ற வழியில் வாழ்ந்த பெருமைக்குரியவர் என்பது எனது எண்ணம்.

நிறைவாக ஓய்வின் பின்பும் எம்போன்றவர்கட்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் தரவேண்டும் என்றும் குடும்ப வாழ்க்கையிலும் பார் போற்றும் பண்புடன் மருமக்கள், பேரப்பிள்ளைகளைக் கண்டு தம்பதியர் நோய் நொடியின்றி இன்னும் பலகாலம் வாழ்ந்திட வாயார, மனசார வாழ்த்துகின்றேன்.

**மு.விக்னேஸ்வரன்**
அதிபர்
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
தலைவர்
கோப்பாய் கோட்ட அதிபர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவான பணி



செய்யும் தொழிலே தெய்வம் என்று ஆன்றோர்கள் கூறியிருக்கின்றார்கள். எமக்கு கிடைக்கும் தொழிலை நாம் பெரும் பேறாக, பெரும் பொக்கிசமாக கருதிக் கொள்ள வேண்டும். எவன் ஒருவன் தனது தொழிலை பற்றுடன் மேற்கொள்கின்றானோ அவனுக்கு வெற்றி என்பது சாதாரண விடயமாக மாறிவிடுகின்றது. வாழ்க்கையில் அவனுக்கு கிடைக்கும் வெற்றி அவனது குடும்ப நிலையிலும் ஒரு ஆரோக்கியத்தை ஏற்படுத்துகிறது. கடவுளின் கிருபை அவ்வாறே அமையும். எம்மால் முடியாதது எதுவுமில்லை. எதனையும் எம்மால் செய்ய முடியும். இக்கருதுகோளைப் பின்பற்றுகின்றவன் நிச்சயமாக வெற்றி பெறுகின்றான். அந்த வகையில் தீவகக் கல்வி வலயத்தில் அதிபராக இருந்து பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்து பின் யாழ்ப்பாண கல்வி வலயத்தில் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெறுகின்ற திருவாளர் பொ.அருணகிரிநாதன் அவர்களின் கல்விப் பாதையை நாங்கள் ஒரு கண் நோக்குகின்றோம்.

திருவாளர் பொ.அருணகிரிநாதன் அவர்கள் தனது தொழிலை கடவுள் தந்த வரமாகக் கொண்டு சேவையாற்றியிருக்கின்றார். மிகவும் பற்றுடன் சேவையாற்றியிருக்கின்றார். எதனையும் என்னால் செய்ய முடியும் என நிரூபித்து காட்டியுள்ளார். வெற்றிகளை குவித்திருக்கின்றார். வேலணை மத்திய கல்லூரியின் கல்விப் பயணத்தில் அருணகிரிநாதன் சேர் அவர்களுடைய காலம் பொற்காலமாகக் கொள்ளப்படுகின்றது. குறித்த காலப்பகுதியில் அவருடைய சேவையினாலே பாடசாலை உயர்ந்திருக்கின்றது. பாடசாலையின் புகழ் அருணகிரிநாதன் அவர்களை தலைநிமிர வைத்திருக்கின்றது. மேற்படிப்பு காலப்பகுதியில் நாட்டின் அசாதாரண சூழ்நிலையிலும் கூட மேற்படி பாடசாலையை அசையாது பாதுகாத்த பெருமை அருணகிரிநாதன் அவர்களுக்குண்டு. திடமான நம்பிக்கையுடன் அசையாத கொள்கையுடன் திட்டமிட்டுக் கருமமாற்றியிருந்தார். எதையும் சாதிக்க முடியும் என எடுத்துக்காட்டியிருந்தார்.

யாழ்ப்பாண கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்து நிறைவான பணிகளை திரு.பொ.அருணகிரிநாதன் அவர்கள் ஆற்றியிருக்கின்றார். பாடசாலைகளை நல்ல ஆரோக்கியமான முறையிலே செயற்படுவதற்கு வழிகாட்டியாக செயற்பட்டிருக்கின்றார். எப்பொழுதும் பாடசாலை அதிபர்கள் துடிப்புடன் இயங்க வேண்டும் என ஆதங்கப்பட்டவர். உங்கள் தொழிலிலே நீங்கள் நிறைவு காணவேண்டும் என அதிபர்களை உற்சாகப்படுத்தியவர். பாடசாலைச் செயற்பாடுகளை வினைத்திறன் வாய்ந்த வகையில் செயற்பாட்டுக்குட்படுத்தி நல்ல விளைதிறனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என அடிக்கடி ஆலோசனை கூறிக்கொண்டிருந்தவர். பாடசாலைகளுக்கு விஜயம் செய்து இன்றைய பாடசாலைகள் எப்படி செயற்படவேண்டும் என அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் கூறியவர். பாடசாலைகள் தூங்கமுடியாது, அதிபர்கள்–ஆசிரியர்கள் விழிப்பாக இருக்க வேண்டும், மாணவர்களை நல்ல பிரஜையாக மாற்ற வேண்டும் போன்ற எண்ணக்கருக்களை வலியுறுத்தி தனது கல்விப் பயணத்திலே நடை போட்டவர். இத்தகைய உள்ளமும், பண்பும், அறிவும், ஆற்றலும் கொண்ட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.பொ.அருணகிரிநாதன் அவர்கள் இளைப்பாறுகின்றார். அவர் வயது என்ற வரம்பினால் மட்டும்தான் இளைப்பாறுகின்றார். கல்விப் பயணத்திலிருந்தும் அவர் இளைப்பாறவில்லை. அவரது கல்விப்பணி தொடர்ந்தும் கிடைத்துக் கொண்டேயிருக்கும். அவருக்கு கடவுள் எல்லா வகையான ஆரோக்கியத்தையும் வழங்கிக் கொண்டேயிருப்பார். அவரது நிறைவான பணியை நாங்கள் அதிபர்கள் என்ற வகையில் மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம். உம் பணி தொடரட்டும்.

**திரு.பகணேசன்**
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழா நாயகரின் மூத்த புதல்வியின் பூப்புனித நீராட்டுவிழாவில் நாயகரின் தாய் தந்தையர்




விழா நாயகரின் இளைய புதல்வியின் பூப்புனித நீராட்டுவிழாவில்
குடும்பத்தினருடன் விழா நாயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சேவைக்கோர் கலங்கரை விளக்கு



பொன்னிலங்கு ஈழமதன் சிரமதுவாம் யாழ் மண்ணின்
கண்ணிலங்கு தீவகத்தின் வேலணையில் உதித்தவராம்
அண்ணலவர் பொன்னம்பலம் புத்திரனாம் அருணகிரி
என்றநாம நாதனுக்கு இன்றல்லோ மணிவிழாவாம்

வேலணையின் மேற்கினிலே நடராஜப் பள்ளியிலே
கோலமுறு ஆரம்பக் கல்வியினை கற்று அதன்பின்
வேலணையின் மத்திய கல்லூரியிலும் கற்றுயர்ந்தார்
சீலமுறு நினைவுகளே அவர் சிந்தையிலே குடியிருக்கும்

முயல் நிகர்க்கும் வேகமுடன் கல்வியினை கற்றதனால்
அயலவர்கள் போற்றிடவே பல்கலைக்கழகம் சென்றார்
கயம் இருக்கும் கஞ்சமலர் வீற்றிருக்கும் கலைவாணி
தயவினிலே கல்வியதில் வானுயர ஓங்கி விட்டார்

கலைமாணிப்பட்டமொடு பட்டப்பின் டிப்புளோமா
கல்வி முதுமாணிப் பட்டமும் பெற்றவராம்
விலை மதிக்க முடியாத பெருங்கல்வி பெற்றவரோ
தொலை நோக்கில் அதிபரது பரீட்சையிலும் சித்தி பெற்றார்

துலக்கமுடன் கற்பிக்கும் நல் ஆசிரியர், அதிபராய்
இலங்கைக் கல்வி நிர்வாக சேவைத் தேர்வில் சித்தி பெற்று
கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளராய்
இலங்கும் பதவிதனை வகித்து நல்ல சேவை செய்தார்

அதிபர்மார் தங்களுக்கு ஏற்படும் ஐயங்களை
விதிகள் பலகூறி தீர்த்து வைக்கும் திறனுடையார்
ஆசிரியம் என்பதற்கு நல்லதொரு விளக்கம் சொல்லி
ஆசிரியர் அனைவரையும் அன்போடு அரவணைப்பார்

பெரியபுலம் அமைந்திருக்கும் மகாகணபதியாம்
கரிமுகத்துப் பிள்ளையாரின் ஆலயத்தின் தலைவராயும்
காரியங்கள் தீவகத்து லயன்ஸ் கிளப்பில் ஆற்றிய அன்று
பெரிய தலைவராய் இன்னாளில் உறுப்பினராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கையதன் சமாதான நீதிவானாய்
அகிலம் போற்றிடவே பல சேவை செய்தவராம்
மகத்துவமாய் சிரேஷ்டபள்ளி கல்வியியலாளர் ஒன்றியத்தின்
தகைமையுறு பொருளாளர் பதவியையும் வகித்தவராம்

உடன் பிறப்புக்களுக்கோர் உத்தமசோதரனாய்
கடமையிலே வீரனாய் மாணவர்க்கு ஆசிரியனாய்
ஆசிரியர்களுக்கு நல் அதிபராய் அதிபர்களுக்குப் பிரதிப்பணிப்பாளராய்
ஊரவர்க்கும் உறவினர்க்கும் உத்தமராய் சேவை செய்தார்

சமயமும், கல்வியும் சமூகமும் உயர்ந்திடவே
இமயம் போல் சேவைகள் பலபல ஆற்றிய
கோமகன் அருணகிரி நாதனாம் நாயகன்
நாமமும் நானிலம் உள்ளவரை நிலைக்குமே.

**திரு.அப்புத்துரை ஆனந்தராசா**
அதிபர்
யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/இந்து ஆரம்ப பாடசாலையின் விளையாட்டு விழாவில்
முதன்மை அதிதியாக



யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தின் மாணவர்
பாராட்டு விழாவில் விருந்தினராக கலந்துகொண்ட போது



யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில்
விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டபோது



யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில்
மாணவி ஒருவருக்கு விழாநாயகர் பரிசு வழங்கிய போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த சேவையாளன் நல்லதோர் நிர்வாகி



மணிவிழா நாயகன் திரு.பொன்னம்பலம் அருணகிரிநாதன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். வேலணை மேற்கில் உயர் சைவ வேளாளர் மரபில் திரு திருமதி பொன்னம்பலம் அன்னலட்சுமி தம்பதிகளின் புதல்வராகப் பிறந்த இவரோடு சேர்ந்து பழகும் வாய்ப்பு அறுபதிகளில் (1967) எனக்குக் கிடைத்தது. ஆரம்பக் கல்வியை நிறைவு செய்து இடைநிலைக் கல்வியை யா/வேலணை மத்திய கல்லூரியில் தொடர்ந்த போது திரு.அருணகிரிநாதன் அவர்களோடு சமகாலத்தில் கல்வி கற்கும் சந்தர்ப்பம் உருவானது. கல்வி கற்கும் காலத்தில் இவரிடம் தேடல் மிகையாக இருந்ததைக் காணமுடிந்தது. சிறந்த மாணாக்கர் வரிசையில் திரு.அருணகிரிநாதன் அவர்களின் பெயரும் என் காதுகளில் எட்டுவதுண்டு. நயினை மண்ணில் பிறந்த எனக்கு அன்றிலிருந்து இன்றுவரை அரை நூற்றாண்டுகளாக இவரது உறவினைப் பேணுகின்ற பெரும்பேறு கிடைத்தமையை எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். அது மட்டுமல்லாது அவரது குடும்ப உறவுகளோடும் நீண்ட காலமாக உறவாடி வருவது இன்னும் மகிழ்ச்சியை அளிக்கின்றது.

பல்வேறு சமய, சமூக, சமுதாயப் பணிகளை ஆற்றிவரும் மணிவிழா நாயகன் அவர்கள் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் அதிபராகக் கடமைப் பொறுப்பினை ஏற்றிருந்த தொண்ணூறுகளில் (1992) அவரோடு சேர்ந்து அப்பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக தொடர்ந்து பன்னிரெண்டு (12) ஆண்டுகள் பணியாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அக்காலம் பெரும் சோதனைகளும், வேதனைகளும் நிறைந்திருந்தன. பல இடர்பாடுகள், இடப்பெயர்வுகளின் மத்தியில் யாழ்ப்பாணத்தில் பட்டப்படிப்புகள் கல்லூரியில் பாடசாலை தற்காலிகமாக இயங்கி வந்தது. இங்கு மாணவர்கள் நிறைவாக இருந்தார்கள். அவர்களுக்கான கல்வி வசதி வாய்ப்புக்களை வழங்குவதற்காக பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்களோடு சேர்ந்து அல்லும் பகலும் அயராது உழைத்தமையை எவராலும் மறந்துவிடமுடியாது. இக்காலத்தில் பாடசாலைச் சமூகத்தின் உயர் நன்மதிப்பினைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

"கிடைக்கத் தகுமோ நற்கேண்மையற்கல்லார்
எடுத்துச் சுமப்பானை இன்று"

என்ற வள்ளுவர் வாக்குக் அமைவாக எல்லாச் சுமைகளையும் தாங்கி நின்று செயற்பட்டார். இக்காலத்தில் எம்மோடு சேர்ந்து அமரர் நவநேசன் ஆசிரியர் அவர்களும் மற்றும் திரு.இரத்தினசிங்கம் ஆசிரியர் அவர்களும் ஏனைய ஆசிரியர்களோடு சேர்ந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றியமையும் நினைவு கூரத்தக்கது. இதனால் பாடசாலை பல சாதனைகளைப் புரிந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக உப அதிபராக இருந்து விழா நாயகனின் பல பணிகளை நிறைவேற்றிய செல்வி பாலசரஸ்வதி அவர்களின் அர்ப்பணிப்புடனான செயற்பாடுகளும் இந்நேரத்தில் நினைவு கூரத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வேலணை கிராமத்துக்கு மீண்டும் வந்தபோது 55 ஆசிரியர்களுடன் வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் கொத்தணி அதிபராகக் கடமையாற்றியதுடன் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் தனித்துவத்தைப் பேணி சிறிது காலம் சரஸ்வதி வித்தியாலத்தின் கட்டிடத்தில் பாடசாலை இயங்கிய நிலையில் 2002 ஆம் ஆண்டில் வேலணை மத்திய கல்லூரியின் அதிபராகிச் சென்று அங்கும் மாணவர்கள் பல சாதனைகளைப் புரிவதற்கு வழிவகுத்தார். இக்காலத்தில் தீவக கல்வி வலயத்தின் ஆங்கில தினப் போட்டிகளை சிறப்பாக நடத்துவதற்கு எனக்குப் பூரண ஒத்துழைப்பினை வழங்கியிருந்தார்.

பின்னர் பிரதிக் கல்விப் பணிப்பாளராக எம்மோடு தீவகக் கல்வி வலயத்தில் சிறப்பாகப் பணியாற்றியிருந்தார்கள். இக்காலம் குறுகியதாக இருந்தாலும் தீவகப் பாடசாலைகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தது. இதன்பின் யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு இடம் மாற்றப்பட்டு பிரதிக் கல்விப் பணிப்பாளராகி கடமையாற்றி மிகக் குறுகிய காலத்தில் பெரும் மாற்றத்தை யாழ்ப்பாண வலயம் அடைவதற்கு காரணகர்த்தாக்களில் தலைசிறந்த ஒருவராக சாதனைகளின் மத்தியில் இன்று 31.01.2016 தனது 60 ஆவது அகவையில் இளைப்பாறுகின்றார். நாம் இருவரும் சம காலத்தில் இளைப்பாறியுள்ளமை ஒரு விதத்தில் மகிழ்ச்சியாக இருந்தாலும் கூட ஒரு சிறந்த சேவையாளரான நண்பர் அருணகிரிநாதன் அவர்களின் சேவை பல ஆண்டுகள் தொடர வேண்டும் என்பதே எனது அவா.

சிறந்த நிர்வாகியாக, நண்பனாக, சமய சமூக சமுதாய சேவகராக எம் மத்தியில் மிளிர்ந்து கொண்டிருக்கும் திரு.அருணகிரிநாதனும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரும் எல்லாம் வல்ல நயினை நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கப் பெற்று பூரண சுகத்துடன் பல்லாண்டு வாழ வேண்டுமென இறைஞ்சுகின்றோம்.

நண்பர்

**கதிரித்தம்பி கதிரேசபிள்ளையும்**

**குடும்பத்தினரும**

ஓய்வுநிலை ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மண்ணிற்குப் பெருமை தேடித்தந்தவர்



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வேலணை மேற்குப் பகுதியிலே தோன்றிய எங்கள் பொன்.அருணகிரிநாதன் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி எமது மண்ணுக்கு பெருமை தேடித் தந்துள்ளார்.

சிறந்த ஒரு அதிபராக, நிர்வாகியாக கடமையாற்றி பல பாராட்டுக்களை பெற்றமைக்கான பல சான்றுகள் உண்டு.

தீவகத்தின் வளர்ச்சிக்கு பெரும்பாடுபட்டு உழைத்த எங்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேலணை மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய காலத்திலே பாடசாலையின் பௌதீக வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணித்து பாடசாலையை வளர்த்தெடுத்தவர் என்பதை தீவக சமூகம் கண்டு அறியும்.

எங்கள் பொன்.அருணகிரிநாதன் அவர்கள் பாடசாலை வளர்ச்சிக்கு மட்டுமல்ல எங்களின் குல தெய்வமாகிய வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை தலைவராக இருந்து கோயிலுக்கும் தன்னை அர்ப்பணித்து சிறந்த பணியாற்றி வருகின்றார்.

சிறந்த சிந்தனையாளன் ஆகிய இவருடைய ஆக்கங்களை பத்திரிகையில் வாசித்து பயன் பெறுபவர்களில் நாமும் அடங்குவோம்.

இவருடைய ஓய்வு காலம் மகிழ்ச்சிகரமாக அமைய இறைவனை பிரார்த்திக்கும் அதே நேரம் ஓய்வு காலத்தில் தீவக அபிவிருத்திக்கு எத்தகைய ஆக்கங்களை செய்யப் போகின்றோம் என்பதனை தீவக சமூகம் குறிப்பாக வேலணை சமூகம் மிகவும் உன்னிப்பாக அவதானித்து கொண்டிருக்கின்றது.

கல்விப்பணிப்பாளரின் அறுபதாவது அகவையின் வாழ்த்தச் செய்தி சொல்வதில் எமது பழைய மாணவர் சமூகம் மகிழ்ச்சியடைந்து நீண்ட ஆயுளோடு தமது கல்விப் பணி, சமூகப்பணிகள் தொடர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.


**சிவபுரிபூரணன்**

பொருளாளர் வே/மத்திய கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

ஓய்வு நிலை பிரதம முகாமைத்துவ உதவியாளர்

வீதி அபிவிருத்தி திணைக்களம்

யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா நாயகர் வாழ்த்தும் சேவைநயப்பும்



கல்விப்புலத்தில் 32 வருட மகத்தான சேவையாற்றி 31-01-2016 இல் ஓய்வு பெறும் திரு.பொன்.அருணகிரிநாதன் அவர்களது மணிவிழா மலரின் ஊடாக அவர் தம் சேவைகளை நினைவு கூர்ந்து வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சைவமும் தமிழும் கோலோச்சும் வேலணை மேற்கில் சைவ வேளாண் குடிமரபில் பொன் னம்பலம் -- அன்னலெட்சுமி தம்பதிகளுக்குப் புத்திரராகப் பிறந்தவர் திரு.அருணகிரிநாதன். அவர்கள் ஆரம்பக் கல்வியை வேலணை மேற்கு நடராசா வித்தியாசாலையிலும், இடை நிலைக் கல்வியை வேலணை மத்திய கல்லூரியிலும் உயர்கல்வியை யாழ்.பல்கலைக் கழகத்திலும் கற்றுக் கலைப்பட்டதாரி சிறப்புப்பட்டம் பெற்றதுடன் பட்டப்பின் டிப்ளோமா, கல்வி முதுமாணிப் பட்டத்ததையும் பெற்றதுடன் மலேசியா திறந்த பல்கலைக்கழகத்தில் அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி நெறியினையும் பெற்றார்.

தனது முதற் கல்விச் சேவையினை நு/மஸ்கேலியா தூய யோசப் கல்லூரியில் ஆரம் பித்து யா/நாரந்தனை கணேசா வித்தியா சாலையில் ஆசிரியராகவும், யா/சைவப் பிரகாச வித்தியாசாலையில் அதிபராகவும் பின் யா/வேலணை மத்திய கல்லூரியில் முதலாம் தர அதிபராகவும் சேவையாற்றி கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி பெற்று தீவக வலயத்திலும், யாழ் கல்வி வலயத்திலும் முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளராக வெற்றிகரமான சேவையை முடித்துக்கொண்டு அறுபது வயதைப் பூர்த்தி செய்து மன நிறைவுடன் இளைப்பாறுகின்றார்.

இவர் 1986 ஆம் ஆண்டு திருமண பந்தத்தில் யோகேஸ்வரி அவர்களை இணைத்துக் கொண்டதன் மூலம் செல்வி நிருஷா, செல்வன் அருண்ராஜ், செல்வி கார்த்திகா ஆகியோரைப் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்றனர். மூத்த மகளும், மகனும் உயர்கல்வியை முடித்து உத்தியோகத்தில் அமர செல்வி நிருஷா பல்கலைக்கழக கல்வியைத் தொடர்கின்றார்.

குறிப்பாக விழா நாயகனின் சேவை பற்றி அறியக்கூடிய வாய்ப்பு எனக்கு வேலணை மத்திய கல்லூரியிற் கிடைத்தது. சமகாலத்தில் கல்லூரிப் பழைய மாணவர் சங்கப் பொருளாளராகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. கடமை, கண்ணியம், தொழிற்பற்று, நேர முகாமைத்துவம், ஆளுமை, எடுத்த காரியத்தை எப்படியும் முடிக்கவேண்டும் என்ற திட சங்கற்பம் ஆகியன இவரிடம் காணப்பட்ட சிறப்புகள் எனலாம்.

இவரது காலப்பகுதியில் வேலணை மத்திய கல்லூரி கல்வி அடைவு மட்டத்திலும், பௌதிக வளத்திலும் சிறப்புப் பெற்றிருந்தது என்பது மிகையல்ல.

இதற்கு முக்கிய காரணம் ஆசிரியர்களைச் சிறப்புடன் அரவணைத்து வழிப்படுத்தியதும், மாணவச் செல்வங்களின் ஒழுக்கத்தில் கவனம் செலுத்தியதுமாகும். இக்காலப்பகுதி யில் ஐம்பத்திரண்டு மாணவர்கள் பல்கலைக் கழக வாய்ப்பைப் பெற்றனர். இன்னும் சிலர் கல்வியியற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிக்கும், பலர் அரச, அரச சார் பற்ற நிறுவனங்களில் தொழில் வாய்ப்பும் பெற்ற னர். மற்றும் சிலர் தொழில் நுட்பத்துறை யிலும், வர்த்தகத்துறையிலும் சிறப்புப் பெற்றனர்.

திரு.அருணகிரி அவர்கள் தமது ஆளுமைக் காலத்தில் கல்லூரியின் பௌதிக வளத்தைப் பெருக்குவதில் பெறுமதி மிக்க பங்கினை வகித்தார்.

அந்த வகையில் – கல்லூரி ஒன்று கூடல் மண்டப மின் இணைப்பு, கல்லூரி வளாக மதில் அமைப்பு, 60 அடி ஒ 20 அடி மண்டபத்தின் முழுமையான புனரமைப்பு, மனையியல் ஆய்வுகூடப் புனரமைப்பு, இரசாயனவியல் ஆய்வு கூடப் புனரமைப்பு, கணனி அலகு அமைப்பு, வர்த்தகக் கல்வி அறைப் புனரமைப்பு, பிரதான கட்டிடத் திருத்த வேலையுடன் மேல்மாடிக் கூரை பூரணமாகப் புனரமைப்பு, அதிபர் அலு வலகம் சகல வசதிகளுடனும் நவீன முறையில் புனரமைப்பு, ஆண்கள்– பெண்களுக்கான மலசலகூடங்கள் G.T.Z அனுசரணையுடன் புதிதாக அமைத்தமை, பாடசாலை உள்ளக வீதி தார் போடப்பட்டு திருத்தி அமைத்தமை, விடுதி கள் இரண்டும் மதில் போடப்பட்டும் முட்கம்பி வேலி போட்டும் பாதுகாக்கப்பட்டமை, பெண் கள் விடுதிக்கு நீர் விநியோகக் குழாய் பொருத் தப்பட்டமை, பாடசாலை விளையாட்டு மைதா னம் மண் போடப்பட்டு உயர்த்தப்பட்டதுடன் மைதான விஸ்தரிப்புக்காக பிரான்ஸ் பழைய மாணவர் சங்கக் கிளையினரின் நிதி உதவி யுடன் காணி கொள்முதல் செய்யப்பட்டமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இக்காலத்திலேயே இரண்டு மின் பிறப் பாக்கிகள் (05 KW) பெறப்பட்டதுடன் இந்து கலாசார அமைச்சிலி ருந்து முச்சக்கரவண்டி பெறப்பட்டதுடன், இந் திய அரசாங்கத்தின் அன் பளிப்பான பேருந்து ஒன்றும் பெறப்பட்டது. இவற்றிற்கெல்லாம் அதிபரது முயற்சி முக்கிய காரணம் எனலாம்.

கல்லூரி வளாகத்தில் பூச்செடிகளை வைத் துப் பாதுகாப்பு மதில் அமைத்து அழகுபடுத்திய துடன், வளாகத்தில் பாடசாலைத் தோட்டமும் சிறந்த முறையில் அமைக்கப்பட்டு அதன்மூலம் மரக்கறி வகைகள் பெறப்பட்டு மாணவர்களது மதிய உணவுக்குப் பயன்படுத்தப்பட்டன. இவ ரது காலத்தில் கல்லூரி பாலைவனத்தில் ஒரு பசுஞ்சோலையாக மிளிர்ந்தது என அப் போதைய மாவட்டச் செயலாளர் கல்லூரி வரு கையின் போது வர்ணித்ததை நினைவுகூரல் இவ்விடத்துப் பொருத்தமுடையது. கல்லூரி அபிவிருத்தியில் பழைய மாணவர் சங்கங் களை அணுகியும் அரச, அரசசார்பற்ற நிறு வனங்களை அணுகியும் அதிபர் ஆற்றிய சேவை மகத்தானது.

விழா நாயகர் தனது கல்விச் சேவைக்கு மேலாகப் பொதுப் பணிகளிலும் சமயப் பணிகளிலும் பெரிதும் ஈடுபட்டார். ஆசிரியர் கழகம், அதிபர்கள் சங்கம், கல்வி மேம்பாட்டுக் கழகம், அரிமாக் கழகம், பள்ளிக் கல்வியி யலாளர் சங்கம் ஆகியவற்றில் அங்கத்துவம் பெற்றுக் காத்திரமான சேவை செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கிராமத்தைப் பொறுத்தளவில் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராகவும், சனசமூக நிலையத் தலைவராகவும் பணியாற்றினார். தற்பொழுது குலதெய்வமாம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலய (முடிப்பிள்ளையார்) பரிபாலன சபையின் தலைவராக நீண்ட காலமாக சேவையில் அமர்ந்து ஆலயத்தின் வளர்ச்சியில் அயராது உழைக்கின்றார். இச்சேவைகள் காரணமாக இவர் இலங்கை அரசினால் அகில இலங்கைச் சமாதான நீதவானாக நியமிக் கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தான் கற்ற கல்லூரித் தாய்க்கு என்றும் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இப்பொழுதும் பழைய மாணவர் சங்க உப தலைவர்களில் ஒருவராகக் கடமை ஆற்று கின்றார். தீவக வலயத்தில் இருந்தபொழுதும் நமது கல்லூரித் தேவைகளுக்குப் பெரிதும் உதவியுள்ளார்.

விழா நாயகன் ஓய்வு பெற்றாலும் தொடர்ந்து அவரது சேவை நம் கல்விப்புலத்துக்கும், எமது கிராமத்துக்கும் கிடைப்பதற்கு அவர் நீண்ட ஆயுளுடன் சகல செல்வமும் பெற்று வாழவேண்டுமென எல்லாம் வல்ல மகா கணபதிப்பிள்ளையாரை வேண்டி அவர் தம் பாதம் பணிந்து நிற்போமாக.

**சி.த.மகாலிங்கம்**
வேலணைமேற்கு, வேலணை
ஓய்வு நிலை அஞ்சலதிபர்
முன்னைநாட் பொருளாளர்
பழைய மாணவர் சங்கம்
வேலணை மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை மத்திய கல்லூரியை மீண்டெழ வைத்தவர்

திரு.பொன். அருணகிரிநாதன்(மணிவிழா நாயகன்) அவர்களை மனநிறைவாக வாழ்த்தி அவரின் மணிவிழா மலருக்கு எனது செய்தியைத் தருவதில் பெருமகிழ்வடைகிறேன். வேலணை மத்திய கல்லூரியுடனான எனது தொடர்பு நீண்டது, அதற்கு அடுத்த படியாக கல்லூரியின் மதிப்பிற்குரிய அதிபர்களுடனான எனது தொடர்பும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியது. பொருளாளராக, செயளாளராக, உபதலைவராக பழைய மாணவார் சங்கத்துடனான எனது உறவு திருவாளர்கள் இராசநாயகம், சண்முகநாதன், சிவராசரத்தினம், குணபாலசிங்கம், கேதாரநாதன், கலாதரன், கணேசலிங்கம் இவர்களோடு அருணகிரிநாதனின் உறவையும் ஏற்படுத்தித் தந்தது.

திருவாளர்கள் கேதாரநாதன், கலாதரன் ஆகியோரது நாட்கள் எங்கள் முயற்சிக்கும், துணிவுக்கும், அர்ப்பணிப்புக்கும் சோதனையான, மறக்கமுடியாத நாட்களெனின் திரு.அருணகிரிநாதனின் நாட்கள் சோதனைகளிலிருந்து மீண்டெழுந்து கல்லூரியை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான பெரும் போராட்ட நாட்கள் என்று சொல்வதில் தவறில்லை. வேதனைகள், மனக்காயங்கள் ஏற்பட்ட பொழுதும் அபிவிருத்தியில் குறிதப்பாமல் நின்று கல்லூரியை மீண்டும் ஒரு நிலைக்கு கொண்டுவர முடிந்ததென்றால்.......! அந்தத் திறமை அருணகிரிநாதனுக்கே உரியது. இதில் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடும், ஒத்துழைப்பும் இணைந்திருந்தமை அனைவரும் அறிந்ததே. பொருத்தமானவர்களை இனம் கண்டு கல்லூரியின் பௌதீக தேவைகளைப் பூர்த்தி செய்ததில் பெரு வெற்றி கண்டார். அரசின் நிதி மூலங்களைத் தேடிப்பிடித்து கல்லூரிக் கட்டடங்களைப் புனரமைத்ததிலும் மேலதிகமாகத் தேவைப்பட்டவைகளை ஆக்கியமையும் அவரின் திறமைக்கு எடுத்துக்காட்டுக்கள். கட்டடங்கள், பௌதீக வளங்கள் தான் ஒரு கல்லூரிக்கு முக்கியமா? அல்லவே.

கல்லூரியின் நோக்கான கல்வி நிலையில் முன்னேற்றம், பிற பாடவிதானங்களின் வெற்றி என்பனவும் செழிப்படைந்தன. இந்த நிலையில் அவரின் பதவி உயர்வு கல்லூரியிலிருந்து அவரைப் பிரித்தமை கல்லூரி வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட எம் போன்றவர்களுக்கும், மாணவ ஆசிரிய சமூகத்திற்கும் பேரிழப்பே.

கல்விப்புலத்தாலும், சமூகத்தாலும், நன்கறியப்பட்ட திரு அருணகிரிநாதனின் ஓய்வு தீவகத்தின் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட அனைவரதும் வேதனைக்குரியதே. என்ன செய்வது சட்ட திட்டங்கள் எம்மைக் கட்டுப்படுத்துகின்றனவே. எனினும் இன்றும் இளைஞனாகவிருக்கும் அதிபர் தனது ஆற்றலையும், அறிவையும் எம் மக்களின் முன்னேற்றத்திற்கு தொடர்ந்தும் பயன்படுத்துவார் என்று நம்புவோம். அவரது ஓய்வு காலம் மிக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வாகவும், அமைதியாகவும் அமைவதோடு அவருக்கும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் எல்லா நலனும் கிட்ட பெரியபுலம் மகா கணபதியையும், பெருங்குளத்து அன்னையயும் இறைஞ்சிப் பணிவதோடு, மீண்டுமொரு முறை வாழ்த்தி அமைகிறேன்.

அன்னசத்திரம் ஆயிரம் கட்டலும் ஆலயம் பதினாயிரம் செய்தலும்
இன்னயாவிலும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" (பாரதியார்)

கலையகம்
**க.நவரெத்தினம்**
வேலணை – 01
ஓய்வுநிலை தபாலதிபர்
முன் நாள் செயலாளாா, பழைய மாணவர் சங்கம்
வேலணை – மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் விழுவெள்ளி



இன்று மணிவிழாக் காணும் எம் கல்லூரித் தாயின் புகழ்பூத்த முன்னாள் அதிபரும், அன்புக்கும் மரியாதைக்கும் உரிய என் குருநாதருமாகிய திரு.பொ.அருணகிரிநாதன் ஆசிரியர் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். எமது கல்லூரித் தாயின் வளர்ச்சியில் தன்னையே அர்ப்பணித்த உத்தமர். இடப்பெயர்விற்குப் பின்னரான அசாதாரண சூழ்நிலை நிலவிய காலப்பகுதியில் எமது கல்லூரியைக் கட்டிக்காத்து எமது கல்லூரியை வளர்ச்சியின் உச்சத்திற்கு கொண்டு சென்ற உத்தமர். தனது தூர நோக்குச் சிந்தனையினூடாக 2009 ஆம் ஆண்டு எமது கல்லூரியில் கல்வி கற்ற 24 மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தவர்.

இரவு, பகல் பாராது எமது கல்லூரி அன்னையுடன் ஒன்றித்து வாழ்ந்து பல ஆயிரக்கணக்கான மாணவர்களின் கலங்கரை விளக்கமாக, விடிவெள்ளியாக இருந்து அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர். அவ்வாறான ஒரு உன்னத மனிதர் இன்று மணிவிழாக் காண்கின்றார். இந் நன்னாளில் எமது மரியாதைக்குரிய ஆசான் எவ்வித குறையுமின்றி நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து எமது மண்ணுக்கு மேலும் சேவையாற்ற எல்லாம்வல்ல சிற்பனை வேலவர் அருள்புரிவாராக.

நன்றி

**சி.அசோக்குமார்**
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
வேலணை மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் ஊருக்கு பெருமை சேர்த்த உத்தமர்

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"

என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. இதற்கிணங்க ஒருவர் தம் வாழ்க்கையில் மிக உயர்ந்த நிலையினை எய்த வழிகாட்டுவது கல்வியே. இந்த இலக்கணத்திற்கு ஏற்ப எம் மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்ற எம் ஊரின் பெருமையை அடையாளப்படுத்துகின்ற திரு.பொ.அருணகிரிநாதன் ஐயா அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துக் கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

எம் வேலணை மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்பான சேவையைவழங்கியவர். ஆளுமைப் பண்பு கொண்ட ஐயா அவர்களின் விடா முயற்சியால் கொடிகட்டிப் பறந்தது எம் கல்லூரி. எத்தனையோ மாணவச் செல்வங்களை உருவாக்கி சமூகத்திற்கு நற்பிரஜைகளாக வெளியீடு செய்தார். கல்லூரிச் சமூகத்தினரோடு அன்னியோன்னியமாக அணுகி, கல்விப் பாரம்பரியத்தை பேணிக் காத்து பெருமை சேர்த்த எம் கல்லூரியின் முன்னைனாள் புகழ்பூத்த அதிபரும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (யாழ் வலயம்) ஆகிய திரு.பொ.அருணகிரிநாதன் ஐயா அவர்கள் இன்று மணி விழாவைக் காணும் காலத்தில் அவர் சீரும் சிறப்பும் பெற்று குடும்பத்தோடு நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

நன்றி

நிர்வாகத்தினர்
**ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடப்பெயர்விற்குப் பின்னரான
# வேலணை மத்திய கல்லூரியின் பொற்காலம்

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"



என்பது பொய்யா மொழிப்புலவரின் வாக்கு. ஆனால் மண்ணில் தோன்றுகின்ற ஒரு சிலரால் மட்டுமே புகழோடு வாழ முடிகிறது. அந்த வகையில் வேலணை மத்திய கல்லூரியின் பொக்கிஷமாக சாதனைகள் பல படைத்த சரித்திர நாயகன் பற்றி அவர்களால் விதைக்கப்பட்ட பழைய மாணவர்களுள் ஒருவனாக ஒரு சில வார்த்தை களை பகிர்கின்றேன்.

எம் கல்லூரியின் பொற்காலம் எனச் சொல்வார்கள் அருணகிரிநாதன் sir இனுடைய காலம். வேலணை மத்திய கல்லூரியின் சாதனைப் பயணங்கள் அதிபரின் வழிகாட்டல்களாலும் அயராத உழைப்பாலும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவைகளாலும் இடம்பெற்றன.

வேலணை மத்திய கல்லூரியின் வரலாற்றிலே 24 மாணவர்கள் 2009 Batch இல் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டமை சாதனைக்குரிய விடயம். அவற்றுள் நானும் ஒருவன் என்று சொல்வதில் பெருமையடைகின்றேன்.

கல்லூரியின் வளர்ச்சியில் அதீத அக்கறையும் அர்ப்பணிப்பான சேவையும் கொண்ட ஆளுமை மிக்க அதிபர் எம் அதிபர். தீவக வலயத்தில் அவருடைய காலத்தில் கல்வித்துறை, விளையாட்டுத்துறை, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் வடமாகாணமே திரும்பி பார்த்தது வேலணை மத்திய கல்லூரியை. வேலணை மத்திய கல்லூரிப் பயணம் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என சாதித்தது. இக்காலத்தை வேலணை மத்திய கல்லூரியின் பொற்காலம் என்பர்.

எம் ஊருக்கு பெருமை சேர்த்த எம் அதிபர் கல்விப்பசியையும், வயிற்றுப் பசியையும் போக்கி எத்தனையோ ஏழ்மை மாணவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கினார். அம் மாணவர்களுள் நானும் ஒருவன் என்பதில் பெருமை கொள்கின்றேன்.

எத்தனை வலிகளை கடந்திருப்பார் எம் அதிபர். என் அதிபர் கூறிய வார்த்தைகளும், கண்டிப்பும் எத்தனை மாணவர்களை உருவாக்கினார். இன்று எந்த திணைக்களத்திலும் வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களால் நிரம்பி காணப்படுகிறது.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கு இணங்க இப்படிப்பட்ட ஒரு சில பண்பாளர்கள் வாழ்வதாலேதான் இவ்வுலகம் இன்றும் வாழ்கிறது என நினைக்கத் தோன்றுகிறது. கடவுளின் மறு அவதாரங்களை கதைகளில் பார்த்திருக்கின்றோம். ஆனால் ஒரு சிலர் மட்டுமே அவ்வாறு வாழ்ந்துவிட்டுச் செல்கின்றனர். இப்படிப்பட்ட உத்தமர் ஓய்வு பெற்றுச் செல்வது கல்லூரிக்கு மட்டுமல்ல கல்விச் சமூகத்திற்கும் இழப்பாக அமைகின்றது.

நல்ல மனிதர்கள் மனங்களில் சரித்திரமாக இடம்பிடிக்கின்றனர். சாதனைகள் பல செய்து சரித்திரம் படைத்து இன்று ஓய்வினைப் பெற்று மணிவிழா காணுகின்ற எம் அதிபர் அருணகிரிநாதன் ஐயா நூற்றாண்டுகள் நோய் நொடி இன்றி புகழோடு வாழ வேண்டும் என வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் சார்பாக பிரார்த்தித்து ...முருகனை சிரம் தாழ்த்தி கரம்கூப்பி நிற்கின்றேன்.

நன்றி

**திரு.சி.அருட்சுதன்**
(வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சார்பாக)
ஆசிரியர்
(யா/நயினாதீவு ஸ்ரீகணேஷ கனிஷ்ர மகாவித்தியாலயம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கல்விக்கு ஒரு கலங்கரை விளக்கு நம் அருணகிரி"



கற்றோர் கள் மத்தியில் அருணகிரி கல்வி அறிவின்– ஒளிவிளக்கு நம் அருணகிரி
வேலணைக்கு புகழ் தந்த அருணகிரி– வேழமுகவன்
அன்பகவாத அருணகிரி– சமூகத்தின்
அருஞ்சேவையாளன் அருணகிரி – ஆன்மிக
அறிவு கொண்ட எம் அருணகிரி – பெரியபுல
மகா கணபதி ஆலய அறம் காக்கும் தலைவன் அருணகிரி
நன் மாணாக்கர்களை வளர்த்துவிட்டு அருணகிரி
அறுபது அகவை மணிவிழா நாயகன் அருணகிரி
ஆயுள்வரை வேலணை ஆனைமுகன் அடிமறவாத– அருணகிரி
புகழ்பூத்த வேலணை மகா கணபதி பரம்பரை வந்த நம் அருணகிரி
கல்விக்கு ஒரு கலங்கரை விளக்கு நம் அருணகிரி
பல்கலை அறிஞனாய் பவனிவந்த நம் அருணகிரி
பணிப்பாளர் பணியினை நிறைவு செய்யும் இந்நாளில்
பார்வதி மைந்தன் கணபதி அருள்வேண்டி பல்லாண்டு
நீடு வாழ சோதரனாய் வாழ்த்துகின்றேன்

**ப.பாலசுப்பிரமணியம்** ஜே.பி
(வேலணை பாலா)
ஓய்வு நிலை பொறுப்பதிகாரி
வேலணை பிரதேச சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகம் மகிழ்ந்தோம் ஆண்டு நூறு வாழி வாழி !



ஈழமணித்திருநாட்டின் வடபால் ஓங்கும்
இலங்கு புகழ் யாழ் நகரின் சிகரமாக
திசை எட்டும் ஒளிபரப்பி ஓங்கி நிற்கும்
தீவகத்தின் தாய்த் தீவாம் வேலணையின்
மேற்கிருக்கும் கணபதீச் சரத்தான் பாதம்
போற்றிநிதம் புனிதப்பணி ஆற்றி நிற்கும்
பொன்னம்பலம் அன்னலட்சுமி ஈன்ற செல்வன்
வண்ணமிகு அருணகிரிநாதன் நீங்கள்
அகவையது அறுபது கண்டீர் இன்று
அகம் மகிழ்ந்தோம் ஆண்டு நூறு வாழி வாழி !

கலைப்பட்டதாரியாய் கல்வியில் முதுமாணியாய்
பல பல பட்டங்கள் படிப்படியாய் பெற்று
ஆசிரியராய் நல்லதோர் அதிபராய்
ஆசிலாய் பணி அளப்பல ஆற்றி
கல்வி நிர்வாக சேவையில் இணைந்து
சொல்லில் அடங்கா சேவைகள் செய்து
முகாமைத்துவத்தை முறையாய் இயற்றும்
தியாகமுடைய பணிப்பாளரானீர்கள்

நாட்டுப் பிரச்சினையால் வீடு விட்டிடம் பெயர்ந்து
கூடுகளைத் தேடி மீண்ட குருவிகளாம்–மாணவர்க்கு
பாடுபட்டு பள்ளிப் படிப்பதனை ஊட்டிவிட–நீங்கள்
ஈடுபட்ட சேவைகளோ எண்ணில் அடங்கிவிடா

முட்கம்பி வேலிக்குள் முழுமை இழந்திருந்த–வேலணை
மத்திய கல்லூரியை உயர்ச்சி பெறச் செய்தீர்கள்
மண்ணரண்களாலே மறைபட்டுப் போயிருந்த
மத்தியத்தின் மகுடத்தை மலர்ச்சி பெறச் செய்தீர்கள்

கல்வியொடு விளையாட்டு கலைகள் இவைகளிலே
துல்லியமாய்த் தன்பள்ளி துலங்கி ஒளிர்ந்திடவ
எல்லையில்லா சேவையிலே என்றும் இணைந்திருந்து
வல்லதொரு தளபதியாய் வழிகாட்டி நின்றீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான நீதவானாய் கிராமத்தின் தலைவனாய்
தேசப் பற்றுமிகு தேசியத்தில் ஒருவனாய்
ஆன்மீக தாகத்தால் அறப்பணியில் இணைந்து
முடிப்பிள்ளையார் கோயில் முகாமை செய்யும் தலைவராய்
ஏற்ற பணி யாவும் எளிதில் முடித்து நிற்கும்
ஆற்றல் உடையவர் எம் அருணகிரிநாதன் ஐயா

மிடுக்கான தோற்றம் மின்னிடும் புன்சிரிப்பு
துடிப்பான செயற்பாடு தூய நற் சிந்தனை
எடுப்பான குரலாலே கல்வியியல் தன்னை
விருப்பாக உரைத்திடும் கணீர் என்ற நா வன்மை–இவை என்றும்
இருப்பாக இருக்கும் அருணகிரி சேர் இடத்தே–நாம்
விருப்போடு வாழ்த்தினோம் விண் மகிழ வாழ்ந்திடுவீர் !

**வாழ்த்து**

சீராரும் சைவ மறை செழித்து வாழி
சிந்தைகளில் சிவநேசம் சிறந்து வாழி
பேராரும் பல்வளமும் பெருகி வாழி
பெருமையுற இப்புவியில் இனிது வாழி
ஊராரும் உறவுகளும் வாழ்த்த வாழி
உம் மனைவி மக்களுடன் மகிழ்வாய் வாழி
நேராரும் நயினையுறை நாகம்மாளின்
நிறைவருளைப் பெற்றென்றும் வாழி வாழி

**நயினை - நடா மயூரன் (ஆசிரியர்)**
யா /கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி அன்னைக்கு கருணை ஒளியூட்டி நின்ற காவலன்



கதிரவன் ஒளி போல் கல்வியொடு ஒழுக்கத்தைப் பாரெங்கும் பரப்பும்
கவின் மிகு தொழிலாம் ஆசிரியனெனும் சிறப்பும், சிகரம் தொடும் அறிவும்,
அருளெனப் பெற்று ஆளுமை தன்னுடன் கொண்டு தலைமைத்துவம் தனைத் தாங்கி
வேலணை மத்திய கல்லூரியின் முதல்வராய், எமது இலட்சியத்தின் வழிகாட்டியாய்,
பலநூறு சாதனையாளர்களை உண்டாக்கி எம் கல்லூரித் தாய்க்குப் புகழீட்டிய என்றும்
மங்காப் பெயருடன் மணிவிழா காணும் அகிலம் போற்றும் அருணகிரிநாதன்,
எம் உயர்வுக்கு உறுதுணையாயிருந்த அன்புக்கும் பெரும் மதிப்பிற்கும் உரிய ஆசான்.

இரண்டாம் தரம் தொட்டு கல்லூரியால் நான் விடைபெறும் வரையான பதின்மூன்று ஆண்டுகள்
என்னை அன்போடு அரவணைத்து தவணைகள் ஒவ்வொன்றும் தாம் தந்த அறிவுரையும்
கண்டிப்பும் கல்வியில் நான் மிளிரக் காரணமாகின.
அன்போடும் ஒழுக்கத்தோடும் அயலவரை நேசித்து அகிலம் போற்றும் அறிவாளனாய் திகழ
அறிவுரை கூறும் அழகிய மொழியாளன் அருணகிரிநாதன் எம் அன்பான அதிபர்.
கல்லூரி வளாகத்துள் கம்பீரமான நடையுடனும் கையில் ஒரு பிரம்புடனும் வலம் வரும்
கணமெல்லாம் கற்றலொடு கற்பித்தல் அத்தனையும் கண்ணியமாய் நடைபெறும் காலம் அது.
கல்லூரி நிகழ்வுகளில் கருத்துக்கள் பல சொல்லி கலங்கரை விளக்கென மிளிர்ந்தவர்தான் எம் அதிபர்.

ஆளுமை என்றால் என்னவென்று கண்டேன், சிறந்த நிர்வாகிக்கு வேண்டிய
தலைமைத்துவத்தினைக் கண்டேன், நேர முகாமையுடன் நேர்மையைக் கண்டேன்,
திட்டமிடலுடன் சிறந்த பேச்சாற்றலைக் கண்டேன், பாகுபாடற்ற பாசத்தைக் கண்டேன்,
அறிவுடன் கூடவே அன்பையும் இறை பக்தியையும் கண்டேன்,
வேண்டிய நேரத்தில் அகத்தில் சினத்தையும் கண்டேன், எதிர்ப்புக்களை வெற்றி கொள்ளும்
துணிச்சலையும் கண்டேன், கடமையை நேசிக்கும் உயர் பண்பினையும் கண்டேன்.
இவருள் நான் கண்ட அத்தனையும் எம் கல்லூரியை உலகறியச் செய்தவைகள்.
அதனாலே அருணகிரியை அதிபராகப் பெற்றமைக்கு ஆண்டவனுக்கே ஆயிரம் நன்றி சொல்வேன்.

தன் கல்லூரிக் காலமதில், அறிவாற்றலும் அர்ப்பணிப்பும் மிக்க ஆசிரியர் குழாத்துடன் இணைந்து கல்லூரியின் அபிவிருத்திக்கு அரும்பாடு பட்டதுடன் விளையாட்டுத்துறையின் விருத்தியால் தன் மாணவர்களின் சாதனைகள் கண்டு பெருமை கொண்டவர். அத்தனைக்கும் மேலாக கண்ணியமாய் மாணவர்கள் கற்றலிலே மேலோங்கி பல்கலைக்கழகம் செல்ல கஷ்ரப்பட்டு உழைத்தவர் எம் அதிபர். கல்லூரிக் காலமதில் எத்தனை தான் எதிர்ப்புக்கள் வந்தாலும் அத்தனையையும் எதிர்த்து ஆக்கமுடன் உழைத்தவர். இத்தனையும் செய்துவர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்பதவி வந்ததனால் கல்லூரி அன்னையிடமிருந்து விடைபெற்றீர் வலயக்கல்விப் பணிமனைக்கு.
அத்தோடு நின்றுவிடாது, பேராதனையில் நான் கற்கையிலும் பேராவலுடன் அழைப்பேன் தொலைபேசியில்,
அப்போது கூறும் ஆலோசனைக்கும் ஆறுதல்களுக்கும் அளவேயில்லை.
கல்வியால் நான் கடலளவு உயரவேண்டும் உங்களைப்போல் என்று அறுபதாம் அகவையை நீர்
அகம்மகிழக் கொண்டாடும் இத்தருணம் வேண்டுகின்றேன் உங்கள் ஆசியை.

எம் கல்லூரி அன்னையின் உயர்வுக்கு கருணை ஒளியோடு வழிகாட்டியாய் நின்ற கல்வியாளனே!
நல்லதொரு ஆசானாய் மிளிர்ந்து, அன்பு மிக்க அதிபராய் எமைக் கவர்ந்து,
ஆற்றல் மிக்க பிரதிக்கல்விப் பணிப்பாளராய் பணியிலிருந்து ஓய்வு பெறும் உங்களை
மணிவிழா காணும் இந்நன்னாளில் மனதார வாழ்த்துகின்றேன்.

பழைய மாணவன்,
**கி.உதயராஜ்,**
முகாமைத்துவ உதவியாளர்,
பிரதேச செயலகம்,
மாந்தை கிழக்கு, முல்லைத்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் போதனை- சில ஆய்வு முடிவுகளும் பரிந்துரைகளும்

## பேராசிரியர். சோ.சந்திரசேகரன்

**பாடசாலை மாணவர்கள் தமது வகுப்பறைக் கல்வியானது பரீட்சைச் சித்திக்குப் போது மானதன்று;**

போட்டிச் சூழலில் அதிக புள்ளிகளைப் பெற வகுப்பறைக் கல்வி மட்டும் காணாது என்பதால் மாலை வேளைகளிலும் வார இறுதி நாட்களிலும் மேலதிகமாகத் தனியார் கல்வியை நாடுவதும் இன்று மாணவர் கல்வியில் இன்றியமையாததாகி விட்டது. இத்தகைய தனியார் போதனை (Tuition) முறை இலங்கை, இந் தியா, ஜப்பான் போன்ற நாடுகளில் வழமையாகிவிட்டதுடன், கல்விக் கொள்கை வகுப்போரினதும் கல்வி அதிகார வர்க்கத்தினரினதும் கவனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளது. இந் நாடுகளில் இத்தனியார் போதனை பெரும் விமரிசனத்துக்கும் கருத்து வேறுபாட்டுக்கும்உட்பட்ட ஒரு பிரச்சினையாகவும் மாறியுள்ளது.

இலங்கையின் தேசிய கல்வி ஆணைக்குழு தனியார் போதனைக்கான காரணங்கள், அதன் விளைவுகள் என்பன பற்றி விரிவான ஆராய்ச்சி யொன்றை மேற்கொண்டது.

தனியார் போதனையானது கல்வியியல் துறையின் ஆய்வுப் பொருளாகவும் உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விடயம் பற்றிய பல ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட விசேட வெளியீடு ஒன்றைப் 'பொருளியல் நோக்கு' என்னும் சஞ்சிகை தயாரித்து வெளியிட்டது. (இது மக்கள் வங்கியின் சஞ்சிகை).

ஜப்பானில் காலங்காலமாக இடம்பெற்று வரும் தனியார் போதனை முறையின் (ஜீக்கு– Juku எனப்படுவது) பண்புகள், பயன்கள் பற்றி ஆராய அமெரிக்க கல்வியாளர்கள் பலர் ஜப்பானுக்குக் கல்விச் சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டனர். இலங்கையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையொன்றில் (2003) பாடசாலை நேரங்களில் தனியார் போதனை வகுப்புக்களை நடாத்துவதையும் அதில் பாடசாலை ஆசிரியர்கள் பங்கு கொள்வதையும் தடை செய்தல் வேண்டும் என்பன போன்ற பரிந்துரைகள் காணப்பட்டன.

இலங்கையில்பரவலாகக்காணப்படும்தனியார் போதனை நிலையங்களும் அவற்றைப் பெருந்தொகையான மாணவர் நாடுவதும் கல்வியாளர்கள் மற்றும் கல்விக் கொள்கை வகுப்பாளர் மத்தியிலும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் பல்வேறு காரணங்களால் இதனை முற்றாகத் தடை செய்ய முடியாதுள்ளது. சென்ற டிசம்பர் மாதத்தில் கல்வி அமைச்சு ஒழுங்கு செய்த 'இலங்கையின் கல்வி முறை' பற்றிய மகாநாடொன்றில் தேசிய கல்வி ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் ல.ஜயத் திலக்க தனியார் போதனை முறை ஒரு பெரும் சவாலாக அமைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

"பரீட்சை முறையின் நிர்ப்பந்தம் காரண மாக, 5 ஆம் தரப் பரீட்சை தொடக்கம் மாண வர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகின்றது. பிள்ளைப் பரு வத்தை அவர்கள் மகிழ்ச்சியுடன் கழித்தலும் பயனுள்ள வாழ்க்கை அனுபவத்தைப் பெறவும் அவர்களால் முடிவதில்லை. பரீட்சை களுக்கு ஆயத்தம் செய்வதிலேயே கூடிய அக்கறை செலுத்த வேண்டி யுள்ளது. ஒரு சில மாணவர்களே இதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடிகின்றது" என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாடசாலைப் பாடத்திட்டத்தில் இல்லாத பாடங்கள், திறன்கள் என்பவற்றுக்குத் தனியார் போதனை வழங்குவதில் தவறில்லை'.

'தனியார் போதனை அதிக புள்ளிகள் பெற உதவினாலும் நீண்ட காலத்தில் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய உளத் தாக்கத்தைக் கருத்திற் கொள்ள வேண்டும்'. 'பொதுவாக நன்றாகப் படிக்கக் கூடிய மாணவர்களைத் தனியார் போதனைக்கு அனுப்புவது அவர்களை அவசியமின்றி தண்டிப்பது போன்றதாகும்'. 'தனியார் போதனை பாடசாலைக் கல்வியின் குறைபாடுகள் காரணமாக எழவில்லை. பல மாணவர்களுக்கு மேலதிக உதவியும் பயிற்சியும் தேவை. அவர்களுடைய பல ஐயங்கள் தெளிவுபடுத்தப்படல் வேண்டும்' என்ற முறையில் தனியார் போதனையை நியாயப்படுத்தும் ஆய்வாளர்களும் உள்ளனர்.

இந்திய ஆய்வாளர்கள் தனியார் போதனை நிலையங்கள் பெருகுவதற்கான பல காரணங்களைத் தெரிவிக்கின்றனர்:

♦ மருத்துவம், பொறியியல், சிவில் சேவை, முகாமைத்துவமும் கணக்கியலும் ஆகிய துறைகளில் சேர்ந்து பயில உயர்ந்த புள்ளிகள் தேவை. பெற்றோர்கள் தமது பிள்ளைகள் இத்துறைகளிலேயே சேர்ந்து பயில வேண்டும் எனக் கருதுகின்றனர். இதற்கு உயர்ந்த பரீட்சைப் புள்ளிகள் அவசியம். இதற்குப் பெற்றோர்களும் பிள்ளைகளும் தனியார் போதனையை நாட வேண்டியதாகின்றது. இக்காரணம் இலங்கைக்கும் பொருந்தும். சார்பளவில் இலங்கையில் உயர்கல்வி வாய்ப்புக்கள் இந்தியாவை விடக் குறைவு.

♦ கல்வி முறையின் பரீட்சை நோக்கு ஒரு பெரிய குறைபாடாகக் கூறப்பட்ட போதிலும் அந் நோக்கத்தின் உருவாக்கத்துக்கு அரசாங்கமும் முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளது. மாணவர்கள் அரசாங்கப் பரீட்சைகளுக்கே ஆயத்தம் செய்யப்படுகிறார்கள். இப்பரீட்சைகளை அரசாங்கமும் மிகுந்த வினைத்திறனுடன் நடத்த முயல்கின்றது. பரீட்சைப் பெறு பேறுகளுக்கு அரசாங்கமும் முக்கியத்துவமளிக்கின்றது. உயர்கல்விக்கான அனுமதி, வேலை வாய்ப்பு போன்றவற்றில் பரீட்சைப் புள்ளிகளை வைத்தே திறமை சித்தி தீர்மானிக்கப்படுகின்றது. இத்தகைய சூழலிலேயே மாணவர்கள் தனியார் போதனையை நாடுகின்றது. இவ்வாறு நோக்குமிடத்து தனியார் போதனைக்கு அதிகாரத் தரப்பினரின் மறைமுகமான ஆதரவு உண்டு என்று கருதும் ஆய்வாளர்களும் உள்ளனர்.

♦ வகுப்பறையில் பல்வகைப்பட்ட மாணவர்கள் உள்ளனர். மெதுவாகக் கற்கும் பிள்ளைகள், கல்வியில் ஊக்கம் குறைந்த பிரிவினர், நூற் கல்வி கற்பதில் பலவீனமானவர்கள், பின்தங்கிய மாணவர்கள் எனப் பலதரப்பட்டவர்கள். இப்படிப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளை மாணவர் நிறைந்து காணப்படும் வகுப்பறைகளில் எதிர்பார்க்க முடியாது. ஆசிரியர்கள் எப்போதுமே முழுப் பாடவிடயத்தையும் கற்பித்து முடிப்பதிலேயே அக் கறை காட்டுவர். மேற்படி மாணவர்களில் அவர்கள் கவனம் குறைவு.

♦ மிகத்திறமையுடன் படிக்கும் மாணவர்களுக்கும் கூட மேலதிக கற்றல் பணிகளும் பயிற்சிகளும் தேவைப்படும். இவற்றை வழமையான வகுப்பறைகள் வழங்காத நிலையில் மாணவர்கள் தனியார் போதனையை நாட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

♦ பாடசாலைகளில் உயர் வகுப்புக்களில் பல்வேறு பாடங்கள் கற்பிக்கப்படுவதோடு, அப்பாடங்களுக்கான பாட விடயம் அடிக்கடி திருத்தப்பட்டு புதிய அல்லது மேலதிக உள்ளடக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகமாகின்றது. அறிவு மையநூற் றாண்டின் முக்கிய பண்பு அறிவுத்துறைகளில் ஏற்பட்டு வரும் புதிய வளர்ச்சிகளும் போக்குகளுமாகும். சகல ஆசிரியர்களும் பெற்றோர்களும் இப் புதிய பாட விடயங்களைப் பொறுத்தவரையில் பிள்ளைகளுக்கு உதவமுடியாத நிலையில் தனியார் போதனை தேவைப்படுகின்றது.

**இந்திய ஆய்வாளர்கள் எடுத்துக்கூறும் வேறு சில காரணங்கள் :**

- பாடத்திட்டம் அறிவு வளர்ச்சியின் காரண மாக விரிவடைந்து செல்லல்;
- திறமை வாய்ந்த ஆசிரியர்களின் பற்றாக் குறை;
- ஆசிரியர், மாணவர்களுக்கிடையே போதிய தொடர்பாடலின்மை;
- பாடசாலைக் கால அட்டவணையில் ஏற்படும் இடையூறுகள்;
- மாணவர்கள் அதிகளவில் இணைக் கலைத் திட்டச் செயற்பாடுகளில் ஈடுபடல்;
- தனியார் போதனை வகுப்புக்களுக்குத் தமது பிள்ளைகளை அனுப்புவதைப் பெற்றோர்கள் பெருமையாக நினைத்தல்;
- பெற்றோர்கள் தெரிவு செய்யப்பட்ட சில பாடங்களுக்கு அதிக முக்கியத்துவமளித்தல்;
- மாணவர்கள் பாடசாலைப் பணிகளின் பின் வீண் பொழுதைப் போக்கி பிரச்சினை களுக்குள்ளாவதைத் தவிர்க்க அவர்களைப் பயனுள்ள கல்விப்பணியில் ஈடுபட வைக்க வேண்டும் என்ற பெற்றோரின் கருத்து குறும் புக்காரப் பிள்ளைகளை அடக்கத் தனியார் போதனை ஒரு வழி.

## இலங்கை ஆய்வுகள்

தேசிய கல்வி ஆணைக்குழு 2011 ஆம் ஆண்டு செய்த ஆய்வொன்றின்படி பல முடிவு கள் கண்டறியப்பட்டன. 10 ஆம் தரம் மற்றும் 12 ஆம் தரங்களை சேர்ந்த 3300 மாணவர்கள் இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டனர். 15 மாவட்டங்களில் இருந்த 80 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இவர்கள். இந்த ஆய் வின்படி:

♦ 10 ஆம் தர மாணவர்களில் 92% மான வர்களும் 12 ஆம் தர மாணவர்களில் 98% மானவர்களும் தனியார் போதனையை நாடிய வர்கள். க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு ஆயத்தம் செய்வோரில் 96% மானோர்கள் தனியார் போதனையை நாடினர். பெரும்பாலான மாண வர்கள் கணிதம் (91%), விஞ்ஞானம் (73%), ஆங்கிலம் (68%) ஆகிய பாடங்களுக்காகவே போதனையை நாடினர்.

♦ உயிரியல், விஞ்ஞானம் மற்றும் கணித பிரிவில் பயின்றவர்கள் ஒரு பாடத்துக்கு இரு வகுப்புக்களுக்காவது சென்றனர். கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்கள் ஒரு பாடத்திற்கு ஒரு வகுப்பிற்கே சென்றனர்.

♦ 10 ஆம் தர மாணவர்கள் பெரும்பாலும் பெரிய வகுப்புக்களுக்கே சென்று படித்தனர். அதாவது சிறு குழுவினராகவோ, தனி ஆளா கவோ இப்போதனையை நாடியவர்கள் குறைவு.

♦ பெரும்பாலான 10 ஆம் தர மாணவர்கள் ஒரு கிழமையில் ஒரு நாள் மட்டுமே இப் போதனைக்கு சென்றனர். மிக குறைவானவர் களே கிழமைக்கு 3 நாட்கள் மட்டுமே இப் போதனையை நாடினர்.

♦ பெரும்பாலான 10 ஆம் தர மாணவர்கள் (50%) இரண்டு மணி நேர வகுப்புகளுக்கு சென்றதாக தெரிவித்தனர். ஆனால் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள் 4 மணி நேர வகுப் புக்களுக்கும் சென்றதாக கூறினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ தனியார் போதனை வகுப்புக்கள் வார இறுதி நாட்களிலும் பாடசாலை நேரத்திற்கு பின்னருமே நடைபெற்றன. பாடசாலை நேரத்தில் இவ்வகுப்புக்கள் நடைபெற்றதாக தெரியவில்லை.

♦ 10 ஆம் தர மாணவர்களில் பெரும்பாலானவர்கள் தமது போதனை ஆசிரியர்கள் பெரும்பாலும் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களாக இருந்ததாகத் தெரவித்தனர். அதாவது 65 சதவீதத்திற்கு மேற்பட்ட போதனா ஆசிரியர்கள் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள். உயர்தர வகுப்பு பாடங்களைப் பொறுத்த வரையில் உயிரியல் பாடத்தை தவிர ஏனைய பாடங்களை ஏனைய ஆசிரியர்களே கற்பித்தனர்.

♦ பெரும்பாலான மாணவர்கள் (61%) தமது வீடுகளிலிருந்து 4 கி.மீ தூரம் வரையே பயணம் செய்ய வேண்டி இருந்தது. 7 சதவீதமானவர்கள் மட்டும் 10 கி.மீற்றர்கள் அதிகமாக பயணம் செய்தனர்.

♦ 10 ஆம் தர மாணவர்கள் ஒரு பாடத்திற்கு மாதாந்தம் 325 ரூபாய் செலவு செய்தனர். உயர் தரத்தில் கலைப்பிரிவு மாணவர்கள் மாதாந்தம் 425 ரூபாவும் வர்த்தகப் பிரிவு மாணவர்கள் 450 ரூபாவையும் செலவு செய்தனர். விஞ்ஞான பிரிவு மாணவர்கள் மட்டும் ஒரு பாடத்திற்கு மாதாந்தம் 775 ரூபாய் செலவு செய்தனர். ஆயினும் இது பெரிய வகுப்புக்களுக்கே பொருத்தமான கட்டணங்கள். தனியாக அல்லது சிறு குழுக்களாக படிப்போர் அதிக கட்டணத்தை செலவு செய்ய வேண்டி இருந்தது.

♦ 93 சதவீதமான மாணவர்கள் தமது அறிவை மேம்படுத்துவதற்காக இவ்வகுப்பு களுக்கு செல்வதாகத் தெரிவித்தனர். பாட சாலையில் பாடத்திட்டம் கற்பித்து முடிக்கப் படாமை, பாடசாலை ஆசிரியர்கள் கற்பித்த விடயத்தைச் சரியாக விளங்க முடியாமை, பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள் பற்றி தனியார் வகுப்புக்களில் கிடைக்கக்கூடிய தகவல்கள், பரீட்சை வினாக்களுக்கு விடையளிக்க வழிகாட்டல்கள் பெறுதல், பாடசாலையில் போதிய தகவல்கள் தரப்படாமை. பாடசாலையில் போதிய பயிற்சிகள் வழங்கப் படாமை, பாடசாலைகளில் அதிகளவில் இணைப் பாடவிதான பணிகளில் ஈடுபடல் போன்ற காரணங்களால் தனியார் போதனை நாடுவதாக 10 ஆம் தர மாணவர்கள் தெரிவித்தனர்.

♦ 12 ஆம் தர மாணவர்களில் 91 சதவீத மானவர்கள் பாடசாலைகளில் இடம்பெற்ற போதனைக்கும் தனியார் போதனைக்கும் இடையில் சில வேறுபாடுகள் இருந்தன. தனியார் வகுப்பில் அதிக அறிவைப் பெறமுடியும் என்றும் அதிக நேரம் செலவிடப்படுகிறது என்றும் அவர்கள் கூறினர்.

♦ பிற மாணவர்கள் தனியார் போதனையை நாடுவதாகவும் பெற்றோர்களின் வற்புறுத்தலாலும் தனியார் வகுப்புக்களை நாடுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

♦ மறந்து போனபாட விடயங்களை ஞாபகப் படுத்தி கொள்ளவும் பாடசாலையில் கிடைக்கப் பெறாத பாட அறிவை பெற்றுக் கொள்ளவும் தனியார் வகுப்புக்களை நாடுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

♦ பாடசாலை ஆசிரியர்களில் நோக்கில் மாணவர்கள் தனியார் வகுப்புக்களை நாடு வதற்கான காரணங்கள்: அது ஒரு சமூக போக்கு, பரீட்சையில் இடம்பெறும் போட்டி, மற்ற மாணவர்களை பின்பற்றுதல், பெற்றோரின் வற்புறுத்தல். சுதந்திரத்தை அனுபவித்தல், சிறிது நேரம் களிப்படைதல், பாடசாலையில் பாடத்திட்டம் முடிக்கப்படாமை போன்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ பெற்றோரை பொறுத்தவரையிலான காரணங்கள்: மேலதிக அறிவை பெற்றுக் கொள்ளுதல், முழுப்பாடத்திட்டத்தையும் கற்று முடித்தல், சிறந்த பரீட்சைப் பெறுபேறுகள், பரீட்சை போட்டி போன்றன.

♦ 77 சதவீதமான க.பொ.த.உயர்தர மாண வர்கள் உயர்தர பரீட்சைக்கு அமர்வதற்கு தனியார் போதனை இன்றியமையாதது என்றும் அது கடுமையான போட்டிப்பரீட்சை என்பதால் தனியார் போதனை தேவை என்றும் கருதினர். மேலும் பாடத்திட்டம் அதிக சுமை யானது என்பதாலும் தனியார் போதனை அவசியமானது எனக்கருதினர்.

♦ தனியார் போதனை நிலைய ஆசிரியரின் கற்பித்தல் முறை ஆளுமை நெகிழ்வான போக்கு மாணவரிடத்து காட்டும் அன்பு போன்றன மாண வர்களை கவர்வதாக அவர்கள் தெரிவித்தனர். அத்துடன் தனியார் வகுப்புக்கள் மிகவும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களாலே நடாத்தப்படுகின்றன. நகர்ப்புற பாடசாலைகளில் இணை கலைத் திட்டச் செயற்பாடுகள் அதிகம் என்பதால் பல பாட விடயங்கள் மாணவர்களுக்கு தெரியாமல் போவதாலும்மாணவர்கள்தனியார்போதனையை நாடுகின்றனர்.

♦ பாடசாலைகளில் இடம்பெறும் மரபுவழி கற்பித்தலை விட தனியார் வகுப்புக்களில் நவீன சாதனங்களும் கற்பித்தல் முறைகளும் பயன் படுத்தப்படுகின்றன. இதனால் பின்தங்கிய மாணவர்களுடைய தேர்ச்சியும் அதிகரிக்கின்றது.

♦ பெரும்பாலான மாணவர்கள் தனியார் போதனை நிலையங்களுக்கு செல்வதால் தமது ஓய்வு நேரப் பணிகள் பாதிக்கப்படுவதாக கருதவில்லை. பெரும்பாலான பெற்றோர் களும் இக்கருத்தையே தெரிவித்தனர்.

♦ தனியார் வகுப்புக்கள் பல வகைகளில் நமக்கு உதவியதாக மாணவர்கள் தெரிவித்தனர். மேலதிக அறிவை பெறுதல், பரீட்சைக்கு ஆயத்தமாதல், பாடசாலையில் படிக்காத பாட விடயத்தை கற்றுக் கொள்ளுதல், முன்னதாகவே பாடத்திட்டத்தை கற்று முடித்தல், மேலதிக வினாக்கள் பற்றிய கலந்துரையாடல் போன்றன.

♦ 18 வீதமான மாணவர்கள் தமது ஓய்வு நேரம் கட்டுப்படுத்தப்படுகின்றமை என்றும் படிக்க போதிய நேரம் கிடைப்பதில்லை என்றும் தெரிவித்தனர். 27 சதவீதமான மாண வர்கள் மன அழுத்தமும், களைப்பும் ஏற்பட்ட தாக தெரிவித்தனர்.

## ஆய்வின் சில முடிவுகள்

♦ கல்வி முறையின் ஒரு பிரதான குறைபாடு அது பரீட்சையை மையமாக கொண்டிருப்பதாக இது ஒரு குறைபாடான அம்சமாக இருந்த போதிலும் சமூகம் இந்த பரீட்சை செயற்பாட்டில் அதிக நம்பிக்கையை வைத்துள்ளது.

♦ இப்பரீட்சை மையத்தன்மையை குறைக்கும் முறையிலேயே பாடசாலை மைய மதிப் பீட்டு முறை (SBA)அல்லது தொடர் மதிப்பீட்டு முறை கொண்டு வரப்பட்டுள்ளது. அதில் எவ்வளவு சிறப்புக்கள் காணப்பட்டு இருந்தாலும் சமூகம் அதற்குரிய அங்கீகாரத்தை வழங்க வில்லை. அத்துடன்இந்த (SBA)முறையின்பெறுபேறுகளை பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ள பின்வாங்கினர்.

♦ தனியார் போதனைக்கு செல்லாத மாண வர்களில் கணிசமான சதவீதமானவர்கள் பரீட்சைகளில் சிறந்த சித்திகளை பெற்றி ருந்தனர். இதனால் எல்லா மாணவர்களுக்கும் எல்லாப் பாடங்களிலும்தனியார் போதனை ஒரு தேவையாக இருக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ பரீட்சை போன்ற தனியார் போதனை முறையும் இன்று சமூகத்தால் பெரியளவில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. கணிசமான பிள்ளைகள் தனியார் போதனைக்கு செல்லும் போது மற்றவர்களும் அதனைப் பின்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

♦ பாடசாலை மட்டத்தில் இடம்பெறும் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை மேற்பார்வை செய்து கண்காணிக்கும் பணி முறையாக செய்யப்படுவதில்லை.

♦ தேசிய ஆசிரியர் இடமாற்ற கொள்கை முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இதனால் பாடசாலைகளில் ஆசிரியர் வளம் தொடர்பான ஏற்றத் தாழ்வுகள் காணப்படு கின்றன. இதனால் தூர பிரதேச பாடசாலைகள் பாதிப்படைகின்றன.

♦ இன்றைய கல்வி தேவைகளுக்கு ஏற்ற முறையில் ஆசிரியர் பயிற்சி ஏற்பாடுகள் திட்டமிடப்படுவதில்லை.

♦ காவல்துறையினரின் அறிக்கைகளின்படி தனியார் போதனைக்கு செல்லும் மாணவர்கள் பல துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்றார்கள். ஏராளமான ஒழுக்காற்றல் பிரச்சினைகளும், சமூக கருத்துக்கு முரணான பழக்கங்களும் மாணவர் மத்தியில் தோன்றுவதாக இந்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

♦ தனியார் வகுப்புக்களுக்கு செல்லும் மாணவர்கள் உடல், உள ரீதியாக பாதிக்கப் படும் சந்தர்ப்பங்களும் உண்டு. சமச்சீரான உணவின்மை, வேளைக்கு உணவருந்தாமை, துரித உணவுப் பழக்கம் என்பன பக்க விளைவு களை ஏற்படுத்துகின்றன.

♦ தனியார் போதனை வகுப்புக்கள் தொடர்பாக எதுவித மேற்பார்வையும் இல்லை. மத்திய அரசோ, மாகாண அரசோ இதற்கான விதி முறைகள் எதனையும் வகுக்கவில்லை.

♦ பெற்றோர்கள் தனியார் போதனைக்கு சென்றுவரும் பிள்ளைகளில் அதிக அக்கறை செலுத்துவதில்லை.

## பரிந்துரைகள்

♦ பாடசாலைகளை மேற்பார்வை செய்வதற்கான ஒரு அமைப்பை அரசாங்கம் ஏற்படுத்துதல் வேண்டும்.

♦ ஆசிரியர்களுக்கு போதிய ஊக்குவிப்புக் களை வழங்கி அவரை வகுப்பறையில் சிறப்பாக பணியாற்றும் வண்ணம் அவர்களை வலுப் படுத்த வேண்டும்.

♦ பாடசாலையில் இடம்பெறும் தொடர் மதிப்பீட்டில் முக்கியத்துவத்தை பெற்றோர் களுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டும். இதனால் பொதுப்பரீட்சையின் முக்கியத்துவத்தை குறைத்து, மாணவர்கள் தனியார் போதனையில் தங்கியிருக்கும் நிலையையும் குறைக்கலாம்.

♦ க.பொ.த.உயர்தர மாணவர்கள் பரீட் சைக்கு அமர **80%** நாட்களுக்கு வகுப்பில் சமூக மளித்து இருத்தல் வேண்டும் என்ற விதியை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

♦ தனியார் போதனை மாணவர்களில் ஏற்படுத்தும் பாதிப்பை கண்காணிக்க கல்வி அமைச்சில் ஒரு தேசிய குழுவை ஏற்படுத்தல் வேண்டும்.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் இவ் அறிக்கை யானது தனியார் போதனை என்ற விடயத்தில் இன்று தேசிய ரீதியாக அதிகளவு அக்கறை செலுத்தப்படுவதை எடுத்துக்காட்டுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும் அரசாங்கத்தின் மத்தியில் கல்வியாளர் மத்தியிலும் தனியார் போதனைக்கு ஆதரவான கருத்து இல்லை. சகல வழிகளிலும் தனியார் போதனைக்கான சமூக கேள்வியை குறைப்பதற்கான அல்லது முடிந்தால் இல்லா தொழிப்பதற்கான சிந்தனையை இவர்கள் மத்தியில் காணப்படுகின்றது என்பது நேர் கண்ட பரிந்துரைகளிலும் தெரிகின்றது. ஒரு புறம் தனியார் போதனை பாடசாலை கல்வியை கருத்தற்றதாக்கு கின்றது. மறுபுறம் பரீட்சை நிர்ப்பந்தங்களின் காரணமாக தனியார் போதனை அவசியமாகின்றது. தனியார் போதனை மாணவர்களில் ஏற்படுத்துகின்ற தீய பாதிப்புக்களை பற்றிய காவல்துறை மற்றும் பத்திரிகை அறிக்கைகள் கவலையை ஏற்படுத்துகின்றது. ஆனால் இந்த ஆய்வின்படி அவ்வாறு பாதிக் கப்படும் பிள்ளைகளின் சதவீதம் குறைவு எனத் தெரிகின்றது 7%. பாடசாலைகளும்பெற்றோர்களும்இவ்விடயத்தில் கூடிய அக்கறை செலுத்த வேண்டுமென்று இந்த ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர். இவ் விடயத்தில் இவ் அறிக்கை விரிவான பல ஆலோசனைகளை வழங் கியிருந்தது. 340 பக்கங்களைக் கொண்ட இந்த ஆய்வறிக் கையின் சாராம்சம் தமிழிலும் கிடைக்கும் எனத் தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அறிவுப் பரப்பை நோக்கி உளவியலை முன்னெடுத்தல்

பேராசிரியர் - சபா ஜெயராசா

உளவியல் தொடர்பான மரபு வழிச் சிந்தனைகளே நமது சமூகத்தில் மேலோங்கியுள்ளது. அதாவது, உளவியலைத் தனி மனித வாதத்தோடு, இணைத்துப் பார்க்கும் அணுகுமுறைகள் மேலோங்கியுள்ளன. சீர்மியச் செயற்பாடுகளும் அதே தளத்தில்தான் மேற்கொள்ளப்படுகின்றன. பல்கலைக்கழகங்களினதும், ஆசிரியர் கல்லூரி மற்றும் பயிற்சிக் கல்லூரிகளிலும் உளவியற் பாடக் கலைத்திட்டங்கள் பழைய தடத்திலே தான் சென்று கொண்டிருக்கின்றன.

உளவியலையும்கல்வியியலையும்வரலாற்றுப் பொருண்மிய இயங்கியலோடு இணைக்கும் முயற்சிகள் நமது உயர்கல்வி நிலையங்களில் வறிதாகவே உள்ளன. வரலாற்று இயங்கியலோடு தமிழியலைத் தரிசிக்கும் முயற்சியைப் பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோர் முன்னெடுத்துப் புதிய அறிவுப் பரப்பை நோக்கிய திசையைத் திறந்தமை ஒரு முக்கியமான நிகழ்ச்சி.

உளவியலை அத்தகைய திருப்பத்தோடு இட்டுச் செல்வதற்கு உலக நிலையில் உருவாக்கப்பட்ட ஒரு கருத்தியல் வடிவம்தான் "உற்றறி கோட்பாடு"

மரபுவழி உளவியலில் இருந்து விலகிய மாற்றுக் கோட்பாடாக "உற்றறி உளவியல்" (CRITICAL PSYCHOLOGY) மேற்கிளம்பியுள்ளது. அத்துடன் மரபு வழி உளவியலுக்கு அறைகூவல் விடுக்கும் வகையிலும் அதன் சிந்தனை வீச்சுக்கள் அமைந்துள்ளன.

சமூக மாற்றத்தின் வழியாகவே உளநோய்கள் தீர்க்கப்படலாம் என்பது உற்றறி உளவியலின் முடிபு. ஆழ்ந்து நோக்கினால் மார்க்சிய உளவியல் வழித் தடத்தில் உற்றறி உளவியல் எழுகோலம் பெறுவதைக் காணமுடியும்.

மரபுவழி உளவியல் தனிமனிதரை மட்டுமே குவியப்படுத்தி வளர்ச்சி கொண்டுள்ளது. சமூக நோக்கையும் சமூக இயங்கியலையும் உளப் பகுப்பியல், நடத்தையியல், மானிடவியல் முதலாம் உளவியலை உருவாக்கியோர் தரிசிக்கத் தவறவிட்டனர்.

மார்க்சியமே உளவியலைச் சமூகத் தளத்துக்கு இட்டுச் சென்றது. அதன் அடிச் சுவட்டில் உற்றறி உளவியல் தொடர்ந்து வருகின்றது.

சமூகத்தில் நிலவும் அதிகார வேறுபாடுகளும், அவற்றின் அழுத்தங்களுமே உள நெருக்குவாரங்களையும் உளநோய்களையும் உருவாக்குகின்றன. அந்நிலையில் ஒழுக்கு முறைகளையும் சுரண்டல்களையும் வேரோடு பிடுங்கியெறியும் சமூக மாற்றத்தின் வழியாகவே அனைவருக்கும் உளச் சுகத்தை வழங்க முடியும்.

மார்க்சியம் தவிர்ந்த ஏனைய உளவியற் கோட்பாடுகள் சமூக ஒடுக்குமுறைகளையும் மேலாதிக்கத்தின் வழியாக நிகழ்த்தப்படும் மன உடைவுகளையும் கண்டறியத் தவறிவிட்டன.

மார்க்சியச் சிந்தனைகளை அடியொற்றிய உளவியல் உருவாக்கத்தின் முன்னோடிகளாக பவ்லோங் மற்றும் வைக்கோட்சி ஆகியோர் விளங்குகின்றனர். பவ்லோங் என்பவர் உளவியலுக்கு நவீன பரிசோதனை வலுவைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார். வைக்கோட்சி என்பவர் கற்றல் என்பது சமூக விசைகளினூடாகவே நிகழ்த்தப் படும் செயல்முறை என்பதை ஆதாரப்படுத்தினார்.

மார்க்சியத் தடத்தில்அலெக்சி வியொன் யெவ் பண்பாட்டு வரலாற்று உளவியலையும் வினைப்பாட்டுக் கோட்பாட்டையும் (ACTIVITY THEORY) உருவாக்கினார். அக்கோட்பாட்டின் ஆதிக்கத்தில் பிறிதொரு மார்க்சியச் சிந்தனை யாளராகிய அலெக்சாண்டர் லரியாவும் பங்கு கொண்டார்.

அத்தகைய மார்க்சிய உளவியற் சிந்தனை களின் தொடர்ச்சியும் நீட்சியுமாக 1970 ஆம் ஆண்டளவில் உற்றறி உளவியல் உருவாக்கம் பெற்றது. பேர்னிலில் உள்ள பிறியி பல்கலைக் கழகத்தில் அது கால்கோள் கொண்டது. ஆனால் 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் அந்த உளவியல்தொடர்பான ஜேர்மன்எழுத்தாக்கங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படலாயின.

ஜேர்மனியில் வளர்ச்சி பெற்ற இளைஞர் இயக்கங்கள் மார்க்சியச் சிந்தனைகளை அடி யொற்றியே எழுகோலம் பெற்றன. பேர்லின் நகரமே இளைஞர் எழுச்சியின் மையமாக அமைந்தது. இளைஞர் எழுச்சியின் கருத்தியல் வேராக மார்க்சியம் அமைந்தது. பிரச்சினை களை விஞ்ஞானபூர்வமாக விளங்கிக் கொள் வதற்கு மார்க்சியத் தருக்கம் வழியமைத்தது. அத்தகைய பின்னணியில் உற்றறி உளவியல் தோற்றம் பெற்றது.

அதன் முன்னோடி எழுத்தாளராக விளங்கு பவர் கிலஸ் ஹோலஸ்காம். நடத்தைவாத உளவியலை அவர் முதற்கண் திறனாய்வுக்கு உட்படுத்தினார். மனித நடத்தைகள் தூண்டி– துலங்கல் என்ற பொறிமுறைக்குள் மட்டும் கட்டுப்பட்டவையன்று என்பதைச்சுட்டிக்காட்டினார். மனித நடத்தைகளை உருவாக்கும் பண்பாட்டு விசைகளையும் சமூக இயங்கியலையும், நடத்தைகளின் உள்ளமைந்த செயல்முனைப்புக் களையும் நடத்தை உளவியல் கட்டறியத் தவறிவிட்டதை விளக்கினார்.

விஞ்ஞான முறைமை பற்றிய ஆய்வுகளில் அவர் ஊன்றிய கவனம் செலுத்தினார். விஞ்ஞான மெய்யியலாளர் தோமஸ்சாமுவேல்உருவாக்கிய "ஆட்சி நிரலின் பெயர்ச்சி" (PRADIGM SHIFT) என்ற கருத்தாக்கமும் அவர் மீது செல்வாக்குச் செலுத்தியது.

வரலாற்றுத் தொடர்ச்சியில் சமூக மேலா திக்கமானது பொருண்மியக் கட்டமைப்பை தக்க வைத்துக் கொள்வதற்குரிய, மீள மீள ஆக்கும் செயல்முறையினை உருவாக்கி வந்துள் ளது. பண்பாடு என்பது செயற் பாடுகளை மீள மீளச் செய்யும் வடிவம்.

"சமூக மீளாக்கல்" (SOCIAL REPRODUCTION) பற்றிய மார்க்சின் கருத்துக்களை உள்வாங்கிய ஹோல்ஸ்காம் மனித நடத்தைகளை உரு வாக்குதலில் பொருண்மியப் பண்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

வகுப்பறை உளவியல் பற்றியும் அவர் விரி வாக ஆராய்ந்தார். வகுப்பறைக் கற்பித்தலும், அதன் அமைப்பும் வரலாற்று வளர்ச்சியுடன் தொடர்புடையவை. மார்க்சியக் கண்ணோட் டத்தில் கூறுவதானால் அதுவும் பண்பாடு போன்று அதிகாரத்தைத் தக்க வைப்பதற்குரிய செயற்பாடுகளை மீள மீளப் பிறப்பிக்கும் வடிவம்.

வகுப்பறைக் கற்பித்தல் தொடர்பான அவரது சிந்தனைகளில் மிசேல் பூக்கோவின் எழுத்தாக்களின் செல்வாக்கும் இடம்பெற் றுள்ளமையைக் காணலாம். வகுப்பறை உள் ளிட்ட அனைத்துப் பண்பாட்டு நிறுவனங்களும் அதிகாரத்தைச் செயற்படுத்தும் வடிவங்களாக இயங்குதலை பூக்கோ சுட்டிக் காட்டினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறைகள் மாணவரின் உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்ப்பதில்லை. கற்பித்தல் உபாயங்கள் அனைத்தும் மாணவரின் ஆற்றல்களை முழுமையாக வளர்க்க முடியாத செயற்பாடுகளையே மேற்கொள்கின்றன. அதற்குப் பதிலாக "விரிவாக்கற் கற்றல்" (EXPANSIVE LEARNING) என்ற கருத்தாக்கத்தையும் அதனைச் செயற்படுத்தும் வழிமுறைகளையும் முன்வைத்தார். சூழமைவுகளில் கற்றல் (LEARNING IN CONTEXTS) என்பதே அவரின் மாற்று எடுத்துரைப்பு.

உற்றறி உளவியலைக் கட்டியெழுப்பும் பல்வேறு எழுத்தாக்கங்கள் இருபத்தோராம் நூற்றாண்டிலிருந்து அதிக அளவில் வெளிவரத் தொடங்கியுள்ளன.

மான்செஸ்டர் மெற்றபோலிட்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இயன் பார்க்கர் மற்றும் எரிக்கா பர்மன் ஆகியோர் ஒன்றிணைந்து "உற்றறி உளவியலின் ஆண்டு மீள்நோக்கு" அறிக்கைகளை வெளியிட்டனர்.

உற்றறி உளவியலில் இடம்பெறவேண்டிய நான்கு முக்கியமான கூறுகள் அந்த அறிக்கையிலே வலியுறுத்தப்பட்டுள்ளது. அவையாவன :

1. மரபுவழி உளவியலானது அதிகாரத்தில் உள்ளவர்களையும், அவர்களின் கருத்தியலையும் நிலைநிறுத்துவதற்கு எவ்வாறு செயற்பட்டு வருகின்றது என்பதைப் பரிசீலனைக்கு உட்படுத்துதல்.

2. வரலாற்று வளர்ச்சியில் உருவாக்கம் பெற்ற பிரதான உளவியல் வகைகள் வரலாற்று நியமங்களாலும் பண்பாட்டுக் காரணிகளாலும் கட்டுமை (CONSTRUCT) செய்யப்பட்டுள்ள விதத்தை ஆராய்தல். அத்துடன் மாற்று வகையான உளவியல் எவ்வாறு எதிர்த்துத் தாக்குப் பிடிக்கின்றது என்பதைக் கண்டு கொள்ளல்.

3. புலமை நிலை மற்றும் வாண்மை நிலைக் கோட்பாடுகளையும் நியமங்களையும் நடைமுறைகளையும் மீறிய வகையில் நாளாந்த வாழ்க்கையில் உளவியல் செயற்படும் விதங்களையும் மனிதர் உருவாக்கும் தற்கட்டுப்பாட்டு வடிவங்களையும் ஆய்வுக்கு உட்படுத்துதல்.

4. உளவியற் புலமையாளரும் வாண்மையினரும் நாளாந்தம் எந்த வகையிலே தொழிற்படுகின்றனர் என்பதைக் கண்டறிதலும் அவற்றிலிருந்து அவர்களின் ஒருதலைப்பட்சமான செயற்பாடுகளை மறுதலிப்பதற்குரிய ஏற்பாடுகளை உருவாக்கித் தருதலும்.

அறிகை நிலையிலே மாற்றுக் கருத்துக்களைத் தாங்கியுள்ள உற்றறி உளவியல், அதனோடிணைந்த ஏனைய துறைகளிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தி வருகின்றது. விடுதலை உளவியல், நல உளவியல், உள மருத்துவம், சூழலியல் உளவியல், சீர்மிய உளவியல் முதலாம் துறைகளிலும் அதன் கருத்தியற் செல்வாக்கு நீட்சி கொண்டு வருகின்றது.

அண்மைக் காலத்தைய நேர்நிலை உளவியல் (POSITIVE PSYCHOLOGY) துறையிலும் அதன் செல்வாக்கு விரவியுள்ளது. உளநோய்க்குச் சிகிச்சை செய்வதைக் காட்டிலும் திருப்தியான வாழ்வுக்குரிய வழிவகைகளை அமைத்தலும் விஞ்ஞான விளக்கங்களைத் தேடுதலும் ஊடு தலையீடுகளை மேற்கொள்ளலும் நேர்நிலை உளவியலில் முன்னெடுக்கப்படுகின்றன.

உளமருத்துவச் செயற்பாடுகளை நிராகரிக்கும் எதிர் உள மருத்துவமும் (ANTI PSYCHIATRY) உற்றறி உளவியலின் செல்வாக்கை உட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது. உளநோய்க்குக் கொடுக்கப் படும் மருந்துகளால் ஏற்படும் பாதிப்புக்களும், மின் அதிர்ச்சி முறையால் நிகழும் எதிர் விளைவு களும், திறனாய்வுடன் நோக்கப்படுகின்றன. மாற்று வழிகளிலே மனச்சுகம் தேடல் பற்றிய நடவடிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. உற்றறி உளவியல் தோற்றம் பெறுவதற்கு முன்னரே மார்க்சிய சிந்தனைகளின் செல் வாக்கு எதிர் உள மருத்துவச் சிந்தனைகளைத் தோற்றுவித்துள்ளது. 1967 ஆம் ஆண்டிலே டேவிட் கூப்பர் "எதிர் உள மருத்துவம்" என்ற சொல்லாட்சியை உருவாக்கியமை குறிப்பிடத் தக்கது.

மார்க்சியத்தின் செல்வாக்கினுக்கு உட்பட்ட பிறிதோர் ஆய்வாளராகிய மிசேல் பூக்கோ மனநோய் என்பது மேலாதிக்கத்தினால் கட்டுமை செய்யப்பட்ட வடிவம் என்று விளக் கியதுடன் அந்தக் கருத்தாக்கத்தை வினாவுக்கு உட்படுத்தினார்.

மார்க்சியத்தின் உள்வாங்கலோடு உருவாக் கம் பெற்ற உளவியற் கோட்பாட்டு விடுதலை உளவியல் (LIBERATION PSYCHOLY) அல்லது விடுதலைச்சமூக உளவியல்அமைந்து வருகின்றது. தென் அமெரிக்கச் சூழலில் வளர்ச்சி பெற்ற அந்த உளவியல் ஒழுங்குமுறைச் சமூகத்தை மாற்றியமைக்கும் உளவியல் நடவடிக்கை களை அடிப்படையாகக் கொண்டது.

மார்க்சியமும்உற்றறிஉளவியலும்அவற்றோடு இணைந்து வளர்ந்து வரும் இணைந்த உளவியற் சிந்தனைகளும், ஏற்றத்தாழ்வும் ஒடுக்கு முறையும், மேலாதிக்கமும் மிக்க சமூகத்தையும் அவற்றால் அவலமுறும் மனித மனங்களையும் ஊடுருவி நோக்குகின்றன. மாற்று அணுகு முறைகளை முன்வைக்கின்றன.

## நோக்கிய நூல்கள்

I. Harwood, vi (2006) Diagnosing Disorderly Children, London Newyork: Routledge.

Ibanez, T & Iniguez R#ueda,L.(1997), Critical Social Psychology: Sage Books.

S loan, t.(ed.) (2000) Critical Psychology: Voices for change , London: Macmillan.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் ஆசிரியர்கள் உளவளத்துணையாளராக செயற்படுதல் :
## திறன் விருத்தி பற்றிய விசாரணை

*பேராசிரியர் மா.சின்னத்தம்பி*

◆ அறிமுகம் :

எமது நாட்டில் அசாதாரண நிலைமைகள் முன்னொருபோதும் இல்லாதவாறு உருவாகி வருகின்றன. மூன்று தசாப்த கால அமைதி யின்மை, சுனாமிப் பேரலைப் பாதிப்பு, தொடர்ச்சியான இடப்பெயர்வுகள், குடும்பங் களின் சிதைவு, நவீனமயமாதலிலான தீவிர மோகம் போன்ற நிலைமைகளினால் மாண வர்கள் இயல்பாக வளர முடியவில்லை; கற்க முடியவில்லை ; வாழ முடியவில்லை.

கற்றல், தொழில் பெறுதல், சமூக மாற்றங் களுக்குள் தப்பிப் பிழைத்தல் போன்றன தொடர்பாக பல உள நெருக்கீடுகளை அவர்கள் எதிர்கொள்கின்றனர்.

இதனால் பாடசாலைகளில் ஆசிரியர்கள் தமது கற்பித்தலுக்கு மேலதிகமாக உளவளத் துணை சேவை (Counselling) களில் ஈடுபட வேண்டியது அவசியமாயுள்ளது.

இதற்கான பல்வகைப்பட்ட திறன்களை கற்று, தேர்ச்சி பெற வேண்டியுள்ளது. இக்கட்டுரை உளவளத்துணையின் வளர்ச்சியையும், அச்சேவை தொடர்பாக ஆசிரியர் பெறவேண்டிய திறன்களையும் பற்றி கவனம் செலுத்துகிறது.

◆ பாடசாலைகளில்
**உளவளத் துணைச் சேவையின் வளர்ச்சி**

ஒரு மனிதன் மற்ற மனிதர்களைப் புரிந்து கொண்டு அவர்களது ஆத்மார்த்த தேவை களுக்கு உதவுதல் என்பது மதிப்புமிக்க சேவை யாகும். ஆசிரியர்கள் வரலாற்றுக் காலத்தில் இதனை கற்பித்தலிலிருந்து பிரிக்க முடியாதவாறு செய்து வந்துள்ளனர்.

ஓவியம், இசை, மொழி என்பன ஒரு மனிதன் தனது உணர்வுகள் வழியாக மற்றவர்களு டன் தொடர்பாடல் செய்வதற்குரிய வழிமுறை களாகும்.

சிந்தனைகளையும் எண்ணங்களையும் மொழியின் வாயிலாக வெளிப்படுத்துவ தென்பது விசேடமான நுட்பமான திறனாகும். மற்றவர்கள் தம்மைத் தாமே வெளிப்படுத்து வதற்கு மொழியையும் அதன் சொற்களையும் கவனமாக பயன்படுத்துவதென்பது உளவளத் துணையின் உள்ளடக்கிய சவாலாகும்.

இடைநிலை வகுப்பு மட்டத்தில் கட்டிளமைப் பருவ மாணவர்கள் இயல்பாகவே பல அக நிலை முரண்பாடுகளை உருவாக்கிக் கொள்வதுண்டு. புதிய எதிர்பார்க்கைகள், புதிய சவால்கள், புதிய அங்கீகாரம், சுதந்திரம் போன்றன தொடர்பாக இடைநிலை வகுப்பு மாணவர்கள் புதிய சவால்களை உருவாக்கி விடுகின்றனர்.

தற்போது ஆசிரியர்கள் கற்பித்தலுடன் உளவளத்துணை சேவைகளையும் இணைந்த வகையில் ஆற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கப் படுகின்றனர். மாணவர்களை தெளிந்த சிந்தனை கொண்டவர்களாக மாற்றுவது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

ஒழுக்க விதிமுறைகளும், பண்பட்ட மனித நடத்தை மற்றும் மதிநுட்ப ஆற்றல் என்ற மூன்றையும் ஆசிரியர்கள் கவனமாக மாணவர்கள் தொடர்பாக பயன்படுத்த வேண்டும். முன்பு ஆசிரியர்கள் மெற்கொண்ட ஆன்மிக வழிகாட்டல் என்பது கூட இவ்வகையானதுதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் தனிப்பட்ட தேவைகள் பற்றிய கவன ஈர்ப்பு என்பதற்கு நீண்ட காலமாக பாடசாலைகளில் முன்னுரிமை வழங்கப்பட வில்லை. குடும்பம் பற்றிய மஸ்குறோவ் (1976) வின் ஆய்வுகளும், பெற்றோர்–பிள்ளைகள் உறவு பற்றிய நியூசனின் (Newsons, 1963) ஆய்வும், குடும்பம் மற்றும் பாடசாலை பற்றிய டக்லஸின் (Donglas, 1964) ஆய்வுகளும் பகுதி பகுதியாக உளவளத்துணை பற்றிய கருத்தியல் வளர்ச்சிக்கு துணைசெய்து வந்துள்ளன.

பாடசாலை செயலமர்வு முறைகள் அதன் பல்வகைத் தன்மை மற்றும் ஒன்றிணைந்த தன்மைகள் மாத்திரம் மாணவரது தனிப்பட்ட தேவைகளை மதிப்பிட உதவமாட்டாது என் பதும் அதற்கென நுட்பங்களும் (Technigus) செயன்முறைகளும் (Process)வேண்டும் என்றும் 1960 களில் பிரித்தானியாவில் கண்டறியப் பட்டது.

ஆன்மிக பராமரிப்பு, வழிகாட்டல், உள வளத்துணை என்பன தொடர்பாக தெளிவான வேறுபாடுகளை உருவாக்குவது பாடசாலை மட்டத்தில் தொடக்க காலத்தில் கடினமாக வேயிருந்தது.

எனினும் 1960 களில் மானிடவியல் சிந்தனை யாளர்கள் உளவளத்துணை தொடர்பான சில கொள்கைகள் உருவாக முடிந்தது. கார்ல் றோஜஸ் (Carl Rosers) லெனா றெயிலர் (Leona Tyler), கில்பட் றென் (Gilbrt wrean) போன்றோரின் பங்களிப்பு இதற்குப் பெரிதும் உதவியது.

பாடசாலைகளில் உளவளத்துணையை இணைப்பது தொடர்பான உத்தியோகபூர்வமான கலந்துரையாடல் உளநலன் சார்ந்த தேசிய சங்கத்தினால் 1963 இல் ஏற்பாடு செய் யப்பட்ட கருத்தரங்குடனேயே தொடங்கியது.

தனிப்பட்டதும், சமூக ரீதியானதுமான சுய சீராக்கம் தொடர்பான சிக்கல்கள் பற்றி பொதுவான அம்சங்களில் உரையாடப்பட்டது.

பிரித்தானியாவில் கீல் மற்றும் ரீடிங் பல்கலைக்கழகங்கள் ஆசிரியர்களுக்கு ஐந்து வருட கற்பித்தல் அனுபவங்களுடன் உளவளத் துணையில் பயிற்சி வழங்கினர்.

இது படிப்படியாக வளர்ச்சி பெற்று பாடசாலை களில் உளவளத்துணையாளர் (Counsellors) நியமிக்கப்படலாயினர். இது பாடசாலைக் கல்வியில் புதிய விசையாக அறிமுகமானது. முரண்பாடு கொண்டதாகவும், நம்பிக்கையளிப் பதாகவும், கோட்பாட்டு புரிதல் கொண்டதாகவும், நடைமுறைத்திறன்களுக்குரிய மூலமாகவும் உளவளத்துணை பாடசாலைகளில் நோக்கப் பட்டது.

ஐக்கிய அமெரிக்காவிலும் கலாசார பல் வகை, தொழில் வழிகாட்டல் தேவைகள் என்ப வற்றால் பாடசாலைகளுக்கு உளவளத்துணை யாளர்களை நியமிக்க வேண்டிய தேவை உருவானது.

பாடசாலைகளின் உண்மையான பணிகளை உளவளத்துணை சேவை சிதறடித்து விடும் என்ற வாதத்தை றிச்சாட்சன் (Richardson 1979) முன்வைத்தார்.

எனினும் நிலைமைகள் மாற்றம் பெற்றன. பிரித்தானியாவில் 1987 இல் உளவளத்துணை யாளர்கள் பாடசாலைகளில் பணியாற்றினர். ஆசிரியர்களுக்கும் உளவளத்திறன்கள் அவசியம் என்ற கருத்தும் படிப்படியாக வளர்ச்சி பெற்றது.

தனிப்பட்ட மாணவரது பிரச்சினைகள் சமூக வளர்ச்சிக்கேற்ப மாறுபட்டபோது இச்சேவை அவசியம் என உணரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இத்துறையில் ஆசிரியர்களுக்கு பயிற்சி அவசியமாகின்றது; மன அழுத்தம் இன்றி ஆசிரியர்கள் இப்பணியாற்றவும், அது மாணவரை பாதிக்காது இருப்பதற்கும் ஆசிரியர்க்கான இத்துறைப் பயிற்சி அவசியமாயிற்று.

1988 இன் பிரித்தானிய கல்வி சீர்திருத்தங்கள் இதற்கான கலைத்திட்டம் வடிவமைப்பதை வலியுறுத்தியது. இதன்மூலம் மாணவரது ஆன்மிக, ஒழுக்க, கலாசார, உள, உடல் தேவைகளை மேம்படுத்த உதவக்கூடியதான கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

இத்தகைய வளர்ச்சி இலங்கையை காலம் தாழ்ந்தே (2000 ஆண்டளவிலேயே) வந்து சேர்ந்தது.

◆ **உளவளத்துணை – எண்ணக்கரு**

சிக்மன்ட் பிராய்டின் உளப்பகுப்பு ஆய்வு அணுகுமுறையிலிருந்தே உளவளத்துணை எண்ணக்கரு வளர்ச்சி பெற்றது.

தேசிய திருமண வழிகாட்டல் சபையூடாக 1950 களில் பிரித்தானியாவில் இது அறிமுகமானது.

உளவியல் பற்றிய மானிடவியல் சிந்தனையாளரான கார்ல் றோஜஸ் (Carl Rogers) என்பவரின் ஆய்வு இதற்கு வலுச் சேர்த்தது. ஸ்கின்னரின் நடத்தைவாத சிந்தனையும், வாட்சனின் நடத்தைவாத விளக்கங்களும் இதற்கு உதவின. தம்மைப் பற்றிய முடிவுகளை தமக்கு தாமே பொறுப்பு ஏற்பதனூடாக மேற்கொள்வதற்கான முதிர்ச்சியை பெறுவதற்கு தனிநபருக்கு உதவும் செயன்முறைதான் உளவளத்துணை என்று ஜோன்ஸ் (1970) விளக்கினார்.

உதவுபவர்–பயனாளி மற்றும் பிரச்சினை தீர்த்தல் சார்ந்ததாகவும் இது விளக்கப்படுகிறது.

தனிப்பட்டவரது சுதந்திரம், இரகசியத் தன்மை என்பன சார்ந்த எல்லைகளையும், கடப்பாட்டையும் தெளிவாக ஒருவர் ஏற்றுக் கொள்வதுதான் உளவளத்துணை என்றும் விளக்கப்படுகிறது.

தாதியர், ஆசிரியர், சமூக சேவையாளர், நிரல் முகாமையாளர், ஆளணி அலுவலர் போன்ற பலரும் இதில் ஈடுபட்டாலும் அவர்களது பணிகளின் தன்மைகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்படும்.

தெளிவான உள்நோக்கத்துடன், ஆளிடைத் திறன்களை பயன்படுத்தும் போது உளவளத் துணையின் பெறுமானம் அதிகரிக்கிறது.

பயனாளியின் மதிப்பையும், தனிநபர் வளங்களையும், ஆற்றலையும் அவர்களுக்குரிய கலாசார பண்புகளுக்குட்பட்ட வகையில் மதிக்கத் தக்கதாக பயனாளியின் பணிகளில் உதவி செய்தலே உளவளத் துணை என்றும் விளக்கப்படுகிறது.

பயனாளியின் நன்மை கருதி உளவளத் துணையாளர் தனது திறன்களை பயன்படுத்தும் செயலாகவும் இது விளக்கப்படுகிறது.

பயனாளியின் உணர்வுகள், சிந்தனைகள் மற்றும் நடத்தைகளை ஏற்றுக் கொள்வதற்கு அவர்களை ஆழமாக தேடுதலாகவும் இது அமைகிறது.

உளவளத்துணையாளர் தமது திறன்களை பயன்படுத்தும் போது உண்மையாகவும், பாரபட்சமின்றியும், மரியாதையுடனும் செயற்படுதல் மிகவும் அவசியம்.

உளவளத்துணையாளர்கள் இரகசியத் தன்மை, பொறுப்புடைமை, ஒப்பந்தம், எல்லைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் என்பன தொடர்பாக வெவ்வேறு முக்கியத்துவத்தை வெளிப்படுத்த வேண்டும்.

ஆசிரியர்கள் இப்பணிகளில் ஈடுபடும் போது நம்பகம் (Trust) என்பதை பேணுதல் வேண்டும். இரகசியம் பேணப்படுதலே தெளிவாக இருத்தல் வேண்டும். உடல் மற்றும் பாலியல் துஷ்பிர யோகங்களுக்குட்பட்ட மாணவருக்கான உளவளத்துணையின் போது இரகசியம் பேணுதல் மிகவும் அவசியமாகும்.

தமது ஆற்றலை கண்காணிப்பதிலும், மேம்படுத்துவதிலும், மேற்பார்வை செய்வதிலும், ஒழுங்குபடுத்துவதிலும் உளவளத்துணை ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இதற்குப் பொருத்தமான பயிற்சிகளை ஆசிரியர்கள் பெறவேண்டும்.

- **ஆசிரியர்களுக்கு தேவைப்படுகின்ற திறன்கள்**

உளவளத்துறை சார்ந்த அறிமுக கற்கை களில் நுண்பாக பயிற்சி மாதிரிகையின்படி திறன் சார்ந்த மூலகங்கள் சேர்க்கப்படுவதுண்டு. இத்தகைய நுண்பாக பயிற்சியானது 1960 களில் ஐக்கிய அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப் பட்ட நுண்பாக கற்பித்தலை அடிப்படையாகக் கொண்டதாகும்.

போதித்தல், செய்முறை, அவதானம், பின் னூட்டல் என்பவற்றின் மூலம் நடத்தை தொடர் பான மாறுதல்களை அவதானிப்பதாக அந்த நுண்பாக முறை அமைந்திருந்தது.

கலாசார காரணிகள் இதில் பல தடைகளை ஏற்படுத்துகின்றன என்பதும் அவதானிக்கப் பட்டது.

மிகவும் நியம அடிப்படையில் குறிப்பிடப் படும் பாகுபாடு எதுவும் உளவளத்துணைத் திறன்கள் தொடர்பாக காணப்படுவதில்லை. உதவுதல் தொடர்பான திறன்களாகிய புரிந்து கொள்ளுதல், மிகவும் சௌகரியமாக இருத்தல், நெருக்கடிகளை கையாளுதல், நேர்மறை செயல்கள் என்பன இங்கு முக்கியமானவை.

உதவுகின்ற படிமுறைகளின்போது ஒவ்வொரு செயன்முறைகளுக்குமான திறன்களதும் முக்கியமானவைதான் என்று ஈகன், காகஃப், ஹம்பிலின், ஜோன்ஸ் போன்ற பலர் நம்பு கின்றனர்.

பிரதிபலித்தல், விழிப்புணர்வு அல்லது உணர்வுகளைப் புரிந்து கொள்ளுதல் போன்ற வசதி வழங்கும் திறன்களும் முக்கியமானவை என்ற அணுகு முறையும் உண்டு.

எனினும் ஜேக்கப் (Jacob,1999) பின் பாகு பாட்டின் அடிப்படையில், பின்வரும் சிறப்பான திறன்கள் உளவளத்துணையாளர்களுக்கு மிக அவசியமாயுள்ளது.

- கவனமாக செவிமடுத்தல்
- அக்கறை காட்டுதல் அல்லது பிரதி பலித்தல்

**கவனமாக செவிமடுத்தல்**

உதவி பெற விரும்புபவரது கண்களை கூர்ந்து பார்த்துக்கொண்டு, ஆறுதலாக அமர்ந்து கொண்டு கவனமாக கூர்ந்து உதவி தேவைப்படுபவர் சொல்வதை அவதானிக்க வேவண்டும்.

உதவி தேவைப்படுபவரது உணர்வுகளை விளங்கிக் கொள்ளும் விருப்பத்துடன் செவி மடுத்தல் மிகவும் அவசியம். கூறுபவரின் குரலில் திடீரென மிகப்பெரிய மாறுதல் ஏற்பட லாம். வெறுமனே காதால் கேட்டல் என்பதற் காகவன்றி சொல்லப்படுவதை தெளிவுடன் விளங்கிக் கொள்ளவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல் சாராத முகவெளிப்பாடுகள், அங்க அசைவுகளின் தன்மை, வேகம், சடுதியான மாற்றங்கள், ஒரு சொல்லை திரும்பத் திரும்பச் செய்தல் போன்றவற்றையும் கூர்ந்து அவதானித்து அதன் பொருளை விளங்கிக் கொள்ள வேண்டும்.

தொடர்பாடலில் சொற்களின் பங்கினை விடவும் ஏனையவைதான் முக்கியமானவை.

மெராபியன் (Mehrabian 1971)தொடர் பாடலின் கூறுகளை பின்வருமாறு தெளிவு படுத்துகிறார்

- சொற்கள் 7% மாத்திரம்
- தொனி, அதன் மாற்றம் 38%
- மொழி சாராதன 55%

இதன்படி மொழி சாராத தொடர்பாடலுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். பண்பாடு களைப் பொறுத்து இந்த வெளிப்பாடுகள் வேறு படும் என்பதையும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

ஒத்துணர்வுடன் (Empathy)செவிமடுத்தல் என்பதும் முக்கியமானது. சொல்பவரைப் போல உணர்ந்து கொள்ள முயற்சித்தல் மிகவும் அவசியம். பலவிதமான கலாசாரங்களில் தொடர்பாடல் தொடர்பான தனித்தன்மைகள் பற்றி உளவளத்துணையாளரது திறன்களை விளக்குபவர்கள் அதிக கவனம் செலுத்தவில்லை. பெரிதும் பிரித்தானிய அல்லது அமெரிக்க தொடர்பாடல் பண்பாட்டினடிப்படைகளே விளக்கப்படுகின்றன.

அமைதியாக இருப்பதற்குமான வனப்பையும் கேட்பவர் போதியளவு வழங்க வேண்டும். மிகவும் சிக்கலான இடைவினையுறவின் வெளிப்பாடுதான் மௌனமாக இருத்தலாகும். ஒரு கேள்விக்கு விடையளிப்பதற்கு ஆசிரியர்கள் குறைந்தது 0.7 வினாடிகள் வழங்க வேண்டும் என ஜேக்கல் விளக்குகிறார். மாணவரது பிரச்சினையின் தன்மையைப் பொறுத்து இந்த மௌனத்தின் நேரம் நீண்டதாகலாம்.

மௌனத்தின் பொருளை நுட்பமாக விளங்கிக் கொள்வதில் உளவளத்துறையாளர் கவனம் செலுத்த வேண்டும். முரண்பாடுகள் கூட மௌனமாக வெளிப்பட முடியும். இதனை நன்கு உணர்ந்து ஆசிரியர் செயற்பட வேண்டும்.

கேட்கும் சூழல் அதாவது பௌதிக நிலை மைகள் அமைதியாகவும், இதமாகவும் இருத்தல் வேண்டும். இருக்கும் அறை, இருக்கை, தனியான சுதந்திரம் என்பனவும் நேர் முறை யானவையாக இருத்தல் வேண்டும்.

## ■ அக்கறை காட்டுதல்

பலருக்கு தாம் நினைப்பதை அதற்குரிய சொற்களில் வெளிப்படுத்த தெரியாது. சிலர் மன அழுத்தத்திலிருப்பதாக கூறுவர். குறித்த நேரத்தில் மாத்திரம் அவ்வாறு தென்படுவோர்; கோபத்தையும் பல வடிவங்களில் வெளிப்படுத்து வார்கள்.

இதனால் உளவளத்துணையாளர் அவற்றை அதாவது உணர்வுகளையும், மனவெழுச்சி களையும் எந்த அளவிலிருப்பதென்பதை மிகவும் சரியாக உணர்ந்துகொள்ளக் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

காதால் கேட்பதிலிருந்து மிகச் சரியானதை உணர்ந்து கொள்வதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும்.

பொருத்தமற்ற சொற்களைக் கூட சிலர் பயன்படுத்தலாம். அத்தகைய உணர்வுபூர்வமான நிலைமைகளில் வெளிப்படும் பொருத்தக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடான சொற்களிலிருந்தும் மிகவும் சரியானதை விளங்கிக் கொள்ள ஆசிரியர்கள் முயற்சித்தல் வேண்டும். முரண்பட்ட வெளிப்பாடு களையும் மாணவர்கள் சில சமயம் காட்ட முடியும்.

சில சமயங்களில் மாணவர்கள் தெளிவாக பேசும் வரை ஆசிரியர்கள் அவர்களை தொடர்ந்து பேசுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும். ஒரு சகபாடி போன்ற நடத்தையையும் வெளிப்படுத்தி உண்மை விபரங்களை பெற முயலவேண்டும்.

அன்பையும் வெறுப்பையும் முரண்பட்ட வகையில் மாணவர்கள் சில சமயம் வெளிப் படுத்துவர். குழப்பமடைவர்; குற்ற உணர்வுடன் பேசுவர். அப்போது பொறுமையுடன் அவர்களை புரிந்து கொள்ள ஆசிரியர்கள் முயற் சித்தல் வேண்டும்.

உணர்வுபூர்வமாக தகவல்களை வெளிப் படுத்தும் பொது அவர்களது அதே நிலைக்கு தம்மை மாற்றி–தம்மை எளிமைப்படுத்தி அவர்களை நம்பும்படி செய்து பூரணமான விவரங்களை பெற வேண்டும்.

கேட்கும் போது ஆசிரியர்கள் தாம் உணர்ச்சி வசப்படுதல் கூடாது. தம்மை நிதானமாக சம நிலையில் வைத்துக் கொள்ளும் ஆற்றலையும் மேம்படுத்த வேண்டும்; பரபரப்படைதல், அதிர்ச்சியடைதல், கழிவிரக்கம் கொள்ளுதல் போன்ற அசாதாரண உணர்வு நிலைகளுக்கு உட்படல் ஆகாது.

பொருத்தமான வினாக்களைத் தொடுத்து குறிப்பான–துல்லியமான விவரங்களை பெறுகின்ற திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். கலந்துரையாட அல்லது புதிதாய் ஒன்றை அறிந்து கொள்ள விரும்பினால் திறந்த வினாக்களை (பொதுவான மாதிரி வினாக்களை) கேட்பது நல்லது.

ஏன் என்ற மாதிரி வினாக்களை எப்போதும் பயன்படுத்தக் கூடாது. பொய்யான விடைகளை மாணவர் தயார் செய்வதற்குரிய சூழலை உருவாக்குதல் கூடாது.

கவனமாக செவிமடுப்பதாக காட்டிக்கொள் வதற்கு பொருத்தமற்ற வகையில் அல்லது அளவுக்கதிகமாக மாணவனை தடைப்படுத்தல் கூடாது.

சொல்பவர் "தாம் மிகச் சரியாக ஆசிரியரால் விளங்கிக் கொள்ளப்படுவதாக" நம்பும்படி ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும்.

பேசிக் கொண்டிருக்கும் போதே தீர்மானம் ஒன்றை எடுத்துவிட்டது போல் "சாடை"களை வெளிப்படுத்தக்கூடாது. மாணவர்கள் சில சமயம் தம்மை சோதித்துப் பார்ப்பதாக எண்ணுவதற்கும் இடமளித்தல் கூடாது.

இயன்றளவு ஆசிரியர் மாணவர்கள் கூறும் விடயத்தை தமது அனுபவங்களுடன் தொடர்பு படுத்திப் பார்த்தல் விரும்பத் தக்கது.

உரையாடும்போது விடயங்களை கண்டபடி மாற்றி மாற்றி குறுக்கு கேள்விகளை கேட்டல் ஆகாது. அவர்களது முறையில் விரிவாக–விபரமாக தமது பிரச்சினையை தெளிவுபடுத்த போதிய வாய்ப்பு வழங்க வேண்டும்.

மாணவர் கூறியதை தொகுத்து விளங்கிக் கொண்டு கருத்தாக்கம் செய்வதில் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும்.

தேவையான போது தெளிவு பெறுவதற் குரிய விபரங்களையும் பொருத்தமான நேரத் தில் உரியவாறு கேட்டுக் கொள்ள முடியும்.

முடிவாக ஆசிரியர்கள் உளவளத்துணை யாளராக பணிபுரிவதாயின் பின்வருவன தொடர்பாக தெளிவும்அவதானமும்கொண்டிருத்தல் அவசியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- போதிய நேரம் ஒதுக்குதல்
- ஏனைய விடயங்களை ஒதுக்கி வைத்து விட்டு மன ஒருமைப்பாட்டுடன் ஈடு படல்.
- அமைதியாக வசதியான இடத்தில் அமர்ந்து கவனம் செலுத்துதல்
- தொனியையும் குரலையும் நிதானமாக பயன்படுத்துதல்
- மொழிசாரா தொடர்பாடலுக்கு முன்னுரிமை அளித்தல்.
- கண்வழித் தொடர்பில் நிதானத்தைப் பேணுதல்.
- அமைதியாக இருப்பதற்கு இடமளித்தல்.
- வெளிப்படுத்தும் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுதல்.
- நோக்கத்தில் தெளிவுடனும் உறுதியுடனும் இருத்தல்.
- விவரங்களை கவனமாக கருத்தில் எடுத்தல்.
- ஒத்துணர்வை வெளிப்படுத்தல்.
- திறந்த வினாக்களை இயன்றளவு பயன்படுத்தல்.
- எளிய மொழியை பொருத்தமான முறையில் கையாளுதல்.
- மாணவர் தமது தீர்வுகளை தாமே தேடுவதற்கு வழிகாட்டுதல்.
- சரியான பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தல்.
- செவிமடுத்தல்
- தெளிவுபடுத்தல்
- தொகுத்து கூறுதல்.

♦ **முடிவுரை**

பாடசாலை ஆசிரியர்கள் தமது கற்பித்தலுக்கு புறம்பாக, இணைந்த கடமைக் கூறாக உளவளத்துணை சேவையை வழங்க வேண்டியது அவசியமாகிவிட்டது.

இதன் காரணமாக மேலே விவரிக்கப்பட்ட திறன்களை உரிய பயிற்சிகளின் மூலம் பெற்று பாடசாலைக்கும், சமூகத்துக்கும் இயன்றளவு உதவுவது அவசியமாகும்.

இவை தொடர்பான சட்ட ரீதியான எல்லைப்பாடுகளையும் தெரிந்து கொண்டு வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் ஆசிரியர்கள் இச்சேவையில் ஈடுபடுவது விரும்பப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் கற்பித்தல்: மாணவர்களின் கருத்துக்களும்மனப்பாங்குகளும்

**Sabaratnam Athirathan**

Department of Social Science Education,
Faculty of Education,
University of Colombo
sabaaathi@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

எல்லோருக்கும் கல்வி என்ற நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் மாணவர் வரவுக்குழு, பிள்ளைநேயப் பாடசாலை, மாணவர்மையக் கற்பித்தல், செயற் பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல், மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல் மற்றும் உடல், உளரீதியான தண்டனை வழங்கப்படக்கூடாது என்ற ஏற்பாடுகள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்ஆசிரியர்களும் கல்வியாளர்களும் மாணவர்களிடத்து கட்டுப்பாட்டை ஏற்படுத்த உடல்வருத்தும் தண்டனை அவசியமானது என்று நம்பு கிறார்கள். பெரும் எண்ணிக்கையான மாணவர்கள்; ஆசிரியர்களதும் கல்வியாளர் களதும் நட்புணர்வற்ற, அச்சுறுத்தலான செயற்பாடுகள் காரணமாக பாடசாலை தொடர்பாக எதிரான மனப்பாங்குகளை உருவாக்கிக் கொள்கின்றனர் (Almant,2007). மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளின் பாடசாலைமட்டத்திலான,வகுப்பறை மட்டத்திலான பிரயோகத்தன்மையின் வினைத்திறன், இவற்றுக்கு அமைவாக முன்னெடுக்கப்படும் கற்றல் கற்பித்தலின் வினைத்திறன்,கற்பித்தல் முறையியல், கணிப்பீடு, ஊக்கல் மற்றும் இடைவினைச் செயற்பாடுகள்,இவை தொடர்பாக மாணவர்களின் விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் கருத்துக்கள் எவ்வாறுள்ளது என்பதை அறிந்துகொள்வதன் மூலமே உண்மையான விளைவுகளை பெற்றுக்கொள்ள முடியும். ஆசிரியர்களின் கற்பித்தல்: மாணவர்களின் கருத்துக்களும் மனப்பாங்குகளும் என்ற இவ்வாய்வானது விபரண அளவைநிலை ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது.கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு தெற்கு வலயத்தில் அமைந்துள்ள தமிழ்மொழி மூலப்பாடசாலைகளில் 10 பாடசாலைகளில் தரம் 10, 11 இல் பயிலும் மாணவர்களை ஆய்வுக் குடித்தொகையாகக் கொண்டு படைமுறை எழுமாற்று மாதிரியெடுப்பு முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களை ஆய்வு மாதிரியாகக் கொண்ட மைந்திருந்தது. இவ்வாய்வுக்கான தரவுகள் மாணவர்களுக்கான வினாக்கொத்து மூலம் பெறப்பட்டதுடன் தரவுகள் புள்ளிவிபர மற்றும் விபரண முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.இவ்வாய்வின் முடிவுகளாக,ஆசிரியர்கள் வேறுபட்ட கற்பித்தல் நுட்பங்களை கற்பித்தலின் போது பயன்படுத்துவதில்லை என்று ஏறத்தாள 50% மான மாணவர்கள் கருதுவதுடன் பொதுவாக கற்பித்தல் செயன் முறையின்போது ஆசிரியர்கள் கற்பித்தல் சாதனங்களை பயன்படுத்துவதில்லை என 65% மான மாணவர்கள் கருதுகின்றனர். ஆசிரியர்மைய கற்பித்தல் அணுகுமுறையை விட மாணவர்மைய அணுகுமுறையே சிறந்தது என 79% மான மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுவதுடன் ஆசிரியர்கள் பெருமளவிற்கு ஆசிரியர்மைய அணுகுமுறையிலேயே கற்பிப்பதாக 70% இற்கும் அதிகமான சதவீதத்தினர் கருத்துக் கொண்டுள்ளனர். தாம் ஒழுங்காக பாடசாலைக்குச் சமூகமளிப்பதற்கு ஆசிரியர்களுடனான சிறந்த இடைவினை ஒரு காரணமாகவுள்ளது என 71% மனவர்கள் குறிப்பிடுகின்றனர். கற்றல் செயற்பாடுகளில் மாணவர் சரியான முறையில் செயற்படாத தருணங்களில் ஆசிரியர்கள் உடல்வருத்தும் தண்டனைகளை வழங்குகின்றனர் என்று 72% மான மாணவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் 70% மானவர்கள்,வகுப்பறைக் கற்றல் செயற்பாடுகளின் போது தாங்கள் மன உழைச்சலுக்கு உள்ளாகும்படி ஆசிரியர்கள் ஏசுகின்றனர் என்றும் குறிப்பிடுகின்றனர்.கணிப்பீடுகள் வெவ்வேறு வகைகளில் நடத்தப்படுகிறது என்ற கருத்தில் 55% மான மாணவர்களே உடன்பாடான கருத்தினைக் கொண்டுள்ளனர்.

**முதன்மைச்சொற்கள்:**ஆசிரியர்கள்,கற்பித்தல், மாணவர்கருத்துக்கள்,மனப்பாங்குகள்

## 1.0 அறிமுகம் (Introduction)

கல்விச் சிந்தனைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளையும் ஆசிரிய வகிபாகங்களில் மாற்றங்களையும் அறிமுகம் செய்து வருகின்றது. ஆசிரியர்மையக் கற்பித்தல், பாடமையக் கற்பித்தல், மாணவர்மையக் கற்பித்தல், மற்றும் தேர்ச்சிமையக் கற்பித்தல் என கற்பித்தல் அணுகுமுறைகளில் மாற்றங்கள் ஏற்படும் அதேநேரம் ஆசிரிய வகிபாங்களும்கடத்துதல் வகிபாகம் (Transmission) கொடுக்கல்வாங்கல் வகிபாகம் (Transection), பரிமாற்றுகை வகிபாகம் (Transformation) எனமாற்றம் கண்டுள்ளது. இன்று ஆசிரியர் கற்பிப்பவர் என்ற நிலையிலிருந்து வசதிப்படுத்துபவர் (Teacher is a Facilitator) என்ற வகிபாகத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். அல்லது ஏற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்னொருபுறமாக பாடசாலையை பிள்ளை விரும்பும் அல்லது பிள்ளையின் மகிழ்ச்சிக்குரிய நிலையமாக மாற்றுதல் என்ற பிள்ளைநேயச் சிந்தனைகளும் வலுவடைந்து வருகின்றது. பிள்ளை நேயப்பாடசாலை, மாணவர்மையக் கற்பித்தல், உடல், உளரீதியான தண்டனை வழங்கப்படக்கூடாது. கற்றற்சூழல் கவின்நிலை,செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல், 5E முறைக் கற்பித்தல் என பாடசாலை சூழல், கற்பித்தல் மற்றும் முகாமைத்துவ அணுகுமுறைகளும் பிள்ளையின் விருப்புக்குரிய இடமாக பாடசாலையை மாற்றுதல் என்ற நோக்கத்தை அடிப்டையாக கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. எனினும் ஆசிரியர்களது கற்பித்தலானது இந்த அணுகுமுறைகளுக்கு அமைவானதாக இடம்பெறுவதாக பிள்ளைகள் உணர்கிறார்களா? இது தொடர்பாக பிள்ளைகளின் மனப்பாங்குகள் விருப்பங்கள் எவ்வாறாக காணப்படுகின்றன? நவீன கல்விக்கோட்பாடுகள் மற்றும் அதற்கிசைவான கற்பித்தல் செயன்முறை தொடர்பான மாணவர் விருப்பங்கள் கருத்துக்களை அறிந்து கொள்வது இவ்வாய்வின் அடிப்படையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.1. ஆய்வுப் பின்னணி (Rationalization)

உலகளாவிய கல்விச் செல்நெறிகளும், இலங்கையின் கல்விச் செல்நெறிகளும் எல்லோருக்கும் கல்வி (Education for all) என்ற இலக்கினை நோக்கியதாக அமைந்து காணப்படுகிறது. இந்த இலக்கினை அடைந்து கொள்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளை இலங்கையின் கல்விக்கொள்கை வகுப்பாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர். எனினும் இந்த நடவடிக்கைகள் வகுப்பறை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பாக குறிப்பாக ஆசிரியர்களது கற்பித்தல் அணுகுமுறைகள் பற்றிய மாணவர்களது கருத்துக்கள் மனப்பாங்குகள் பற்றி அறிய வேண்டியது அவசியமாகும். இவ்வாறான அணுகுமுறைகள் பிள்ளைகளை மையமாகக் கொண்டதாக, செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். பாடாசலைக்கு செல்வதன் மூலம் மகிழ்சியையும் திருப்தியையும் மாணவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடியதாக கற்றல் கற்பித்தல் மாணவர்மையமான மற்றும் செயற்பாட்டுமையமான அணுகுமுறைகளுடாக முன்னெடுக்கப்படல் வேண்டும். (New Educationact Formulation Committee, 2009) அறிக்கையில்எமது பாடசாலைகளில் கற்றல் சூழலானது கற்பவர்மைய அணுகுமுறைகளை அமுலாக்குவதைக் கருத்தில் கொள்ளும் போது திருப்தியற்றவையாக காணப்படுகின்றன. பிள்ளைக்கு நட்புறவான சூழ்நிலை மற்றும் அழுத்தம் இல்லாத நிலைமைகளின் மூலம் மாணவர்களின் கற்றல் மேம்படுத்தப்பட வேண்டும். மகிழ்ச்சி தரும் கற்றல் சந்தர்ப்பங்கள் பாடசாலைகளில் திருப்திகரமாக இல்லை என்று மாணவர்கள் நினைக்கிறார்கள். அவர்களை செயலில் ஈடுபடுத்தும் கற்றல் வாய்ப்புகளும் போதியளவில் வகுப்பறைகளில் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் அறிவில் நிபுணர், பிள்ளைகளோடு அன்புடையவர் போன்ற உணர்வுகள் மாணவர்களிடத்து ஏற்பட்டால் ஆசிரியர்களுடன் மாணவர்கள் நெருங்கிச் செயற்படுவர், சகபாடிகள் முன்னிலையில், எதிர்ப்பாலர் முன்னிலையில் வழங்கப்படும் தண்டனைகள், கணிப்பு இரண்டுமே பெரும் செல்வாக்கை மாணவர்களிடத்து ஏற்படுத்தும். ஆசிரியர்களிடத்தேயுள்ள கற்பித்தல் பலவீனம் காரணமாக கற்றல் கற்பித்தல் தோல்வி அடையும் போது அதற்காக மாணவர்கள் மீது கோபம் கொண்டு தண்டித்தல் பழிவாங்குதல் போன்ற செயல்களில் ஆசிரியர்கள் ஈடுபடுகின்றனர் (ஜ.ஃ.பார்,2009).வகுப்பறைகளில் தமது விருப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என பிள்ளைகள் கருதுகின்றனர். எல்லா வகுப்பறைகளிலும் பிள்ளைநேய அணுகுமுறைக் கற்றல் கற்பித்தல் உறுதி செய்யப்படல் அவசியமாகும் (NESR, 2014). இவ்வாறான நிலைமைகைளை நோக்கும் போது வகுப்பறைகளில் கற்பவர்மைய சூழல் ஏற்பட்டுள்ளதா?, மகிழ்ச்சிக்குரிய கற்றல் இடமாக பாடசாலை உள்ளதா? என்பவை தொடர்பாக பிள்ளைகளின் மனப்பாங்குகள் கருத்துகள் எவ்வாறுள்ளது என்பதை அறிய வேண்டிய தேவையுள்ளது பிள்ளைநேய அணுகுமுறையின் அடிப்படை பிள்ளைகளது விருப்பங்கள் எதிர்பார்ப்புக்களை அறிவதும் வகுப்பறை செயற்பாடுகள் பற்றிய பிள்ளைகளின் எண்ணங்களை அறிந்து கொள்வதும் சிறந்த அடைவுகளை பெற உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.2 ஆய்வு நோக்கங்கள் (Objectives of the Research)

1. ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகள் தொடர்பான மாணவர்களது மனப்பாங்குகள், கருத்துக்களை அறிந்துகொள்ளல்
2. வகுப்பறைகளில் மாணவர்மைய, பிள்ளைநேய சூழலை உருவாக்கி ஆசிரியர்கள் செயலாற்றுதல் தொடர்பான மாணவர் மனப்பாங்குகள் கருத்துகளை அறிதல்.
3. ஆசிரியர் மாணவர் இடைவினை தொடர்பாக மாணவர்களின் மனப்பாங்கை அறிதல்.
4. ஆசிரியர்களால் வழங்கப்படும் ஊக்கல், தண்டனைகள் தொடர்பான மாணவர் மனப் பாங்குகளை அறிந்து கொள்ளுதல்.
5. ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படும் கணிப்பீடு, தொடர்பாக பிள்ளைகளது கருத்துக்களை அறிதல்.

### 1.3. ஆய்வு வினாக்கள் (Research Questions)

1. ஆசிரியர்களது கற்பித்தல் முறையியல் தொடர்பான பிள்ளைகளது மனப்பாங்குகள் கருத்துகள் யாவை?
2. வகுப்பறைகளில் பிள்ளைநேய மற்றும் மாணவர்மைய அணுகுமுறைகள் செயற் பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக பிள்ளைகள் கருதுகிறார்களா?
3. ஆசிரியர் மாணவர் இடைவினை நேரான முறையில் நிலவுவதாக பிள்ளைகள் கருதுகின்றனரா?
4. ஆசிரியர்களால் வழங்கப்படும் ஊக்கல் - தண்டனை பற்றி மாணவர்கள் எவ்வாறான கருத்தினை கொண்டுள்ளனர்?
5. ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படும் கணிப்பீடுகள் தொடர்பாக பிள்ளைகள் எவ்வாறான கருத்தினைக் கொண்டுள்ளனர்?

### 1.4 இலக்கிய நோக்கு (Literature Review)

நவீன கல்விச்சிந்தனையானது கற்றலின் மூலம் உண்மையான திருப்தியை அடையக் கூடியதாக கற்றல் கற்பித்தல் தொடர்பான புதிய அணுகுமுறைகள் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. தமது சகபாடிகளுடன் சுதந்திரமாகவும் ஒத்துழைப்புடனும் இடைவினை கொண்டு அறிவையும் அர்த்தத்தையும் கட்டுருவாக்கம்செய்யும் வகையில் கற்றல் கற்பித்தல் செயன்முறைசார்ந்ததாக அமைய வேண்டும் (NewEducation act Formulation Committee, 2009). கற்றல் கற்பித்தல் செயன்முறைகளில் அதனோடு இணைந்த வகையில் கற்றலின் முன்னேற்றத்தை அறிவதற்கான வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்கள் என்பவற்றுக்கு ஆசிரியரிடம் இருந்து போதிய உதவிகள் இன்மையால் பெரும்பாலான கற்பவர்கள் அவர்களுக்கென உருவாக்கப்பட்ட கற்றல் தேர்ச்சிகளை அடைந்து கொள்ள முடிவதில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(NewEducation act Formulation Committee, 2009). வகுப்பறைகளில் மாணவர்மைய அணுகுமுறைகள், பிள்ளைகள் விரும்பும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும் (NESR, 2014). ஆசிரியர்கள்; இன்றைய மாணவர்கள் தமது கற்பித்தல் முறைக்கு இயைந்தவர்களாக இல்லை என்று முறைப்பட்டுக் கொள்கின்றனரேயன்றி அம்மாணவர்களுக்கு ஏற்ற வகையில் எப்படிக் கற்பிக்கலாம் என்பதை அறியாதவர்களாக உள்ளனர்(ஜ.ஃ.பார்,2009).சில ஆசிரியர்கள் கட்டொழுங்கு என்பது பாடசாலை விதிகளுக்கு ஏற்ப நடத்துதல் என்பதையன்றி மாணவர்களுக்கு தண்டனை வழங்குவது என்று கருதுகின்றனர். ஆனால் உடல் ரீதியான அல்லது உள மனவெழுச்சிக்கு ஊறு விளைவிக்கக் கூடிய எதுவித தண்டகைளும் வழங்கப்படக் கூடாது என்பது கல்வியமைச்சின் உத்தரவாக உள்ளது (NewEducation act Formulation Committee, 2009).Northern Education System Review (NESR) இனால் கல்வி அபிவிருத்தி தொடர்பாக முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளில் பிரதானமான பரிந்துரையாக மாணவர்களுக்கு வழங்கப்படும் உடல் - உளரீதியான தண்டனைகளைச் சகல பாடசாலைகளிலும் தாமதமின்றி நிறுத்தப்படல் வேண்டும். மாணவர்களது கருத்துக்களின்படி ஒவ்வொரு மாதமும் சராசரியாக 30 தண்டனை வழங்கல் வகுப்பறைகளில் இடம்பெறுவதாகவும் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் இவை உயர்ந்த அளவில் காணப்படுவதாகவும் இதற்கு க.பொ.த சாதாரணதரப்பரீட்சையே காரணமெனவும் கருத்தினை மாணவர்கள் முன்வைத்தனர் (NESR 2014). Almant,(2007) என்பவர் உடல்வருத்தும் தண்டனைகள் சிறுவர்களிடத்து உடல் மற்றும் உளநிலையில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக தனது ஆய்வினூடாக கண்டறிந்துள்ளார். ஆசிரியர்களும் கல்வியாளர்களும் மாணவர்களிடத்து கட்டுப்பாட்டை ஏற்படுத்த உடல்வருத்தும் தண்டனை அவசியமானது என்று நம்புகிறார்கள் எனினும் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் ஆசிரியர்களதும் கல்வியாளர்களதும் நட்புணர்வற்ற அச்சுறுத்தலான செயற்பாடுகள் காரணமாக பாடசாலை தொடர்பாக எதிரான மனப்பாங்குகளை உருவாக்கிக் கொள்கின்றனர்.மேலும் ஊக்கல் செயன்முறைகள் இல்லாமல் கற்றல் நிகழமுடியாது, ஆசிரியர்கள் ஊக்கலின் முக்கியத்துவம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் மாணவர்களிடத்து ஊக்கலை வழங்க வேண்டும் என்றும் கண்டறிந்துள்ளார்.

Yousef &Balaramulu,(2013) என்போர் மேற்கொண்ட ஆய்வொன்றின்படி தமது ஆசிரியர்கள் உரிய பாட முன் ஆயத்தத்துடன் வருவதாக 73 சதவீதமான மாணவர்கள் கருதுவதாக கண்டறியப்பட்டது. மேலும் 80%மானமாணவர்கள் ஆசிரியர்கள் வேறுபட்ட ஊக்கல் நுட்பங்களை கையாள்வதாகவும்,69%மான மாணவர்கள் ஆசிரியர்களின் கற்பித்தல் முறையில் திருப்தியடைவதாகவும் 68%மானவர்கள் வகுப்பறைச்சூழலை கற்றலுக்கு உகந்த சூழலாக ஆசிரியர்கள் மாற்றியமைத்துச் செயற்படுவதாகவும் கருதுவதாக கண்டறிந்தார்.ஆசிரியர்கள் பாடவேளைகளில் மாணவர்களின் கவனத்தை கவரக்கூடிய வகையில் கற்றலை மேம்படுத்தக்கூடிய வகையில் மொழிசார்ந்த மற்றும் மொழிசாராத தொடர்பாடல் நுட்பத்தை பயன்படுத்த வேண்டும். ஒரு பாட அலகுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கற்பித்தல் முறையை பயன்படுத்துவது அவசியமானது ஏனெனில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் கற்பித்தலில் மாணவர்களின் சலிப்பினை குறைப்பதற்கு, ஆர்வத்தினை அதிகரிப்பதற்கு இது உதவும் (Esu,2003). எமது வகுப்பறைகளில் ஆசிரியர்கள் வேறுபட்ட நுட்பங்களைக் கற்பித்தலின் பொருட்டு பயன்படுத்துவதில்லை (NESR,2014). Channa, Yossiri, மற்றும்Varavejbhisis.(2012) என்பவர்கள் மேற்கொண்ட ஆய்வொன்றின்படி 50% இற்கும் கூடுதலான மாணவர்கள் தமது ஆசிரியர்கள் பயன்படுத்தும் கற்பித்தல் முறை மற்றும் செயற்பாடுகள் மொழி கற்றல் வினைத்திறனாக அமைய காரணமாக உள்ளதெனக் கருதுவதாக கண்டறிந்ததுடன் 50% இற்கும் குறைவான சதவீதத்தினர் ஆசிரியர்களின் கற்பித்தல் தொடர்பில் திருப்தியற்றவர்களாக உள்ளனர் என்றும் கண்டறிந்தார்.

கணிப்பீடும் மதிப்பீடும் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் இறுக்கமாக ஒன்றிணைக்கப்படுவதோடு மாணவர்களிடத்து எதிர்பார்க்கப்பட்ட தேர்சிகளை ஏற்படுத்தி அதனையடைய வசதி செய்யப்பட வேண்டும்.கணிப்பீட்டினூடாக வழங்கப்படும் பின்னூட்டலும் மதிப்பீட்டில் இருந்து வரும் மீளவலியுறுத்தலும் கற்றல் தொடர்பான பரிகார ஏற்பாடுகளின் அவசியத்தை குறைக்க வேண்டும்.இலங்கை பரீட்சைத் திணைக்களமானது SBA க்கான 17 வழிமுறைகளை பரிந்துரை செய்திருந்த போதும் பதிய அணுகுமுறை பற்றிய வரையறுக்கப்பட்ட புரிந்துணர்வும் அதிகரித்த வேலைப்பழுவும் கணிப்பீட்டின் பிரதான வழிமுறையாக ஆசிரியர்களை எழுத்துச்சோதனையைப் பயன்படுத்த ஊக்குவித்துள்ளது. உள்ளக தொடர் கணிப்பீடு எழுத்துப் பரீட்சையில் மாத்திரம் தங்கியிராது பல்வேறு கணிப்பீட்டு முறைகளைக் கொண்டிருக்க வேண்டும் (NewEducation act Formulation Committee, 2009).

## 2.0 ஆய்வு முறையியல் (Methodology)

ஆசிரியர்களின் கற்பித்தல் தொடர்பான மாணவர்களின் கருத்துக்களும் மனப்பாங்குகளும் என்ற இவ்வாய்வானது விபரண அளவைநிலை ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு தெற்கு வலயத்தில் அமைந்துள்ள தமிழ்மொழி மூலப்பாடசாலைகளில் 10 பாடசாலைகள் படைமுறை எழுமாற்று மாதிரி எடுப்பு முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு அங்குசிரேஸ்ட இடைநிலைத் தரம் 10, 11 இல் பயிலும் மாணவர்களை ஆய்வுக் குடித்தொகையாகக் கொண்டு படைமுறை எழுமாற்று மாதிரி எடுப்பு முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்கள் ஆய்வு மாதிரியாகக் கொள்ளப்பட்டனர்.இவ்வாய்வுக்கான தரவுகள் மாணவர்களுக்கான வினாக்கொத்து மூலம் பெறப்பட்டதுடன் தரவுகள்புள்ளிவிபர மற்றும் விபரண முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.0 முடிவுகளும் கலந்துரையாடலும் (Results and Discussion)

அட்டவணை1: ஆசிரியர்களின் கற்பித்தல் முறை

| | | Strongly agree | Agree | Dis agree | Strongly dis agree | Accepted % | Rejected % |
|---|---|---|---|---|---|---|---|
| | | Freq. | Freq. | Freq. | Freq. | | |
| ஆசிரியர்கள் போதுமான பாடமுன் ஆயத்தத்துடன் வகுப்பறைக்கு வருகின்றனர் | ஆண் 52 | 18 | 12 | 11 | 11 | 30 | 22 |
| | பெண் 48 | 14 | 10 | 15 | 09 | 24 | 24 |
| | (%) | 32 | 22 | 26 | 20 | 54 | 46 |
| ஆசிரியர்கள் வேறுபட்ட கற்பித்தல் நுட்பங்களை கற்பித்தலில் பயன்படுத்துகின்றனர் | ஆண் 52 | 10 | 21 | 12 | 09 | 31 | 21 |
| | பெண் 48 | 12 | 08 | 12 | 16 | 20 | 28 |
| | (%) | 22 | 29 | 24 | 25 | 51 | 49 |
| கற்பித்தல் செயற்பாடுகளின் போது கற்பித்தல் சாதனங்களை ஆசிரியர்கள் வழமையாக பயன்படுத்துவதுண்டு | ஆண் 52 | 10 | 08 | 22 | 12 | 18 | 34 |
| | பெண் 48 | 12 | 06 | 16 | 14 | 18 | 30 |
| | (%) | 22 | 14 | 38 | 26 | 36 | 64 |
| ஆசிரியர்மைய கற்பித்தல் அணுகுமுறையை விட மாணவர்மைய அணுகுமுறையே சிறந்தது | ஆண் 52 | 14 | 30 | 06 | 02 | 44 | 08 |
| | பெண் 48 | 21 | 14 | 05 | 08 | 35 | 13 |
| | (%) | 35 | 34 | 11 | 08 | 79 | 21 |
| ஆசிரியர்மைய கற்பித்தல் அணுகுமுறையை விட மாணவர்மைய அணுகுமுறை மூலம் உங்களிடத்தில் கூடுதலான அறிவு, திறன், மனப்பாங்கை வளர்க்கக்கூடியதாக உள்ளது | ஆண் 52 | 26 | 15 | 08 | 03 | 41 | 11 |
| | பெண் 48 | 24 | 12 | 06 | 06 | 36 | 12 |
| | (%) | 50 | 27 | 14 | 09 | 77 | 23 |
| ஆசிரியர்கள் பெருமளவிற்கு ஆசிரியர்மைய அணுகுமுறையிலேயே கற்பிக்கின்றனர் | ஆண் 52 | 16 | 22 | 11 | 03 | 38 | 14 |
| | பெண் 48 | 13 | 20 | 08 | 07 | 33 | 15 |
| | (%) | 29 | 42 | 19 | 10 | 71 | 29 |

ஆசிரியர்கள் வகுப்பறைக்கு போதுமான பாடமுன் ஆயத்தத்துடன் சமூகமளிப்பதாக 54% மான மாணவர்கள் கருத்து கொண்டுள்ள அதே நேரம் 46% மான மாணவர்கள் ஆசிரியர்கள் போதுமான முன்னாயத்தம் இன்றி சமூகளிப்பதாக கருதுகின்றனர். ஆசிரியர்கள் வேறுபட்ட கற்பித்தல் நுட்பங்களை கற்பித்தலில் பயன்படுத்துவதில்லை என்று ஏறத்தாள 50% மான மாணவர்கள் கருதுவதுடன் பொதுவாக கற்பித்தல் செயன்முறையின்போது ஆசிரியர்கள் கற்பித்தல் சாதனங்களை பயன்படுத்துவதில்லை என 65% மான மாணவர்கள் கருதுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்மைய கற்பித்தல் அணுகுமுறையை விட மாணவர்மைய அணுகுமுறையே சிறந்தது என 79% மான மாணவர்கள் கருதும் அதே நேரம் 77% மாணவர்கள் ஆசிரியர்மைய கற்பித்தல் அணுகுமுறையை விட மாணவர்மைய அணுகுமுறை மூலம் அறிவு, திறன்,மனப்பாங்கு என்பவற்றை கூடியளவுவளர்க்கக்கூடியதாக உள்ளதாக குறிப்பிடுகின்றனர். ஆயினும் ஆசிரியர்கள் பெருமளவிற்கு ஆசிரியர்மைய அணுகுமுறையிலேயே கற்பிப்பதாக 70% இற்கும் அதிகமான சதவீதத்தினர் கருத்துக் கொண்டுள்ளனர்

இவவாய்வில் மாணவர்களின் கருத்துக்கள் மனப்பாங்குகள் தொடர்பாக ஊக்கல் தொடர்பான கூற்றுக்கள் தவிர்ந்த விடயங்களில் பால்நிலை வேறுபாடுகள் பொருளுள்ள வகையில் அமைந்திருக்கவில்லை. பெண்பிள்ளைகள் தமக்கு ஒப்பீட்டளவில் குறைவான ஊக்கலையே ஆசிரியர்கள் வழங்குவதாக கருதுகின்றனர்.

அட்டவணை 2: ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்

| | | Strongly agree | Agree | Dis agree | Strongly disagree | Accepted % | Rejected % |
|---|---|---|---|---|---|---|---|
| | | Freq. | Freq. | Freq. | Freq. | | |
| ஆசிரியர்களின் மொழிப்பிரயோகம் கவற்சியாகவும் தெளிவாகவும் விளங்கக்கூடியதாகவும் உள்ளது | ஆண் 52 | 24 | 21 | 4 | 03 | 45 | 07 |
| | பெண் 48 | 18 | 20 | 08 | 02 | 38 | 10 |
| | (%) | 42 | 41 | 12 | 05 | 83 | 17 |
| ஆண் ஆசிரியர்களைவிட பெண் ஆசிரியர்கள் சிறப்பானமுறையில் பாடங்களை கற்பிக்கின்றனர் | ஆண் 52 | 16 | 19 | 12 | 05 | 35 | 17 |
| | பெண் 48 | 16 | 12 | 12 | 08 | 28 | 20 |
| | (%) | 32 | 31 | 24 | 13 | 63 | |
| இளம் ஆசிரியர்கள் சிரேஸ்ட ஆசிரியர்களைவிட பாடங்களை சிறப்பாகவும் கவற்சியாகவும் கற்பிக்கின்றனர் | ஆண் 52 | 14 | 18 | 12 | 08 | 32 | 20 |
| | பெண் 48 | 16 | 13 | 9 | 10 | 29 | 19 |
| | (%) | 30 | 31 | 21 | 18 | 61 | 39 |

ஆசிரியர்களின் மொழிப்பிரயோகம் கவர்ச்சியாகவும் தெளிவாகவும் விளங்கக்கூடியதாகவும் உள்ளதாக 83% மான மாணவர்கள் கருதும் அதே நேரம் 60% இற்கும் அதிகமானவர்கள் ஆண் ஆசிரியர்களைவிட பெண் ஆசிரியர்கள் சிறப்பானமுறையில் பாடங்களை கற்பிப்பதாக கருதுகின்றனர். அத்துடன் 61%மான மாணவர்கள் இளம் ஆசிரியர்கள் சிரேஸ்ட ஆசிரியர்களைவிட பாடங்களை சிறப்பாகவும் கவர்ச்சியாகவும் கற்பிக்கின்றனர் என்ற கருத்தைக்கொண்டுள்ளனர். ஒழுங்காக பாடசாலைக்கு மாணவர்கள் சமூகமளிப்பதற்கு ஆசிரியர்களுடனான சிறந்த இடைவினை ஒரு காரணமாகவுள்ளது என 71% மணவர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் 56%மான மாணவர்கள் ஆசிரியர்கள் பாராபட்சமான முறையில் மாணவர்களுடன் நடந்துகொள்கின்றனர் என்றும், வகுப்பறையில் சிறப்பாக கற்கும் மாணவர்கள் மீதே ஆசிரியர்கள் அதிக கவனம் செலுத்துகின்றனர் என்று 60%அதிகமானோர் கருதுவதுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42% மான தொகையினர்,ஆசிரியர்கள் மாணவர்களுடன் நட்புணர்வாக பழகுவதில்லை என்றும் குறிப்பிடுகின்றனர்.

அட்டவணை 3: ஆசிரியர் மாணவர் இடைவினை

| | | Strongly Agree | Agree | Dis Agree | Strongly Dis agree | Accepted % | Rejected % |
|---|---|---|---|---|---|---|---|
| | | Freq. | Freq. | Freq. | Freq. | | |
| நீங்கள் ஒழுங்காக பாடசாலைக்கு சமூகமளிப்பதற்கு ஆசிரியர்களுடனான சிறந்த இடைவினை ஒரு காரணமாகவுள்ளது | ஆண் 52 | 10 | 28 | 10 | 04 | 38 | 14 |
| | பெண் 48 | 11 | 22 | 10 | 05 | 33 | 15 |
| | (%) | 21 | 50 | 20 | 09 | 71 | 29 |
| ஆசரியர்கள் பாராபட்சமான முறையில் மாணவர்களுடன் நடந்துகொள்கின்றனர் | ஆண் 52 | 09 | 19 | 14 | 10 | 28 | 24 |
| | பெண் 48 | 12 | 16 | 08 | 12 | 28 | 20 |
| | (%) | 21 | 35 | 22 | 22 | 56 | 44 |
| வகுப்பறையில் சிறப்பாக கற்கும் மாணவரகள் மீதே ஆசிரியர்கள் அதிக கவனம் செலுத்துகின்றனர் | ஆண் 52 | 18 | 13 | 12 | 09 | 31 | 21 |
| | பெண் 48 | 17 | 14 | 10 | 07 | 31 | 17 |
| | (%) | 35 | 27 | 22 | 16 | 62 | 38 |
| ஆசிரியர்கள் நட்புணர்வுடன் மாணவர்களோடு பழகுகின்றனர் | ஆண் 52 | 18 | 16 | 10 | 08 | 34 | 18 |
| | பெண் 48 | 14 | 10 | 15 | 09 | 24 | 24 |
| | (%) | 32 | 26 | 25 | 17 | 58 | 42 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 4: உடல், உளரீதியான தண்டனைகள்

| | | Strongly Agree | Agree | Dis Agree | Strongly Dis agree | Accepted % | Rejected % |
|---|---|---|---|---|---|---|---|
| | | Freq. | Freq. | Freq. | Freq. | | |
| மாணவர் தவறிழைக்கும் சந்தர்ப்பங்களில் ஆசிரியர்கள் உடல்ரீதியான தண்டனையை வழங்குகின்றனர் | ஆண் 52 | 19 | 21 | 10 | 2 | 40 | 12 |
| | பெண் 48 | 17 | 16 | 08 | 7 | 33 | 15 |
| | (%) | 36 | 37 | 18 | 09 | 73 | 27 |
| கற்றல் செயற்பாடுகளில் மாணவர் சரியான முறையில் செயற்படாத தருணங்களில் ஆசிரியர்கள் உடல்ரீதியான தண்டனை வழங்குகின்றனர் | ஆண் 52 | 18 | 20 | 10 | 04 | 38 | 14 |
| | பெண் 48 | 15 | 19 | 08 | 06 | 34 | 14 |
| | (%) | 33 | 39 | 18 | 10 | 72 | 28 |
| வகுப்பறைக் கற்றல் செயற்பாடுகளின் போது நீங்கள் மன உழைச்சலுக்கு உள்ளாகும்படி ஆசிரியர்கள் ஏசுவதுண்டு | ஆண் 52 | 16 | 22 | 09 | 05 | 38 | 14 |
| | பெண் 48 | 14 | 18 | 08 | 08 | 32 | 16 |
| | (%) | 30 | 40 | 17 | 13 | 70 | 30 |

மாணவர் தவறிழைக்கும் சந்தர்ப்பங்களில் ஆசிரியர்கள் உடல்வருத்தும் தண்டனையை வழங்குவதாக 73%மான மாணவர்கள் குறிப்பிடுவதுடன் கற்றல் செயற்பாடுகளில் மாணவர் சரியான முறையில் செயற்படாத தருணங்களில் ஆசிரியர்கள் உடல்வருத்தும் தண்டனைகளை வழங்குகின்றனர் என்று 72%மான மாணவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் 70% மாணவர்கள்,வகுப்பறைக் கற்றல் செயற்பாடுகளின் போது தாங்கள் மன உழைச்சலுக்கு உள்ளாகும்படி ஆசிரியர்கள் ஏசுகின்றனர் என்றும் குறிப்பிடுகின்றனர்.

ஆசிரியர்கள் வேறுபட்ட நுட்பமுறைகள் மூலம் பாராட்டி ஊக்கப்படுத்துவதாக 58% மானவர்கள் குறிப்பிட்ட அதே நேரம் 42% மானவர்கள் ஆசிரியர்கள் பல்வேறு வகையில் ஊக்கப்படுத்துவதில்லை என்றும்உங்களால் சிறந்த அடைவுகளை பெறமுடியும் என ஆசிரியர்கள் தங்களை ஊக்குவிப்பது,தங்களிடம் உள்ள ஆற்றல்களை இனங்கண்டு அதனை தங்களிடம் தெரிவித்து அது தொடர்பாக தம்மை ஆசிரியர்கள் மேலும் ஊக்குவிப்பது, பொருத்தமான இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கு ஊக்கமளிப்பது தொடர்பாக ஏறத்தாள 55% மான மாணவர்களே உடன்பாடான கருத்தைக் கொண்டுள்ளதுடன் 45% மானவர்கள் எதிர்மறையான கருத்தையே கொண்டுள்ளனர். அவ்வப்போது ஆசிரியர்களால் சிறப்பான முறையில் வழிகாட்டல்,ஆலோசனை வழங்கப்படுவதில்லை என்றும்42% மானோர் கருதுகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5: ஊக்கலும் ஆலோசனை வழங்கலும்

| | | Strongly Agree | Agree | Dis agree | Strongly dis agree | Accepted % | Rejected % |
|---|---|---|---|---|---|---|---|
| | | Freq. | Freq. | Freq. | Freq. | | |
| ஆசிரியர்கள் வேறுபட்ட நுட்பமுறைகள் மூலம் உங்களை பாராட்டி ஊக்கப்படுத்துவதுண்டு | ஆண் 52 | 13 | 20 | 14 | 05 | 33 | 19 |
| | பெண் 48 | 13 | 12 | 15 | 08 | 25 | 23 |
| | (%) | 26 | 32 | 29 | 13 | 58 | 42 |
| உங்களால் சிறந்த அடைவுகளை பெறமுடியும் என ஆசிரியர்கள் உங்களை ஊக்குவிப்பதுண்டு | ஆண் 52 | 20 | 15 | 13 | 04 | 35 | 17 |
| | பெண் 48 | 16 | 11 | 10 | 11 | 27 | 21 |
| | (%) | 36 | 26 | 23 | 15 | 62 | 38 |
| அவ்வப்போது ஆசிரியர்களால் சிறப்பான முறையில் வழிகாட்டல்இஆலோசனை வழங்கப்படுவதுண்டு | ஆண் 52 | 16 | 18 | 12 | 06 | 34 | 18 |
| | பெண் 48 | 11 | 13 | 16 | 08 | 24 | 24 |
| | (%) | 27 | 31 | 28 | 14 | 58 | 42 |
| நீங்கள் பொருத்தமான இணைகலைத்திட்டச் செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கு ஆசிரியர்கள் ஊக்கமளிப்பதுண்டு | ஆண் 52 | 14 | 16 | 12 | 10 | 30 | 22 |
| | பெண் 48 | 12 | 14 | 10 | 12 | 26 | 22 |
| | (%) | 26 | 30 | 22 | 22 | 56 | 44 |
| கல்வியூடாக நீங்கள் அடைய விரும்பியுள்ள இலக்கு தொடர்பாக ஆசிரியர்கள் உங்களுடன் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடி ஊக்கப்படுத்துவதுண்டு | ஆண் 52 | 12 | 14 | 16 | 10 | 26 | 26 |
| | பெண் 48 | 08 | 13 | 10 | 17 | 21 | 27 |
| | (%) | 20 | 27 | 26 | 27 | 47 | 53 |
| உங்களிடம் உள்ள ஆற்றல்களை இனங்கண்டு அதனை உங்களிடம் தெரிவித்து அதுதொடர்பாக ஊங்களை ஆசிரியர்கள் மேலும் ஊக்குவிப்பதுண்டு | ஆண் 52 | 15 | 16 | 14 | 07 | 31 | 21 |
| | பெண் 48 | 12 | 09 | 13 | 14 | 21 | 27 |
| | (%) | 27 | 25 | 27 | 21 | 52 | 48 |
| வகுப்பறையை ஆசிரியர்கள் கற்றலுக்கு உகந்த சூழலாக மாற்றியமைத்துக் கறபிக்கின்றனர் | ஆண் 52 | 15 | 12 | 12 | 13 | 27 | 25 |
| | பெண் 48 | 13 | 10 | 16 | 09 | 23 | 25 |
| | (%) | 28 | 22 | 28 | 22 | 50 | 50 |

50% மான மாணவர்கள் மட்டுமே வகுப்பறையை ஆசிரியர்கள் கற்றலுக்கு உகந்த சூழலாக மாற்றியமைத்துக் கற்பிக்கின்றனர் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 6: கணிப்பீடும் கணிப்பீட்டு வகைகளும்

| | | Strongly. Agree | Agree | Dis agree | Strongly. dis agree | Accepted % | Rejected % |
|---|---|---|---|---|---|---|---|
| கணிப்பீடுகள் வெவ்வேறு வகைகளில் நடத்தப்படுகிறது | ஆண் 52 | 15 | 16 | 12 | 09 | 31 | 21 |
| | பெண் 48 | 13 | 11 | 14 | 10 | 24 | 24 |
| | (%) | 28 | 27 | 26 | 19 | 55 | 45 |
| கணிப்பீடு தொடர்பாக முன் அறிவிப்பு வழங்கப்படாமல் கணிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது | ஆண் 52 | 12 | 10 | 14 | 16 | 22 | 30 |
| | பெண் 48 | 09 | 15 | 12 | 12 | 24 | 24 |
| | (%) | 21 | 25 | 26 | 28 | 46 | 54 |
| கணிப்பீடுகள் பொதுவாக தவணைப்பரீடசைக்கு சில தினங்களுக்கு முன்பாகவே நடத்தப்படுகிறது | ஆண் 52 | 18 | 14 | 14 | 06 | 32 | 20 |
| | பெண் 48 | 16 | 12 | 12 | 08 | 28 | 20 |
| | (%) | 34 | 26 | 26 | 14 | 60 | 40 |

கணிப்பீடுகள் வெவ்வேறு வகைகளில் நடத்தப்படுகிறது என்ற கருத்தில் 55% மான மாணவர்களே உடன்பாடான கருத்தை வெளிப்படுத்தியிருந்தனர் மிகுதி 45% அக்கூற்று தொடர்பாக உடன்படாதிருந்தனர். கணிப்பீடு தொடர்பாக முன் அறிவிப்பு வழங்கப்படாமல் கணிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது என்று 46%மான மாணவர்கள் குறிப்பட்ட போதும் 54% மானவர்கள் அதற்கு எதிரான கருத்தினையே கொண்டுள்ளனர். மேலும் 60% மான மாணவர்கள் கணிப்பீடுகள் பொதுவாக தவணைப்பரீடசைக்கு சில தினங்களுக்கு முன்பாகவே நடத்தப்படுவதாகவே குறிப்பிடுகின்றனர்.

## 4.0முடிவுரை (Conculussion)

எல்லோருக்கும் கல்வியை வழங்குவதற்காக இலவசக்கல்வி, கட்டாயக்கல்வி, உட்படுத்தற்கல்வி போன்றதான ஏற்பாடுகளும் மாணவர் வரவை அதிகரிக்கச் செய்தல் இடைவிலகலைக் குறைத்தல் ஆகிய நோக்கங்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் மாணவர் வரவுக்குழு, பிள்ளைநேயப் பாடசாலை, மாணவர்மையக் கற்பித்தல், செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல், மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல் மற்றும் உடல், உளரீதியான தண்டனை வழங்கப்படக்கூடாதுஇவை போன்ற பல்வேறு நடவடிக்கைகளும் உத்திகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதும் எதிர்பார்த்த விளைவுகளை அடையமுடியாத நிலைமையே இன்னமும் நீடிக்கின்றது. இதற்கு பாடசாலை மட்டத்தில் இந்நடவடிக்கைகள் சரியாக செயற்படுத்தப்படாமையே காரணமாக உள்ளது. மாணவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் மாணவர்மைய கற்பித்தல் அணுகுமுறை கொள்கையளவிலேயே உள்ளது.ஆசிரியர்கள் வேறுபட்ட கற்பித்தல் நுட்பங்களை பயன்படுத்துவது,கற்பித்தல் செயற்பாடுகளின் போது கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்துவது மிகக்குறைவு. உடல்வருத்தும் தண்டனைகள் தடையின்றி வழங்கப்படுதல் மற்றும் போதுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கல் கிடைப்பதில்லை போன்றதான கருத்துக்களை மாாணவர்கள் கொண்டிருக்கின்றமை கற்பவர்மைய அணுகுமுறைகளும் பிள்ளைநேய ஏற்பாடுகளும் வகுப்பறை மட்டத்தில் உரியமுறையில் பின்பற்றப்படவில்லை என்பதனையே வெளிப்படுத்துகிறது.

## 2.0உசாத்துணைகள் (References)


ஐ.'.பார், ப. க. (2009) சிறந்த கற்றலுக்கான பாடசாலை, குமரன் பதிப்பகம், கொழும்பு.

Almant, A.S., & Abro, A.D. (2007) Attitudes of peoples towards Education: A case study Matyari and Hyderabad district. *The S.U Journal of Education Vol xxxvii,2007*

Channa M, A., Yossiri, Y.Varavejbhisis, Y. (2012) Students' Attitudes towards Teachers' using Activities in EFL class. *International Journal of Academic Research in Business and Social Sciences May 2012, Vol. 2, No. 5 ISSN: 2222-6990 158*

Esu, A. E. O. (2004) *Competences for Effective Teaching.In S.C. Uche & I.O. Enukola (Eds), Professional skills for effective teaching.*Aba: Aau Publishers.

Formulation Committee for New Education Act in Sri Lanka,(2009)

Moore, B. (1993)*Predictors of high school students' attitudes towards involvement with mathematics.*Mathematics Teacher, 42, 86-90.

Mehdipour,Y.&, Balaramulu,D. (2013)Students' attitudes towards teachers' behavior in Hyderabad universities


*International Journal of Scientific and Research Publications, Volume 3, Issue 6, June 2013 1 ISSN 2250-3153*

*Northern Education System Review*.(2014) Northern Province Ministry of Education, Cultural Affairs, Sports and Youth Affairs, Northern Province, Sri Lanka.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணி விழா நாயகர் பொன்.அருணகிரிநாதன்**
**அவர்களால் ஆக்கப்பட்ட**
**கல்வியியல்சார் கட்டுரைகளின்**
**தொகுப்பு...**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நிர்வாகத்துறை சார்ந்த விடய ஆய்வு
## (Case Study)
### பரீட்சை நோக்கிலான ஒரு பார்வை

விடய ஆய்வு முறயானது முகாமைத்துவம், விவசாயம், சந்தைப்படுத்தல் போன்ற துறைகளில் ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்டது. முகமையாளர்கள் தமது நிறுவனங்களில் முக்கிய பணியாக தீர்மானம் எடுத்தலை மேற்கொள்கிறார்கள். தொழில் ஒன்றில் ஒருவர் வெற்றி பெறவராக மாற வேண்டுமானால் அந்தத் தொழிலை முகாமை செய்பவர் நல்ல தீர்மானம் எடுப்பவராக இருக்க வேண்டும்.

கல்வி நிர்வாகத்துறையில் அண்மைக் காலத்தில் விடய ஆய்வுக் கற்கைகள் முக்கியம் பெறத் தொடங்கியள்ளன. அரச துறைக்கு ஆளணியினரை சேர்த்துக் கொள்ளும் போது போட்டிப் பரீட்சைகளில் குறிப்பாக உயர் நிர்வாகத் துறை ஆளணியினர் தேர்வுகளில் விடய ஆய்வு கற்கைகள் பயன்படுத்தப்படுகின்றன.

இன்று இது ஒரு பரவலான கற்கை விடயமாக மாறிவருகிறது. முகாமையாளர்களின் நாளாந்த கடமையே தீர்மானம் எடுத்தலாக அமைந்துள்ளது. " முகாமையாளர் எதனைச் செய்கின்றாரோ அதுவே தீர்மானம் எடுத்தல் (Decisoin Makeng) என வரையறுக்கப்படுகின்றது. அதவாது முகாமையாளர் களது கருமங்கள் எல்லாமே தீர்மானம் எடுத்தல் தான் என கூறிவிட முடியும்" (பீற்றர் ட்றக்கா)

தீர்மானம் எடுத்தல் என்றால் என்ன? குறித்த ஒரு விடயம் தொடர்பாக அல்லது பிரச்சினை தொடர்பாக பல்வேறு விதமான மாற்று வழிகளில் இருந்து சரியானதையும் பொருத்தமானதையும் தெரிவு செய்து அமுலாக்கம் செய்யும் செயற்பாட்டை தீர்மானம் எடுத்தல் என குறிப்பிடலாம். இதில் பல்வேறு வகைகளை குறிப்பிடலாம்.

1. நிகழ்ச்சித் தீர்மானம்
2. நிகழ்ச்சியற்ற தீர்மானம்
3. தனித் தீர்மானம்
4. கூட்டுத் தீர்மானம் அல்லது குழுத் தீர்மானம்

விடய ஆய்வுக் கற்கையொன்றில் பரீட்சார்த்திகளிடம் எதிர்பார்க்கப்படுவது தீர்மானம் எடுத்தல் பாங்கு என்ன வகையில் அமைந்துள்ளது என்பதாகும். விடய ஆய்வு என்றால் என்ன? தொழில் நிறுவனங்களில், கல்வி நிறுவனங்களில், பாடசாலகளில் அல்லது வேலைத் தளங்களில் நாம் எதிர் நோக்குகின்ற யதார்த்தமான அனுமானத்துடன் கூடிய சூழ்நிலையில்,

1. முரண்பாடுகள் (Conflicts)
2. நிகழ்வுகள் அல்லது சம்பவங்கள் (Events)
3. பிரச்சினகள் (Problems)

என்பவற்றை உள்ளடக்கியதே விடய ஆய்வு ஆகும். சிக்கலான தன்மை தீர்மானம் எடுத்தலில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதை கண்டறிய உதவுகிறது.

**விடய ஆய்வு பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.**

- ❖ வாசிப்பவர்களுக்கு தீர்க்கக் கூடிய பிரச்சினையாக இருக்க வேண்டும்.
- ❖ விடயம் போதியளவு தகவல்களக் கொண் டிருக்க வேண்டும்.
- ❖ வாசிப்பவர்கள் விளங்கிக் கொள்ளக் கூடிய பிரச்சினையாக இருக்க வேண்டும்.
- ❖ தகவல்களை பகுத்து ஆராய்ந்து சிந்திக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ உத்தேச தீர்வுகளுக்கு வரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

விடய ஆய்வில் காணப்படும் முரண்பாடுகள், நிகழ்வுகள், பிரச்சினைகளை தெளிவாக விளங்கிக் கொள்ளல் வேண்டும். உண்மை நிலைமைகளை பகுத்து ஆராய்ந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் சரியான தீர்மானங் களை எடுக்க முடியும்.

ஒருவரிடத்தோ அல்லது ஒன்றுக்கு மேற் பட்டோரிடையே தோன்றும் உணர்ச்சி, கருத்து, நடத்தை என்பனவற்றின் வேறுபாடுகளின் பெறுபேறே முரண்பாடு எனலாம். ஒவ்வொரு மனிதனும் அவரின் தேவை ஆற்றல்களுக் கேற்ப குறித்த செயற்பாடு தொடர்பில் ஒழுங் கமைக்கப்பட்ட நடத்தக் கோலத்தை கொண்ட வனாகிறான். இதுவே மனிதனின் நடிபங்கு (Role) எனப்படும். இடம் சூழல், உறவுமுறை என்பவற்றுக்கேற்ப நடிபங்கு மாற்றமடயும். முரண்பாட்டிற்கு உட்படும் நபர்களில் பின்வரும் இயல்புகளை காணலாம்.

I. நேருக்கு நேர் நோக்காமை.
II. பேச்சைத் தவிர்த்தல்.
III. உடல் மொழிப் பேறுகளைக் காட்டுதல்.

முரண்பாடுகள் முனைப்படையும் போது குழப்பநிலை உருவாகும். நிறுவனங்களில் ஏற்படுகின்ற முரண்பாடுகளை இரண்டு வகை யாக வகுக்கலாம்.

I. செயலாக்க முரண்பாடுகள்.
II. செயலாக்கத்தப் பாதிக்கும் முரண் பாடுகள்.

நிறுவனத்தின் நாளாந்த செயற்பாடுகளின் போது எழுகின்ற வழமையான முரண்பாடுகள் செயலாக்க முரண்பாடுகளாகும். இவற்றின் விளைவுகள் நிறுவனத்தின் செயற்திறனுக்கு வழிகாட்டுவதாக அமையும். முரண்பாடானது அதிகளவு புதுமையான கருத்துக்கள், சிறந்த தீர்மானங்கள் என்பவற்றுக்கு வழிசமைக்கும் இலக்குகளை அடைய உதவுமாயின் அது செயலாக்க முரண்பாடு ஆகும்.

இதற்கு மாறாக ஒரு நிறுவனம் முரண்பாடு ஒன்றின் காரணமாக நீண்ட காலத்தில் குறைந்த வினைத்திறனுடையதாக மாறுமாயின் அத்தகைய முரண்பாடு செயலாக்கத்தை பாதிக்கும் முரண்பாடு என கருதப்படும். இது பாதகமான நிலையை உருவாக்கும்.

- ❖ தனி நபர்கள், குழுக்களுக்கிடையே ஒத்துழைக்கும்தன்மையைக்குறைக்கும்.
- ❖ ஊழியர்களின் உற்பத்தித்திறன் குறை வடையும்.
- ❖ நிறுவனம் இலக்குகளை அடைவதை தடை செய்யம்.
- ❖ ஊழியர்கள் திறமையாக செயற் படுவதற்குப் பதிலாக தமது நேரத்தை சண்டையிடுவதிலும் விவாதிப்பதிலும் சதி செய்வதிலும் செல விட காரண மாகலாம்.

### முரண்பாடுகள் ஏற்படுவதற்கான காரணங்கள்

- ❖ தனிநபர்களின் ஆளுமையிலான வேறுபாடுகள்.
- ❖ புலனுணர்விலான வேறுபாடுகள்.
- ❖ இலக்குகளிலான வேறுபாடுகள்.
- ❖ வரையறுக்கப்பட்ட வளங்கள்.
- ❖ அதிகரித்த சிறப்புத் தேர்ச்சியும் பகுதியாக்கலும்.
- ❖ செய்தித் தொடர்பு.
- ❖ பாரபட்சம் காட்டுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ அந்தஸ்தை வெளிப்படுத்தும் அடையாளங்கள்
- ❖ அதிகார அமைப்பு. தலைமத்துவ பங்கு, முறைசாராத குழுக்கள், புதிய தொழில் நுட்பம் புகுத்துதல், மன அழுத்தம்.

முரண்பாடுகளை முகாமை செய்யும் போது சாதகமான விளைவுகள் உண்டாகும். பொதுவாக முகாமையாளர்கள் தமது நேரத்தில் 20% ஐ முரண்பாட்டு நிலைமைகளை கையாள்வதற்கு செலவழிப்பதாக குறிப்பிடுகிறார்கள். Schmidt என்பவர் முரண்பாட்டின் சாதக, பாதக விளைவுகளை பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

### சாதகமான விளைவுகள் (Positive Out Comes)

- ❖ சிறந்த எண்ணங்கள் (Ideas) உருவாகும்.
- ❖ ஊழியர்கள் புதிய அணுகு முறைகள தேடு வதற்கு நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.
- ❖ நீண்ட காலமாக இருந்து வரும் பிரச்சினைகள் வெளிக்கொணரப்பட்டு தீர்க்கப்படும்.
- ❖ தனி நபர்களின் நோக்குகள் தெளிவாக்கப்படும்.
- ❖ வேலையில் விருப்பத்தையம் புதியன வற்றை உருவாக்கும் ஆற்றலையும் தூண்ட முடியும்.
- ❖ மக்கள் தமது இயலளவை சோதிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

### பாதகமான விளைவுகள் (Negative Out Comes)

- ❖ சில ஊழியர்கள் தாம் தோற்கடிக்கப் படுவதாக அல்லது தாழ்த்தப்படுவதாக உணரலாம்
- ❖ ஊழியருக்கிடையிலான இடைவெளி அதிகரிக்கிறது.
- ❖ நம்பிக்கையின்மையம் சந்தேகமும் கொண்ட ஒரு சூழ்நிலை விருத்தியடையும்
- ❖ தனிநபர்களும் குழுக்களும் தமது சொந்த நலன்களில் அக்கறையாக இருப்பர்.
- ❖ ஊழியர் குழுவாக வேலை செய்வது (Teamwork) பாதிக்கப்படும்.
- ❖ ஊழியர்கள் விலகிச் செல்வது அல்லது விலகிச் செல்ல முற்படுவது அதிகமாக இருக்கும்.

நிறுவனம் ஒன்றின் பிரச்சினைகள் பலமுகங்களைக் கொண்டிருக்கக் கூடும். பிரச்சினை கள் பலவடிவங்களில் காணப்படும்.

- ❖ நிறுவனத்தின் கலாசாரம் தொடர்பான பிரச்சினைகள்.
- ❖ பாரம்பரியங்கள், விழுமியங்கள் மீறப் படும் போது தோன்றும் பிரச்சினைகள்
- ❖ அழுக்கக் குழுக்களின் பிரச்சினகள்.
- ❖ நிறுவனத்தில் காணப்படும் ஆளணியினரின் ஒழுக்கம், ஒழுக்கமீறல் தொடர் பான பிரச் சினைகள்.
- ❖ மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள். கல்வித்திணைக்களம், உத்தியோகத்தர்கள், பாடசாலையின் அமைப்புக்கள் (SDS, SDC, OSA, OGA). அரசியல் வாதிகள், வெளி நிறுவனங்கள் தமது விருப்பங்களை, எதிர்பார்ப்புக்கள் நிறுவனத்தில் நடைமுறைப்படுத்த முனையும்போது பிரச்சினைகள் முனைப் படைகின்றன.

### விடய ஆய்வில் இவற்றை சரியாக தெளிவாக விளங்கிக் கொள்ள

நிகழ்வுகள் என்றும் குறிப்பிடும் போது ஒரு நிறுவனத்தில் அன்றாடம் ஏதோ ஒருவகையில் எதிர்பாராத நிகழ்வுகள், சம்பவங்கள் நடந்தேறி விடுகின்றன. உடனுக்குடன்பிரச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினைகளக்கு தீர்வு காணப்படாதுவிடின் அவை தொடர்ச்சியாக கூர்மையடைந்து பாரிய சம்பவங்களாக மாறி விடக்கூடும்.

முகாமையாளர்கள் கள நிலைமகளை அன்றாடம் அவதானித்து பொருத்தமான நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முரண்பட்ட சம்பவங்கள் ஏற்படுவதற்கான சூழலை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

பாதகமான நிகழ்வுகள் ஏற்படுவதற்கு முன்ன தாகவே தேவையான முன்னெச் சரிக்கை செயற்பாடுகளை முகாமையாளர்கள் மேற்கொள்ள வேண்டும். முகாமைத்துவ அணியில் உள்ளவர்கள் அன்றாடம் நிறுவனச் சூழலின் கள நிலைமைகளை உடனுக்குடன் கலந்துரையாட வேண்டும். அப்போது எதிர்பாராத நிகழ்வுகளை ஓரளவுக்கு இழிவளவாக்கிக் கொள்ளலாம்.

### விடய ஆய்வு ஒன்றின் பிரச்சினயை ஆய்வு செய்வதற்கான படிமுறைகள்

ஒருவிடயத்தை ஆய்வு செய்வதற்கு இப்படி முறைகள் கற்றல் பயன்பாட்டை அதிகரிக்கப் படுவதோடு செயல்முறைகளயும் இலகுபடுத்து கிறது.

**1. முழுமையாக விடயத்தை வாசித்தல்**

ஒரு விடயத்தில் என்ன நடந்திருக்கிறது என்பதை முழுமையாக புரிந்து கொள்ள விட யத்தை கவனமாகவும் முழுமையாகவும் வாசித்தல வேண்டும். முதல் தடவையாக வாசிக்கும் போது விரைவாகவும் மேலோட்ட மாகவும் நிலைமை, ஆளணியினர், நிறுவனம் என்பவற்றை அறிய வாசிக்க வேண்டும். மீண்டும் வாசிக்கும் போது விடய ரீதியாக குறிப்புக்கள் எடுத்த வண்ணம் வாசிக்க வேண்டும்.

**உதாரணம் :–** பாடசாலையின் சூழல், அடிப் படைத் தகவல்கள், ஆளணியினர், முகாமைத் துவ செயல்முறைகள், ஆளணியினரின் தகை மைத் திறன்கள், பண்புகள், பாடசாலை பற்றிய சமகால நிலைமைகள், கலைத்திட்ட இணைக் கலைத்திட்ட செயற்பாடுகள், சுற்றுநிருபங்கள், வீதிகள், பிரமாணங்கள் நடைமுறைப் படுத்தலின் நிலைமை, பாடசாலை சமூக உறவு நிலை, பாடசாலை அமைப்புக்களின் செயற் படும் நிலை.

**2. பிரதானமான பிரச்சினையை வரையறை செய்தல்**

விடய ஆய்வில் பல பிரச்சினைக் தொடர்பு பட்டிருக்கும். இதில் பிரதானமான முக்கிய பிரச்சினையை அடையாளம் காணுதல் வேண்டும். முக்கியத்துவமற்ற ஏனைய பிரச்சினைகளில் இருந்து அதனை வேறு படுத்திக் கொள்ள வேண்டும்.

பிரதான பிரச்சினையை அடையாளம் கண்டவுடன் அதனுடன் தொடர்பான செயலாற்றுப் பகுதிக்குரிய பிரச்சினைகளை இனம் காணப்பட வேண்டும். பகுதிப் பிரச்சினைகள் ஆழமான பிரச்சினையை அடையாளம் கண உதவும்.

**3. பாடசாலையில் / நிறுவனத்தின் இலக்கை வரையறை செய்தல்.**

பாடசாலையொன்றின் செயற்பாட்டிற்கும் அதன் இலக்கிற்கும் இடயிலான முரண்பாடான தன்மை மேலே காணப்பட்ட பிரச்சினையை மேலம் வலுவூட்டும் இலக்குகளை அடையாளம் காண்பது எஞ்சியிருக்கும் விடயங்களை பகுப் பாய்வு செய்வதற்கு வழி காட்டியாக உதவும்.

**4. பிரச்சினைகளுக்குரிய தடைகளை இனம் காணுதல்.**

நிறுவனம் ஒன்றின் இலக்குகளை அடை வதில் அங்கு சில தடைகள் காணப்படும். உதா ரணமாக வரையறக்கப்பட்ட நிதி, ஆளணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றாக்குறை, வலுவான போட்டிகள் பலவீனங்கள், சவால்கள், முகாமைத்துவ கட்டமைப்பின் குறைபாடுகள், தீர்வுகளை முன் வக்கும் போது அங்கு காணப்படும் தடைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும், தடைகளை நீக்குவதன் மூலம் இலக்குகளை அடைந்து கொள்ள முடியும்.

### 5. பொருத்தமான மாற்று வழிகள் எல்லா வற்றையும் அடயாளம் காணல்.

இனம் காணப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பொருத்தமான எல்லா மாற்று வழி முறைகள் அனைத்தையும் பட்டியலிட வேண்டும். தமது ஆக்கத்திறன்களை மாற்றும் தீர்வுகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்த வேண்டும். பொருத்தமான மாற்ற வழிகளை தெரிவு செய்யும் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

- ❖ செலவு குறைவாக இருத்தல்.
- ❖ கால தாமதமின்றி செயற்படுத்தக் கூடியதாக இருத்தல்.
- ❖ குறைந்த சாதனங்களை கொண்டு செயற்படுத்தக் கூடியதாக இருத்தல்.
- ❖ இடர்கள் (Risk) குறைவாக இருப்பதை உறுதி செய்தல்.

### 6. பொருத்தமான சிறந்த மாற்று வழியை தெரிவு செய்தல்.

கைவசமுள்ள தகவல்களில் இந்து ஒவ்வொரு மாற்று வழியையும் மதிப்பீடு செய்து சிறந்த தீர்வை மேற்கொள்ள வேண்டும். அதாவது படிமுறைக்கு நேரடியாக தாவுவதை தவர்க்க வேண்டும். ஏனெனில் இதனால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

- ❖ முக்கியமான தகவல்களை தவறவிடுதல்
- ❖ பிரச்சினையை தவறாக புரிந்து கொள்ளல்.
- ❖ சிறந்த மாற்று வழித் தீர்வை தவற விடுதல்.

மேலும் கூறப்பட்டவை நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

### 7. அமுலாக்கல் திட்டத்தை விருத்தி செய்தல்.

திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஆராய்வின் இறுதி நிலையே முடிவினை நடைமுறைப்படுத்துவதாகும். அமுலாக்கல் திட்டம் இல்லாத ஒரு மிகச்சிறந்த தீர்மானம் கூட நிறுவனத்திற்கு பாதகமான நிலையை ஏற்படுத்தும் விடய ஆய்வுகளில் நிகழ்வுகள் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. நிறுவன செயற்பாடுகளில் எதிர்பாராமல் இடம் பெறும் விடயங்களை பொதுவாக நிகழ்வுகள் எனக் குறிப்பிடலாம். பாடசாலை செயற்பாடுகளில் அன்றாடம் எதிர்பாராத நிகழ்வுகள் நடந்தேறி வருவதுண்டு. இவை விரும்பத்தகாத பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி சடுதியான எதிர்மறையான விடயங்களை ஏற்படுத்தி விடும். இதனால் முகாமையாளர்கள் முன்கூட்டியே சில ஏற்பாடுகளை செய்துகொள்வதும் மனவெழுச்சி உறுதிகளை பேணுவதும் முக்கியதமானதாகும். முன்னெச்சரிக்கை செயற்பாடுகளை திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

### விடய ஆய்வு ஒன்றில் வினாக்கள் பற்றிய ஒரு நோக்கு

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான கல்வி நிர்வாகத் துறை சார்ந்த விடயம் பற்றிய ஆய்வு வினாத் தாளில் வினாக்களின் அமைப்பைப் பார்க்கும் போது பின்வரும் விடயங்களை அவதானிக்க முடியும்.

- ❖ குறித்த விடய வகை கற்றலில் இருந்து விடையை தெரிவுசெய்யக் கூடியதான ஒரு வினா உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- ❖ ஏனைய வினாக்கள் கல்வி நிர்வாக முகாமைத்துவ விடயங்களோடு தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட பல்வேறு விடயப்பரப்புகளை உள் ளடக்கியிருந்ததை அவதானிக்க முடியும்.

- ❖ முகாமைத்துவ கட்டமைப்பு, ஆளணி யினர் வகிபாகம் (2002ஆம் ஆண்டு வினாத்தாள்)
- ❖ மாணவர் அடைவு மட்டத்தை அதி கரிப்பதற்கான செயற்றிட்டங்கள் (2002)
- ❖ தலைமைத்துவம், தலைமைத்துவ தேர்ச்சி கள் தலைமைத்துவ திறன்கள் (2002)
- ❖ ஆசிரியர் வினையாற்றுகை மதிப்பீட்டுத் திட்டம் (2005, 2006)
- ❖ கல்வித்திணைக்கள அதிகாரிகள் அணுகு முறைகள் (2005)
- ❖ அதிபரின் குறைபாடுகள், நீக்குவதற் குரிய நடவடிக்கைகள் (2010, 2011)
- ❖ ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டங்கள் (2010, 2011)
- ❖ பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் PSI (2010, 2011)

கடந்த கால பரீட்சை வினாத்தாள்களின் அமைப்பை சரியாக விளங்கிக் கொண்டு அதற் கேற்ப பரீட்சார்த்திகள் தம்மை பரீட்சைக்கு தயார் செய்து கொள்ள வேண்டும். கல்வித் துறையில் அண்மைக்காலத்தில் நடைமுறைப் படுத்தப்படும் விடயங்கள் தொடர்பான அறிவும், அனுபவமும், தேடலும் முக்கியமானதாகும். அவை தொடர்பான சுற்றுநிருபங்கள் வெளியீடுகள், அறிக்கைகள், முன்மொழிவுகள், கட்டுரைகள் போன்றவற்றை வாசித்து அறிந்து கொள்ள வேண்டும். பின்வரும் விடயப் பரப்புகளில் பரீட்சார்த்திகள் தமது கவனத்தை செலுத்த வேண்டும்.

- ❖ பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் ஆசிரியர் செயலாற்றுகை மதிப்பீட்டுத்திட்டம்.
- ❖ பாடசாலச் செயற்றிட்டங்கள்.
- ❖ பாடசாலைகளின் கல்வி நிறவனங் களின் முகாமைத்துவ கட்டமைப்புகள்.
- ❖ அதிபர்களின் தலைமைத்துவம், முகாமைத்துவ, தேர்ச்சித்திறன்கள்.
- ❖ பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் அபிவிருத்தித்திட்டம்.
- ❖ பாடசாலை உள்வாரி, வெளிவாரி மதிப்பீட்டு வேலைத்திட்டம்.
- ❖ ஆசிரியர்களின் விழுமியம் மிக்க செயற் பாடுகள் தொடர்பான ஒழுக்க விழுமிய முறைமை மற்றும் பொதுச் சட்டத் தொகுப்பு.
- ❖ பாடசாலைகளில் நடைமுறைப் படுத் தப்படும் துறைசார் அபிவிருத்தி செயற்றிட்டங்கள்.
- ❖ கல்வியில் தர உறுதிப்பாட்டை ஏற்படுத்து வதற்கான வேலைத்திட்டங்கள்.
- ❖ தகவல் தொடர்பா டல் தொழில்நுட்ப அபிவிருத்திக் கான செயற்றிட்டங்கள்.
- ❖ க.பொ.த. (உ/த) வகுப்புக்களில் அறி முகம் செய்யப்பட்ட தொழில்நுட்ப பாடத்துறை.
- ❖ தொடரும் கல்வி, ஆசிரியர் கல்வி வாண்மை விருத்தி.
- ❖ கல்வித்துறை வினைத்திறன் மேம் பாட்டுக் கான வேலைத்திட்டம்.

மேலும் பாடசாலை முகாமைத்துவ. நிர்வாக செயற்பாடுகளில் பயன்படுத்தப்படும் முகாமைத்துவ கலைச் சொற்கள், நிர்வாக கலைச் சொற்களின் எண்ணக்கருக்களை சரியாக விளங்கிக் கொள்ள வேண்டம்.

**பின்வரும் விடயங்கள் தொடர்பான அறிவை மேம்படுத்த வேண்டும்.**

- ❖ வினைத்திறன் விளைதிறன்.
- ❖ தலைமைத்துவ மாதிரிகள்.
- ❖ பங்கு கொள் முகாமைத்துவம்.
- ❖ பாடசாலையில் ஜனநாயக சூழலை ஏற் படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ கல்வியில் தரவிருத்திச் செயற்பாடுகள்.
- ❖ தலைமைத்துவம் முகாமைத்துவம்.
- ❖ பாடசாலை அபிவிருத்தித்திட்டங்கள்.
- ❖ பாடசாலை தகவல் முறைமை (Emis) கலைத்திட்ட இணைக்கலைத்திட்ட முகாமை.
- ❖ பாடசாலை நிதி, முகாமைத்துவ செயற் பாடுகள்.

தாபன விடயங்கள், நிதிப்பிரமணங்கள், சுற்று நிரூபங்கள், அறிவுறுத்தல்கள் பரீட்சக்கு தயாராகும் பரீட்சார்த்திகள் வினாக்களில் உள்ள சொற்பதங்களை சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

**உதாரணம் :– தலைவர் என்ற ரீதியில் 5 குறைபாடுகளை குறிப்பிடுக. நுனித்து விமர் சிக்குக, பரிசீலிக்குக, நடைமுறைகளை விளக்குக. தெளிவாகக் காட்டுக, தேர்ச்சி களை குறிப்பிடுக. தேர்ச்சிகளின் முக்கி யத்துவத்தை ஆராய்க. இவ்வாறான சொற் பதங்களை சரி யாக விளங்கிக் கொண்டு விடையளிக்க முயற்சிக்க வேண்டும். பின் வரும் செயற்பாடுகளை முன்னெடுப்பது பொருத்தமானது.**

- ❖ முகாமைத்துவ விடய ஆய்வில் பரீட் சார்த்திகள் பெறும் வெற்றியானது அவர்கள் விடய ஆய்வை எவ்வாறு அணுகுகிறார்கள் என்பதில் தங்கியுள்ளது.
- ❖ பரீட்சார்த்திகள் தமது அறிவு, அனுபவம், ஆராயும்திறன் என்பவற்றின் என்பவற்றின் அடிப்படையில் விடய ஆய்வை விளங்கிக் கொள்ள வேண்டும்.
- ❖ முகாமைத்துவ எண்ணக்கருக்களை சரியாக விளங்கிக்கொள்ள வேண்டும்.
- ❖ விடய ஆய்வை வாசித்து குறிப்பு எடுக்கும் போது வினாக்களுக்கு பொருத்தமான வகையில் குறிப்புகளை எடுத்தல் நன்று.
- ❖ நேர முகாமைத்தை பின்பற்றுதல் வாசிப் பதற்கான நேரம் ஒதுக்குதல், குறிப் பெடுப்பதற்கான நேரம் ஒதுக்குதல் ஒவ் வொரு வினாவுக்கும் விடை எழுது வதற்கான நேரம் ஒதுக்குதல். (உ+ம்) (15–20 நிமிடம்)
- ❖ முகாமைத்துவ எண்ணக் கருக்கள், முகாமைத்துவ கலைச் சொற்கள் பற்றி விளக்கம். (உ+ம்) திட்டமிடல், ஒழுங்கு படுத்துதல் நெறி கட்டுப்படுத்துதல். (PODC - Skill)
- ❖ குறித்த ஒரு நிகழ்வு நடைபெறாது தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கையை மேற்கொண் டிருக்க வேண்டும் என்பதை குறிப்பிடுதல்.
- ❖ விடைகளில் தெளிவு, தர்க்கரீதியான ஒழுங்கமைப்பு, தெளிவாக, சுருக்கமாக குறிப்பிடும் தன்மைகள் காணப்படுதல் வேண்டும்.
- ❖ தேவையான இடத்து விடைகளில் கல்வி நிர்வாக கட்டமைப்புகள், சுற்றுநிரு பங்கள், தாபன விடயங்கள், நிதிப்பிர மாணங்கள் ஆதாரங்களாக எடுத்தாளப் படலாம்.
- ❖ விடைகளை தெளிவான, சுருக்கமான குறிப்புகளாக எழுதுவது பொருத்தமானது.
- ❖ விடய ஆய்வில் குறிப்பிடும் பாடசாலை யின் SWOT பகுப்பாய்வை செய்து குறிப்புகளை வைத்திருத்தல் (பலம், பலவீனம், சந் தர்ப்பங்கள், சவால்கள்)

**விடய கற்கை அடிப்படையிலான முறைமைகள்**

I. நிலைமையின் இயங்குதன்மை இயங் கியலை விளங்கிக் கொள்ளல.

II. நிலவும் பிரச்சினைகளை வரையறுத் தல், தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச் சினையை தீர்மானித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. நடைமுறைச் சாத்தியமான வழியை உருவாக்குதல், அதனை கணிப்பீடு செய்த சாத்திய மான தீர்வை முன் வைத்தல்.

IV. ஒவ்வொரு வழிவகைகளுக்குமான பலம், பலவீனம், சந்தர்ப்பங்கள், சவால் களை மதிப்பிடல்.

V. திருப்பதியளிக்கக் கூடிய அல்லது செயற் படுத்தக் கூடிய செயற்றிட்டங்களை தீர்மானித்தில்.

**விடயக்கற்கைகளை பயன்படுத்தும் போது ஏற்படக் கூடிய நன்மகள்**

- ❖ தெரிந்து கொள்வதற்கான தேவையை உரு வாக்குதல்.
- ❖ நடைமுறைகளை சிந்திப்பதற்கான கால இடைவெளியை வழங்குதல்.
- ❖ விமர்சன ரீதியான சிந்தனைத்திறன் மட்டத்தை உயர்த்துதல்.
- ❖ அவதானிக்கும் திறனையும் கற்றல் திறனை யும் உயர்த்துதல்.
- ❖ ஆழமான குறை காணலையும்கருத்துரு வாக்கத்தையும் உடன் ஏற்படுத்துதல்.
- ❖ பிரச்சினைகளை தீர்க்கும் திறன்களை விருத்தி செய்தல்.
- ❖ கொள்கைகளையும் நடைமுறைகளை யும் தொடர்புபடுத்த உதவுதல்.
- ❖ சிக்கலான நிலைமைகளையும் சந்தர்ப் பங்களையும் வெளிப்படுத்துதல்.
- ❖ நெருக்குதல்கள், பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை அடைதல்.

விடய ஆய்வினை உணர்வு பூர்வமாக அனுகும் போது பல நன்மைகள் ஏற்படும் முகாமைத்துவ திறன்களை அதிகரிப்பதற்கு விடய ஆய்வுக் கற்கைகளில் போதுமான அனுபவம் பெறுவது பொருத்தமானது. ஒவ்வொருவரும் தீர்மானம் எடுக்கும் திறனை வாளர்த்துக் கொள் வதற்கும் விமர்சன ரீதியாக எந்த வொரு விட யத்தை அணுகுவதற்கும் விடய ஆய்வுக் கற் கைகள் உதவும் அறிவுசார் சிந்தனை வளர்ச் சிக்கும் அறிவுசார் செயற்பாடுகளுக்கும் இத் தகைய விடயக் கற்கைகள் பற்றிய அறிவு உந்து சத்தியாக விளங்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளில் புதிய கட்டமைப்புக்களின் உருவாக்கம்

பாடசாலை முகாமைத்துவ செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாகவும் விளைதிறன் மிக்கதாகவும் மாற்றி பாடசாலையின் இலக்கினையும் கல்வியின் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்காக காலத்துக்கு காலம் இலங்கையில் பாடசாலை சமூகம் ஆகிய ஆகிய இரண்டையும் இணைப்பதற்காக பல கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன. இதற்காக கல்வி அமைச்சு பல்வேறு சுற்று நிருபங்களை வெளியிட்டு கட்டமைப்புக்களை உரு வாக்கியது.

பெற்றோர் ஆசிரியர் சங்கம் 1982/2, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபி விருத்தி சபை 2008/35 பாடசாலை மேம்பாட்டு திட்டம் (PSI) இதன் கீழ் பாடசாலை அபிவிருத்தி குழு ஆகிய அமைப்புக்கள் இலங்கை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. பாடசாலை செயற்பாடுகளில் பாடசாலை சமூகத்தை பங்கெடுக்கச் செய்வதற்காகவும் சமூகவளங்களை பாடசாலை அபிவிருத்தி செயற்பாடுகளில் இணைத்துக் கொள்வதற்காகவும் இவ்வாறான அமைப்புக்கள் உதவும் என எதிர்பார்க்கப்பட்டது.

இருந்த போதிலும் எதிர்பார்த்த அளவுக்கு இக்கட்டமைப்புக்கள் மாற்றங்களை பாடசாலைகளில் ஏற்படுத்தியமையை அவதானிக்க முடியவில்லை பிரபல்யமான பெரிய பாடசாலைகளில் கூட இக்கட்டமைப்புக்கள் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை ஆற்றவில்லை. குறிப்பாக பெரிய பாடசாலைகளில் பழைய மாணவர் சங்கம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றிற்கிடையில் அக முரண்பாடுகள் காணப்பட்டன. யார் இதில் முதன்மை இடத்தை வகிப்பது, அபிவிருத்தியில் எது அதிக பங்களிப்பு வழங்குவது போன்ற முரண்பட்ட நிலைமைகள் காணப்பட்டன. பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் பல பலவீனமான நிலையில் காணப்பட்டன.

- ✠ காலத்திற்கு காலம் உரிய வேளைகளில் பொதுக் கூட்டம் நடத்தப்படாமை.
- ✠ 1982/2 பாடசாலை அபிவிருத்தி சங்க சுற்று நிருபம் சரியாக பின்பற்றப் படாமை.
- ✠ வருடாந்த செயற்பாட்டறிக்கை வருடாந்த நிதியறிக்கை வருடாந்த வரவு செலவுத்திட்டம் போன்றவை உரிய காலங்களில் சமாப்பிக்கப்படாமை.
- ✠ பழைய மாணவர் சங்க பிரதிநிதிகளும் ஒரே ஆட்களாக காணப்பட்டமை.
- ✠ வருடாந்த அங்கத்தவர் சந்தா பெற்றுக் கொள்ளாமலே பல பாடசாலைகளில் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.
- ✠ சுற்று நிருபத்தை மீறிய வகையில் ஒரு நபர் நீண்ட காலமாக அதே பதவி வகித்தமை.
- ✠ பல பாடசாலைகள் சுற்று நிருபத்தை பார்க்காமலேநீண்ட காலம் பெயரளவில் இயங்கியமை.
- ✠ பாடசாலை அபிவிருத்திச்சபை (SDS) சுற்று நிருபம் இரத்துச் செய்யப்பட்ட பின்பும் பல பாடசாலைகள் தமது பற்றுச் சீட்டுக்கள் கடிதத் தலைப்புக்களில் பாடசாலை அபிவிருத்திச் சபையின் பெயரை பயன்படுத்தி வந்துள்ளன.
- ✠ தலைவர், உப தலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர், உப பொருளாளர் என்ற புதிய பதவிகள் கூட பாடசாலை அபிவிருத்திசங்கத்தில் (SDS) நடைமுறைப்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✠ பல பாடசாலைகளில் நிர்வாக சபைக் கூட்டங்கள் கூட நீண்டகாலமாக கூட்டப் படாமல் இருந்துள்ளமை அவதானிக்கப் பட்டுள்ளன.

இவ்வாறான பலவீனமான நிலைமைகளை மாற்றியமைப்பதற்கும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பாடசாலை மட்டத்தில் தீர்மானம் எடுத்தல் வெளிப்படைத்தன்மை கொண்ட முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை முறைமையை வினைத்திறன் மிக்கதாக மாற்றுதல் ஆகிய இலக்குகளை அடிப் படையாகக் கொண்டு பண்பு ரீதியான அளவு ரீதியான கட்டமைப்பு ரீதியான அபிவிருத்திக்கான திட்டமிடல் நியாயத் தன்மையும் தரத்தை அடிப்படையாகக் கொண்ட பெறுகைச் செயற் பாடுகள் தொடர்பான புதிய சுற்று நிருபம்07/2013 சுற்று நிருபம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பாடசாலை முகாமைத்துவ செயற்பாடுகளில் நடைமுறையாய் இருந்து வந்த பின்வரும் சுற்றுநிருபங்கள் இரத்துச் செய்யப்பட்டு புதிய 7/2013 சுற்று நிருபம் அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.

- ✠ பாடசாலை அபிவிருத்திச் சங்க சுற்று நிருபம் (SDS) 1982/2 30.03.1982
- ✠ தர உள்ளீடு தொடர்பான சுற்று நிருபம் (Q1)-HRD/PPM/ 2002 /30.04.2002
- ✠ தர உள்ளீடு உயர்மட்ட செயற்பாடுகள் (QI) HOP)-2006/16-21.03.2006
- ✠ பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் (PSI) -2008-/35 15.09.2008

## நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கட்டமைப்பின் நோக்கங்கள்

- ✠ தேசிய கல்விக் கொள்கை, கல்வி சார் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்தல்.
- ✠ பிரதேச, சமூக, கலாச்சார பொருளா தாரத்தில் உற்பத்தி திறனில் மாற்றத்தை ஏற்படுத்தல்.
- ✠ சிறந்த நிறுவனமாக பாடசாலையை அபிவிருத்தி செய்தல்.
- ✠ தகவல்கள் விளம்பரங்கள் அடிப்படை யில் தீர்மானங்களை எடுத்தல், அபி விருத்தியின் பால் பாடசாலைகளை வழிப்படுத்தல்.
- ✠ பாடசாலை களின் அடிப்படைத் தேவை களை முன்னுரிமைப்படுத்தி அத் தேவையை பூர்த்தி செய்வதற்கு வழிப் படுத்தல்.
- ✠ கல்வியின் பண்பு சார் தர விருத்தியை எய்துவதற்காக பாடசாலை வளங்களை பயன் மிக்கதாக பயன்படுத்தல்.
- ✠ வினைத்திறனையும் உற்பத்தி திறனை யும் மேம்படுத்தல்.
- ✠ பங்கேற்பு முகாமைத்துவம் சுய தீர் மானத்திற்கான வலுவூட்டல், நிர்வாகம் – முகாமைத்துவம்–நிதி கையாளுமை எனபவற்றில் பாடசாலைகளுக்கு அதி காரங்களை வழங்குதல்.
- ✠ முகாமைத்துவத்தில் வெளிப்படைத் தன்மை நெகிழ்வுத்தன்மை வகை கூறல் என்பவற்றிற்கூடாக பொறுப்புக்களை உறுதிப்படுத்தல்.
- ✠ பாடசாலை அபிவிருத்தி சிறந்த நிர் வாகம் முகாமைத்துவம் பாடசாலை சமூகம் பரஸ்பர நல்லுறவை ஏற்படுத்தல்.

இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதன் ஊடாக பின்வரும் பேறுகள் எதிர்பார்க் கப்படுகின்றன.

- உள்ளார்ந்த திறன்களை இனம்காணுதல், தேசிய பாடத்திட்ட கொள்கை, தேர்ச் சியை பெறுவதற்கான கற்றல் சூழல் உருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலை முன்னேற்றம் பற்றி பாட சாலை சமூகத்திற்கு அறிவிக்கும் உபா யங்கள் உருவாகும். உயர்மட்ட இலக்கு ஆக்கத்திறன் மிக்க வேலைத்திட்டங்கள் உருவாகும்.
- சமூக தேவைப்பாடுகளுக்கு மிகவும் பொருந்தும் பாடசாலை உருவாகும்.
- பாடசாலை அபிமானம் கொண்ட செயற் றிட்டம் கொண்ட பாடசாலைச் சமூகம் உருவாகும்.
- ஜனநாயகப் பண்புகள் கொண்ட வெளிப் படைத்தன்மையான நெகிழ்வுத் தன்மை கொண்ட முகாமைத்துவ சூழல் உருவாகும்
- அறிவை அடிப்படையாகக் கொண்ட தொழில் தேர்ச்சியை தொடர்ந்து இற்றைப்படுத்தி வருகின்றபண்பு ரீதி யாக செயற்படும் ஆளணியினர் உரு வாகுவர்.
- பாடசாலை ஆளணியினரின் தரத்தை நாளாந்தம் விருத்தி செய்வதற்கான செயற்றிட்டங்கள் உள்ளக மதிப்பீடு பின்னூட்டல் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.
- பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி திட்டம் (SBTD), செயல்வழி ஆய்வு, புத்தாக்க வேலைத்திட்டங்கள் நடை முறைப் படுத்தப்படும்.
- மாணவர்களின் கல்விப் பிரச்சினை களை இனங்காணுதல் வேலையுலகிற்கு பொருத்தமான கல்வி , தொழில் வழி காட்டல்கள் ஆலோசனை வழங்கும் வேலைத்திட்டம் கல்விப் பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்காக உதவுதல். நிலைமைகளில் மேம்பாடு ஏற்படும்.

### உருவாக்கப்படவுள்ள புதிய கட்டமைப்புக்கள்

- ❖ பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (SDS) (School Development Society)
- ❖ பாடசாலை அபிவிருத்திக் குழு (SDC) (School development Commirttee)
- ❖ பாடசாலை முகாமைத்துவக் குழு (SMC) (School Management committe)

### பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் கட்டமைப்பு (SDS)

- ❖ பாடசாலையின் அதிபர் உள்ளிட்ட ஆசிரியர்கள், பதவிவழி அதிபர் தலைவர் ஆவார்.
- ❖ பாடசாலை நில வரவு இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்ட மாணவர்களின் பெற் றோர் மற்றும்சட்ட ரீதியான பாதுகாவலர்.
- ❖ பாடசாலையின் பழைய மாணவர்கள்.
- ❖ வழிகாட்டுபவர் என்ற வகையில் வல யக்கல்வி பணிமனையின் பதவி நிலை உத்தியோகஸ்தர் ஒருவர்.

### பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம்

- ❖ பாடசாலையால் வழங்கப்படும் சேவை யின் தரத்தை மேம்படுத்தல்.
- ❖ பாடசாலை சமூகத்தை பாடசாலை யுடன் இணைத்தல்.
- ❖ பாடசாலை அபிவிருத்தி கலந்துரை யாடல்.
- ❖ சமூகத்திற்கு அறிவூட்டல் ஆகிய இலக்கு களை நிறைவேற்ற பொதுக்கூட்டம் கூட்டப்படவேண்டும்.

- ஒவ்வொரு வருடமும் மார்ச் 31–ம்திகதிக்கு முன்னதாக பொதுக் கூட்டம் கூடுதல்.
- மேலதிக தேவை இருப்பின் விசேட பொதுக் கூட்டத்தை நடத்தலாம்.
- பொதுக் கூட்டத்திற்கு அனைத்து அங் கத்தவர்களும் சமுகமளிக்க செய்தல் வேண்டும்.
- பொதுக் கூட்டம் தலைவரால் (அதிபர்) கூட்டப்பட வேண்டும்.
- பொதுக் கூட்டத்தில் பாடசாலை அபி விருத்திக்குழு (SDC) உறுப்பினர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்பட வேண்டும். (இரண்டு வருடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட குழு இயங்கும்)

- குழுவின் உத்தியோகஸ்தர்களின் விபரங்கள் வலயக்கல்வி பணிமனையில் பேணப்பட வேண்டும்.
- பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியவை

❖ கடந்த வருடத்தின் கணக்கறிக்கை முன்னேற்ற மீளாய்வு அறிக்கை.

❖ எதிர்வரும் ஆண்டில் நடை முறைப் படுத்தப்படவுள்ள உத்தேச திட்டங்கள் வருடாந்தவரவு செலவுத் திட்டம் தயாரித்து அங்கீகாரம் பெற வேண்டும்.

❖ பாடசாலை அபிவிருத்தி சங்க விசேட கூட்டம் SDC இன் 2/3 பங்கினரின் வேண்டுதல் அல்லது SDS இன் 1/3 பங்கினரின் வேண்டுதலின் பேரில் கூட்டப்படலாம்.

❖ பாடசாலைகளின் முகாமைத்துவ தேவைகளின் பொருட்டு விசேட கூட்டத்தை கல்வி அமைச்சின் செயலாளர், கல்விச் சேவைகள் அமைச்சின் செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக்கல்வி பணிப்பாளர் கூட்டமுடியும்.

### அங்கத்துவ கட்டணம்

❖ பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், வலயக்கல்வி பணிமனையின் பிரதிநிதிகள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் அங்கத்துவ பணம் செலுத்த வேண்டியதில்லை.

❖ ஏனைய எல்லா அங்கத்தவர்களும் அங்கத்துவ பணம் கொடுத்து அங்கத்துவத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

❖ வருடாந்தம் 50/= க்கு குறையாமலும் 600/= க்கு மேற்படாமலும் தீர்மானிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும்.

### பாடசாலை அபிவிருத்தி குழு (SDC)

- தேசிய கல்விக் கொள்கை சட்டகத்துள் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைந்து கொள்ளல்.
- பாடசாலைகளில் இனங்காணப்பட்ட தேவைகளுக்கு திட்டமிடல் உபாயங்களை மேற்கொள்ளல்.
- அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், செயற்றிட்டங்கள்தொடர்பாகதீர்மானங்கள் எடுத்தல்.
- எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையில் ஈடுபடுதல்.
- வேலைத்திட்டம்நடை முறைப்படுத்தலில் அவதானமாக இருத்தல்.

### SDC இன் கட்டமைப்பு

❖ பாடசாலை அதிபர்.

❖ பாடசாலை ஆசிரியர்களின் பிரதிநிதிகள்

❖ பெற்றோர் பாதுகாவலர்களின் பிரதிநிதிகள்.

❖ பழைய மாணவர் பிரதிநிதிகள்

❖ வலயக்கல்வி அலுவலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் பிரதிநித்துவ ஒழுங்கமைப்பு – பாடசாலையில் கற்கும் மாணவர்களின் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

❖ தலைவர் –பதவி வழி பாடசாலையின் அதிபர்.

❖ செயலாளர் – பெற்றோர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர் (ஆசிரியர் ஒருவர் பெற்றோராக இருக்கும் பட்சத்தில் செயலாளராக தெரிவு செய்ய முடியாது.

❖ பொருளாளர் – ஆசிரியர் குழாத்தின் 2/3 பங்குக்கு குறைவான ஆசிரியர் குழுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படல் வேண்டும். SDS இன் அனுமதி பெறப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ உறுப்பினர்கள் மேலே குறப்பிடப்பட்ட பிரதிநிதித்துவம்.
- ❖ வலயப் பிரதிநிதி ஒருவர்.

**பாடசாலை அபிவிருத்தி குழுவின் பணிகள்**

- ❖ பாடசாலையில் தரமான கல்வியை வழங்குதல் தொடர்பாக தேவைகளை இனங் காணுதல்.
- ❖ அதிகார எல்லையினுள் நின்று பாட சாலை மட்ட தீர்மானங்களை மேற் கொள்ளல்.
- ❖ பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு இக்குழுவிற்கு உண்டு.
- ❖ பாடசாலைக்கு பொருத்தமான முறை களையும் தேவைகளையும் முன்னுரி மைப்படுத்தல்.
- ❖ பாடசாலை அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் வளப்படுத்தல்.

பின்வரும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**பாடசாலை மட்டத்தில் திட்டமிடல்**

- பாடசாலையின் இலக்குகளை அடை வதற்கு பாடசாலை மட்டத்தில் இடைக் காலத்திட்டங்கள் (3 வருடம் 5 வருடம்) வருடாந்த அமுலாக்கல் திட்டங்கள் திட்டங்களை தயாரித்தல்.
- பாடசாலை முகாமைத்துவ குழுவை **SMC (School Managment committe)** ஈடுபடுத்துவது.
- தர அடிப்படை உள்ளக மதிப்பீடு அடிப் படையில் விடயங்கள் தகவல்கள் தரவு களை அடிப்படையாக கொள்ளல்.
- திட்ட தயாரிப்பில் SDS ஊடாக உத்தேச நிதி ஒதுக்கீடு மத்திய மாகாண அரசு ஒதுக்கீடுகள் என்ற வகையில் நிதி மூலகங்களை குறிப்பிடவேண்டும்.
- அபிவிருத்தி திட்டமிடல் வேலைகள் ஓகஸ்ட் மாதத்திற்குள் பூரணப்படுத்தி டிசெம்பர் 15-க்கு முன் வலயக்கல்வி பணிப்பாளரின் (ZDE) அனுமதி பெற வேண்டும்.
- நிதி ஒதுக்கீடுகளைப் பெற நடவடிக்கை எடுத்தல் அபிவிருத்தி திட்டத்தின் பிரதி ஒன்று கல்விச் சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

| ஆசிரியர் பிரதிநிதிகள் ஆசிரியர் எண்ணிக்கை | பெற்றோர் பிரதிநிதிகள் (மாணவர் எண்ணிக்கை) அடிப்படயில் | பழையமாணவர் பிரதிநிதிகள் (கற்கும் மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் |
|---|---|---|
| 4 - 10 → 03 | < 100 → 03 | 1 - 500 - 02 |
| 11 - 20 → 04 | 101 - 500 → 04 | 501 - 1000 04 |
| 21 - 40 → 05 | 501 - 1000 → 05 | 1001 - 2000 - 06 |
| 41 - 70 → 06 | 1001 - 1500 → 06 | 2001 - மேல் - 08 |
| 71 - 100 → 07 | 1501 - 2000 → 07 | (SDC இல் – 02 பிரதிநிதிகள் மட்டும்.) |
| 100 மேல் → 08 | 2001 மேல் → 08 | |
| | (1-5), (6-13)- வகுப்புக் களை பிரதிநிதித்துவப் படுத்துதல். | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முன்னைய வருட திட்ட முன்னேற்றம் கணக்காய்விற்கு உட்படுத்திய வரவு செலவுத்திட்டம் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 31-க்கு முன் SDS இல் முன்வைத்து அங்கீகாரம்பெறுதல்வலயக் கல்வி பணிமனைக்கு சமர்ப்பத்தல்.
- உள்ளக கணக்காய்வாளருக்கு கணக்கு களை சமர்ப்பிப்பது அதன்அறிக்கை குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- பாடசாலை மட்ட திட்டமிடலில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள பாடசாலை மட்ட திட்டமிடல் அறி வுறுத்தல்கையேட்டிற்கு அமைய இருத்தல் வேண்டும்.
- பாடசாலை மட்ட திட்டமிடலில் பாட சாலை தேவைகள் முன்னுரிமை படுத் தப்படல் வேண்டும். பெறு பேற்று அடிப் படையிலான திட்டமிடல் பிரவேசம் இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் பாட சாலை செயல் சாதனை அறிக்கை (Annual Performance Report) மார்ச் 31ற்கு முன் தயாரிக்க வேண்டும்.

**பாடவிதானம் இணைப்பாடவிதானம், வெளிக்கள செயற்பாடு அபிவிருத்தி**

- ❖ மாணவர்கள் அபிவிருத்தி தேவை கள், ஆற்றல்கள் பிரதேச தேவைகள் என்பவற்றைக் கருத்தில் எடுத்து ஆற்றல் மிக்க மாணவர்களை உருவாக்கும் வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தல்.
- ❖ கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் காணப்படும் குறைபாடுகள், தடைகள் இணங்காணப்பட்டு நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ❖ கற்றல் முன்னேற்ற நிதிக்கொடை, பங்கு சார் உள்ளீடுகள் பெறுவதற்கு உதவுதல்.
- ❖ இணைப்பாடவிதான வெளிக்கள வேலைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- ❖ நூலக வசதிகள், கல்வி சார் உபகர ணங்கள், ஆய்வு கூடங்கள், தொழில் நுட்ப கூடங்கள், கணனி அறைகள் என்ப வற்றை விரிவுபடுத்த உதவுதல்.
- ❖ பாடவிதான அபிவிருத்தி, இணை பாட விதான அபிவிருத்தி, வெளிக்கட செயற்பாடுகள் அவிவிருத்தி என்ப வற்றுக்கு வளங்கல், தனிநபர்களது ஒத்துழைப்பை பெறுதல்.
- ❖ அவசியமான ஊக்கப்படுத்தல் வேலை களை வலுப்படுத்த உதவுதல்.
- ❖ பாடசாலை கல்வியை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு உயர் கல்வி தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளும் மேற் கொள்ளல்.
- ❖ மாணவர்களுக்கு விருப்பமிக்க கற்றல் சூழலை உருவாக்கல்.

**பாடசாலையை அடிப்படையாக கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் (SBTD) நடைமுறைப்படுத்துதல்**

- ❖ ஆசிரியர் செயலாற்றுகை மீளாய்வில் அடிப்படையில்விருத்திசெய்ய வேண்டிய திறன்களை இனம் காணல், இல்லாது ஒழிக்க வேண்டிய குறைபாடுகளை இனம் காணல்.
- ❖ ஆசிரியர்களின் தொழில் விருத்தி தேவைகளை நிறைவேற்றப் பொருத்த மான அபிவிருத்தி வேலைத்திட்டங் களை ஒழுங்கு படுத்தல்.
- ❖ ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டங் களை நடைமுறைப்படுத்துதல்.
- ❖ மாணவர் நலன் கருதி அவசியமான ஆசிரியர் பயிற்சிக்கு முன்னுரிமை வழங்க நடிவடிக்கை எடுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடசாலை சுற்றாடல் நிர்வாகமும் அபிவிருத்தியும்

- ❖ பாடசாலை சூழலில் தூய்மை, ஒழுங்கு முறை என்பவற்றை பேண மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் சிந்தனை விருத்தி திட்டங்களை செயற்படுத்துதல்.
- ❖ கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகள் செயற்படுத்த அவசியமான புனரமைப்பு, திருத் தங்கள் செய்வதற்கு வேலைத் திட்டங்களை தயாரித்து செயற்படுத்துதல்.
- ❖ திட்டமிட்ட பங்கேற்றல் முகாமைத்து வத்தில் ஊடாக பாடசாலை சூழலை விருத்திசெய்ய நடவடிக்கை எடுத்தல்.

### பாடசாலை மூலதன சொத்து, முகாமைத்துவம்

- ❖ பாடசாலை கிடைக்கும் சகல மூலதன சொத்துக்கள் தொடர்பான சொத்து முகாமத்துவ திட்டம் ஒன்றை தயாரித்தல்.
- ❖ மூலதன சொத்து தொடர்பான ஆவணம் ஒன்றை பேணுதல்.
- ❖ வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு மூலதன சொத்து தொடர்பான ஆவணம்வருடாந்த இற்றைப்படுத்தல்.

### சமூகத் தொடர்புகளை பேணல்

- ❖ பாடசாலை சமூக தொடர்புகளை வலுப்படுத்தும் வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்.
- ❖ பாடசாலை என்னுடையது என்ற எண்ணத்துடன் செயற்பட சமூகத்தை மாற்றியமைத்தல்.
- ❖ பாடசாலை சமூகத்தின் நலன்புரி சேவைக் கான வேலைத்திட்டங்களை நடை முறைப்படுத்தல்.
- ❖ மாணவர்களின் வீடுகளில் கற்றலுக் கான சூழலை தூண்ட நடவடிக்கை எடுத்தல்.
- ❖ பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை ஏற்படுத்த நட வடிக்கை எடுத்தல்.
- ❖ கற்றல் செயற்பாடுகளில் குறைப்பாடு கள் இருந்தால் நீக்க உதவுதல்.

### பாடசாலை முகாமைத்துவ குழு (School Management Committe) (SMC)

- ❖ தேசிய கல்விகொள்கையின் அடிப் படையில் பாடசாலைக்காக இனங் காணப்படும் கொள்கைகளின் அடிப் படையில் செயற் படுத்தல்.
- ❖ **SDC** யினால் தயாரிக்கப்பட்ட திட்ட மிடல்கள். அபிவிருத்தி வேலைத்திட் டங்கள், செயற்திட்டங்கள். அமுலாக்கு வதற்கும் இக்குழு பொறுப்பாக இருக்கும்.

### SMC இன் உள்ளடக்கம்

- பாடசாலை அதிபர் (அதிகாரத்தின் மூலம் நிர்வாகம் / அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதி அதிவாக்கல்.
- உதவி அதிபர்கள் / மேற்பார்வை யாளணியினர் / பாடப்பொறுப்பாளர்கள்.
- பாடசாலை அபிவிருத்திக்குழுவின் பொருளாளர்.
- பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் (SDS) ஆசிரியர்குழு உறுப்பினர்கள்.
- இக்குழுவில் ஒருவர் செயலாளராக நியமிக்கப்படல் வேண்டும்.
- பாடசாலையின் பல்வேறு தரங்கள், பிரிவுகள் பிரதிநிதிப்படுத்தத்தக்க வகை யில் ஆசிரியர்கள் அதிபரின் விருப்பத் திற்கமைய நியமிக்கப்படுதல் வேண்டும்.

### SMC யின் செயற்பாடுகள்

- பாடசாலையின் பண்புசார் கல்வி அபி விருத்திக்கான பாடசாலையின் தேவை களை இனங்கண்டு வழங்கப்பட்ட அதி கார எல்லையின் தீர்மாணம் எடுத்து கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பு இதற்குரியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வி அபிவிருத்தி, நிதிமுகாமைத்துவம், பாடசாலை அபிவிருத்தி திட்டம் அமுலாக்கல்.
- தேவைகளின் அடிப்படையில் பொருத்தமான உபகுழுக்களை அமைத்தல்.
- முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடத்துதல். மீட்சி வேலைத்திட்டங்களை அமுலாக்குதல்.
- முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்து பேணுதல்.
- வருடாந்த முன்னேற்ற அறிக்கையை தயாரித்து **SDS** இன் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்தல்.

### பாடசாலை பெறுகைக் குழு

உரிய தரங்கள் மற்றும் வரையறைகளுக்கு அமைய உயர்ந்தபட்ச செயற்றிறனுடன் தூர நோக்கு கொண்ட பணிகள், விநியோகம் சேவைகள் பெற்றுக்கொள்ளல்.

#### உள்ளடக்கம்

- பாடசாலை அபிவிருத்திக்குழுவின் (SDC) தலைவர் (பதவி வழி அதிபர்)
- பாடசாலையின் பிரதி / உதவி அதிபர் ஒருவர் 1-ம் உறுப்பினர்.
- சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர் (பாடத்துக்குரிய) 2-ம் உறுப்பினர்.

#### செயற்பாடுகள்

- பெறுகைக்குழு ஒருதடவைக்கு ஒரு பணிக்காக 500000 ரூபாயை அங்கீகரிக்க முடியம்.
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தேவைப்பட்டியலை பெறுகைக்குழு பரிசீலனை செய்து முன்னுரிமைப் படுத்தி அங்கீகரிக்க வேண்டும்.
- கொள்வனவு தொடர்பாக பெறுகைக் குழு தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

### தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு

#### உள்ளடக்கம்

- பிரதி / உதவி அதிபர் ஒருவர் தலைவர்.
- சிரேஷ்ட ஆசிரியர் முதல் உறுப்பினர்.
- உரிய துறை / விடயம் தொடர்பான விளக்கம் கொண்ட ஆசிரியர் 2-வது உறுப்பினர்.

✠ ஒரு ஆசிரியர் இரண்டு குழுவிலும் அங்கத்துவம் பெறமுடியாது.

#### செயற்பாடுகள்

- கொள்வனவு செய்வதற்கான ஆவணங்களை தயார் செய்தல்.
- விலை மனுக்கள் தொடர்பான பரிசீலனை செய்தல்
- சகல அங்கத்துவர்களும் ஒப்பம் இடுதல்.
- விலைமனுக்களை பரிசீலனை செய்யும் போது தவறுகளை திருத்துதல்.
- தொழில்நுட்ப மதிப்பீட்டறிக்கையை தயாரித்தல்.
- பரிந்துரை அறிக்கையை வழங்குதல்.

பாடசாலை முகாமைத்துவ செயற்பாடுகளில் புதிதாக உருவாக்கப்பட்ட கட்டமைப்புக்களின்செயற்பாடுகள் வினைத்திறன்மிக்கதாக நடைமுறைப்படுத்துவது முக்கியமானது. முன்னைய காலங்களில் பாடசாலை கட்டமைப்புக்களில் காணப்பட்ட பலவீனங்கள், குறைபாடுகள் என்பவற்றை நீக்கும் வகை புதிய சுற்று நிருபம் 7/2013 உருவாக்கப்பட்டுள்ளது. இதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதனால் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியும். இதற்கு கல்வித்துறை சார்ந்தவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

#### துணை ஆதாரங்கள்

- கல்வி அமைச்சு சுற்று நிருபம் 7/2013
- பாடசாலை மேன்பாட்டுத்திட்ட கை நூல்கள் - PSI - 2008 / 35
- தர உள்ளீடு **- HRD / PPM / 2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் விளைதிறன்மிக்க கூட்ட முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துதல்.

கல்வித்துறையில் நிர்வாக செயற்பாடுகளையும், முகாமைத்துவ செயற்பாடுகளையும் ஜனநாயக வழிமுறைகளில்வழிப்படுத்த வேண்டியது இன்றைய உலகில் முக்கிய தேவையாகும். ஜனநாயகப்பண்புகளும், வெளிப்படைத் தன்மைகளும், பங்கு கொள்ளல் முகாமைத்துவ செயற்பாடுகளும் பாடசாலைச் செயற்பாடுகளில் விளைதிறன்மிக்க செயற்பாடுகளுக்கு உந்து சக்தியை வழங்கமுடியும். முகாமைத்துவத்தின் பயனைப் பெறுவதற்கும் நிர்வாகிகளுக்கும் அவர்களின் கீழ் பணியாற்றும் ஆளணியினருக்கு இடையே பரஸ்பர நட்புறவை வளர்த்துக்கொள்ளவும் ஜனநாயக சூழல் முக்கிய தேவையாகும்.

முகாமைத் துறையில் கூட்டங்களின் ஊடாக தீர்மானங்களை எடுத்தல் ஒரு வகையிலான ஜனநாயக முறையாகும். கூட்டங்களின் மூலம் நிறைந்த பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வித்துறையினும், பாடசாலைகளிலும் பல்வேறு வகையான கூட்டங்கள் எல்லோருக்கும் பரீட்சயமானவையே.கல்வி முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் கூட்டங்களை கூட்டுகிறார்கள். அதேவேளை கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.

கூட்டங்களை நடத்திய பின்னர் கூட்டங்களை நடத்தியவர்களினதும், பங்குகொண்டவர்களினதும் மனஉணர்வுகள் பற்றி தெரிந்து கொண்ட போது பலர் பலவிதமான கருத்துக்களை தெரிவித்ததுண்டு.கூட்டங்கள் பற்றிய பல வாதப்பிரதி வாதங்கள் இடம்பெறுவதை நாம் அவதானித்ததுண்டு.

எனினும் பல நிறுவனங்கள் கூட்டங்கள் மீது பலமான நம்பிக்கையை கொண்டுள்ளன. கூட்டங்கள் நிறுவனங்களின் உயிர் நாடியாகவும் கருதப்படுகிறது. நன்கு திட்டமிடப்படாத கூட்டங்கள் இலக்குகளை அடையாமலும், நேரத்தை விரயமாக்குவதாகவும் முடிவடைவதுண்டு. சிறப்பாக நன்கு திட்டமிடப்பட்டு முகாமைத்துவம் செய்யப்பட்ட கூட்டங்கள் நிறுவனங்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றியுள்ளன. எனவே கூட்ட முகாமைத்துவ நுட்பங்கள் பாடசாலைத் தலைவர்களுக்கு முக்கியமான விடயங்களாக அமைகின்றன.

முகாமைத்துவ அடிப்படையில் சிந்திக்கும் போது கூட்டம் ஒன்றுக்கான அழைப்பு யாதேனும் ஒரு குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு வளங்களை கையாள எடுக்கும் முடிவேயாகும்.

**கூட்டம் ஒன்றுக்கான உள்ளீடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.**

1. அழைப்பவர்.
2. கலந்து கொள்பவர்.
3. காலம்.
4. நடைபெறும் இடம்.
5. எழுத்துபகரணங்கள்.
6. உபசரிப்புச் செலவுகள்.
7. மின்சாரம்,மின்னியல் சாதனங்கள்.
8. வேறு.

இவற்றைப் பொருத்தமான வகையில் ஏற்பாடு செய்து திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். கூட்டத்தின் வெளியீடாக எது அமையும். கூட்டத்தின் குறிக்கோள்கள் தெளிவான சிக்கலற்ற விளக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும், நிறுவனத்தின் குறிக்கோளினை அடைய பணிகளை வெற்றிகரமாக நடத்திச் செல்ல உதவுகின்ற உறுதியான தூண்டுகோலாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தின் குறிக்கோள்களை பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்

1. கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளல்.
2. பங்குபற்றல் முகாமைத்துவத்திற்கு உதவுதல்.
3. தெளிவான தீர்வொன்று புலப்படாத பிரச்சினைகளுக்கான தீர்வைக்காணுதல்.
4. பொதுவான தீர்மானத்தை மேற்கொள்ளுதல்.
5. ஊக்குவிக்கவும் புத்துணர்வை ஊட்டவும் வழிசெய்தல்.

### கூட்ட முகாமைத்துவ நுட்பங்கள்

பாடசாலைகளில் கூட்டங்களை ஏற்பாடு செய்யும் போது அதிபர்கள் முன் திட்டமிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உள்ளீடு, வெளியீடு பற்றிய எண்ணக்கருவை சரியான முறையில் விளங்கிக் கொண்டு கூட்டம் ஒன்றுக்கான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

1. கூட்டத்திற்கு அழைப்பு விடுவிப்போர் யார்?
   - பாசாலையின் மொத்த ஆசிரியர் குழாமா?
   - பகுதித் தலைவர்களா?
   - மேற்பார்வை ஆளணியினரா?
   - ஒரு பிரிவிற்குரிய ஆசிரியர்களா?
   - மாணவர் தலைவர்களா?
   - வகுப்புத் தலைவர்களா?
   - ஆசிரியர்களும் பெற்றோர்களுமா?
2. கூட்டம் எந்தத் தினத்தில் எந்த நேரத்தில் நடத்தப்படும்?
3. எந்தளவு நேரம் தேவைப்படும்?
4. கூட்ட நிகழ்ச்சி நிரல் அவசியமா? அதில் அடங்க வேண்டிய விடயங்கள் எவை?
5. எந்த இடத்தில் கூட்டம் நடைபெறும்?
6. கூட்டம் பற்றிய அறிவித்தலை எவ்வாறு அனுப்பலாம்?
7. உபசரிப்பு அவசியமா? அதனை எவ்வாறு ஒழுங்கு செய்யலாம்?

போன்ற விடயங்களை முன்கூட்டியே கவனத்தில் எடுத்து பொருத்தமான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். இவற்றினூடாக பின்வரும் நன்மைகளை பெற்றுக்கொள்ளலாம்.

- கலந்து கொள்வோரை கவர்தல்.
- உடன்பாடான மனப்பாங்குகளை உருவாக்குதல்.
- உச்சமட்ட பங்குபற்றலை பெறலாம்.

### கூட்டத்தை நடத்தும் ஒருவருக்குரிய பணிகள்

1. ஆரம்பித்தல்.
2. செவிமடுத்தல்.
3. ஊக்குவித்தலும் வசதிப்படுத்தலும்.
4. வாயில் கட்டுப்பாடு.
5. சாரம்சத்தை தருதல்.
6. முற்றுப்பெறச் செய்தல்.

### பங்கு கொள் முகாமைத்துவத்திற்கான கூட்டங்களை பயன்படுத்திக் கொள்ளல்.

நவீன முகாமைத்துவ செயற்பாடுகளில் பாடசாலையில் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமாயின் பங்குகொள் முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்படுகிறது. தொழில் சார்ந்த அமைப்புக்களுக்கு உகந்ததும் முரண்பாட்டு முகாமைத்துவத்தின் போது உடந்தையாக்கிக் கொள்ளத்தக்கதுமான முகாமைத்துவ நுட்பங்களே பங்கேற்பு முகாமைத்துவ முறைகள் எனப்படுகின்றன. பாடசாலைக் கூட்டங்கள் இவ்வாறான நுட்பங்களை கையாளவும் விருத்தியாக்கிக் கொள்ளவும் உதவுகின்றன. திறந்த சூழ்நிலைகளைக் கொண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக அமைப்புக்களுக்கு இது முக்கிய மானதாகும்.பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

1. கூட்டத்தை நடத்துபவர் கலந்து கொள் பவர்கள் பற்றிய நம்பிக்கையை உரு வாக்கிக்கொள்ள வேண்டும்.
2. பூணைமாக கலந்து கொள்ள வேண்டும்.
3. தனியாள் ஈடுபாட்டை ஊக்குவிக்க வேண்டும்.
4. நபர்கள் என்பவர்கள் நபர்களே கூட் டத்தார் அல்லர்.
5. நபர்கள் பணியை வெறுப்பவர்கள் அல்லர்.
6. குறிக்கோள்களை தெளிவுபடுத்தும்போது ஈடுபாட்டுடன் பணிபுரிவர்.
7. நபர்களின் தேவைகள் பூர்த்தியாகும் போது அர்ப்பணிப்பு ஏற்படும்.
8. சுயமான தூண்டல்,தன்னம்பிக்கை,சுய மதிப்பீடு ஏற்படத்தக்க சூழல் உருவாக வேண்டும்.
9. நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்ட சூழல் உருவாக வேண்டும். அப்போது தான் ஆபத்துக்களை சந்தித்து தாங்கி பணிபுரிவர்.
10. ஆபத்துக்களை சந்தித்து செயலில் ஈடு படும்போது மட்டுமே விருத்தி, தன்னம் பிக்கை, இன்பம், தலைமை என்பன உண்டாகும்.

பங்கேற்பு முகாமைத்துவ நுட்பங்களை கையாளும் நிறுவனங்களில் உறுப்பினர்களது அர்ப்பணிப்பு உயர்மட்டத்தில் காணப்படும். பாடசாலைகளின் வெற்றிக்கு அங்கு பணி யாற்றுபவர்களின் அர்ப்பணிப்பு மிக்க செயற் பாடு அவசியமானதாகும்.

அர்ப்பணிப்புக்களை மேம்படுத்துவதற்கு பாடசாலைகளில் ஜனநாயக சூழல் நிலவுவது முக்கியமானதாகும். ஜனநாயக சூழல் ஏற் படுகின்ற போதுதான் பங்குகொள் முகாமைத்துவ செயற்பாடுகள் முனைப்புப் பெறும். அர்ப் பணத்தை எவ்வாறு உருவாக்குவது? நடத்தை ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவது சிக் கலானது.பாடசாலைகளில் உடன்பாடான நடத்தை மாற்றங்கள் அவசியமானவை. பணி கள் வாயிலாக இணக்கத்தை ஏற்படுத்துவ முக் கியமானதாகும் .

### பங்கேற்பு முகாமைத்துவ உபாயத்தை கையாள்கையில் ஏற்படும் பிரச்சினைகள்.

கூட்டங்களில் கருத்துச் சொல்வதற்கும் உரை யாற்றுவதற்கும் பலர் தயக்கம் காட்டுகின்ற னர். கூட்டங்களில் பலர் எவ்வித கருத்துக்களை யும் முன்வைப்பதில்லை. இதற்கு பல காரணங் கள் உள்ளன.

1. அதிகார பலம் உள்ள நபர்கள் முன்னி லையில் ஏற்படும் தயக்கம்.
2. குழுக்கள் முன்னிலையில் உண்டாகும் மேடைப்பயம்.
3. தம்மைத்தாமே குறைவாக எடைபோட்டுக் கொள்வது.
4. அதிகார பலம் கொண்டோர் மீது கொண்ட ஐயம்.
5. தவறு நிகழக்கூடும் என்ற பயம்.
6. நகைப்புக்கு உள்ளா கி விடுமோ என்ற பயம்.
7. தாம் எல்லை மீறி செல்லக்கூடும் அச்சம்.
8. விமர்சனத்திற்குள்ளாவதில் கொண்ட வெறுப்பு.
9. குழுக்களிடையே நிலவும் வேற்றுமை
10. அனுபவக் குறைவு
11. தர்க்க ரீதியானசிந்திக்கும் திறன்கள் இல்லாமை.

இவ்வாறான தயக்கங்களை இல்லாமல் செய்யும் கூட்டமுகாமையாளர்கள் பங்காளர் களுக்கு ஊக்கத்தையும் நம்பிக்கையையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்க வேண்டும்.அப்போது ஆரோக்கியமான கருத்துககளும் அபிப்பிராயங்களும் முன்வைக் கப்படும். இவ்வாறு இல்லாமல் சில கூட்ட முகாமையாளர்கள் பலர் குறைபாடுள்ள வர்களாக காணப்படுகின்றனர்.

- ❖ தன்னம்பிக்கை இல்லாமை.
- ❖ அனுபவம் இல்லாமை.
- ❖ நிறுவனத்தின் உறுப்பினர்களை குறைவாக எடைபோடல்.
- ❖ தம்மைப் பற்றி அளவுக்கதிகமாக நினைத்துக் கொள்ளல்.
- ❖ தான் சார்ந்த விருப்பங்களை நிறை வேற்ற முனைதல்.
- ❖ அதிகாரத்தின் மூலம் அச்சுறுத்துதல்.
- ❖ தான் சார்ந்த நலன்களைப் பேணுதல்

இவ்வாறான விடயங்களை கூட்டமுகாமை யாளர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பின்வரும் விடயங்களையும் தவிர்த்தல். வேண்டும்.

- தற்பெருமையை வெளிகாட்டல்
- எச்சரித்தல்
- தனிநபரது குறையைப்பகிரங்கமாக கூறல்.

குறைபாடுகளுடன் நடத்தப்படும் பலவிதமான கூட்டங்களில் பல பிரச்சினைகள் உரு வாகின்றன. அவற்றை பின்வருமாறு குறிப் பிடலாம்.

- குழுத் தலைவர் தமது கடமையை செய்ய முடியாதவாறு இடைமறித்து செயற்படுதல்.
- தீர்மானங்களுக்கு உடன்பாட்டிற்கு வர முன்னர் குறுக்கீடு செய்தல்.
- அங்கத்தவர்கள் சிலநேரம்மௌனமாக இருப்பதை உடன்பாட்டிற்கு வந்ததாக்கரு தப்படுதல்.
- கூட்டங்கள் உரிய நேரத்திற்கு அன்றி தாமதமாக தொடங்குதல்.
- நிகழ்ச்சி நிரல் இல்லாமல் கூட்டங்கள் நடத்தப்படல்.
- சில அங்கத்தவர்கள் மட்டும் கதைத்தல் ஏனையோர் பேசாது இருத்தல்.
- திட்டமிடல் தீர்மானம் எடுத்தலின்றி வாய்ப் பந்தல் போடல்.

இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாத வகையில் முகாமையாளர்கள் கூட்டங்களை திட்டமிட்ட அடிப்படையில் முன்வைப்பதால் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை முன் னெடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்டத்தில் திட்டமிடல் செயற்பாடுகள்

ஒரு நிறுவனத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய நோக்கங்களை அல்லது ஒரு நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுங்குமுறைகள் தயாரிப்பதை திட்டமிடல் என பொதுவாக குறிப்பிடலாம். பாடசாலைகள் தற்போது நிறுவனமயப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. பாடசாலைகளில் புதிய கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டியுள்ளது. உருவாக்கம் பெற்ற செயற்பாடுகள் பன்முகப் படுத்தப்பட்டுள்ளன. கல்வி அமைச்சு தனது 07/2013 இலக்க சுற்று நிருபத்தில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்பு ரீதியான, அளவு ரீதியான கட்டமைப்பு ரீதியான அபிவிருத்தி பற்றிய திட்டமிடல்கள் தொடர்பான வழிகாட்டல்களை வழங்கியுள்ளது.

இதன் அடிப்படையில் பாடசாலைக்கான அபிவிருத்தி நோக்கிலான திட்டமிடல் செயற் பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பாடசாலை முகாமைத்துவ நிர்வாக செயற்பாடுகளில் இணைந்திருப் போர் திட்டமிடல் தொடர்பில் போதுமான விளக் கத்தையும் பயிற்சிகளையும் பெறுவது அவசிய மாகிறது. பொதுவான ஒரு முறையின் கீழ் எல் லாப் பாடசாலைகளிலும் ஒரே வகையான அபிவிருத்தித்திட்டங்களை பயன்படுத்துவதே பொருத்தமானதாகும்.

பாடசாலை ஒன்றின் எதிர் காலத்துடன் பிணைந்துள்ள யாதாயினும் ஒரு நோக்கத்தை அடைவதற்கு ஏற்ற பல்வேறு மாற்றுவழிகளை கண்டு பிடித்து அவற்றினை மதிப்பீடு செய்து அவற்றில் பொருத்தமானவற்றை தெரிந் தெடுத்து அவற்றை செயற்படுத்துவதற்கான முடிவுகளை முன்கூட்டியே மேற்கொள்வதே பாடசாலை திட்டமிடல் என குறிப்பிடலாம். இதன் போது பின்வரும் விடயங்கள் கருத்தில் எடுக் கப்பட வேண்டும்.

- குறிக்கப்பட்ட கால எல்லையுள் நோக் கத்தை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருத்தல்.
- பாடசாலையில் இருக்கும் வரையறுக் கப்பட்ட வளங்களை உச்ச மட்டத்தில் பயன்படுத்தல்.

**எந்த வொரு பாடசாலையும்,**

- ☞ தான் அடைய வேண்டிய இடம் எது ?
- ☞ அந்த இடத்தை எவ்வாறு அடைந்து கொள்வது ?
- ☞ அதற்காக தன்னிடம் உள்ள வளங்கள் எவை?

என்பவற்றை அறிவதுடன் அடைய வேண்டிய இடத்தை அடைவதற்கு பல்வேறு மாற்று வழிகள் இருப்பினும் அதனைத் தெரிவு செய்யும் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

- பல்வேறு மாற்று வழிகள் பற்றி பட்டியல் படுத்தல்.
- சிறந்த மாற்று வழியைத் தெரிவு செய்தல்
- குறைந்த செலவில் பயன்தரக்கூடியதாக இருத்தல்.
- இலகுவாக பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்.
- இடர்கள் குறைவாக இருத்தல்.

கல்வி முறைமையின் இறுதி மட்டம் பாட சாலையாகும். இன்று இலங்கையில் 10 ஆயி ரத்திற்கும் மேற்பட்ட பாடசாலைகள் காணப் படுகின்றன. இவற்றின் செயற்பாட்டுக்காக அர சாங்கம் பல்வேறு நிறுவனங்கள், சமூகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவை பெருந்தொகைப் பணத்தைச் செல விடுகின்றன. இந்த பல மில்லியன் ரூபாய் பெறுமதியான பணம் உண்மையில் மனிதவள அபிவிருத்திக்கான முதலீடாகும். இது இலங்கை மக்களுக்குரிய நிதியாகும்.எனவே இந்த முதலீட்டின் மூலம் உச்சப்பயனை மக்களுக்கு வழங்குவது பாடசாலைகளின் பொறுப்பாகும். பயனுள்ள திட்டங்களை பாடசாலைகள் மேற்கொள்ளா விட்டால் கல்வி அமைச்சு முன் வைக்கும் பல்வேறு செயற்பாடு களையும் பணிகளையும் தாமதமின்றி வினைத்திறனுள்ளதாக நிறைவேற்றுவது சிரமமாக இருக்கும்.

பாடசாலைக்கான ஒரு திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்தும்பொறுப்பு பாட சாலை அதிபருக்கு உரியதாகும். பாடசாலையின் திட்டத்தை தயாரிப்பதற்கு முன்பாக கல்வியுடன் தொடர்பான கொள்கைகளின் இயல்புகளை புரிந்து கொண்டு அதன்படி செயற்படல் முக்கியமானது.

இலங்கையில் கல்வித் துறை அபிவிருத்தி சட்டமும் வேலைத்திட்டமும் கொள்கைகள் தொடர்பான விடயங்களை முன்வைத்துள் ளன. இதனைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி தொடர்பில் சாதாரண கல்வி பிரவேசத்திற்கு சம வாய்ப்பை அதிகரித்தல்.
2. ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் தர உறுதிப்பாட்டை வளர்த்தல்.
3. கல்வியில் சிறந்த பராமரிப்பு மற்றும் சேவை வழங்கலை வலுப்படுத்தல்.

❖ மையத்தலைப்பு – கல்வித்துறை அபிவிருத்தி முறைமைகள்சுழற்சத்திட்டம்.
❖ கட்டாய செயற்பாடு பெறுபேறு அடைவை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

(மூலம் –கல்வி அமைச்சு)

பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்ளுவதற்கு முன்னர் பாடசாலையின் போஷிப்பாளர்கள் பலர் இருப்பார்கள். இவர்களை கருத்தில் எடுக்க வேண்டும். பாடசாலையில் நிகழும் மாற்றத்தை உண்மையில் கவனித்துக் கொண்டு இருப்பவர்கள். அதன் உரித்தாளர்கள் ஆவார். (Stake holders) இவர்கள் அபிவிருத்தித் திட்டமிடல் பங்கேற்கும் போது பல நன்மைகள் உண்டாகும்.

- ☛ அனைவரும் பங்கு பற்ற சந்தர்ப்பம் வழங்கல்.
- ☛ அனைவரது கருத்துக்களும் பிரதிநிதித்துவப்படுத்த அவகாசம் வழங்கல்.
- ☛ ஒரு விடயத்தை பலரும்பல கோணத்தில் நோக்குவர்.
- ☛ ஒருவருக்குட்படாத விடயங்கள் மற்றவர்களின் அவதானத்திற்குட்படும்.
- ☛ எல்லோரும் திட்டமிடலில் பங்காற்றினர் என்ற உணர்வை ஏற்படுத்தல்.
- ☛ பாடசாலையின் உண்மையான உரிமையாளர்கள் என்ற உணர்வு ஏற்படும்.
- ☛ பாடசாலை தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் செயல்முறையில் தொடர்பு பட வாய்ப்பளித்தல்.
- ☛ நடைமுறைப்படுத்தலின் போது தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்.
- ☛ சகல பிரிவினரையும் ஊக்குவித்தல்.

பாடசாலைத்திட்டமிடல்பங்குபற்றல்திட்டமாக அமைய வேண்டும். **Participatory Planning)**

சுற்றுநிருபம்07/2013 இன்வழிகாட்டலின்படி பாடசாலையொன்றின் மத்திய கால மற் றும், வருடாந்த நடைமுறைப்படுத்தும் திட் டத்தை வகுத்தல் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் (SDC) கடமையாகும். SDC,SMC என் பன இன்று ஒரு அபிவிருத்தி திட்டமிடல் குழுவை அமைத்து திட்டமிடலை மேற்கொண்டு திட்டமிடலைத் தயாரித்து அனுமதிக்காக முன் வைத்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பதற்கான படிமுறைகள் பின்வருமாறு.

### படிமுறை 1 நிலைமையை ஆய்வு செய்தல்

- ❖ கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை.
- ☛ கல்வியின் நோக்கம்.
- ☛ சமூகமயப்படுத்தல்.
- ☛ வாழ்கைத் தேர்ச்சி.
- ❖ தேசிய கல்விக் கொள்கைகள்.

- ❖ கல்விக்கொள்கை, சமவாய்ப்பு, கல்விச் சட்டங்கள். உற்று நோக்கல்.
- ❖ சிறுவர் / மாணவர் உளவியல் அறிக்கை
- ❖ மாணவர் மையம், செயற்பாட்டு மையம், மாணவர்களைனூக் கௌரவித்தல்.

### படிமுறை 2 பாடசாலையைக் கருத்திற் கொள்ளல்.

- ❖ பௌதீகச்சூழல்.
- ☛ ஊட்டப்பாடசாலை.
- ☛ நகரகிராம பாடசாலை அமைவிடம்.
- ☛ பாடசாலையுடனான சமூக உறவு.
- ☛ பாடசாலை பற்றிய அடிப்படைத்தரவு.
- ☛ மாணவர்கள்.
- ☛ ஆசிரியர்கள்.
- ☛ பௌதீகவள வசதி .
- ❖ கற்றல் கற்பித்தல் வேலைத்திட்டம்.
- ☛ மாணவர்கள் அடைவுமட்டம்.
- ☛ இணைபாடவிதான செயற்பாடுகள்
- ☛ மாணவர்கள் நலன் புரிவேலைத் திட்டம்.
- ☛ ஒழுக்கப் பிரச்சனைகள் .
- ☛ மாணவர் வரவு விடயங்கள்.
- ❖ ஆசிரியர் நலன்புரி விடயங்கள்.
- ❖ பாடசாலைகளுக்குரிய வளங்கள், வருமானங்கள் எவ்வாறு தேடுவது.

### தரவுகள், தகவல்கள் திரட்டிக் கொள்வதற்கான வழிகள்

- ☛ பாடசாலையில் கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்களிடம் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வது
- ☛ காணப்படும் குறைபாடுகள் தொடர்பான ஆய்வொன்றை நடத்துவது.
- ☛ தகவல்களைப் பெறுவதற்கு பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்களிடம் கருத்துக்களைப் பெறுவதோடு அவற்றைப் பயன்படுத்தல், நேர்காணல் வழிமுறைகளைப் பயன் படுத்தல்.
- ☛ நெறிப்படுத்தல் வேலைத் திட்டத்தை முன்னெடுத்தல்.
- ☛ கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்கு சிந்தனையைத் தூண்டுதல், விசேட அறிவுள்ள குழுக்களுடன் கலந்துரையாடல்.
- ☛ நிலைமையை ஆய்வுசெய்வதற்கான நுட்ப முறையை SWOT முறையைப் பயன்படுத்தல் (S.STRENGTH–பலம் w-weakness–பலவீனம், o-opportunity – வாய்ப்பு, T.Threats - அச்சுறுத்தல்.

அனைத்து தரவுகள் தகவலைப் பெற்றுக் கொள்ள ஆரோக்கியமான கலந்துரையாடல் ஒன்றை அனைத்து மேற்பார்வையாளர்களும் நடத்த வேண்டும். அதில் திட்டத்திற்கு தேவையான விடயங்களை உள்வாங்கலாம்.


### கொள்கைத்தயாரிப்பு

நிலைமையை ஆராயும் போது பாடசாலை பற்றிய தகவல்களினூடாக பாடசாலை க்குப் பொருத்தமான கொள்கையை வகுப்பது முக்கிய மானதாகும்.பாடசாலைத் தேவைகள் பலவாக இருக்கலாம்.அனைத்தையும் பூர்த்தி செய்ய முடியாது.எனவே முன்னுரிமை அடிப்படையில் வேலைத்திட்டங்களை தெரிவு செய்ய வேண்டும். கொள்கை திட்டமிடும்போது பாடசாலைக்குப் பொதுவான விடயங்கள் பல உண்டு. அவை பின்வருமாறு,

- ● ஆலோசனை மைய வேலைத்திட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர் அடைவு
- இணைபாடவிதான செயற்பாடு
- ஆசிரியர் அபிவிருத்தி
- நலன்புரிச் சேவைகள்




- மனிதவளம் போதுமான அளவு வழங்கப்படல்.
- பௌதிக வளங்கள் போதுமான அளவு வழங்கப்படல்.
- பாடசாலை முகாமைத்துவம்
- பாடசாலைசமூகத்தொடர்பு இவை தொடர் பாக வேலைத்திட்டங்களை மேற்கொள் வது பொருத்தமானது.

**பாடசாலைத்திட்டம் தயாரிக்கும் முறை**

- முதற்பகுதி பாடசாலையின் அறிமுகம் பின்புலம்.
- பாடசாலையின் பின்புலம், களநிலைமை, தோற்றப்பாடு.
- நோக்கம்,நோக்கக்கூற்று.
- இடம் பெறும் வினாக்களும் பிரச்சினை களும்.
- எதிர்நோக்கும் பிரச்சினைகள்.
- நிலைமையை அறிந்து கொள்ளல்.
- மத்திய காலத்திட்டம்.
- கொள்கைகளை நிலைநாட்டுதல்.
- முறைமையான மத்தியகாலதிட்டம்.
- கொள்கைகளை நிலைநாட்டல்.
- முறைமையான மத்தியகாலத்திட்டம்.
- வேலைத்திட்டம்.

**திட்டமிடல் படிமுறை.**

நிலைமையை ஆய்வு செய்தல் பிரச் சனைகளை இனங்காணல்.

↓

எதிர்கால சிந்தனை கொள்கைசார் பின்புலம் குறிக்கோளை அடைந்து கொள்ளல்.

↓

மத்தியகாலத்திட்டம், முறைசார்ந்த திட்டம்.

↓

திட்டவிரிவு வருடாந்த செயற்படுத்தும் திட்டம்.

↓

திட்டம் ஏற்றுக்கொள்ளல் அனுமதி வழங்கல்.

↓

திட்டம் செயற்படுத்தலைக் கண் காணித்தல்.

↓

பெறுபேறு மதிப்பீடு, திட்டமிடல் வற் புறுத்தல் மேலதிக விசாரணைகளை மாறும் எதிர்கால படிமுறைகள் பற்றிய பாடம் கற்பித்தல்.

- முறைமைகள்.
- செயற்பாடுகள்.
- வருடாந்தம் செயற்படுத்தும் திட்டம்.
- செலவும் நிதியாக்கமும்.
- செலவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மீட்டெழும் செலவு
- மூலதனச் செலவு
- பெறுபேறு மட்ட மேற்பார்வையும் மதிப்பீடும்.

❖ ஒழுங்கமைப்பு.
❖ மேற்பார்வை.
❖ மதிப்பீடு.
❖ தரக்கணிப்பீடு.

பாடசாலைகளில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்கள் வெறும் அறிக்கை வடிவத்திலே உள்ளன. அமுலாக்கத்திட்டங்கள், அபிவிருத்திட்டங்கள் பாடசாலைகளில் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து நடைமுறையில் இருந்து வந்துள்ளன. ஆனால் நடைமுறையில் அவை விளைதிறன் மிக்கதாக காணப்படவில்லை. ஏனெனில் அத்திட்டங்களில் பெரும்பாலனவை அதிபர், முகாமைத்துவகுழுக்களால் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளதாக இருந்ததால் நடைறைப்படுத்துவதில் இடர்பாடுகள் இருந்தன.

07.2013 சுற்று நிருப அடிப்படையில் பாடசாலை போசிப்பாளர்களின் கலந்துரை யாடலின் பின்னர் உருவாக்கப்படும் திட்டங்கள் ஆக்க பூர்வமானதாகவும் நடைமுறைப்படுத்தப்படக் கூடியதாகவும் இருக்கும். மேலும் பாடசாலைத்த திட்டமிடலை மேற்கொள்ளும் போது கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களை பயன்படுத்துவது முக்கிய மான தாகும். அத்துடன் பாடசாலை மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டமைப்புக்களைப் பயனுள்ள வகையில் வலுப்படுத்தி பாடசாலைகளில அணிக்கலாசாரத்தை மேம்படுத்தினால் பாடசாலைகள் உரிய இலக்கை அடைந்து கொள்ள முடியும்.

### துணை ஆதாரங்கள்

பாடசாலை மட்டத் திட்டமிடல் பற்றிய வழிகாட்டிக் கைநூல் – கல்வி அமைச்சு

❖ பாடசாலை மேம்பாட்டிற்கான திட்டமிடல் –ஹேமரணசிங்க.
❖ 07. 2013 சுற்யு நிருப கைநூல் –கல்வி அமைச்சு.
❖ பாடசாலை மேம்பாடு வேலைத்திட்டம் – வழிகாட்டல் கைநூல் – கல்வி அமைச்சு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்பு எதிர்பார்ப்புகளும் நடைமுறைகளும்

பாடசாலை முகாமைத்துவத்தினை மேம் படுத்துவதற்கும் வலுப்படுத்தும் வினைத்திறன் மிக்க தாக்குவதற்கும் இலங்கையில் அர சாங்கம், அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலை களிலும் பிரிவேனாக்களிலும் ஆசிரியர் செயலாற்றுகை தரங்கணிப்புச் செயல் முறையை அறிமுகப்படுத்தி செயற்படுத்த 20 09.2001 திகதி இடப்பட்ட 2001/22 சுற்றுநிருபம் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி இன்று இது பாடசாலைகளில் நடைமுறை யிலுள்ளது.

ஆசிரியர்களை செயலாற்றுகை தரங் கணிப்பிற்கு உட்படுத்துவதன் மூலம் அவர்கள் பெற்றுக்கொள்கின்ற பின்னூட்டல் செயற் பாடுகள் ஆசிரியர்களின் செயலாற்றுகைத் தரத்தை விருத்தி செய்வதற்கும் தொழில் வாண்மை விருத்திக்கும் உந்து சக்தியாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் வரவுள்ள பாட சாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித் திட்டத் திற்கு (SBTD) செயலாற்றுகைத் தரங்கணிப்பு முக்கிய தேவைப்பாடாக இருக்கும். ஆசிரி யர்களின் தொழிற் தேவைகள் இதன்மூலம் அறியக் கூடியதாக இருக்கும்.

சிறந்த முகாமைத்துவச் செயற்பாடுகளின் மூலம் ஆசிரியர்களின் செயலாற்றுகைத் தரத்தை உயர் மட்டத்தில் பேணுவதும் கல்வி உலகில் தேவையாக உள்ளது. அறிவாற்றாலும் ஆளுமையும் மிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்குவதற்கு பங்களித்து வரும் ஆசிரியர்களின் அறிவாற்றலும் திறன்களும் தேர்ச்சிகளும் மேம்படுத்தப்பட வேண்டும். இதற்கு செயலாற்றுகை தரங்கணிப்பு அடிப் படையாகக் கொள்ளப்படலாம்.

### தரங்கணிப்பின் நோக்கங்கள்

- பாடசாலையின் நோக்கத்துடனும் ஒவ் வொரு ஆசிரியரதும் செயற்பாடுகளுக்கு இடையிலும் ஒரு ஒருங்கிணைப்பினை ஏற்படுத் துதல் .
- ஒவ்வொரு ஆசிரியரதும் செயலாற்று கைத் தரத்திட்டத்திற்கும் (SDP) இடை யில் தொடர்பினைக் கட்டியெழுப்புதல்.
- ஓவ்வொரு ஆசிரியர்களுக்கும் தொடர் பின்னூட்டலை வழங்குவதன் மூலம் ஆசிரியர் செயலாற்றுகைத் தரத்தை மேம்படுத்தல்.
- ஓவ்வொரு ஆசிரியருக்கும் தத் தமது தொழில் அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு கொள்ளவும் தொழில்அபி விருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரிப் பதற்கும் உதவுதல்.
- ஆசிரியர்களின் வருடாந்த சம்பள உயர் வினைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படை ஒன்றினை வழங்குதல்.
- ஆசிரியரின் தொழில் விருப்பு, ஊக்கம் என்பவற்றை விருத்தி செய்தல்.
- ஊயர்வினைத்திறனையும் தேர்ச்சி களையும் ஏற்படுத்துவதன் மூலம் கல் வித்துறை பற்றிய மக்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்தல்.

### செயலாற்றுகைத் தரங்கணிப் பின் பங்காளர்கள்.

- தரங்கணிக்கப் பெறுநர் (கணிப்பீட்டுக்கு உட்படும் ஆசிரியர்)
- தரங்கணிப்பிடுநர் (தரங் கணிக்கப் பெறுநரை மேற்பார்வை செய்பவர்)
- தரப்படுத்துநர் (கணிப்பீடு நியாய மானதும் பக்கச்சார்பற்றதும் என்பதை தீர்மானிப்பவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயலாற்றுகைத் தரத்திட்டம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது.**

1. செயற்பாட்டினை இனங்காணல்.

- கற்றல், கற்பித்தல் செயற்பாடு.
- மாணவர் நலனும் வழிகாட்டலும்.
- இணைபாடவிதான செயற்பாடுகள்.
- பாடசாலையும் சமுகமும்.
- பாடசாலைக்கான விசேட செயற்பாடுகள்.

இவற்றினை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இது பின் வரும் தலைப்புக்களின் கீழ் திட்டமிடப்பட வேண்டும்.

- ❖ வருடத்திற்கான செயற்பாடுகள்.
- ❖ செயற்பாடுகளைச் செயற்படுத்த எதிர் பார்க்கப்படும் வளங்கள், உதவிகள், பயிற்சித் தேவைகள்,வழிகாட்டல்கள்.
- ❖ செயலாற்றுகை தொடர்பான தரங் காட்டி.
- ❖ தரங்கணிக்கப் பெறுநர் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகள் எதிர்நோக் கிய பிரச்சினைகள்.
- ❖ தரங்கணிப்பு இடுநரின் சிபாரிசு.

எல்லா ஆசிரியர்களும் தரக்கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டும். தரங்கணிப்பிடுநர் தரப்படுத்தலின் சிரேஷ்டதன்மை,நியமனத்தின் போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

ஒரு கணிப்பிடுநர் 8–12 வகையான தொகையினரை கணிப்பீட்டுக்கு உட்படுத்தலாம்.

நடைமுறையில் இச்செயற்பாடுகள் பாட சாலைகளில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப் படுவதை அவதானிக்க முடியவில்லை. தரங் கணிப்புப் படிவம் நிரப்புதல்,திட்டமிடல் செயற்பாடுகள், முன்னேற்ற மீளாய்வு போன்ற விடயங்கள் பயனுறுதி மிக்கதாக காணப்பட வில்லை. பின்வரும் நிலைகள் அவதானிக்கப் பட்டன.

- ❖ ஆசிரியர்கள் தரங்கணிப்பு தொடர் பான போதுமான விளக்கத்தை பெற வில்லை.
- ❖ படிவங்கள் பூரணப்படுத்தலில் தெளி வான தன்மை காணப்படவில்லை.
- ❖ எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் தொடர் பான பூரணத்துவமற்றதன்மை காணப் பட்டமை.
- ❖ செயற்பாடுகள் வெறுமைத் தன்மை உள்ளவையாகவும் குறிப்பாக எதை யும் உள்ளடக்கி இருக்கவில்லை.
- ❖ எதிர்பார்க்கப்படும் வளங்கள், தரங் காட்டிகள் தொடர்பில் போதுமான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை.
- ❖ எதிர்நோக்கிய பிரச்சினைகள் சரி யாகக் குறிப்பிடப்படவில்லை.
- ❖ தரங்கணிப்பிடுநர்களின் சிபாரிசுகள் திருப்திகரமாக அமையவில்லை.
- ❖ முதலாம், இரண்டாம் தவணை இறுதி முன்னேற்ற மீளாய்வுகள் திருப்திகர மாக அமையவில்லை.
- ❖ இத்திட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கிடை யில் ஒரு ஆரோக்கியமான கலந்துரை யாடல் இடம்பெற்றதை அவதானிக்க முடியவில்லை.
- ❖ ஜனவரி மாதத்தில் நிரப்பப்பட்ட படி வங்கள் டிசெம்பர் மாதத்திலோ அல்லது சம்பள உயர்ச்சிக்கான விண்ணப்பம் அனுப்பும்போது மட்டுமே மீளவும் பார்க் கப்படும் நிலையே காணப்படுகிறது.
- ❖ பல பாடசாலைகளில் வருடம் தொடங்கி 3–4 மாதங்களுக்குப் பின்னரே படிவம் பூரணப்படுத்தப்படுகிறது.
- ❖ மொத்தத்தில் இது ஒரு சடங்காக மட் டுமே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தற்போது (TESP) வேலைத் திட்டத்தின் கீழ் 10.2013 சுற்று நிருபத்தின் வழிகாட்டலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (SBTD)ஆசிரியர் தரங்கணிப்பு தொடர்பாக புதிய முன் மொழிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை மேம்படுத்தும் விதத்தில் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. SBTD தேவைகளை இனங்காண்பதற்கு ஆசிரியர் தரங்கணிப்பு செயற்பாடுகள் அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்படுகிறது.தனியாள் ஆசிரிய விருத்திக்கும் பாடசாலை அபிவிருத்திக்கும் பயனள்ளதாக அமைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலைகளில் எல்லா ஆசிரியர்களும் வருடாந்த ஆசிரியர் நேர்காணலை தமது வரிசை நிலை முகாமையாளருடன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வரிசை நிலை முகாமையாளருடன் இணக்கம் காணப்பட்ட செயன் முறைகளின்படி பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

- ❖ விருத்தி செய்யப்பட வேண்டிய பலம்
- ❖ வழிகாட்டப்பட வேண்டிய பலவீனங்கள்.
- ❖ தனிப்பட்ட வாண்மை விருத்தித் தேவைகள்.

எதிர்கால இலக்குகளில் இணக்கப்பாடு காணுதல்,இலக்குகளின் அடைவ பற்றி மீளாய்வு செய்தல் என்பவற்றுடன் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்ததான தரங் கணிப்பீடு அமைய வேண்டும். ஆசிரியர்களின் பாடசாலைத் தேவையுடன் இணைந்ததாகவும் ஆசிரியர்கள் தமது பலவீனங்களையும் உள்ளார்ந்த திறன்களையும் பயிற்சிக்காக ஏனைய துறைகளையும் இனங்காண தரங் கணிப்பு உதவ வேண்டும்.

பாடசாலையில் மேற்கொள்ளப்பட இருக்கும் செயலாற்றுகைத் தரங்கணிப்பு மூன்று நிலைகளுக்கு ஊடாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

**1. ஆற்றுகைத் திட்டமிடல்.**

- ❖ ஆண்டின் ஆரம்பத்தில் பணியைப் பெற்றுக் கொள்ளும் போது ஆசிரியர் களும் – மதிப்பிடுபவரும்வேலை இலக்கு களும் எதிர்பார்ப்புக்களும் தொடர் பாகக் கலந்துரையாடல்.
- ❖ எதிர்வரும் ஆண்டுக்கான இலக்கு, எதிர் பார்க்கும் பெறுபேறு தொடர்பாக கவனம் செலுத்துதல்.
- ❖ ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகளும் அவற்றுக்குரிய இலக்கு மட்டங்களையும் வரையறை செய்தல்.
- ❖ ஆசிரியர்களுக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தித்திட்டம்.

**2. ஆற்றுகைப் பயிற்சி**

இதில் பின்வரும் விடயங்கள் இடம் பெற வேண்டும்.

- ❖ இது ஆண்டு முழுவதும் இடம்பெற வேண்டும்.
- ❖ போதுமான பின்னூட்டலை வழங்கல்.
- ❖ கற்றல்–கற்பித்தல் வினைத்திறன்கள் பற்றி கருத்துக்களை வெளியிடுதல்.
- ❖ நடு ஆண்டு மீளாய்வுச் செயற்பாடுகள்.
- ❖ உருவாக்கப்பட்ட இலக்குகள் பற்றி கலந்துரையாடி ஆற்றுகை பற்றிய பின்னூட்டல் வழங்கல்.
- ❖ வினைத்திறனை மீளாய்வு செய்து அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி கலந்துரையாடல்.

**3. ஆற்றுகை தொடர்பான மதிப்பீடு.**

- ❖ ஆண்டின் இறுதியில் இது இடம் பெற வேண்டும்.
- ❖ ஆற்றுகை மதிப்பீடு தொடர்பான நேர் காணலை மேற்கொள்ளுதல்.
- ❖ ஆசிரியர்களின் உள்ளார்ந்த திறன்கள் மதிப்பீடு செய்யப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல்.
❖ வினைத்திறன் மிக்க மதிப்பீடு ஆசிரியர்களுக்கு வலுவூட்டலை வழங்கும்.

**ஆசிரியர் செயலாற்றுகை தரங் கணிப்பின் படிநிலைகள்**

1 **ஆற்றுகைத்திட்டம்.**

❖ இலக்குகள்,குறிக்கோள்கள்,பணிகள் தயாரித்தல்.
❖ தேவைப்படும் உதவிகள், வளங்கள், பயிற்சிகள் குறிப்பிடுதல்.
❖ இணக்கம் காணப்பட்டால் ஒப்பமிடல்.

2 **கண்காணிப்பு.**

❖ வகுப்பறை நடைமுறைகளில் அவதானிப்புச் செலுத்துதல்.
❖ ஆசிரியர்கள் – மாணவர்கள் கலந்துரையாடல்.
❖ பயிற்சிக் கொப்பிகள் அவதானிப்பு, பயிற்சிப் பெறுபேறுகள் காட்சிப்படுத்துதல்.
❖ காலாண்டு முன்னேற்ற மீளாய்வு.
❖ மாணவர்களின் அடைவு மதிப்பீடு.
❖ இணக்கப்பாட்டுடன் செயற்பாடுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளல்.
❖ முரண்பாடுகள் ஏற்பட்டால் தரப்படுத்துநரால் உதவி வழங்கப்படுதல்.

3. **வருடாந்த ஆற்றுகை மீளாய்வு.**

❖ பட்டியல் படுத்தப்பட்ட அடைவுகள் (மதிப்பிடப்படுபவர்)
❖ மதிப்பிடுபவரால் செய்யப்பட்ட குறிப்புரைகள்.

4. **நிறுவன முன்னேற்ற மீளாய்வு (அபிவிருத்தி சார்பாக)**

❖ ஆசிரியர் கூட்டம்.
❖ அபிவிருத்திக்காக இனங்காணப்பட்ட துறைகள்.
❖ அடுத்த ஆண்டில் உள்ளடக்கப்பட வேண்டிய திட்டங்கள்.

**ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்பில் உள்ளடக்கப்பட வேண்டியவை.**

1. **கற்றல் – கற்பித்தல்.**

❖ கலைத்திட்ட அமுலாக்கம்.
❖ வினைத்திறன் மிக்க திட்டமிடல், கலைத்திட்ட ஒழுங்கமைப்பு.
❖ கட்புல–செவிப்புல உபகரணங்கள் தயாரித்தல்.
❖ பாட வேளைகளில் கற்பித்தல்.
❖ பரிகார வகுப்புகள்.
❖ பாடசாலை மட்டக்கணிப்பீட்டை வினைத்திறனுடன் மேற்கொள்ளல்.

2. **மாணவர் நலனும் வழிகாட்டலும்.**

❖ தனிப்பட்ட மாணவர்கள் தேவை.
❖ குழுவாக மாணவர் அபிவிருத்தி.
❖ மாணவர் ஒழுக்கக் கட்டுப்பாட்டு நலம்.
❖ ஆலோசனை அறிவுரை வழங்கல்.

3. **இணைப் பாடவிதான செயற்பாடுகள்.**

❖ ஒத்துழைப்பு வழங்குதல்.
❖ கற்றல் –கற்பித்தல் செயன்முறையுடன் இணைப் பாடவிதானத்தை இணைத்தல்.
❖ தலைமைத்துவம்.

4. **பாடசாலை சமூக உறவுகள்**

❖ பெற்றோர், சமூகம் அபிவிருத்தி பங்குபற்றலை அதிகரித்தல்.
❖ பிள்ளைகள் முன்னேற்றம் பற்றி பொறுப்புகள் கூறல்.
❖ பாடசாலை – சமூகம் அபிவிருத்தி இணைப்புச் செய்தல்.

5. **பாடசாலைக்கான விசேட சேவைகள்.**

❖ பொருத்தமான வேறு கடமைகளும் செயற்பாடுகளும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மாணவர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக்கான மேம்பாட்டு நடவடிக்கைகள்.

பாடசாலை மட்ட அசிரியர் அபிவிருத்தி திட்டத்தின் (SBTD) தேவைகளை இனங்காண்பதற்கு ஆசிரியர் தரங்கணிப்பை துணையாகக் கொள்ளலாம்.ஆசிரியர்களை தொடர்சியாக கண்காணிப்பதற்கும் இதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம். இப்பொழுது நடைமுறையிலுள்ள தரங்கணிப்புப் படிவங்கள் உரிய வகையில் பூரணப்படுத்தப்படாமலும் உரிய காலங்களில் கண்காணிக்க படாமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.ஜனவரி மாதம் படிவம் நிரப்பப் பட்டால் டிசெம்பர் மாதம் அப்படிவம் மீளவும் எடுக்கப்பட்டு சம்பள உயர்வுக்காக ஒரு அடிப்படையாக மட்டுமே கொள்ளப்படுகிறது. ஏனைய நோக்கங்கள் நிறைவேறியதாகக் காணப்படவில்லை.

புதிய கட்டமைப்பு மாற்றங்களில் (SBTD) முதன்மைப்படுத்தப்படுகிறது. இங்கு தரங்கணிப்பு செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக நழடமுறைப்படுத்துவது முக்கியமானதாகும்.

கற்றல், கற்பித்தல், முகாமைத்துவ பங்காற்றல் ஆகியவற்றோடு சுயமாக முன்வந்து செயற்படும் தன்மை என்பவற்றை மேம்படுத்த ஆசிரியர் தரங்கணிப்பை வலுப்படுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் முன்னோடிச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்
# (IMPLEMENTING BEST PRACTICE IN SCHOOL)

பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளில் பண்புத்தர விருத்தி தொடர்பாக இலங்கைளில் 2001 ஆம் ஆண்டு முதல் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்வி அமைச்சில் மதிப்பீடு மற்றும் தர உறுதிப்பாட்டு அலகு 2001 அல் ஆரம்பிக்கப் பட்டது.

பாடசாலைகள் கல்வி முறைமையில் நிறைவேற்றும் பணிக்கூறுகள் தொடர்பாகவும் நிறைவேற்ற வேண்டிய பணிக்கூறுகள் தொடர்பாகவும் நீண்ட காலமாக கலந்துரையாடப்பட்டு வந்தன. புதிய நூற்றாண்டுக்கான பாடசாலைகளை நிர்மாணித்தல் காலத்தின் தேவையாக கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பாசாலையில் அளவு ரீதியான அபிவிருத்தி மட்டுமின்றி கல்வியின் பண்பு ரீதியான விருத்தி தொடர்பாக அண்மைக்காலத்தில் அதிக கவனம் செலுத்தப் படுவதும் தரமேம்பாட்டிற்கு புதிய வியூகங்கள் விடுக்கப்படுவதும் புதிய வேலைத் திட்டங் களை பாடசாலையில் நடைமுறைப் படுத்துவதற்குமான பல முன்னெடுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கல்வியின் பண்புத்தரம் எனக் குறிப்பிடப் படும் வேறு இரண்டு விடயங்கள் முதன்மைப் படுத் தப்படுகின்றன.

I. பண்புசார் தன்மை என்பது சேவை பெறு பவர்களை திருப்தியடையச் செய்தல்.
II. பாடசாலைக் கல்வியில் வினைத் திறனையும் பயனுறுதித் தன்மையையும் உறுதிப்படுத்தல்.

பண்புத்தரத்தில் பிரதான ஏழு பண்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. செயலாற்றுகை (Perfomance)
2. நம்பகத்தன்மை (Reliability)
3. பொருத்தமான பண்புகள் (Catures)
4. பொருத்தப்பாடு (Conformance)
5. நீடித்த பாவனை (Dlurability)
6. மீள தயாரிக்கக் கூடியதாக இருத்தல் (Serviceability)
7. கவர்ச்சிகரமாக இருத்தல் (Aesthelic)

கல்வியின் தரம் தொடர்பாக பல வரை விலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாவனைக் குரிய தகுதி (Fitness for use) என்பது பொதுவான வரைவிலக்கணமாகும். கல்வியில் தரத்தை பேணுவதற்கு கல்விச் செயற்பாடுகளில் பயன் படுத்தப்படும் உள்ளீடுகள் அதாவது சகல மனித, பௌதீக வளங்களும் தரமுடையவையாக இருக்கவேண்டும். உள்ளீடுகள் அனைத்தும் தரமுடையவையாகவும் செயன்முறைகள் அனைத்தும் தரமுடையவையாக இருந்தால் மாத்திரமே வெளியீடுகள் தரமுடையவையாக அமைய முடியும்.

பாடசாலைச் செயற்பாடுகளில் பண்புசார் தரத்தை மேம்படுத்துவதற்கு அங்கு நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளில் முன்னோடிச் செயற்பாடுகளில் முன்னோடிச் செயற்பாடு **(Best Practices)** என்பது ஒரு பாடசாலையானது தனது தற்போதைய நிலையிலிருந்து அதனை மேலும் நேர்முகமான அபிவிருத்திக்காக பாடசாலையின் வளங்களை வினைத்திறனுடனும் **(Effeciently)** விளைத் திறனுடனும் **(Effectively)** பயன்படுத்தி புத்தாக்கத் தன்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன் பாடசாலை சார்பாக பயன்படுத்துகின்ற ஒரு இலக்கை நோக்கிய நுட்பம் அல்லது செயற் பாடு எனலாம்.

மாணவர்களது மனப்பாங்கு மாற்றத்திலும் கல்விசார் நடத்தைகளிலும் நேர்முகமான ஒரு மாற்றத்தை அடைவதற்காக மேற்கொள்ளப் படும். பரந்த வீச்சிலான தனிநபர் செயற்பாடு கள், கொள்கைகள் மற்றும் செயற்றிட்ட முறை யிலான அணுகுமுறைகள் நல்ல முன்னோடிக் கல்விச் செயற்பாடுகள் எனக் குறிப்பிடலாம். ஒவ்வொரு பாடசாலையும் இந்த விடயம் தொடர் பாக தமது செயற்பாடுகளை திட்டமிட்டு முன் னெடுத்துச் செல்வது இன்று அவசியமாகவுள்ளது.

முன்னோடிச் செயற்பாடுகளை பாடசாலை களில் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

நடைமுறைபடுத்த எதிர்பார்க்கப்படும் செயற் பாடுகள் குறித்த பாடசாலைக்கு எந்தளவு தூரம் பொருத்தமானது, தேவை தொடர்பாக தீர் மானித்ததன் பின்னர் மாத்திரம் அதனைப் பயன்படுத்துதல்.

நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள செயற் பாடுகள் அங்கீகரிக்கப்பட்ட கல்விக் கொள் கைகள் இலக்குகளுக்கு ஏற்ப அமைந்திருத்தல்.

பிரயோக ரீதியில் பாடசாலைகளில் நடை முறைப்படுத்தக் கூடியதாக இருத்தல். சுய மதிப்பீட்டுக்கு உட்படுத்தக் கூடியதாக அமைந் திருத்தல்.

பாடசாலையின் மனித, பௌதீக வளங் களுக்கு, சமூகச் சூழலுக்கு பொருத்தமாக இருத்தல்,

நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் பாட சாலை முகாமைத்துவக் குழுவுக்கு போதுமான விளக்கம் கொடுக்கப்பட்டிருத்தல்.

பாடசாலைச் சமூகத்திற்கு புதிய செயற் பாடுகள் தொடர்பாக போதுமான அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டிருத்தல்.

இலக்கினை பொருத்தமான வகையில் வரையறுத்திருத்தல். புதிய செயற்பாடுகள் மூலம் பாடசாலைக் கலாசாரத்திற்கான மாற் றங்களை நிர்ணயித்தல்.

உ+ம் முன்னோடிச் செயற்பாடு ஒன்று நடை முறைப்படுத்துவதற்கு முன்னர் பாடசாலை இருந்த நிலை அமுலாக்கத்தின் பின்னர் உள்ள நிலைமை தொடர்பான ஆவணங்கள்.

முன்னோடிச் செயற்பாடுகளை இனங் கண்டு நடைமுறைப்படுத்தும்போது அவற்றில் பின்வரும் பண்புகள் அமைந்திருப்பதை கவனிக்க வேண்டும்.

- உண்மைத்தன்மையும் நம்பகத் தன்மை யும் உடையதாக இருத்தல்.
- ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தலும் அனைவராலும் வரவேற்பிற்குரியதாக வும் விளங்குதலும்.
- புத்தாக்கத்தன்மையும் ஆக்கத்திறன் மிக்கதாகவும் இருத்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட கல்விக் கொள் கை களுக்கும் கோட்பாடுகளுக்கும் தொடர் புடையதாக விளங்குதல்.
- பயன்படுத்துவதற்கும் செயற் படுத்து வதற்கும் இலகுவாக இருத்தல்.
- நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அம்சங் களைக் கொண்டிருத்தல்.
- முன்மாதிரியாக விளங்குதல்.
- அதிசிறந்த கலாசாரம் ஒன்றை பாட சாலையினுள் கட்டியெழுப்பக் கூடிய தாக இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பண்புசார்தரங்களை அடையக் கூடிய தாக இருத்தல்.

பாடசாலைகள் தமது சூழலுக்கும் சமூக பொருளாதார கலாசார அம்சங்களுக்கும் பொருத்தமான முன்னோடிச் செயற்பாடுகளை பொருத்தமானதாக தெரிந்து எடுத்துக்கொள்ள வேண்டும். சகல பாடசாலைகளிலும் சகல செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவது இலகுவானதல்ல. சகல நுட்பங்களையும் எல்லாக் காலங்களிலும் பிரயோகிக்க முடியாது. பொருத்தமான தந்திரோபாயங்களை பாடசாலை முகாமைத்துவம் பொருத்தமான நேரங்களில் பயன்படுத்த வேண்டும். முன்னோடிச் செயற்பாடுகளின் தாக்கத்தை அடையக்கூடிய அடிப்படைகளையும் பாடசாலைகளில் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். முன்னோடி செயற்பாடு ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் போது அதனால் ஏற்பட்ட தாக்கங்களை உடனுக்குடன் அறிந்து கொள்வதற்கான பொறிமுறை ஒன்று பாடசாலையினுள் காணப்படவேண்டும். பின்வரும் அடிப்படைகள் முக்கியமானவையாகும்.

- செயற்பாடுகளை துரிதப்படுத்தலும் காலத்தை சேமித்தலும்.
- மனித, பௌதீக நேரவளங்கள் வீணாக்கப்படுவதை கட்டுப்படுத்தல்.
- செயற்பாடுகளுக்கான இலகுவான தன்மை.
- குறைந் தளவு வளங்களை வினைத் திறனுடன் பயன்படுத்தி உற்பத்திதிறனை அதிகரித்தல்.
- பாதுகாப்பான நடைமுறைகளை உறுதிப்படுத்தல்.
- ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலையின் பணியாளர்கள் ஆகியோரின் பண்புசார் தரத்தை மாற்றியமைத்தல்.
- பாடசாலை அதன் பங்கு தாரர்கள் தொடர்பான அபிமான மிக்க செயற்பாடுகள்.
- பாடசாலையின் தனித்துவத்தை அடையாளத்தை கட்டியெழுப்புதல்.
- பாடசாலையின் கல்விசார்தரத்தை மேம்படுத்தல்.
- பாடசாலைக்கென ஒரு சிறந்த கலாசாரத்தை கட்டியெழுப்புதல்.
- தொடர்ச்சியாக செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.

பாடசாலைகளில் முன்னெடுக்கப்படும் முன்னோடிச் செயற்பாடுகள், அதன் வியூகங்கள், செயற்பாடுகள்நடைமுறைப்படும்போது அதனுடன் தொடர்புடைய தரப்பினர், சம்பந்தப்பட்ட ஆளணியினர் பின்வரும் அடிப்படையில் செயற்பட வேண்டும்.

1. அர்ப்பணிப்புடன்கூடிய செயலாற்றுகை.
2. மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் நேர்ப்பாங்கான சிந்தனையும் செயற்பாடும்.
3. பாடசாலையின் இலக்கு அடையப்படுவது தொடர்பாக இலக்கு நோக்கிய நகர்வு.
4. குழு உணர்வும் குழுக் கலாசராமும் காணப்படுதல்.
5. தனிநபர்களின் செயற்பாடுகளில் நேர்ப்பாங்கான நடத்தை மாற்றங்கள் காணப்பட வேண்டும்.
6. பாடசாலை பங்குதாரர்களிடையே பயனுறுதி வாய்ந்த தொடர்பாடுகளை கட்டியெழுப்புதல்.

பாடசாலைச் செயற்பாடுகள் தொடர்பாக பாடசாலையின் தலைமைத்துவம் அறிக்கைப் படுத்துவதில் கவனம் எடுக்கவேண்டும். அறிக்கையிடல் மூலமும் ஏனையோருக்கு செயற்பாடுகளின் முன்னேற்றத்தை தெரிவிக்க முடியும். முன்னோடிச்செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையிடல் தொடர்பாக பின்வரும் படிமுறைகளை கையாள்வது பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. காணப்படும் பிரச்சினைகள் தீர்வுக் கான வியூகத் தேவைகள்.
2. நடைமுறைப்படுத்தவுள்ள வியூகங் கள் தொடர்பாக பாடசாலைச் சமூகத் திற்கு அறிவுறுத்தப்பட்ட முறைகள்.
3. செயற்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள் ளப்படும் முறைகள்.
4. செயற்றிட்டங்கள் அமுலாக்கப்பட்ட முறைகள்.
5. திட்டமிடல் – அமுலாக்கம் என்பவற் றின் போது எதிர்கொள்ளப்பட்ட சவால் கள்.
6. தற்போது முன்னெடுக்கப்படும் முறை கள் அதற்குரிய ஆவணங்கள் பேணல்.
7. பாடசாலையில் பெற்றுக் கொள்ளப் பட்ட பயன்கள்.
8. தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான ஏதுநிலை.

செயற்றிட்டங்கள் தர வட்டங்கள் மற்றும் ஆய்வுகள் கூட அவை நடைமுறைப்படுத்தப் பட்ட திட்டமிடலின் அடிப்படையில் சிறந்த முன்னோடிச் செயற்பாடுகளாக கொள்ளப்பட முடியும்.பாடசாலைகளில் அமுலாக்கப்படும். முன்னோடிச் செயற்பாடுகளை இனங்கண்டு சிறப்பான செயற்பாடுகளை நாட்டின் ஏனைய பாடசாலைகளிலும் முன்மாதிரியாக செய்யக் கூடிய வகையில் பகிரங்கப்படுத்த கல்வி அமைச்சின் தர உறுதிப்பாட்டு அலகு திட்ட மிட்டுள்ளது. பாடசாலைகள் இதற்கு முன் னுரிமை கொடுத்து செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்துவம் ஒரு சமகாலப் பார்வை

எமது பண்பாட்டுப் பாரம்பரியத்தில் ஆசிரியத்துவம் உயர்உன்னத சேவையாக, மதிப்பார்ந்த சேவையாக போற்றப்பட்டு வந்தது.

எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்ற கூற்று ஆசிரியர்களை கடவுளாக வணங்கிய உயர்விழுமியத்தை காட்டி நிற்கிறது.

சமூக மேம்பாட்டிற்கான உயிர் நாடியாக கல்வி அமைகிறது. அதனை வழங்கும் பயிற்சிக் களமாக பாடசாலைகள் விளங்குகின்றன. பாடசாலைகள் பயன்தரு நிறுவனமாக நீடித்து நிலைத்திருக்க வேண்டுமெனில் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிக்க செயலாற்றுகை முக்கியமாக அமைய வேண்டும்.

ஆசிரியர்களின் பணி பாடங்களை மட்டும் கற்பிப்பதல்ல,அதற்கும் அப்பால் எல்லையற்று வியாபிக்க வேண்டும்.சமுதாயப்பாசறையின் முன்னிலைப் போராளிகளாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும்.

ஒரு நாட்டின் தலைவிதி அந் நாட்டின் பாடசாலை வகுப்பறையில் தீர்மானிக்கப்படுகிறது. தாரமும் குருவும் தலையெழுத்து என்று சொல்வார்கள்.

ஒரு பிள்ளையின் தலைவிதியை நிர்ணயிக்கும் பிரமாக்களாக ஆசிரியர்களின் பணி முக்கியத்துவம் பெறுகிறது. கல்வி தொடர்பான பாரம்பரிய வரலாற்றுப் போக்கில் ஆசிரியர்களின் பங்கும் பணியும் வகிபாகங்களும் கால ஓட்டங்களுக்கேற்ப மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் கொண்டு மாற்றமடைந்து செல்கிறது.

சுமார் 40 வருடங்களுக்கு முன்னோக்கி பார்ப்போமனால் ஆசிரியர்களின் வாழ்க்கை கோலங்களும் நடிபங்குகளும் பின்வரும் பண்புகளை கொண்டமைந்ததை அவதானிக்க முடியும்.

- ஆசிரியர்கள் சமூகத் தலைவர்களாகவும் விளங்கினார்கள்.
- என்ன விடயமாக இருந்தாலும் சமூகம் ஆசிரியர்களிடம் ஆலோசனை கேட்டது.
- பல நடிபங்குகளை ஆற்றினார்கள்.
- சோதிடர்களாக விளங்கினார்கள்.
- காணி அளத்தலில் நிபுணர்களாக விளங்கினார்கள்.
- பல பாடங்களைக் கற்பிக்கும் வல்லமை பெற்றவர்களாக விளங்கினார்கள்.
- நல்ல கவிஞர்களாக விளங்கினார்கள்.
- பண்டிதர்களாக விளங்கினார்கள்.
- புராணங்களுக்கு பயன் சொன்னார்கள்.
- ஆலயங்களில் கூட்டுப்பிரார்த்தனையில் ஈடுபட்டு ஆன்மிக உணர்வை வளர்த்தார்கள்.
- திருமணப் பொருத்தங்களைப் பார்ப்பதற்கும், திருமணங்களை நிச்சயிப்பதற்கும் வழிகாட்டினார்கள்.
- கிராமமட்ட அரசியல் தலைவர்களாக விளங்கினார்கள்.
- அரசியல் வாதிகளுக்கு ஆலோசனை வழங்குபவர்களாக விளங்கினார்கள்.
- கிராமமட்ட அபிவிருத்தியில் ஆசிரியர்களின் காத்திரமான பங்களிப்பு காணப்பட்டது.
- ஆலய பரிபாலன சபைகளின் தலைவர்களாக விளங்கினார்கள்.
- சமூக முரண்பாடுகளின் போது மத்தியஸ்தம் செய்யும் நீதிபதிகளாக விளங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ ஆசிரியர்களின் கருத்துக்களுக்கு சமூகம் மதிப்பும், கௌரவமும் கொடுத்தது.

தமது தொழிலில் சாரா வகிபங்கிற்கு மேலதிகமாக பல விடயங்களில் ஆசிரியர்களின் பணி எல்லாத்துறைகளிலும் வியாபித்திருந்தது. இந்நிலை கால ஓட்டத்தில் மாற்றமடையத் தொடங்கியது. எத்தகைய சமூகமாக இருந்தாலும் ஆசிரியர்களின் பணி பின்வரும் விடயங்களில் மாணவர்கள் சார்பானதாக விளங்க வேண்டுமென எதிர்பார்க்கிறது.

❖ தங்களிடம் கற்கும் மாணவர்களை நன்கு கற்றவர்களாகவும் கட்டுப்பாடு உடையவர்களாகவும், தேசிய உணர்வு உடையவர்களாகவும் உருவாக்குவது.
❖ மாணவர்களின் முன்னேற்றத்தில் அறிவு சார், உடலியல், உளவியல், ஆன்மீக, சமூக தேவைகள் நிறைவு பெற உதவுதல்.
❖ பொருத்தமான நெறிகளில் மாணவர்களை வழிநடத்துவது.

சமூக விருப்பங்கள் , எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படும் போதே சமுதாயம் ஆசிரியர்களுக்குரிய மதிப்பையும் கௌரவத்தையும் கொடுக்கும் ஆசிரியர்கள் தமது தொழில் துறையில் செயற்படும் போது வெவ்வேறு கோணங்களில் இருந்து நோக்கும் போது பல்வேறு தோற்றங்களில் காணப்படுகின்றனர் என ஓய்சர் என்பவர் குறிப்பிடுகின்றனர்.

அவை பின்வருமாறு,

- ஆலோசகரும் நிபுணரும்
- அடைவை மதிப்பீடு செய்பவர்
- ஒழுக்கத்தையும்,அறநெறிகளையும் பாதுகாப்பவர்.
- வரையறைகளை உருவாக்குபவர்
- நண்பரும், வழிகாட்டியும்
- பொலிஸ் அதிகாரி
- நீதிபதி

ஆசிரியர்கள் சமூக மேம்பாடுகளில் முன்னோடிகளாகவும் , சமூக அபிவிருத்தியின் சக்தியாகவும், ஊடகமாகவும் விளங்குவதுடன் சமூக அபிவிருத்தியின் தலைமைத்துவத்தை பெறுபவராகவும் காட்சியளிக்க வேண்டும்.

ஏனைய தொழில் துறையாளர்களிலும் பார்க்க ஆசிரியர்கள் பணி சிறப்புமிக்க தொன்றாகும். இப்பணியில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் தாம் வாழும் சமுதாயத்தின் நலனைப் பேணுவதற்கும், வளர்ப்பதற்கும் தம்மை அர்ப்பணிக்கக் கூடிய தியாக மனப்பான்மை கொண்டவர்களாக விளங்க வேண்டும். நாளைய சந்ததியினர்களின் சிந்தனைகளை சிறப்பான முறையில் நெறிப்படுத்தி அவர்களின் அறிவு, ஆற்றல், திறன்கள், மனிதப் பண்புகள், மனிதாபிமானம், நேர்மனப்பாங்கு ஆகியவற்றை வளர்க்க உழைக்க வேண்டும்.

ஆசிரியர் – மாணவர் உறவு பெற்றோர்– பிள்ளை என்ற உறவாக அமைய வேண்டும். ஆசிரியர்கள் பிள்ளைகளின் உறவாக அமைய வேண்டும். ஆசிரியர்கள் பிள்ளைகளின் இரண்டாவது பெற்றோராக மாற வேண்டும். சில ஆசிரியாகள், அதிபர்கள் இன்னும் தமது மாணவர்களை மகன், மகள் என அழைப்பதையும் அவதானிக்க முடிகிறது. இன்று ஆசிரியர் – மாணவர் உறவு என்ன நிலையில் உள்ளது என்பது அவதானிக்கப்பட வேண்டியதொன்றாக மாறி விட்டது. இந்த உறவு செம்மையாக இருந்தால் பல பிரச்சினைகளுக்கு தீர்வு இலகுவானதாக அமையும்.

எந்த ஒரு தொழிலில் ஈடுபட்டாலும் அதில் அர்ப்பணிப்பு இருந்தாலே அத்தொழிலில் வெற்றி பெற முடியும். அர்ப்பணிப்புடன் பணியாற்றுபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே வெற்றியடைகிறார்கள். அர்ப்பணிப்பு என்பது ஒரு மனப்பாங்கினைக் குறிக்கும்.

- முழுமையான ஈடுபாடு
- ஆர்வத்துடன் கூடிய செயலாற்றுகை
- மன நிறைவுடன் கூடிய பணி புரிதல்
- வினைத்திறன் ஆர்வம், ஈடுபாடு, விருப்பம் என்பவற்றுடன் செயற்படுதல் அர்ப்பணிப்பைக் குறிக்கும்.

உலகமயமாதல், நவீனதொழில் நுட்ப மாற்றங்கள், கலைத்திட்ட மாற்றங்கள், கல்வியின் நோக்கங்கள், இலக்குகள், பொருளாதார ஒழுங்குகள், கட்டமைப்பு மாற்றங்கள், விஞ்ஞான தொழிநுட்ப மாற்றங்கள் என பல மாற்றங்கள் ஏற்பட்டாலும் ஆசிரியர்கள் இன்றி கல்விச் செயன்முறை இயங்க முடியாது. ஆசிரியத்துவம் இவை எல்லாவற்றையும் கடந்து மாணவர்களின் நலன் சார்ந்ததாக இருக்க வேண்டியது எக்காலத்திற்கும் பொருந்துவதாக அமைய வேண்டும்.

ஆண்டு தோறும் உலக ஆசிரியர் நாள் ஒக்டோபர் 6ஆம் திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.இந்த நாளில் ஆசிரியத்துவம் தொடர்பாக அனைவரும் நேர் மனப்பாங்கு கொண்டவர்களாக தொழிற்பட வேண்டும்.

இன்று ஆசிரியத்துவம் பல்வேறு சவால்களை கொண்டதாக மாறியுள்ளது. ஆசிரியர்கள் பல்வேறு பொறுப்புக்களையும், சுமைகளையும் தாங்க வேண்டியவர்களாக மாறியுள்ளனர். ஆசிரியர்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றார்களா? மன நிறைவுடன் தமது பணியை ஆற்றுகிறார்களா? என்பது ஆய்வுக்குரியது. கற்றல்–கற்பித்தல் மாத்திரமின்றி பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான சுமைகள் அதிகரித்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. இதனால் ஆசிரியத்துவம் மகிழ்ச்சியாக இல்லை என பலர் எண்ணுகின்றனர். ஆசிரியர் தொழில் தொடர்பாக இன்று பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

கற்பித்தல் நிலைமை தொடர்பானவை, முகாமைத்துவ நிர்வாக நிலை தொடர்பானவை, மனநலம், மனப்பாங்கு தொடர்பானவை,சமூக அந்தஸ்து நிலை தொடர்பானவை, பொருளாதாரநிலை தொடர்பானவை, சமகால அரசியல், பொருளாதார, சமூகநிலை தொடர்பானவை.

இவை தொடர்பாக சமூகம் கவனம் செலுத்த வேண்டும். இப் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் விரைந்து காணப்பட்டாலே ஆசிரியத்துவம் அர்த்தமுள்ளதாக அமையும். று.த.தோமஸ் என்பவர் ஆசிரியர்களின் அடிப்படைத்தேவைகளை பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

- பாதுகாப்புத் தேவை
- ஆதரவுத் தேவை
- கணிப்புத் தேவை
- ஒன்றிணைவுத் தேவை

ஆசிரியர்கள் தமது தொழிலைச் செய்யும் போது எந்த விதமான அச்சமோ, பிரச்சினைகளோ இன்றிச் செய்யலாம் என்ற நம்பிக்கையுணர்வு ஏற்படும் போது எந்த கஸ்டங்கள் வந்தாலும் தமக்கு மேல் உள்ளவர்கள் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை ஏற்படும் போது பாதுகாப்பு பெறுகின்றனர்.

தொழில் புரியும் போது ஏற்படும் சிக்கல்கள், நெருக்கடிகள், துன்பங்கள் ஏற்படும் போது மேலதிகாரிகளின் அன்பும், ஆதரவும் கிடைக்கும் என்ற எண்ணப்பாங்கு ஆசிரியர்களிடம் வளரும் போது ஆதரவுத் தேவையும் நிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறும், ஆசிரியர்களின் விசேடமான ஆற்றல்கள், மாணவர்களின் அடைவுமட்ட மேம்பாட்டுக்கான ஆசிரியர்களின் செயற்பாடுகள் அவதானிக்கப்பட்டு பாராட்டும்ஊக்கமும் கொடுக்கப்படும் போது கணிப்புத்தேவை நிறைவேறுகிறது. புாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளில் தமக்கும் பணி ஒதுக்கப்பட்டுள்ளது. தங்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பு வழங்கப்படுகிறது. தமது ஆலோசனைகள் செவிமடுக்கப்படுகிறது. தானும் பாடசாலைச் சமூகத்தில் ஒரு பங்குதாரர் என்ற உணர்வு ஏற்படும் போது ஒன்றினைவுத் தேவை பூர்த்தியடையும்.

மேற்கூறிய தேவைகள் பூர்த்தியடைதல் தொடர்பாக பாடசாலை நிர்வாக மட்டங்களில் எத்தகைய ஆரோக்கியமான நிலைமைகள் காணப்படுகின்றன. வருடம் முழுவதும் இட மாற்றம் வந்துவிடுமோ ? என்ற மன உணர்வில் தொழிற்படுவதும் மனச்சோர்வு, மன உளைச்சல், உடற்சோர்வு ஏற்பட்டு தொழில் மீது வெறுப்பு ஏற்பட ஆசிரியாகளின் வினையாற்றலையும் குறைவடையவே செய்யும்.

ஆசிரியர்களின் மன உணர்வுகள் மதிக்கப்படுதல், ஆசிரியர்களின் சமூக அந்தஸ்துக் கணிப்புநிலை உயர்தல்,குடும்ப பொருளாதார நிலை உயர்த்தப்படுதல், ஆரோக்கியமான களச் சூழலை உருவாக்குதல், ஆசிரியர்கள் மகிழ்ச்சியாக வேலை செய்வதற்குரிய சூழலை எல்லா மட்டங்களிலும் உருவாக்குதல், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகளை மதித்தல் என்பவற்றின் ஊடாக ஆசிரியர்களிடம் நாம் பலவற்றை எதிர் பார்க்க முடியும்.

ஆசிரியர்களும் புதிய 21 ஆம் நூற்றாண்டின் இலக்குகள் அடையப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு தமது தொழில் ஆற்றல்களையும், அறிவுத்தேடல்களையும் மேம்படுதத வேண்டும். புதிய நூற்றாண்டுக்கான கல்வி இலக்குகள் பின்வருமாறு அமைந்துள்ளது.

- சிறந்த தொடர்பு கொள்ளும் ஆற்றலை ஏற்படுத்தல்.
- சுயமான கற்றலுக்கான சமூகத்திறன்களை வளர்த்தல்.
- குழுச் செயற்பாடுகளும், கூடிக்கற்கும் ஆற்றல் வலையமைப்பையும் உருவாக்குதல்.
- மாற்றங்களை உள்வாங்கும் ஆற்றலை வளர்த்தல்.
- சிந்திக்கும் ஆற்றலை உருவாக்குதல்.
- அறிவுப் பயண முயற்சியாண்மை.
- எண்ணிம (டிஜிற்றல்) அறிவு

இந்த இலக்குகள் அடையப்பட வேண்டுமெனில் கல்விப் புலத்தில் உள்ளவர்கள் தமது சிந்தனைகளை, செயற்பாடுகளை, மனப்பாங்குகளை நேர்வழியில் அமைத்துக் கொள்ள வேண்டும்.ஏனெனில் கல்வி என்பது மாறிக் கொண்டிருப்பது, வளர்ந்து கொண்டிருப்பது, இயங்கிக் கொண்டிருப்பது. ஆதனால் அதில் ஈடுபட்டிருப்பவர்கள் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

ஆசிரியர்களின் பணியும் பொறுப்பும் விரிவடைந்து செல்கிறது பின்வருமாறு குறிப்பிடலாம்.

- கற்றலுக்கு ஆயத்தப்படுத்தல்.
- கற்றலில் ஊக்குவித்தல்
- பாட எண்ணக்கருவை தெளிவாக முன்வைத்தல்.
- கற்றலில் எதிர் கொள்ளும் இடர்களை கண்டறிந்து அகற்றுதல்.
- மாணவர்களின் முன்னேற்றத்தை அளவிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வகுப்பறை முகாமையில் கவனம் செலுத்துதல்.

❖ பன்முக ஆளுமையுடைய மாணவர் களை உருவாக்குதல்.

ஆசிரியர்களை அவர்களின் தொழிற்பாட்டு அடிப்படையில் பின்வருமாறு பாகுபடுத்து கிறார்கள்.

❖ நேர முகாமைத்து வத்தை சரியாக மேற் கொள்வார்கள்.

❖ எல்லா மாணவர்களை யும் ஒரே கண் ணோட்டத்தில் நோக்குவார்கள்.

❖ பாடசாலையின் சகல தொழிற்பாடுகளி லும் தம்மை அர்ப்பணிப்புடன் இணைத் துக் கொள்வார்கள்.

❖ பாடசாலை நேரம் முழுவதும் பாடசாலை யில் தங்கியிருந்து செயற்படுவதுடன் மேல திகமாகவும் நேரத்தை பாடசாலையில் செல விடுவார்கள்.

❖ கற்பித்தல் நுட்பங்கள், தர உள்ளீடுகள், நவீன திறன்களை பெற்றிருப்பார்.

❖ எல்லா மாணவர்களாலும் கற்க முடியும் என்ற நம்பிக்கையுணர்வு மேலோங்கி நிற் கும்.

❖ தம்மை தொடர்ச்சியாக விருத்தி செய் வதில் அக்கறை காட்டுவார்கள்.

❖ மாணவர்கள் மீது அன்பும் நல்லொழுக்க விருத்திக்கான கண்டிப்பும் அருகருகே வைத்துப் பேணுவார்.

❖ மாணவர்களின் பெறுபேறு நிலைக்கான வகை கூறலை கொண்டிருப்பார்.

❖ கடமையாற்றும் பாடசாலையை தமது சொந்த வீடு போல பாதுகாப்பார்.

2014ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் தின தொனிப் பொருள் பின்வருமாறு அமைந் துள்ளது.

INVEST IN THE FUTURE INVEST IN TEACHERS இதனை மனதில் கொண்டு ஆசிரி யத்துவம் பயனுறுதி மிக்கதாக விளங்க ஆசிரி யர்களை வாழ்த்துவதோடு சமூக பொறுப் புள்ளவர்களாக ஆசிரியர்களும் தமது சேவையை ஆற்ற அனைவரும் பங்களிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம் சில அவதானிப்புக்கள்

கல்வித்துறையில் எதிர்கால ஆசிரியத்தொழில் உலகிற்கு தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட ஆளுமைமிக்க தனியாட்களாக மற்றும் செயல் முறையில் ஒரு சிந்தனையாக பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித்திட்டம் தற்போது முதன்மைப்படுத்துகிறது. ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது தொழிலுக்கான அறிவை தற்காலப்படுத்துவது முக்கிய தேவை யாகவுள்ளது. இதில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

- கல்வியின் புதிய செல்நெறிகளுக் கமைய மீள்பயிற்சி பெறல்.
- ஆசிரியர்கள் தமது அனுபவங்களை மீள உயிர்ததெழச்செய்தல்.
- புத்தறிவினைப் பெற்றுக்கொள்ளல்
- ஏதிர்பாராத சந்தர்பங்களில் எதிர் பாராத வகையில் தோன்றும் பிரச்சினை கள் அறைகூவல்கள் அனர்த்தங்கள் யாவற்றையும் வெற்றிகரமாக எதிர் கொள்ளல்.
- குறிப்பிட்ட நிலைகளை எட்டுதல்
- ஆய்வுநிலையில் சிந்தித்தல்

இலங்கையில் அண்மைக்காலத்தில் (ESDFP) கல்வித்துறைசார் அபிவிருத்தி வேலைத்திட் டத்தின் கீழ் பாடசாலைகளில் ஆசிரியர் உயர் மட்ட செயற்பாடுகள், என்ற அடிப்படைகளின் கீழ் தர உள்ளீட்டுக்கான பெருமளவு நிதி பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டது. நடை அனுபவங்களினூடாக அவதானிக்கும் போது பாடசாலைகளில் இவை பெருமளவு வெற்றி யடைந்ததாக கொள்ளமுடியவில்லை. குறிப் பாக ஆசிரியர் உயர்மட்டச் செயற்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமல் வங்கிக் கிளைகளில் தேங்கியிருப்பதை அவதானிக்க முடிந்தது. இதற்கு பல காரணங்களைக் குறிப்பிடலாம்.

- பாடசாலை முகாமைத்துவத்தில் உள்ள வர்கள் பலருக்கு இது தொடர்பான போது மான பயிற்சிகள் வழங்கப்படாமை.
- நிதி முகாமைத்துவ செயற்பாடுகளில் வினைத்திறன் அற்ற நிலைமை.
- ஆசிரியர் அபிவிருத்தி திட்டம் தொடர் பாக போதுமான விளக்கம் இன்மை.
- தேவையான துறை சார்ந்த வளவாளர் களை பெற முடியாமை.
- கொடுப்பனவுகள் தொடர்பான சுற்று நிருப மட்டுப்பாடுகள்.
- தேவையான பயிற்சிகள் தொடர்பாக இனங்காணப்படாமை.
- உள்ளக மதிப்பீடுகள், வகுப்பறை மதிப் பீடுகள் வினைத்திறனற்று இருத்தல்.
- ஆசிரியர்கள் பலர் இதில் ஆர்வம் செலுத்தாமை.
- வாண்மை தொடர்பான விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்காமல் வேறு விட யங்களுக்கு முன்னுரிமை அளிக்காமல் வேறு விடயங்களில் அக்கறை கொள்ளல்.
- ஏதாவது வகையில் பணத்தை செல வளித்தால் சரி என்ற மனப்பாங்கு.
- ஆசிரியர்களின் தேவைகள் கண்டறி யப்படாமை.
- உரிய செயல்ஒழுங்குகள் பின்பற்றப் படாமை.

இதனை சீர் செய்யும் வகையில் அண்மை யில் கல்வி அமைச்சின் சுற்று நிருப இல.10/2013 இன் கீழ் "பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவி ருத்தி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் என்ற அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கேற்ப எதிர்காலத்தில் இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

மாற்றமடைந்து வரும் தகவல் தொழில்நுட்ப உலகிற் கேற்ப பொருத்தமான அறிவாற்றலை, ஆளுமையும் மிக்க சிறந்த தலைமுறையோன்றை உருவாக்குவதற்கு பெரும் பங்களிப்பு செய்யும் ஆசிரியர்களது அறிவாற்றல்களும் தேர்ச்சிகளும் புதுப்பிக்கப்பட்டும் விருத்தியடைந்தும் காணப்படவேண்டும். இதற்கு அமைய கல்வி அமைச்சின் துறைசார் விருத்திச் சட்டக செயற்றிட்டத்தின் வேலைத்திட்டம் புதிய வடிவம் பெற்று அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

மாணவர்களின் அடைவ மட்ட உயர்வு ஆளுமை விருத்திக்கு வழிகாட்டக்கூடிய பெறுப்பு மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்கு பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி தேவைகளை இனங்காணல்.
- திட்டமிடல்
- தொடர்ச்சியானதும் ஒருங்கிணைந்தது மான விருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளல்.

### பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி திட்டத்தின் நோக்கம்

- ஒவ்வொரு பாடசாலையும் தமது கள நிலைமைக்கு ஏற்றதாக அத்தியாவசிய மானதும் பொருத்த மானதுமான வேலைத் திட்டத்தை தாமே திட்டமிட்டு நடைமுறைப் படுத்தும் ஆற்றலை வலுப்படுத்துதல்.

- தொடருறு அசிரியர் கல்வி வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

- ஆசிரியர்களிடையே சிறந்த நடை முறைகள் தொடர்பான அனுபவங்களை பாடசாலையில் பகிர்ந்து கொள்ளல்.

- பாடசாலை முறைமையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தல்.

### பாடசாலை ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தின் அவசியம்

தற்போது நடைமுறையில் உள்ள ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டங்கள் எதிர்பார்த்த இலக்குகளை எட்டவில்லை.தற்போதைய நிலையை பின்வருமாறு குறிப்பிடலாம்.

- பாடசாலையின் தேவையுடன் நடைமுறையில் உள்ள ஆசிரியர் விருத்தி வேலைத் திட்டங்கள் நேரடியாக தொடர்பட தவறி யுள்ளன.

- பாடசாலைகளுக்கான குறிப்பான தேவைகளுக்கு பொருத்தமாக அமையவில்லை.

- பாரம்பரியமான ஆசிரியர் கல்விச் செயற்பாடுகளைவிட பாடசாலைக்கு பொருத்தமான வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதால் உயர் அடைவை எட்டமுடியும்.

- ஆசிரியர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பு கிடைக்க வாய்ப்பாக இருக்கும்.

- கள நிலமைகளுக்கு அமைய நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டங்கள் பயன் மிக்கதாக அமையும்.

- விளைவுகளை நேரடியாக கண்டு கொள்ளலாம்.

- நேரமும், வளங்களும் சிறந்த முறையில் பயன்படுத்தப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலையின் சுய விருத்திக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

பாடசாலை மட்டத்திலான வாண்மை விருத்திற்கான செயல்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெறுதல் வேண்டுமென்ற சிந்தனையானது சூழ்தளக் கோட்பாடுகளின் அடிப்படையில் உருவானதாகும். வாண்மை என்பது மிக உன்னதமான சேவையாகும். தொடர்ச்சியான கல்வி, பயிற்சி என்வற்றின் ஊடாக வாண்மை தகைமை யுடன் உயர் ஒழுக்கங்களையும் உள்ளடக்கிய வகையில் சேவைக்காலத்தில் அடையப்படு கின்ற ஒரு வளர்ச்சியென வாண்மையை குறிப் பிடலாம்.

### பின்வரும் செயல் ஒழுங்கை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த முடியும்

**தேவைகளை பகுத்தாய்தலும் முன்னுரி மைப்படுத்தலும் தேவைகளை இனங்காணல்.**




இன்றைய கலைத்திட்டத்தில் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள் முக்கியபடுத்துகின்றன." திறன் மிக்க பொருத்தமான சரியான தகமைகளை உருவாக்குதல்." தேர்ச்சி என வெப்ஸ்டர் அகராதி குறிப்பிடுகிறது. இன்னொரு வகையில் ஒரு குறிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக அறிவு, திறன் ஆகியவற்றை சரியான முறையில்பாவிக்கும் திறமை எனவும் குறிப்பிடுகிறது.

அறிவின் அலகுகளையும் அதன் பிரயோகங்களையும் திறனையும் சரியான வழியில் ஏனையோருக்கு புகட்டுதல் ஆசிரியர்களின் தேர்ச்சிகள் இருக்க வேண்டும் என குறிப்பிடு கிறது.

- அறிவுசார் தேர்ச்சி
- தலைமைத்துவம் சார் தேர்ச்சி
- பொறுப்புகள் சார் தேர்ச்சி
- ஒழுக்கங்கள் சார் தேர்ச்சி

இவற்றினை விருத்தி செய்வதற்கேற்ப பாடசாலைமட்ட ஆசிரியர் விருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். பாடசாலை மட்டத்தில் பின்வரும் படிமுறைகளை அனுசரித்தல் பொருத்தமானது என்று குறிப்பிடுகிறது.

- பாடசாலையின் செயற்பாடுகளை மீளாய்வு செய்து ஆசிரியர் மேம்பாட்டு திட்டங்களை அமைத்தல்.
- ஆசிரிய மேம்பாட்டுக் குழுவை அமைத்தல்.
- ஆசிரிய மேம்பாட்டுத் திட்டங்களை இனம்காணல்.
- இனம் காணப்பட்ட தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் வருடாந்த செயற்றிட் டத்தில் உள்ளடக்குதல்.
- பொதுவான நிதியேற்பாடுகளை மேற்கொள்ளல்.
- ஆர்வத்துடன் பங்குபற்ற ஆசிரியர்களை ஊக்குவித்தல்.
- வேலைத்திட்டங்களை கண்காணித்து மேற்பார்வை செய்தல்.
- பெறப்பட்ட அனுபவங்களை பல்வேறு மட்டங்களிலும் பகிர்ந்து கொள்ளல்.
- செலவற்ற வேலைத்திட்டங்களை சேர்த்துக்கொள்ளல்.

மேற்படி நடைமுறைகளை பாடசாலைகளில் நடைமுறைப் படுத்துவதற்கு பாடசாலை முகாமைத்துவம் கவனம் எடுக்க வேண்டும். பாடசாலைச் சூழல் கற்கின்ற சமூகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் வகையில் உருவாக்கப்பட வேண்டும். பாடசாலை மட்ட வாண்மை விருத்தி யானது பின்வரும் விடயப்பரப்புகளில் அமை வது பொருத்தமானது.

- குழுக்கற்பித்தல்.
- கலைத்திட்டத்தை வேலைத்திட்டமாக மாற்றுதல்.
- பொருத்தமான வகையில் பாடமுன் ஆயத்தம்,பாடக்குறிப்பீடுகள் தயாரித்தல்
- பொதுவான கற்பித்தல் துறைகளை உருவாக்குதல்
- பொருத்தமான கணிப்பீட்டுக், திப்பீட்டு நுட்பங்களை பிரயோகித்தல்
- பொருத்தமான மதிப்பீட்டு கருவிகளை உருவாக்குதல் பின்வரும் பொருதத மானசெயற்பாடுகளை ஆசிரியர்வேலைத் திட்டத்தல் சேர்த்துக் கொள்வது பற்றி சிந்திக்கலாம்.
- ஆசிரியர்கூட்டங்கள்ஃ பெற்றோர்கள் கூட்டங்கள்.
- தொடர்ந்து நடைபெறும் தேவை அடிப் படையிலான குழுக்கூட்டங்கள்
- மாதிரி கற்பித்தல் வகுப்புகள்
- மேம்பாட்டுத் திட்டங்களை வெளிப்புற உதவியுடன் செயற்படுத்துதல்.
- சகபாடிகள் பயிற்சி சகபாடிகள் குழுக் களை அமைத்தல்.
- தொழில் வழிகாட்டல்கள் மூலம் வழி காட்டல்.
- செய்து காட்டல் வகுப்பறைகள்
- பாடசாலை மட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பான விரிவான கலந்துரை யாடல்.
- ஆசிரியர்களுக்கான தனிப்பட்ட வழி காட்டல்கள்.
- செயல் நிலை ஆய்வுகளை மேற் கொள்ளல்.
- சம்பவக் கற்கைகளில் அனுபவங் களை வழங்குதல்.
- கண்காணிப்பு பயணங்களை மேற் கொள்ளல் (மாதிரிப்பாடசாலை, மாதிரி நிறுவனங்கள்)
- அனுபவ பரிமாற்றத்திற்கான சந்தாப் பங்களை ஏற்படுத்துதல்.
- ஆசிரியர்களின்வலைப்பின்னல்அமைப்பு ஒன்றை ஏற்படுத்துதல் (பாட ரீதியாக,துறை ரீதியாக)
- தொழில் விருத்தி செயலமர்வு களை ஒழுங்கு செய்தல்
- வாண்மை விருத்தி தொடர்பான கலந் துரையாடல்களுக்கு நேரம் ஒதுக்குதல்.
- கல்வி மாநாடுகளில் கலந்து கொள் வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.
- பாடசாலைகளில் ஆசிரியர்களின் வாண்மை விருத்திற்கான நூலகம் ஒன்றை தனியாக ஏற்படுத்துதல்.
- பாடசாலை முகாமைத்துவம் தனது மனப்பாங்கினை வாண்மை விருத் திற்கு உதவும் வகையில் உருவாக்குதல்.

மேற்படி வேலைத்திட்டத்தை தனித்த ஒரு காலப்பகுதியில் செயற்படுத்துவது மட்டுமன்றித் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ற வகையிலும் காலத்திற்கு பொருத்தமான வகையிலும் விருத்தி செய்யப்பட வேண்டும்காலத்தின் தேவை உணர்ந்து கல்வித்துறையில் ஆரோக்கியமான ஒரு சூழலை ஏற்படுத்த அனைத்து மட்டங்களி லும் இதறகு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

**துணைஆதாரம்.**


- சுற்றுநிரூப இலக்கம் 10.*.2013
- அகவிழி ஜனவரி 2013
- கல்வி அமைச்சின் சுற்றுநிருபங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம்
# (School Base Teacher Development - (SBTD)

மாற்றமும், விருத்தியம் அடைந்துவரும் உலகின் தேவைகளுக்கு பொருத்தமான அறிவாற்றலும், ஆளுமையும் திறன்களும், நல் மனப்பாங்குகளும் கொண்ட மிகச்சிறந்த பரம்பரை ஒன்றை உருவாக்குவதற்கு பெரும் பங்களித்து வரும் ஆசிரியர்களது அறிவாற்றலும், தேர்ச்சிகளும் தேவைக்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்பட்டும் விருத்தியடைந்து காணப்படுவது இன்றியமையாதது.

மாறிவரும் தகவல் தொழிலநுட்ப நூற்றாண்டில் அனைத்து துறைகளிலும் விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப அறிவும் அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நவீன கருவி உபகரணங்களும் ஏனைய துறைகளில் பயன்படுத்தப்படுவது போல கல்வித்துறையிலும் பயன்பாட்டிற்கு வந்துள்ளன.

ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது தொழிலுக்கான அறிவை தற்காலப்படுத்துவதோடு தமது தொழிலில் நவீன கருவி உபகரணங்களை பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு தொழில் நுட்ப அறிவையும் கருவிகளை கையாளும் திறனையும் விருத்தி செய்ய வேண்டியுள்ளது.

கலைத்திட்ட மாற்றங்கள், உயர்கல்வித் துறையில் புதிய பாடங்கள் அறிமுகமும், புதிய துறைகளில் அறிமுகம் ஏற்பட்டு வருகின்றன.

மனித வளவிருத்தியில் ஒரு நாட்டின் எல்லைகளை கடந்து மனிதவளம் சர்வதேச சந்தைதையில் வேலைவாய்ப்புக்களை நோக்கிய நகர்வுகள் இன்று அதிகரித்து வருகிறது. பல் கலைக்கழக பட்டங்கள் கூட பல்வேறு நாடுகளில் பல்வேறு உயர் கல்வி நிறுவனங்களில் பட்டங்களை தொடரக் கூடிய நிலைகள் ஏற்பட்டுள்ளன. இதற்கு மாணவர்களை வழிப்படுத்தக் கூடிய ஆற்றல்களை கொண்டவர்களாக ஆசிரியர்களை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதற்கு பின்வரும் விடயங்களில் முக்கிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

1. கல்வியின் புதிய செல்நெறிகளுக்கும் மாற் றங்களக்கும் அமைய மீள்பயிற்சி வழங்குதல்.
2. ஆசிரியர்கள் தமது அனுபவங்களை மீள உயர்ந்தெழச்செய்தல்.
3. புத்தறிவினை தேடிப்பெற்றுக் கொள்ளல்.
4. எதிர்பாராத சந்தர்ப்பங்களில் எதிர்பாராத வகையில் தோன்றும் பிரச்சினைகள், அறை கூவல்கள், அனர்த்தங்களை வெற்றிகர மாக எதிர்கொள்ளல்.
5. குறிப்பிட்ட நிலைகளை எட்டுதலும் ஆய்வு நிலையில் சிந்தித்தலும்.

இத்தகைய ஒரு நிலையில் பாடசாலையில் கல்வி அமைச்சின் துறைசார் விருத்திச்சட்ட செயற்றிட்டத்தின் கீழ் இயங்கும் TESP வேலைத்திட்டத்தினால் பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் புதிய ஒரு வடிவம் பெற்று பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்படுகின்றது. (சுற்று நிருப இலக்கம் : 10/2013

### பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் என்றால் என்ன?

மாணவர்களின் அடைவு மட்ட உயர்வு, பாட இணைச் செயற்பாடுகளின் மூலமாக பல்துறை ஆற்றலையும், ஆளுமையையும் விருத்தி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றி வழிகாட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்தக்கூடிய பொறுப்புமிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காக பாடசாலை மட்டத்தில்,

I. ஆசிரியர்கள் அபிவிருத்தித் தேவகளை இனம்காணல்.

II. அதன் அடிப்படையில் திட்டமிடல்.

III. வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துதல்.

ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கியதான தொடர்ச்சியானதும் ஒருங்கிணைந்ததுமான ஆசிரியர் விருத்தி செயற்பாடுகளை பாடசாலை களில் செயற்படுத்தலானது பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டம் எனப்படும். (SBTD) தற்பொது நடைமுறையில் ஆசிரி யர் மேம்பாட்டுக்கான பயிற்சிகள், கருத்தரங்கு கள், பயிற்சிகள், கருத்தரங்குகள், பயிற்சி நெறி கள் பாடசாலையின் உள்ளும் பாடசாலைக்கு வெளியிலும் பல மட்டங்களில நடைபெறு கிறது. இவற்றின் நடைமுறைகளும் பயிற்சி களும் பெற்றுக்கொண்ட அனுபவங்களும் அறி வும் உரிய வகையில் வகுப்பறையில் மாணவர் களை சென்றடைகிறதா? என்பது ஆய்வுக் குரிய விடயமாக மாறியுள்ளது. ஆசிரியர் களின் புதிய வதிபாகத்திற்கான தொடர்ச்சி யான வேலைத்திட்டம் தேவையாக உள்ளது.

## SBTD யின் நோக்கம்

1. ஆசிரியர் அபிவிருத்தி பற்றிய புதிய பரி மாணங்கள் கண்டறியப்பட வேணடும்.
2. ஆசிரியர்களின்அபிவிருத்தி – பாடசாலை யின் அபிவிருத்தியுடன் இணைக்கப்பட் டிருத்தல் வேண்டும்.
3. ஆசிரியர்கள் தமது பணித் தேவைகளை விளங்கிக்கொள்வதை வளப்படுத்து வதுடன், வலுப்படுத்துவதன் மூலம் தனிப்பட்ட ஆற்று கைகளை மேம் படுத்து வதோடு மட்டுமல்லாமல் அதற்கு அப் பாலும் எடுத்துச் செல்ல வேண்டும்.
4. ஆசிரியர்களின் அபிவிருத்தி பாடசாலை களில் நேர்முகமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.
5. மாணவர்களின் அடைவு மட்ட உயர்வு, ஆற்றுகைத் திறன்கள், கற்றல் அனு பவங்கள் என்பவற்றை மேம்படுத்தல்.
6 ஆசிரியர்களின் அறிவாற்றல்மேம்பாடு, பல்வகை திறன்களின் மேம்பாடு, மனப் பங்கு மாற்றம்என்பவற்றில் மாற்றங்களை உண்டாக்கும். வகையில் பயன்தரக் கூடிய விதத்தில் அமைத்தல்.

## SBTD யின் தேவை

1. ஆசிரியர் அபிவிருத்தித்திட்டத்தில் ஆசிரியர் வேலை செய்யும் களம் (வகுப்பறை) கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.
2. ஆசிரியர்கள் இணைந்து பணியாற்று வதற்கு அதாவது, அணியாக வேலை செய்வதற்கு ஊக்குவிக்கப்படவும் தூண்டப்படவும் வேண்டும்.
3. ஆசிரியர் அபிவிருத்தி தேசிய கல்விக் கொள்கை பாடசாலையின் நோக்கங் கள், இலக்குகள் என்பவற்றைக் உள்டக்கி யிருக்க வேண்டும்.
4. ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங் கள் ஆசிரியர்களை மையமாக கொண் டவையாக இருக்கவேண்டும்.

கூட்டாக வேலைசெய்தல் – பங்காளிகளாக செயற்படுத்தல்.

ஒத்திசைவு – நம்பிக்கையுடன் செயற்படுதல்.

குழு வேலை – தெளிவான நோக்கங்களை செயற்படுத்தல்.

மாற்றுச்செயல் முறைகளை முன்னெடுத் தல் – பங்குபற்றுதலும் விளங்கிக்கொள்லும்.

5. மாற்றத்தின் உரித்தானவராக தம்மை ஆசிரியர்கள் உருவாக்கிக் கொள்ளல் அவசிய மானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது நடைமுறையிலுள்ள ஆசிரியர் களுக்கான வேலைத்திட்டங்கள்.

1. வெளிவளவாளர்களை அழைத்து 01 நாள் அல்லது 02 நாள் செயலமர்வு.
2. திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் திருப்திகர மான நிலையில் அமையாத கலந்துரை யாடல்.
3. இனம் காணப்பட்ட பாடசாலைக்கு விஜயம் செய்தல்.
4. பாடசாலை முகாமைத்துவ குழுவை சந் தித்து கலந்துரையாடல்.
5. பண்புத்தர வட்டங்கள்
6. ஆசிரியர் கூட்டங்கள்
7. வகுப்பறை அனுபவங்களை சமகாலத்தில் கொண்டிராத வளவாளர்கள் போதனை.
8. குழுக் கலந்துரையாடல், குழுக்களில் பங்குபற்றும் ஆர்வம் குறைவு, ஒருவர் மட்டும் கருத்துக்களை முன்வைப்பது.
9. தொடர் நடவடிக்கை இன்மை, அமு லாக்கம்பற்றி மதிப்பீடு செய்யப்படாமை.
10. நடைமுறையில் உள்ள ஆசிரியர் வேலைத்திட்டங்கள் பாடசாலையின் தேவையுடன் ஆசிரியரின் தேவையுடன் நேரடியாக தொடர்புபட தவறியுள்ளன.
11. பல்வேறு மட்டங்களிலும் நிறுவனங்கள் பயிற்சியை வழங்குகின்றன. இவை பாடசாலைகளுக்கான குறிப்பான தேவை களுக்கு பொருந்துபவையாக அமைய வில்லை.
12. பிறரால் திட்டமிடப்பட்ட பாரம்பரிய மான ஆசிரியா கல்விச் செயற்பாடுகளின் பயனு றுதித் தன்மை கேள்விக்குறியாக மாறி யுள்ளது.

**முன்னெடுக்கப்படவுள்ள பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித்திட்டம்.**

1. " நமக்குள் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் ஏனையோரையும் மாற்றுவோம்" என்ற புதிய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.
2. ஆசிரியர்களின் தேவைப்பாடுகளின் அடிப் படையில் ஆசிரியர் அபிவிருத்திக் கருத்தரங்குகள்.
3. ஆசிரியர் / பெற்றோர் கூட்டங்கள் கருத்துப் பகிர்வு பரிமாற்றங்கள்.
4. ஆசிரியர்களின் விருத்திக்கு சந்தர்ப்பம் வழங்கும் பாடசாலை நிகழ்வுகள் ஏற்பாடு செய்தல்.
5. சிரேஷ்ட ஆசிரியர்கள் சக பாடிகளால் அறிவுரைக்கப்படல்.
6. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத் தில் (SDP) பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித்திட்டங்களை உருவாக்கல்.

**ஆசிரியர் அபிவிருத்தித் திட்டத்தில் எவ் வாறான விடயங்கள் முதன்மைப்படுத் தப்பட வேண்டும்.**

1. வகுப்பறைகளுக்குரிய ஆசிரியர்களை எவ்வாறு தயார்படுத்துவது.
2. தொடர்ச்சியான வாண்மை விருத்தியூ டாக ஆசிரியர்கல்வியை பூரணப்படுத்துதல்.
3. வினைத்திறனும் விளைத்திறனும் மிக்க கற்பித்தலுக்கு பொருத்தமான ஆசிரியரை தயார்படுத்துதல், ஆசிரியர்களின் பண் புத் தரத்தை உயர்த்துதல்.
4. ஆய்வுகள், புதிய தொழில்நுட்பங்கள், புதிய அறிவு, புதிய சவால்களை எதிர்கொள் வதற்கு மட்டுமன்றி புதிய உத்திகளை யும் வாய்ப்புக்களையும் பயன்படுத்தும் ஆற்றல்களை வழங்குதல்.
5. வாண்மையை கட்டாடாக நோக்க வேண் டும் திணிக்கப்பட்டதாக கருதக் கூடாது.
6. வாண்மை திறன்கள், பாட அறிவு இற் றைப்படுத்தப்பட வேண்டும்.

நடைமுறையில் உள்ள ஆசிரியர் கல்வி தொடர்பான கோட்பாடுகள், நடைமுறைகள் தொடர்பாக இடைவெளி உள்ளதாக விமர்சிக்கப்படுகிறது. ஆசிரியர்களின் கல்வி /


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் தகைமைகள் தொடர்பாகவும் அவர்கள் அன்றாடம் செய்யும் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாகவும் இன்று பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. மாணவர்கள் இன்று பாடசாலை – தனியார் போதனை ஆகிய இரு தடங்களில் பயணிக்கிறார்கள்.

ஒரே பாடத்தை ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களிடம் கற்கிறார்கள். கற்பித்தல் பாங்குகள். கற்பித்தல் சூழல், கற்பித்தல் முறைகள் வேறுபடுவதுடன், கற்றல் பாங்குகள், கற்றல் சூழல். கற்றல் முறைகள் என்பனவும் வேறுபடுகின்றன.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அறிவு, திறன், மனப்பாங்குகள் இற்றைப்படுத்தப்பட வேண்டும் ஒன்றிணைக்கும் முயற்சிகள் பாடசாலையினுள் முன்னெடுக்கப்பட வேண்டும். இல்லையெனில் கல்விச் செயல்முறை வினைத்திறன் அற்றதாக மாறி உற்பத்தி திறன் குறைவடையும். ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல் என்பது பின்வரும் விடயப் பரப்புகளை உள்ளடக்கி இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1. புதிய கற்கை நெறிகளுக்கு ஆசிரியர்களை அனுப்புதல்.
2. கோட்பாடுகள் புதிய அறிவினைப் பெற்றுக்கொள்வது.
3. தேர்ச்சி மட்ட அணுகுமுறையை கற்பித்தலில் பயன்படுத்துவது.
4. பாடசாலைக்குள் பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை வழங்குவது.
5. அறிவை, அனுபவங்களைத் தேடிப் பெறுவதுடன் அதனைப் பகிர்ந்து கொள்வது.
6. புத்தாக்கம், செயல்வழி ஆய்வுகள், படைப்பாக்கம் என்பவற்றில் கவனம் செலுத்துவது.
7. தொடர்ச்சியான கற்றலுக்கு வழிகாட்டுவதுடன் சக ஆசிரியர்களுக்கும் வழிகாட்டல்

பாடசாலை மட்ட ஆசிரியர்கள் அபிவிருத்தியில் பின்வரும் செயற்பாடுகள் முதன்மைப் படுத்தப்பட வேண்டும்.

1. எல்லா ஆசிரியர்களும் முகாமைத்துவப் பொறுப்புகளை பகிர்ந்து கொள்ளல்.
2. தீர்மானம் எடுத்தலில் தனி நபர்களை இணைத்துக் கொள்ளல.
3. ஆற்றுகையாளர்களுக்கு உயர் வெகுமதியை வழங்குதல்.
4. ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் சூழலை உருவாக்குதல்.
5. உயர் பங்கு பற்றலுக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.
6. அதிகரித்த மன உறுதியை வளர்ப்பதற்கு வழிப்படுத்தல்.
7. பாடசாலைக்கு சொந்த மானவர் என்ற மன உணர்வை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப் பங்களை வழங்குதல்.
8. குறித்த பணியை செய்வதற்கு ஆசிரியர்களை தயார்படுத்தல்.
9. தனிநபர் ஆற்றல், தொழில் விருத்தியடைய சந்தர்ப்பங்களை தொடர்ச்சியாக வழங்குதல்.

### பொருத்தமான விடயப் பரப்புக்கள்

1. ஆசிரியர் கூட்டங்கள் – பெற்றோர் கூட்டங்கள் வலுப்படுத்தப்படல்.
2. ஆசிரியர்களின் தேவைக்கேற்ப குழுக் கூட்டங்களை ஒழுங்கு படுத்துதல்.
3. மாதிரி கற்பித்தல் வகுப்புகளை ஒழுங்கு படுத்தல்.
4. வெளிப்புற உதவியுடன் ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல்.
5. சக பாடிப் பயிற்சிகளுக்கான இடங்களை அமைத்துக் கொடுத்தல்.
6. தொழில்வழிகாட்டுனர் மூலம் வழிகாட்டல்.
7. செய்து காட்டல் வகுப்புகளை திட்டமிட்டு செயற்படுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பாடசாலை மட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.
9. ஆசிரியர்களுக்கான தனிப்பட்ட வழிகாட்டல்களை ஏற்பாடு செய்தல்.
10. செயல் நில ஆய்வுகளுக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.
11. சம்பவ கற்கை (விட ஆய்வு) தொடர்பாக அனுபவங்களுக்கு வாய்ப்பு வழங்குதல்.
12. கண்காணிப்பு பயிற்சிகள், மாதிரி பாடசாலைகள், கல்வி நிறுவனங்களை அவதானித்தல்.
13. அனுபவ பரிமாற்றத்திற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.
14. தொடர்கற்றலுக்கான வாய்ப்புகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்குதல்.
15. பல்வேறு மொழிகளையும் கற்பதற்கான சூழலையும் உருவாக்குதல்.
16. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவையும் பயிற்சிகளையம் வழங்க பாடசாலை மட்டத்தில் ஏற்பாடுகள் செய்தல், பாட சாலை மட்ட ஆசிரியர்கள் மேம்பாட்டுத்திட்ட வேலைத்திட்டத்தை நிறுவனப்படுத்தல்.

### பின்வரும் படிமுறைகளை அனுசரித்தல் பொருத்தமானது

1. பாடசாலைகள்செயற்பாடுகளை மீளாய்வு செய்து ஆசிரியர்களின் தேவப்பாடுகளின் அடிப்படையில் திட்டங்களை வகுத்தல்.
2. பாடசாலையில் ஆசிரியர் மேம்பாட்டுக் கல்விக்குழுவொன்றை அமைத்தல்.
3. இக்குழு ஆசிரியர்களுக்கான தேவைகளை இனங்காணல்.
4. இனங்காணப்பட்ட தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் வருடாந்த பாடசாலை செயற்றிட்டத்தில்(AIP) இணைத்தல்.
5. ஆசிரியர் செலாற்றுகை தரங்கணிப்பு செயற்பாட்டின் ஊடாக ஆசிரியர் பயிற்சி தேவைகளை மதிப்பிடலாம்.
6. ஆசிரியர் செயலாற்றுகை மீளாய்வின் போது பாடங்களக்குப் பொருத்தமான வகையில் விருத்தி செய்யவேண்டிய திறன்களையும் மற்றும் இல்லா தொழிக்க வேண்டிய குறை பாடுகளையும் இனங் காணல்.
7. பாடசாலை வரவு செலவுத்திட்டத்தில் இத் திட்டத்திற்கு போதுமான நிதியை ஒதுக்குதல் வேறு நிதி மூலங்களை பெறவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
8. வேலைத்திட்டங்களில் ஆர்வத்துடன் பங்குபற்ற ஆசிரியர்களை ஊக்குவித்தல்.
9. செலவற்ற வேலைத்திட்டங்களை சேர்த்துக்கொள்ளல்.
10. வேலைத்திட்டங்களை மேற்பார்வை செய்து மதிப்பீடு செய்தல்.
11. பெறப்பட்ட அனுபவங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளல்.

பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், செயற்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெறுதல் வேண்டும். வாண்மை என்பது மிக உன்னதமான சேவையாகும்.

தொடர்ச்சியான கல்வி, பயிற்சி என்பவற்றின் ஊடாக வாண்மை தகைமையுடன் உயர் ஒழுக்கங்களையும் உள்ளடக்கிய வகையில் சேவைக்காலத்தில் அடையப்படுகின்ற ஒரு வாய்ப்பாகும்.

அறிவின் அலகுகளையம் அதன் பிரயோகங்களையம் திறனையும் சரியான வழியில் ஏனையோருக்கு புகட்டுத்தல் ஆசிரியர்களின் தேர்ச்சி என குறிப்பிடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அறிவுசார் தேர்ச்சி
2. தலைமைத்துவம் சார் தேர்ச்சி
3. பொறுப்புகள் சார் தேர்ச்சி
4. ஒழுங்கங்கள் சார் தேர்ச்சி என்பவை ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகள் என குறிப்பிடப்படுகிறது.

ஆசிரியர்களின் அறிவாற்றல், தேர்ச்சிகள் என்பவை மேன்படுவதற்கு ஏற்றவகையில் பாடசாலை முகாமைத்துவம் தனது கவனத்த செலுத்தவேண்டும். பாடசாலை சூழல் கற்கின்ற சமூகத்தை கொண்டிருக்கும் வகையில் உருவாக்கப்படுதல் வேண்டும்.

பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தி ஆசிரியர்களின் விருத்தித் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

1. குழு கற்பித்தல்
2. பாடத்திட்டங்களை வேலைத்திட்டமாக மாற்றுதல்
3. பொருத்தமான வகையில் பாட முன்மொழிவும் பாடக் குறிப்புகளும் தயாரித்தல்.
4. பொருத்தமான கற்பித்தல் முறைகளை உருவாக்குதல்.
5. பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு நுட்பங்களை பிரயோகித்தல்.
6. பொருத்தமான மதிப்பீட்டு இலக்குளை உருவாக்குதல்.
7. பரிகார செயற்பாடுகளுக்கான திறனை விருத்தி செய்தல்.
8. செயற்றிட்டங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல்.
9. வகுப்பறை முகாமைத்துவம், வகுப்பறைகள் நிலை, மாணவர் ஒழுக்கம் தொடர்பான மேம் பாட்டுக்கு வழி ஏற்படுத்துதல்.
10. அர்ப்பணிப்புடன் கடமை ஆற்றவதற்குரிய நேர்மனப்பான்மை வளர்ப்பதற்குரிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

ஆசிரியர்களின் மேம்பாடு, மாணவர்களின் மேம்பாட்டுக்கு வழிவகுக்கும். எரிந்து கொண்டிருக்கும் தீபங்களிலிருந்தே ஏனைய தீபங்களை ஏற்றமுடியும். எரியும் தீபங்களுக்கு எண்ணெய் ஊற்றினால்தான் அவை தொடர்ந்தும் பிரகாசிக்க முடியும். தொடர்ந்து பிரகாசிப்பதே இன்றைய கல்வித் தேவையாகும்.

பாடசாலை அபிவிருத்தி திட்டம்

↓

வருடாந்த SBTD வரவு செலவுத் திட்டம்

கண்காணித்தல்

பாடசாலை முகாமத்துவ குழு (SMC) SBTD திட்டக்குழு

நடைமுறையில் உள்ள செயற்பாடுகளை மீள் பரிசீலனை செய்தலும் தேவகளை அடையாளம் காணலும்.

செயற்பாடுகளை அடையாளம் காணலும் வடிவமைப்பாக்களும்.

அமுலாக்கம்

பதிப்பீடு செய்தல்

**SBTD தொடர்பான சாத்தியமான படிமுறைகள்**

**சாத்தியமான செயற்பாடுகள்**

1. சகபாடிகள் உடனான பயிற்சி
2. பாடசாலை மட்ட கண்காணிப்பு
3. பாடங்களின் செய்து காட்டலும் சக பாடிகள் அவதானித்தலும்.
4. கல்விசார் ஒத்துழைப்பும் தனி நபர் ஆலோசனையும்.
5. கற்றல் – கற்பித்தல் கையோடு தயாரித்தலும் / பயன்படுத்தலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கல்விக் குழுக்கள்
7. விடய ஆய்வுக் கலந்துரையாடல்கள் ஏனைய பாடசாலைகளுடனான தொடர்புகள்.
8. தொழில் சார் வலயமைப்புக்களை ஏற்படுத்தல்.

பாடசாலை முகாமைத்துவக் குழு (SMT) பாடசாலை மட்ட ஆசிரியர் அபி விருத்தித்திட்டம் தொடர்பான புதிய பரிமாணங்களைத் தேட வேண்டும்.

மரபு ரீதியான சிந்தனையிலிருந்து விடுபட்டு காலத்திற்கு பொறுத்த மானதும் தேவையடிப்படையானதுமான வழிகளை பயன்படுத்த வேண்டும்.

அத்துடன் போதுமான நிதி ஏற்பாடுகளையும் (SDC) மேற்கொள்ள வேண்டும். பாடசாலை சார்ந்த ஆசிரியர் மேம்பாடும் பாடசாலை அபிவிருத்தி திட்டமும் ஒன்றிணைக்கப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக்கல்வி தொடர்பான கலைத்திட்ட ஏற்பாடுகளும் அமுலாக்கமும்

ஒரு சமுதாயத்தின் நாகரிகத்தை எடுத்துக்காட்டுவது அச்சமூகம் பெற்றுக்கொண்ட கல்வியைப் பொறுத்ததாகும். கல்வி வாழ்க்கையே நாகரிக வாழ்க்கை எனப்படுகிறது. ஒரு நாட்டின் மனிதவள அபிவிருத்திக்கும் வாழ்க்கை முன்னேற்றத்துக்கும் அடிப்படையாக விளங்குவது கல்வியாகும். கல்வி பற்றி பண்டைக்காலம் தொடக்கம் 21ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கோணங்களில் நின்று கல்விக்கு வரைவிலக்கணம் கொடுத்துள்ளார்கள்.

ஒருவனிடம் மறைந்து கிடக்கும் உள்ளார்ந்த ஆற்றலை, ஆளுமையை வெளிக்கொண்டுவருவது கல்வியின் இலக்காக அமைய வேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். ஒருவன் தன்னையும் தான் வாழ்கின்ற சூழலையும் அறிந்து கொள்வதற்கு துணையாக விளங்குவது கல்வியாகும். தான் வாழுகின்ற சமூகத்தையும் அதன் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் நாகரிகத்தையும் உணர்ந்து கொள்ளவும் அவற்றைப் பேணிப் பாதுகாக்கவும் கல்வி உதவுகிறது.

இன்றைய மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக கல்வி விளங்குகிறது. அதுமட்டுல்லாமல் கல்வியைப் பெறுவது அடிப்படை உரிமைகளில் ஒன்றாகவும் விளங்குகிறது. அடிப்படைக் கல்வியான ஆரம்பக்கல்வியை எல்லோரும் கற்றேயாக வேண்டும். அதனால் எழுதவும், வாசிக்கவும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளவும் எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அதனால்தான் இன்று எல்லோருக்கும் தரமான கல்வி என்ற வாசகம் முன்வைக்கப்பட்டுள்ளது. அனைவரும் குறைந்தபட்சம் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென முன்மொழியப்படுகிறது.

இலங்கையைப்பொறுத்தவரை ஆரம்பக்கல்வி தரம் 1- 5 வரை வரையறுக்கப்பட்டுள்ளது. ஆரம்பகல்வியைக் கலைத்திட்டம் மூன்று (Key stages) முதன்மை நிலைகளாக வகுத்துக் குறிப்பிடப்படுகிறது.

*1. முதன்மை நிலை 1 – தரம் 1, 2*
*2. முதன்மை நிலை 2 – தரம் 3, 4*
*3. முதன்மை நிலை 3 – தரம் 5*

இக்கலைத்திட்டத்தின் கூறுகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

*1. மொழி*
*2. கணிதம்*
*3. சமயம்*
*4. சுற்றாடல் செயற்பாடுகள்*
*5. பேச்சு ஆங்கிலம் – தரம் 1, தரம் 2*
*6. முறைமை சார்ந்த ஆங்கிலம் – தரம் 3, 4, 5*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இரண்டாவது தேசிய மொழி (தமிழ் அல்லது சிங்களம் )
8. இணைபாடவிதான செயற்பாடுகள்
9. விருப்பத்துக்குரிய செயற்பாடுகள்

இக்கலைத்திட்ட அமைப்பைப் பார்க்கும்போது தரம் 1இல் விளையாட்டுச் செயற்பாடுகளினூடாக கற்றல் அதிகமாகவும் எழுத்து வேலைகள் குறைவாகவும் தரங்கள் உயர்ந்து செல்லும்போது விளையாட்டு, இயக்கச் செயற்பாடுகள் குறைவடைந்து தரம் 05இல் எழுத்து வேலைகள் ஒப்பீட்டு ரீதியில் அதிகளவாகவும் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கலாம்.

தரம் 1 இல் கல்வி கற்கும்மாணவர்கள் தரம்6இல் கற்கும் மாணவர்களுடன் இடைவினை கொள்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என கலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டபோதும், நடைமுறையில் இது சாத்தியப்படுவதாக அமையவில்லை. குறிப்பாக ஆரம்பக்கல்வி மட்டும் (தரம் 1 -- தரம் -5) உள்ள பாடசாலைகளில் இது சாத்தியப்படவில்லை. ஆரம்பக் கல்வியுடன் இடைநிலை வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளிலும் இது நடைமுறைச் சாத்தியம் உள்ளதாக அமுலாக்கப்படுவதை அவதானிக்க முடியவில்லை.

ஆரம்பக்கல்வி கலைத்திட்டத்தில் உள்ள பாட ஏற்பாடுகளையும் அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நேர அளவீட்டினையும் பின்வரும் அட்டவணையில் காணமுடியும்.

**ஆரம்பப் பிரிவின் வாரத்திற்கான நேர ஒதுக்கீடு**

| விடயம் | வாரத்திற்கான மணித்தியாலங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | முதன்மை நிலை - 1 | | முதன்மை நிலை - 2 | | முதன்மை நிலை - 3 | |
| | மணி | நிமிடம் | மணி | நிமிடம் | மணி | நிமிடம் |
| காலைக்கூட்டம் | 1 | 15 | 1 | 15 | 1 | 15 |
| செயற்பட்டு மகிழ்வோம் | 1 | 40 | 2 | 05 | 2 | 05 |
| தாய்மொழி | 5 | 00 | 5 | 00 | 5 | 00 |
| கணிதம் | 3 | 30 | 5 | 00 | 5 | 00 |
| சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 5 | 30 | 6 | 00 | 7 | 30 |
| சமயம் | 1 | 15 | 2 | 00 | 2 | 00 |
| ஆங்கிலம் | | - | 3 | 00 | 3 | 30 |
| இரண்டாம் தேசிய மொழி | | 30 | 1 | 00 | 1 | 00 |
| இணை பாடவிதான செயற்பாடுகள் | | 30 | | 30 | | 30 |
| விருப்பத்திற்குரிய செயற்பாடுகள் | | 30 | | 30 | | 30 |
| ஓய்வு நேரம் (காலை உணவு 10 நிமி. மதிய உணவு 15 நிமி) | 2 | 05 | 1 | 40 | 1 | 40 |
| மொத்த மணித்தியாலங்கள் | 21 | 15 | 27 | 30 | 30 | 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்திட்ட உருவாக்கம், வடிவமைப்பு மத்திய நிலையில் செயற்படுத்தப்பட்டாலும் கலைத்திட்ட அமுலாக்கம் பாடசாலையில் வகுப்பறை மட்டத்திலேயே நடைமுறைப்படுத்தப்படவேண்டும். பாடசாலைகளில் அமுலாக்கம் செய்யயப்படும்போது களச்சூழல் பல்வகைப்பட்டதாக அமைந்துள்ளன. பாடசாலைகளில் வகுப்பறைச் சூழல், கற்றல் – கற்பித்தலில் பயன்படுத்தப்படும் பௌதிக, மானிட வளங்கள் பல்வேறு தரங்களில் காணப்படுகின்றன. கலைத்திட்ட அமுலாக்கம் ஒரே தன்மையிலாக பாடசாலைகளில் காணப்படுவதில்லை.

இன்று நடைமுறையில் உள்ள ஆரம்பக்கல்வி கலைத்திட்டம் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. தேர்ச்சி மையம், மாணவர் மையம், செயற்பாடு சார்ந்த கற்றல் ஆகிய விடயங்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றன. முதன்மை நிலை 1இல் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் 40ஆகவும், முதன்மை நிலை 2இல் 52 ஆகவும் முதன்மைநிலை 3 இல் 55 ஆகவும் தேர்ச்சிகள் பாடவாரியாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன.

தேர்ச்சி என்பது அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் என்பவற்றின் சேர்க்கையில் உருவாகும் ஒரு வாழ்க்கைப் பழக்கம் என குறிப்பிடப்படுகிறது. மேலும் 'திறன்மிக்க பொருத்தமான சரியான தகைமைகள்' தேர்ச்சி என குறிப்பிடப்படுகிறது. அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற கல்வித்தர மீளாய்வு ஆணைக்குழு தேர்ச்சி பற்றிக் குறிப்பிடப்படும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறது. 'ஒரு குறிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக அறிவு,திறன் ஆகியவற்றை சரியான முறையில் பாவிக்கும் திறமை' மேலும் தரப்பட்ட ஒரு செயற்பாட்டை ஆற்றுவதற்காகத் தேவைப்படும் அறிவு திறன் மனப்பாங்கு எனலாம்.

ஆரம்பக் கல்வியை அத்திவாரம் எனக் குறிப்பிடப்படுகின்றனர். அத்திவாரம் சரியாக அமைந்தாலே மேலே கட்டப்படும் கட்டிடம் பலமானதாக, உறுதியானதாக இருக்கமுடியும். ஆரம்பக்கல்வியை பூரணமாக ஒருவன் பெற்றுக்கொள்வானாயின் மேல்நிலைக் கல்வியை இலகுவாகத் தொடரமுடியும். பொதுவாக ஆரம்பக் கல்வியை நாற்று மேடைகளுக்கு ஒப்பிடுவார்கள். நாற்று மேடைகளை நல்லமுறையில் பேணி வளர்த்தாலே வீரியமுள்ள நாற்றுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். வீரியமுள்ள நாற்றுக்களில் இருந்தே நல்ல அறுவடையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பாடசாலைகளில் ஆரம்பக் கல்விச் செயற்பாடுகள் வினைத்திறன் மிக்கதாகவும், விளைதிறன் மிக்கதாகவும் அமையவேண்டும். கற்றலுக்கான சூழல், கற்றலுக்கான வளங்கள், கற்றல் – கற்பித்தல் தொடர்பான மதிப்பீடுகள், கணிப்பீடுகள் செயற்பாடுகள் அர்த்தமுள்ள வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும். இல்லையெனில் இலக்குகள் அடையப்படமுடியாமற் போய்விடும்.

இன்று ஆரம்பக் கல்வியை கற்பிப்பதற்காக பலரும் முன்வராத நிலைமை காணப்படுகிறது. ஆரம்ப வகுப்பு மாணவருக்கு கற்பிப்பதற்கு சில ஆசிரியர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புவதில்லை. ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் பயிற்சிக் கலாசாலைகளில் பாடங்களை மாற்றி பயிற்சி பெறுவதும், ஆரம்பக்கல்வி நியமனம் பெற்றவர்கள் வெளிவாரியாக பட்டம் பெற்ற பின்னர் ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் கற்பிக்க மறுப்பதையும், பல்துறை பாடங்களைப் பயின்று பட்டம் பெற்றவர்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியராக நியமிக்கப்பட்டிருப்பதும், ஆரம்பக் கல்வியில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கும் வேளையில் அவர்களுக்கு ஆரம்பக் கல்வித்துறை நேர அட்டவணை வழங்கப்படாமல் இன்றும் சில பாடசாலைகளில் சிரேஷ்ட ஆசிரியர்கள் பலர் சில வகுப்புக்களைத் தாமே கற்பிக்க வேண்டும் என அடம்பிடிப்பதும், ஆரம்பக் கல்வித்துறை தொடர்பான அமுலாக்கத்தில் சில பின்னடைவுகளை பாடசாலைகளில் ஏற்படுத்தியுள்ளன.

ஆரம்பம் பிழைத்தால் எல்லாமே பிழையாகிவிடும் என்ற கருத்தில் "முதல் கோணல் முற்றும் கோணல்" ஆகிவிடும் என்ற பழமொழி உண்டு. ஆரம்பக் கல்வியின் ஆசிரியத்தை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் அடிமனதில் பதித்து தீர்க்கமான கொள்கைகளை தமக்குள் எடுத்து வகுப்பறைச் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்ள வேண்டும்.

ஆரம்பக் கல்வி எந்தளவுக்கு முக்கியத்துவம் உடையதாக இருக்கிறதோ அந்தளவுக்கு ஆரம்பக்கல்வியை கற்பிக்கின்ற ஆசிரியர்களும் முக்கியத்துவம் உடையவராக இருக்கிறார்கள். ஆசிரியர்கள் மனப்பாங்குகளில் மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

நல்லதொரு ஆசிரியர் குழாம் இன்றி நல்லதொரு பாடசாலையை உருவாக்க முடியாது. நல்ல அணுகுமுறைகளும், ஆளுமைப்பண்புகளுமே நல்ல ஆசிரியர் குழாத்தை பாடசாலையில் உருவாக்கும். ஆசிரியர்கள் குழாத்தை பாடசாலையில் உருவாக்கும்ஆசிரியர்களின் மனப்பாங்குகளில் ஏற்படும் மாற்றங்கள் மாணவர்களின் மனப்பாங்குகளில் மாற்றங்களைக் கொண்டுவரும். ஆசிரியர்களின் அறிவு, திறன், ஆற்றல்கள், அர்ப்பணிப்பு – ஊக்கம் – தேடல், கல்வித்தத்தவம் – கல்வித் தொழில்நுட்பம், கல்வி உளவியல் ஆகியவற்றிலும் மாற்றங்களைப் பெறவேண்டும். மாறிவரும் சூழலுக்கும், மாறிவரும்உலக மாற்றங்களுக்கும் ஏற்ற வகையில் ஆசிரியர்கள் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். சிறப்பான நேரான மாற்றங்களைப் பெறுவதன் மூலமே சிறந்த அணுகுமுறை களையும், ஆளுமைப்பண்புகளையும் மாணவர்கள் மத்தியிலும் பிரயோகிக்க முடியும். ஆசிரியர்கள் – மாணவர்கள் இடைவினை என்பது அணுகுமுறையிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

21ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியர்களில் பின்வரும் பண்புகள் காணப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1. சூழலுடன் இணைபவர்
2. தொடர்பாளர்
3. கற்போன்
4. தரிசன நோக்குடையவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தலைவர்

6. முன்னுதாரணமானவர்

7. இணைந்து செயலாற்றுபவர்

8. ஆபத்துக்கு துணிபவர்

ஆசிரியர்கள் மேற்படி விடயங்களில் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் மாற்றமுறும் உலக ஒழுங்குகளுக்கு ஏற்ப நேர்மனப்பாங்குடைய மாணவர்களை உருவாக்கமுடியும்.

ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டிய திறன்களை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

1. பிள்ளைகளின் ஆற்றல்களை கண்டறிதல்.
2. பிள்ளைகளிடம் காணப்படும் எதிர்மறையான எதிர்பார்ப்புக்களைத் தவிர்த்தல்.
3. வேறுபாடு காட்டாமை.
4. பிள்ளைகளிடம் உள்ள ஆற்றலை மேலும் கட்டியெழுப்புதல்.
5. பிள்ளைகளிடம் உள்ள ஆற்றல்கள் பயனற்றவை எனக் கருதக்கூடாது.
6. பிள்ளைகளிடத்தில் வேறுபாடுகளை உருவாக்குதல், எதிர்காலத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

ஓர் ஆசிரியருடைய கற்பித்தல் பாங்குகளில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆளுமை, அனுபவம், கோட்பாடு, பெறுமானங்கள், சூழமைவு என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆசிரியராக நியமனம் பெற்ற போது இருக்கும்கற்பித்தல் பாங்கைவிட, பயிற்சி பெற்றுக்கொண்ட பின்னர் அனுபவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் கற்பித்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும். கற்பித்தலில் ஈடுபடும்போது அவதானம் செலுத்தவேண்டிய விடயங்கள் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. வகுப்பில் நேரத்தை எவ்வாறு முகாமை செய்தல்.
2. கற்பித்தலின்போது எத்தகைய கற்றலுக்கான வளங்களை வழங்குகிறார்கள், பயன் படுத்துகிறார்கள்.
3. மாணவர்கள் மத்தியில் கடைப்பிடிக்கும் நெகிழ்ச்சிப் போக்கு.
4. வகுப்பறை வேலைகளை ஒழுங்குபடுத்தி திட்டமிடும் விதம்.
5. ஆசிரியர் – மாணவர்கள்
6. தொடர்பாடல்
7. ஆசிரியர் பிள்ளைகளுக்கு வழங்கும் சுதந்திரம்

ஆரம்ப வகுப்பு பிள்ளைகள் தகவல்களிலும் பார்க்க செயற்பாடுகளுடன் கற்றலில் நாட்டமுள்ளவர்களாகக் காணப்படுவார்கள். கற்றலில் ஆர்வமும் விருப்பமும் இணைக்கப்படல் வேண்டும். இதற்கமைய ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தமது முன்னேற்றங்களை செய்துகொள்ள வேண்டும். பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுவது நன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்பிக்கும் விடயங்களை முன்கூட்டியே திட்டமிடல்
- தேவை நோக்கியதான நெகிழ்ச்சிப்போக்கு.
- செயற்பாடுகளை தேவைக்கேற்ப மாற்றுதல்.
- பிள்ளைகளுடன் மகிழ்ச்சியுடன் செயற்படுதல்.
- மாணவர்களை மகிழ்வூட்டல்.
- ஆச்சரியப்படக்கூடிய வகையில் ஆர்வத்தைத் தூண்டுதல்.

நடைமுறை அனுபவங்களை அவதானிக்கும்போது ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான அமுலாக்கம் பல பாடசாலைகளில் திருப்திகரமானதாக அமையவில்லை. வகுப்பறையில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை குறைவான நிலைமைகளில் ஆரம்பக்கல்வி தொடர்பான எல்லா அம்சங்களையும் நடைமுறைப்படுத்த முடிவதில்லை. ஆரம்பக்கல்விச் செயற்பாடுகள் தேர்வுப் பெறுபேறுகளை உற்பத்தி செய்வதில் மட்டுமே அதிக நாட்டம் காட்டப்படுகிறது. 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தரம் 2இல் இருந்தே பயிற்சி வழங்கும் செயற்பாடுகள் மிகைப்படுத்தப்பட்டிருப்பதாக அமைந்துள்ளன. புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்களில் பயிற்சி வழங்குவதே கற்பித்தலாக மாறியுள்ளது.

வகுப்பறை பாடப்பதிவு புத்தகங்களை அவதானிக்கும்போது தேர்ச்சிமட்ட செயற்பாடுகளுக்குரிய வேலைத்திட்டங்கள் குறைவாக உள்ளதுடன், பெருமளவு நேரம் வினாத்தாள்களை செய்வதில் அக்கறை காட்டப்படுகின்றது. அறிகையாற்றல் மட்டுமே மாணவர்களின் ஆளுமை என்ற கனவுலகில் கல்விச் சமூகமும், பெற்றோர்களும் பயணிப்பது கவலையளிக்கின்றது. பின்வரும்

நிலைமைகள் ஆரம்ப வகுப்புகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் அவதானிக்க முடிகிறது.

- இணைப்பாடவிதானம் தொடர்பான போதிய விளக்கமின்மை.
- பரீட்சை மையமான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- கற்பித்தல் செயற்பாட்டைச் சுமையாகக் கருதுதல்.
- ஆசிரியர்களுக்கு உற்சாகம் வழங்கப்படுவதில்லை.
- பெற்றோர்கள் சிலர் இடையூறாக இருத்தல்.
- இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களை சக மாணவர்கள், ஆசிரியர்கள் விமர்சித்தல்.
- உடல், உள விருத்தியில் கவனம் எடுக்காத நிலை.
- இணைப்பாட விதானச் செயற்பாடுகள் தொடர்பாக பெற்றோர் அறியாமை.
- அதிபர், ஆசிரியர்கள் நல்லுறவும் இணக்கமும்.
- தொடர்ந்தும் ஒருசில ஆசிரியரிகளே குறித்த வகுப்புக்களுக்கு கற்பித்தல்.

இவ்வாறான எதிர்மனப்பாங்கு செயற்பாடுகள் நேர்மனப்பாங்கு செயற் பாடுகளாக மாற்றப்படவேண்டும். ஆரம்ப வகுப்பு ஆசிரியர்கள் தமது அறிவினையும் திறனையும் வளர்த்துக் கொள்வதற்கு முயல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சுய அறிவினை விருத்தி செய்தல்.
2. ஆசிரியரிகள் தமது பலம், பலவீனங்களை அறிதல்.
3. குறைபாடுகளை வெற்றிகொள்வதற்கான வழிமுறைகளைத்தேடியறிதல்.
4. கற்பிக்கும் விடயங்களில் பரந்த ஆழமான, தெளிவான அறிவு இருத்தல்.
5. எண்ணக்கருக்கள், செயல்முறைகள், கற்பித்தலில் அறிவை வளர்த்தல்.
6. பிள்ளைகளை நன்றாக அறிந்தவராக இருத்தல்.
7. பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள் என்பதை அவதானித்தல்.
8. பிள்ளைகளை தனியாக, கூட்டாக எவ்வாறு ஊக்குவிக்கலாம் என அறிதல்.
9. பிள்ளைகளின் குடும்பம், சமூக,பொருளாதார பின்னணி பற்றி அறிந்திருத்தல்.
10. பிள்ளைகளின் விசேட ஆற்றல்கள், இயல்புகள் பற்றி அறிந்திருத்தல்.

புதிய கலைத்திட்ட அமுலாக்கம் சரியான முறையில் அமுலாக்கப்படும்போது தான் கலைத்திட்ட இலக்குகள் அடையப்பட முடியும். மாணவர்கள் மத்தியில் சிந்தனைத் திறன்கள், சமூகத் திறன்கள், சுயதிறன்கள் என்பவற்றை வளர்ப்பதில் பாடசாலைகள் சிறப்பாகத் தொழிற்பட வேண்டும். அப்போதுதான் நல்லறிவு, நற்பண்புப்பிரஜைகள் உருவாக்கப்படுவார்கள். வெற்றிக்கு அறிவுக்கூர்மை, புத்திக்கூர்மை மட்டுமன்றி மாற்றமடையும் திறனையும் விருத்தி செய்தல் வேண்டும்.

பரீட்சை மைய கல்வி முறையை அனுசரிக்கும் பாடசாலைகளில் மாற்றத்தை விரும்பும் சமூகத்தை உருவாக்குவது சாத்தியமற்றது. புதிய நேர்க்கணிய மனப்பாங்குடன் கலைத்திட்ட அமுலாக்கம் பற்றி கல்விச் சமூகம் மீள்சிந்தனை ஒன்றை உருவாக்குவதன் ஊடாகவே வினைத்திறன்மிக்க இலக்குகளை கல்வியில் எட்டமுடியும்.

**துணை நூல்கள்**

01. ஆரம்பக்கல்வி பாடத்திட்டங்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் – 2007, தேசிய கல்வி நிறுவனம்.
02. ஆசிரியர் – ஒக்ரோடபர் 2011
03. அகவிழி – ஏப்பிரல் 2009
04. அகவிழி – பெப்ரவரி 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மணிவிழா மலர் அனுசரணை:

**பாலசிங்கம் செல்வநிதிநாதன்**

**(பள்ளித்தோழன் ஆருயிர் நண்பன் - வேலணை)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ் - கோண்டாவில். 077 2209474.